357

[illegible]

[illegible]

வெளியீடு

[illegible] 113. எண் 2. [illegible]
2001

**25-1-2001**

351/இரண்டு

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 142-179 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 3 மற்றும் 4) | 179-252 |
| 2. அறிவிப்பு— | |
| (அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பதிலாக, மாண்புமிகு பேரவை முன்னவர் பதிலுரை அளித்தல். | 252 |
| (ஆ) அவையில் காட்டப்பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் படத்துடன் வந்துள்ள வாக்காளர் அட்டை குறித்து தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த உத்தரவு. | 253-254 |
| 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி | 253-356 |
| திரு. வி.கே. லட்சுமணன் | 255-261 |
| டாக்டர் காஞ்சனா கமலநாதன் | 261-265 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 266-269 |
| திரு. ஆர். சிவானந்தம் | 269-274 |
| திரு. ஐ. கணேசன் | 275-285 |
| திரு. ஜி. பழனிசாமி | 285-299, 352 |

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 300-319, 341 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 141-142, 180, 218-219, 221, 260-261, 266, 276, 285, 287-288, 293-294, 297, 315, 319-355 |

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 357


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### தை 12, விக்கிரம-திருவள்ளுவர் ஆண்டு 2032
### 2001 ஜனவரி 25, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்"

பயனற்றவைகளைச் சொல்லிப் பயன்பெற நினைப்பவனை, மனிதன் என்பதைவிட அவன் ஒரு பதர் என்பதே பொருத்தமானதாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 61. திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

61—

### அறிவியல் கோளரங்கம்

***37381—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் அறிவியல் கோளரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினத்தில் அறிவியல் கோளரங்கம் அமைப்பதற்கான உத்தேசம் எதுவும் தற்பொழுது இல்லை. சுமார் 100

நபர்கள் அமரக்கூடிய கோளரங்கம் அமைக்க சுமார் 3 கோடி ரூபாய் வரை மூலதனச் செலவாகும். கோளரங்கம் அமைப்பதற்கான இடத்தையும், மேற்குறிப்பிட்ட செலவையும் அப்பகுதி மக்களால் திரட்டித்தர இயலுமானால் கோளரங்கம் அமைக்கலாம். தற்பொழுது நாகப்பட்டினம் உள்ளிட்ட தென்மாவட்டங்களில் உள்ளவர்களுக்குப் பயன்படும்விதமாக திருச்சிராப்பள்ளியில் அண்ணா அறிவியல் மையமும், கோளரங்கமும் நிறுவப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**62—**

**மருத்துவமனைக்கு அடிப்படை வசதிகள்**

***24772—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம 24 மணி நேர மருத்துவமனைக்கு குடிநீர், மின் மற்றும் கழிவறை வசதி இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) ஆம்.

(ஆ) ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் குடிநீர் மற்றும் மின் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கழிவறை வசதி சரி செய்வதற்கு பொதுப் பணித் துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே உங்களுக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது? சொல்லுங்கள்.

சட்டமன்ற நூலக சாப்பகம் 18481





**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட திருமக்கோட்டையில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்று சென்ற ஆண்டு நடைபெற்ற கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதுவரையிலும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அங்கே சுமார் 35 இலட்சம் ரூபாய்க்குத் தனியார் ஒருவர் எல்லாக் கட்டடங்களையும் கட்டிக் கொடுத்திருக்கிறார். அப்படி, சிறந்த மருத்துவமனை அது. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே சென்ற வருடம் வந்து திறந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, அது அவசியம் 24 மணி நேர மருத்துவமனையாக ஆக்கித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஏறக்குறைய இன்னும் 200 ஆரம்ப சுகாதார நிலையங்களை 24 மணி நேர மருத்துவமனைகளாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலேயிருந்தும், பொதுமக்களிடத்திலேயிருந்தும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அத்தனையையும் 24 மணி நேர மருத்துவமனைகளாக ஆக்க வேண்டுமென்று சொன்னால் infrastructure மேம்படுத்தப்பட வேண்டும். புதிதாக டாக்டர்கள் நியமிக்க வேண்டும். அதைப்போல, நர்சுகள் மற்றும் technicians நியமிக்க வேண்டும். இதையெல்லாம், இப்போதுள்ள நிதிநிலையை மனதிற்கொண்டு, இந்த ஆண்டு உடனடியாகச் செய்ய முடியவில்லை. இருந்தாலும், உலக வங்கியின் மூலம் ரூ. 680 கோடி ரூபாயை நம்முடைய மாநிலத்திற்கு அளிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு நாங்கள் கடிதம் எழுதி, மத்திய அரசாங்கமும் அதைப் பரிசீலித்து, உலக வங்கிக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அந்த நிதி வருமானால், தமிழ்நாட்டிலே பெரும்பாலான மாவட்ட மற்றும் தாலுகா மருத்துவமனைகள், இப்படிப்பட்ட 24 மணி நேர மருத்துவமனைகளை நிச்சயமாக மேம்படுத்தி, தரமுள்ளதாக ஆக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. செங்கை சிவம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[2001 ஜனவரி 25

63—

### மின்சாரம் தயாரித்தல்

***37738—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருட்களிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 29-6-1998 ஆம் ஆண்டு மின் வாரியம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்துடன் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருட்களிலிருந்து 350 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மின் நிலையம் அமைப்பதற்குக் கருத்தளவு ஒப்பந்தம் செய்துள்ளது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்போது தொடங்கப்படும்? இந்த வகையான மின் நிலையம் தமிழகத்தில் வேறு எந்த இடத்திலாவது தொடங்கப்படும் எண்ணம் அரசுக்கு உள்ளதா? தமிழகத்திற்குத் தேவையான மின்சாரம் எவ்வளவு? தமிழகம் மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்திலேயிருந்து தமிழ்நாட்டிலே வேறு எங்கேயும் மின் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இருந்தாலும், சென்னையிலே இருக்கக்கூடிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்திலேயே அவர்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்று நினைக்கின்ற அந்த மின்சாரத்தை தமிழ்நாடு



2001 ஜனவரி 25]

மின் வாரியம் வாங்கக்கூடிய சூழ்நிலையிலே இல்லை. ஏனென்றால், ஒரு கருத்தளவிலே நாம் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தாலும், அவர்கள் escrow வேண்டுமென்று கேட்கிறார்கள். Escrow கொடுப்பதற்கு அவர்கள் விதிக்கின்ற சில பிரிவுகளில், மின்சாரம் ஒரு யூனிட் 4 ரூபாய்க்கும் அதிகமாகத்தான் கொடுப்போம். அதற்குக் குறைவாக எங்களாலே கொடுக்க முடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். மின் வாரியத் தலைவர் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார். 4 ரூபாய் கொடுத்து மின்சாரத்தை வாங்கக்கூடிய அளவிற்கு மின் வாரியம் இல்லை. எனவே, விலையைக் குறைத்தாலொழிய இதற்கு ஒப்புதல் தரமுடியாது என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏனென்றால், இன்றுள்ள சூழ்நிலையிலே அதிகபட்சமாக நாம் 3 ரூபாய் அல்லது ரூ. 3.25-க்கு மேல் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்குக் கொடுத்தால் மின்சார வாரியம் பெரிதும் இழப்புக்கு ஆளாகும். எனவே, அதைக் கருத்திலே கொண்டு, இன்றையதினம் மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தத்தை அவர்கள் செய்யவில்லை. இரண்டாவது, தமிழ்நாட்டிலே எவ்வளவு மின்சாரம் தேவையிருக்கிறது. எவ்வளவு உற்பத்தி ஆகிறது. இன்னும் என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இப்போது நம்முடைய தேவை ஏறக்குறைய 6,200 மெகாவாட். மார்ச் மாதத்திலே 6,300 மெகாவாட் வரையிலே நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். நமக்கு ஏறக்குறைய 400 மெகாவாட் மின்சாரம் இந்த ஆண்டு கூடுதலாக இருக்கும். எனவே, இந்த ஆண்டு எந்த மாநிலத்திலேயிருந்தும் நம்முடைய தமிழகத்திற்கு மின்சாரம் வாங்கவேண்டிய ஒரு சூழ்நிலை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படவில்லை. அடுத்து இப்போதுள்ள மின் திட்டங்களைத் தவிர, நெய்வேலியிலே Zero Unit என்ற 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டத்தை 2002-2003-லே அமல்படுத்த இருக்கின்றோம். அதைப்போல இராமநாதபுரம் பெருங்குளத்திலே 100 மெகாவாட் Gas-ஐ அடிப்படையாகக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்ய இருக்கின்றோம். அதைப்போல தஞ்சை மாவட்டத்திலே குத்தாலத்தில் 100 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய இருக்கின்றோம். இந்த மின்சாரம் உற்பத்தி செய்து, நமக்கு கிடைப்பதற்கும் மேலாக, எண்ணூரிலே L.N.G. Unit மின்சாரத்தை உற்பத்தி செய்யுமானால் 750 மெகாவாட் மின்சாரம் அதிலேயிருந்தும் நமக்குக் கிடைக்கும். எனவே, இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு நமக்கு மின்சாரப் பற்றாக்குறை இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

[2001 ஜனவரி 25

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக, கூடங்குளத்திலே ஒரு அணு மின்சார நிலையத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். இப்போது அது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரஷிய அரசாங்கத்தோடு நம்முடைய இந்திய அரசாங்கம் அதற்கான ஒப்பந்தத்தை ஏற்கெனவே கையெழுத்திட்டு, இந்த ஆண்டு இறுதியில் அல்லது 2002 தொடக்கத்திலே அந்தத் திட்டத்தைத் தொடங்க இருக்கிறார்கள். 2000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அந்தத் திட்டம் 7 ஆண்டு காலத்திலே முடிவடையும். அந்தத் திட்டம் முடிவடைந்து மின்சாரம் நமக்குக் கிடைக்குமானால், இங்கேயே மலிவான விலையிலே மின்சாரம் நமக்குக் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கிறபோது, ரூ. 4/-க்கு மேலே இந்தச் சென்னை சுத்திகரிப்பு ஆலையிலே இருக்கக்கூடியவர்கள் யூனிட்டுக்குக் கேட்கிறார்கள். ஆகவே எங்களாலே, escrow வழங்க முடியவில்லை என்று சொன்னார்கள். Escrow வழங்குவதற்கு, நீங்கள் ஏற்கெனவே ஜெயங்கொண்டம் புராஜக்ட்டுக்கு, 1999-லே Initial P.P.A. sign பண்ணி இருக்கிறீர்கள். ஆனால் இன்றுவரை நீங்கள் Regular P.P.A. sign பண்ணாமல் இருக்கிறீர்கள். 3 ரூபாய்க்கு மேலே கேட்பதாகச் சொல்கிறீர்கள். மிகக் குறைந்த விலையிலே மின்சாரத்தை ஜெயங்கொண்டம் ரிலையன்ஸ் உங்களுக்குக் கொடுப்பதாக ஏற்கெனவே அக்ரிமெண்ட் போடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அந்தத் திட்டம் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. நீங்கள் naphtha-based அல்லது மற்றவற்றிற்குப் போனீர்கள் என்று சொன்னால், என்ரான், பம்பாயிலே 7 ரூபாய் யூனிட்டுக்கு கொண்டு போய் விட்டிருக்கிறார்கள். இப்படி மற்றவற்றையெல்லாம் நம்புவதைவிட, இந்த அணு மின் நிலையத்தையும், புனல் மின் நிலையத்தையும் மட்டும் நம்பித்தான் நம்முடைய தமிழகம் இருக்க வேண்டும். அதிகமான மின்சாரம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். 1,200, 1,300 மெகாவாட் உற்பத்தி மார்ச்சிலே வந்துவிடும் என்று கூறுகிறார்கள். ஆனால் எங்கு பார்த்தாலும் Low-voltage இருந்து கொண்டிருக்கிறது. அது உண்மையா? இருந்தாலும்கூட, ஜெயங்கொண்டத்திலே....



2001 ஜனவரி 25]

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன மின்சாரவாரிய விவாதத்திலேயா பேசுகிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, ஒன்றே ஒன்று, முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இனிமேல் உங்களைத், துணை வினாவே கேட்க விடமாட்டேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஜெயங்கொண்டம் புராஜெக்ட்டுக்கு எப்போது Regular P.P.A. sign செய்யப்படும்? எப்போது Escrow நீங்கள் வழங்குவீர்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அத்துடன் நிறுத்திக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 3 கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரை விட்டால் இன்னும் 5, 6 கேள்விகள்கூடச் சேர்த்துக் கேட்டிருப்பார். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மின்சார வாரியத்தில் தேவையான மின்சாரம் இருக்கிறது. ஆனாலும், தமிழ்நாட்டிலே சில இடங்களில் low-voltage இருக்கிறதே என்று முதலிலே கேட்டார்கள். மின்சாரம் உற்பத்தியாவதற்கும் low-voltage இருப்பதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. புதிய துணை மின் நிலையங்கள் தேவைப்படுகின்ற இடத்திலே அமைத்துக் கொடுத்தால், அந்த low-voltage பிரச்சினை நிச்சயமாகத் தீர்ந்து விடும். தமிழ்நாட்டிலே இப்போது 250 இடங்களிலே அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு, இன்னும் 50 இடங்களிலே low-voltage இருக்கிறது என்று தெரிந்து, அந்த 50 இடங்களிலும் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் மின்சார வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு டிசம்பருக்குள்ளாக தமிழ்நாட்டிலே எந்த இடத்திலேயும் low-voltage பிரச்சினை இருக்காது. இது ஒன்று.

இரண்டாவது, ஜெயங்கொண்டம் பிரச்சினை பற்றிக் கேட்டார்கள். ஜெயங்கொண்டத்தில் அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே P.P.A. sign செய்வதிலேயோ escrow கொடுப்பதிலேயோ எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆனால், அங்கே நிலம் கொடுக்கக்கூடியவர்கள் ஒரு ஏக்கர்

5 இலட்சம் ரூபாய் என்று பேரம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய Guideline 23,500 ரூபாய்தான் ஒரு ஏக்கருக்குக் கொடுக்க முடியும் என்று விலை நிர்ணயித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், பொதுமக்கள் இவர்கள் அத்தனைபேரும் இந்த மாதம் முதல் வாரத்திலே என்னைச் சந்தித்துப் பேசினார்கள். நான் அவர்களிடத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். நீங்கள் ஒரு ஏக்கருக்கு 5 ரூபாய் வேண்டும் என்று கேட்டால் இதனுடைய உற்பத்திச் செலவு கூடுதலாகி, இறுதியிலே ஒரு யூனிட் மின்சாரத்தை 5 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய ஒரு நிலைமை மின்சார வாரியத்திற்கு ஏற்படும். எனவே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏக்கர் 5 இலட்சம் ரூபாய் என்று சொல்லுங்கள், 5 ரூபாய் என்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 5 இலட்சம்; ஒரு ஏக்கர் 5 இலட்சம் ரூபாய் கொடுத்து வாங்குவது என்று சொன்னால், ஒரு யூனிட் மின்சாரம் 5 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று அவர்களிடத்திலே சொல்லி, நீங்கள் ஒரு நியாயமான விலையைப் பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருந்தால், இந்தத் திட்டத்தை நாங்கள் அமல்படுத்துகிறோம். இல்லையென்றால், இந்தத் திட்டத்தைக் கைவிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர்களுக்குச் சொல்லியிருக்கின்றோம். இருந்தாலும்கூட, இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதிலே அரசாங்கம் ஏன் அக்கறையோடு இருக்கிறது என்று சொன்னால் 3 ரூபாய் 22 காசுக்கு ஏற்கெனவே கிரிசில் என்ற நிறுவனம் மின்சாரத்தை சப்ளை செய்ய முடியும் என்று தெரிவித்திருக்கின்ற காரணத்தினாலே, அந்த மின்சாரத்தை வாங்க வேண்டும் என்று அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது. இதற்கிடையிலே escrow கொடுப்பதிலேயும் ஒரு பிரச்சினை இருக்கிறது. வீடியோகான் நிறுவனத்தைப் பொறுத்தவரை நாம் cancel செய்த காரணத்தினாலே அவர்கள் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். ஆர்பிட்ரேஷனுக்கும் போயிருக்கிறார்கள். இவையெல்லாம் முடிந்து வருவதற்குக் காலதாமதம் ஆகும். இருந்தாலும், நில உரிமையாளர்கள் அரசாங்கத்திடம் முறையாக அணுகி நியாயமான விலைக்கு நிலத்தைக் கொடுத்தால், கிரிசில் ஒப்பந்தப்படி ரிலையன்ஸ் நிறுவனம் அந்த விலைக்கு மின்சாரத்தைக் கொடுக்க ஒப்புக் கொண்டால் P.P.A. உடனடியாகச் செய்யப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்கின்றவர்களுக்கு பிற மாநிலங்களுக்கு உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை மூன்றாவது நபருக்கு விற்கின்ற உரிமையிருக்கிறது. அதுபோன்று தமிழகத்தில் Third Party sale-க்கு அந்த உரிமை வழங்காத காரணத்தினால், காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்கின்றவர்கள் நாளடைவில் குறைந்து வருகின்றார்கள். 2 ரூபாய் 70 பைசாவிற்கு காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்பவர்களிடமிருந்து மின்சாரத்தைப் பெற்று, 4 ¼, ரூபாய்க்கு தொழிற்சாலைகளுக்கு விற்கின்றீர்கள். ஆகவே, பிற மாநிலங்களில் இருப்பது போன்று மூன்றாவது நபருக்கு விற்கின்ற உரிமையும் அல்லது இந்த மின்சாரத்தை 3 ரூபாய் 20 காசுக்கு பிற இடங்களில் வாங்குவது போன்று வாங்குவீர்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு தொழிற்சாலைகளுக்கு 4 ரூபாய் 25 காசுக்கு விற்பதுதான் தெரிகிறதே தவிர 16 இலட்சம் விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் தருகிறோமே அது அவர்களுடைய கண்களுக்குத் தெரிவதில்லை. 15 இலட்சம் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் தருகிறோமே அது அவர்களுக்குத் தெரிவதில்லை அல்லது புரிவதில்லை. ஏறக்குறைய 30 இலட்சம் குடும்பங்களுக்கு, 2 ரூபாய் 80 காசு, 3 ரூபாய் கொடுத்து வாங்கி, 80 பைசா ஒரு யூனிட்டுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோமே அதுவும் அவர்களுக்குப் புரிவதில்லை. எனவே, இப்படி மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தில் ஏறக்குறைய 21 சதவீதம் இலவசமாகவும், 6 சதவீதம் குறைந்த விலையிலேயும் கொடுக்கின்ற காரணத்தினால், தொழிற்சாலைகளுக்கு 4 ரூபாய் 25 காசுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் Wind Mill-ஐப் பற்றி, காற்றாலைகள் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வதைப் பற்றித் தெரிவிக்கிறார்கள். காற்றாலை மூலம் உற்பத்தி செய்வது தமிழ்நாட்டிலே ஊக்குவிக்கப்படுகிறது. தொடர்ந்து அவர்கள் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். Third-Party sale (மூன்றாவது விற்பனை) அனுமதிக்க முடியுமா என்று கேட்டார்கள். இந்தத் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே ஒரு கொள்கை முடிவை எடுத்திருக்கின்றோம். அது காற்றாலைகளாக இருந்தாலும் சரி, தனியார் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்கின்றவர்களாக இருந்தாலும் சரி யாரையும் Third-party sale-க்கு நாங்கள் அனுமதிப்பதில்லை.

[2001 ஜனவரி 25

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**64—**

## பேருந்து நிலையம்

***38954—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் நகரப் பேருந்துக்கென பேருந்து நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சிப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்க அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது. புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வந்தவுடன் தற்போதுள்ள பேருந்து நிலையத்தை வேலூர் நகரப் பேருந்து நிலையமாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலூரிலே புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைப்பதற்கான அனுமதி கொடுக்கப்பட்டதாக இங்கே அறிவித்தார்கள். நன்றி. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே அதற்கான அரசாணை வழங்கப்பட்டு நானும் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலேயிருந்து நிதி கொடுப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதியைத் தந்து, பிறகு அந்த அரசாணையைப் பெற்று, இரண்டு ஆண்டுகளாகியும்கூட, அந்தக் கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான இடத்திலே அந்த பஸ் ஸ்டாண்ட் அமைக்கப்பட வேண்டியிருக்கிற காரணத்தினாலே, இந்த அமைச்சரவையில் கூட்டுப் பொறுப்பை வகித்துக் கொண்டிருக்கிற கூட்டுறவுத் துறையினுடைய அமைச்சரகத்திலிருந்து ஏனோ இன்னும்



2001 ஜனவரி 25]

எங்களுக்கு enter upon permission அதாவது நுழைவு அனுமதி-நிர்வாக அனுமதியை அரசாங்கம் கொடுத்தாலும்—கூட்டுறவுத் துறையினுடைய அந்த எல்லையிலேயிருந்து வராமல் இருக்கிற காரணத்தினாலே, இரண்டு ஆண்டுகளாக அந்தத் திட்டம் அப்படியே ஊறுகாய்ப் பானையில் ஊறப்போட்ட ஊறுகாய்போல ஊறிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள். நீங்கள் ஒவ்வொன்றிலும் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருக்க முடியுமா?

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒவ்வொரு தடவையும் நான் சொல்கிற வரைக்கும் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் இன்னும் கேள்வியை முடிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் எப்போது வரப்போகிறது என்று கேட்கிறீர்களே, அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அங்கே இருக்கக்கூடிய அந்த வேலூர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையினுடைய யூனியன் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருந்தாலும்கூட—அந்த நிலத்தினுடைய விலையைக் குறித்து வழக்குப் போட்டார்கள்—அதற்கு ஸ்டே கிடையாது. ஸ்டே எதுவும் இல்லாத பட்சத்தில் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து எப்படியாவது நுழைவு அனுமதியை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் உடனடியாகப் பெற்று வருகிற வாரத்திலேயே—ஏனென்றால் இதிலே வேறு ஒன்றும் impediments கிடையாது—அந்தப் பணியை, அந்தப் புதிய பஸ் ஸ்டாண்ட் பணியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அதை

[2001 ஜனவரி 25

அடிக்கல் நாட்டித் தொடங்கி வைக்க அவர் இசைவு தெரிவிக்கிறாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக அனுமதி அளித்து 2 வருடம் ஆகிறது என்பதெல்லாம் தவறு. 28-10-1999-ல்தான் நாம் நிர்வாக அனுமதியை அளித்திருக்கிறோம். அதற்குப் பிறகு 3 கட்டமாக அந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்குச் சொந்தமான இடம் 8.75 ஏக்கரும், தனியாருக்குச் சொந்தமான இடம் 9.75 ஏக்கரும், அரசு கால்வாய்ப் புறம்போக்கு இடம் 0.77 ஏக்கரும் ஆக மொத்தம் 19 ஏக்கருக்கு மேல் அதை நாம் எடுத்துக் கையகப்படுத்த வேண்டுமென்று முயற்சித்திருக்கிறோம். அதிலேகூட, அந்த நிலத்தைச் சமப்படுத்தி, பேருந்துகள் அங்கே நிற்பதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால் சட்டப்படி கட்டடம் தொடங்குகிறபோது அதிலே முன்அனுமதி தேவை என்பதற்காகத்தான் நாம் எழுதியிருக்கிறோம். கூட்டுறவுத் துறையிலே அங்கமாக இருக்கிற ஒரு நிர்வாகத்தினர் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அந்த வழக்குத் தொடுத்ததன் காரணத்தினால் அந்த enter upon order கொடுப்பதற்கு, முன்அனுமதி கொடுப்பதற்குச் சற்றுத் தயங்குகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் நான் இது குறித்துத் தெரிவித்திருக்கிறேன். அவரும், அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதிலே விரைவாக அந்தப் பேச்சுவார்த்தையை முடித்து அதன்மூலம் அந்த இடத்தைப் பெற்றவுடன் எவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுக்க முடியுமோ எடுத்து, அந்தப் புதிய பேருந்து நிலையம் கட்டுகிற நடவடிக்கையை ஏற்படுத்தலாம். ஒரு வார காலம், ஒரு நாள், 24 மணி நேரம் என்பதெல்லாம் பேச்சுக்கு உதவுமே தவிர நடவடிக்கைக்கு உதவாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானி நகரிலே 7 ஆண்டுகளுக்கு முன்பாக புதிய பேருந்து நிலையம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு, பழைய பேருந்து நிலையத்திற்கு நகரப் பேருந்துகளெல்லாம் வந்து செல்ல வேண்டுமென்ற கோரிக்கையைப் பொதுமக்களும் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய வியாபாரப் பெருமக்களும், அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலயத்திற்கு வரக்கூடிய பக்தகோடிகளும் விரும்பி கடந்த 4 ஆண்டுகளாக,



2001 ஜனவரி 25]

3 முறை மாவட்ட ஆட்சியாளர் அவர்களிடத்திலே நேரடியாக அழைத்துச் சென்று, போக்குவரத்து அலுவலருடைய முன்னாலேயே பேசி உடனடியாக.....

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் துணை வினா உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு எப்படி வரும்? உட்காருங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** ஒரே ஒரு விஷயம். புதிய பேருந்து நிலையத்திலிருந்து பழைய பேருந்து நிலையத்திற்கு நகரப் பேருந்துகள் வந்து செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியாது, உட்காருங்கள்.

வினா எண் 65, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

65—

**வேளாண்மைப் பொறியியல் மையம்**

***35994—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதி, ஊரணிபுரத்தில் ஒரு வேளாண்மைப் பொறியியல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதி, ஊரணிபுரத்தில் வேளாண்மைப் பொறியியல் மையம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவோணம் தொகுதியிலே கிட்டத்தட்ட 87 ஊராட்சிகள் இருக்கின்றன. அந்தத் தொகுதியிலே மையமாகக் கருதப்படுகிற இடம் ஊரணிபுரம்தான். அது மட்டுமல்ல, விவசாயிகளுக்கு மிகச் சிறப்பாக இந்த அரசு

[2001 ஜனவரி 25

எத்தனையோ காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. பொறியியல் துறை மூலமாகத்தான் பல்வேறு காரியங்கள் நடைபெறுகின்றன. பொதுப்பணித் துறைக்கே பொறியியல் துறையிலிருந்துதான் கருவிகள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. அந்த வகையிலே ஊரணிபுரத்தில் ஒரு பொறியியல் மையம் இருந்தால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற அத்தனை கிராமங்களுக்கும் சிறபபாக அந்தப் பணிகளை ஆற்றுவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற வகையிலேதான், கிராமங்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்கிற முறையில் அங்கே ஒரு பொறியியல் மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு 18.55 இலட்சம் பங்குத் தொகையுடன் தொடங்கப்பட்டது. அதன் சார்பு சங்கங்கள் 1973 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 211 சங்கங்கள் தமிழகத்திலே இப்போது செயல்பட்டு வருகின்றன. வட்டார அளவில் 191 சங்கங்களும், மாவட்ட அளவில் 20 சங்கங்களும் தற்போது செயலாற்றி வருகின்றன. தற்போது 66 மையங்கள் நலிவுற்ற நிலையில் இயங்கி வருகின்றன. ஊரணிபுரத்தில் ஒரு மையம் ஏற்படுத்தினால் அது திறம்படச் செயல்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கக்கூடிய காரணத்தினாலேதான் இப்போது வட்டார அளவில் ஒரு மையம் அமைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திரு எஸ்.வி. கிருஷ்ணன். மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**66—**

**பாசனம்**

***28855—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, தேவநல்லூர்-தேவிகுளத்தை வடக்குப் பச்சையாறு பாசனத்தில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2001 ஜனவரி 25]

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி தேவநல்லூர் அருகே மழை நீரை நம்பியிருக்கின்ற தேவிக்குளம் பச்சையாறு அணைக்கட்டிலிருந்து பாசனம் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் கேள்விக்கு இடமில்லை என்று சொன்னேன். தேவநல்லூர் தேவிக்குளம், வடக்குப் பச்சையாற்றைவிட 75 அடி மேட்டிலே இருக்கிறது. அதனால் தண்ணீர் அங்கே ஏறாது. எனவே, கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**67—**

**தடுப்பு அணை**

***29913—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, குண்டாற்றின் குறுக்கே வக்கனாங்குண்டு கிராமத்தின் அருகே தடுப்பணைக் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அருப்புக்கோட்டை தொகுதி குண்டாற்றின் குறுக்கே வக்கானாங்குண்டு கிராமத்தின் அருகே தடுப்பணை கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குண்டாற்றின் குறுக்கே வக்கனாங்குண்டு கிராமத்தின் அருகே தடுப்பணைக் கட்டுவதன் மூலமாக வெள்ளக் காலங்களில் அங்கே தேங்குகிற நீரை அருகே இருக்கக்கூடிய தெற்காற்றிலே பாய்ச்சி அதன் வாயிலாக காரியாப்பட்டி மற்றும் திருச்சுழி வட்டங்களிலே இருக்கக்கூடிய ஏறத்தாழ 40-க்கும் மேற்பட்ட கண்மாய்களிலே பாசன வசதி செய்து தரமுடியும். ஏற்கெனவே இது தெற்காறு — குண்டாறு திட்டம் என்ற வகையில் அரசின் ஆய்விலே இருந்தது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய மிகப் பெரிய கண்மாய்களான இசலிமடை, சென்னிலைக்குடி, கிழவனேரி, ஆனைக்குளம், அம்பனேரி போன்ற மிகப்பெரிய கண்மாய்களுக்குப் பாசன வசதி செய்து தர முடியும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து விவசாயிகளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய முகத்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் மூலக் கேள்விக்கு செயற்குறிப்பில் இல்லை என்றேன். குண்டாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டி, அந்தக் குண்டாற்றுத் தண்ணீரை தெற்காற்றுக்குக் கொண்டு வந்தால் திருச்சுழி வட்டத்திலே 2,500 ஏக்கர் பாசனம் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை இப்போது நம்முடைய இலாகா ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அதற்குத் தோராயமான மதிப்பீடு கிட்டத்தட்ட 20 இலட்சம் ரூபாய்க்கு மேலே ஆகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால், இன்னும் முழுமையாக அறிக்கை கிடைக்கப்பெறவில்லை. அறிக்கை கிடைக்கப்பெற்ற பிறகு, 28 குளங்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆய்வு முழுமையான பிறகுதான், முழுமையான பதிலைச் சொல்ல முடியும்.

முற்பகல் 9-55

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கேள்வி.....





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு.

**திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக்கேள்வியோடு ஒட்டியது இல்லையென்றாலும்கூட மக்கள் பிரச்சினை என்கின்ற காரணத்தினாலே கேட்கிறேன். பொன்னேரி வட்டம் இலட்சியம்புரம் அணைக்கட்டு இடிந்து பல ஆண்டுகாலம் ஆகிறது. அதை இந்த ஆண்டாவது செப்பனிட்டுத் தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாவிட்டாலும் மக்கள் பிரச்சினை என்கிறார். மக்கள் பிரச்சினையான, இவ்வளவு பெரிய அளவில் இடிந்துபோனதைப் பற்றி இவ்வளவு நாட்கள் உறுப்பினர் பேசாமல் இருந்தது, தொகுதிக்கு அவர் செய்கிற பணி அல்ல. எனவே, உடனடியாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தால்தான், அது அவர் தொகுதிக்கு ஆற்றுகிற பணியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ் பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் கேட்கக்கூடிய கேள்விகூட மூலக்கேள்வியுடன் தொடர்பு இல்லாவிட்டாலும்கூட. இது தடுப்பணை கட்டுவது குறித்ததாகும். பல ஆண்டுகாலமாக, எங்களுடைய மாண்புமிகு தலைவர் அவர்களுக்குக்கூட நன்றாகத் தெரியும். தலைவர் அவர்களே, உங்களுக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கும் அதே பதில்தான். உட்காருங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** கம்பம் பள்ளத்தாக்கிலே மழை பெய்தாலும், வருசநாட்டு பகுதியிலே மழை பெய்தாலும் வெள்ளம் கரைபுரண்டு வந்து எங்களுடைய தொகுதியிலுள்ள இடங்களை வருடா வருடம் அடித்துக் கொண்டு போய்விடுகிறது. சென்ற 1998-லே கூட ஆயிரம் வீடுகள் முழுமையாக அடித்துச் செல்லப்பட்டு விட்டன. பிறகு, நானும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெரியசாமி அவர்களும், அவ்வளவு தண்ணீரிலேயும் சென்று, அந்த மக்களைப் பார்த்து, ஆயிரம் சேலை, ஆயிரம் வேஷ்டி, 5 கிலோ அரிசி—அரசாங்கம் கொடுத்தது அதை — கொடுத்தோம். அதுமட்டுமல்லாமல், நானும் ஆயிரம் சேலை,

ஆயிரம் வேஷ்டி, ஒரு மூட்டை அரிசி 1,350 ரூபாய்க்கு வாங்கி, தலா இரண்டு கிலோ அரிசி கொடுத்தோம். இந்த நிலையைத் தயவுசெய்து மாற்றுவதற்கு அங்கே குன்வாரன்கோட்டையிலேயிருந்து பேரணை வரை தடுப்புச் சுவர் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பணை என்பது வேறு; தடுப்புச் சுவர் என்பது வேறு. தடுப்பணை என்பது ஆற்றின் குறுக்கே, ஓடி வருகிற நீரைத் தடுத்து நிறுத்தி, பாசனத்திற்கோ அல்லது நிலத்தடி நீரை அதிகரிக்கப் பயன்படுத்துகின்ற வகையிலோ செய்வது. தடுப்புச்சுவர் என்பது ஆற்றில் வெள்ளக்காலங்களில் பெருகி வருகிற தண்ணீர் ஊருக்குள் நுழையாமல் தடுப்பது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து அரசினுடைய கவனத்தில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திலுள்ள மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையையும், விவசாயிகளுடைய பிரச்சினையையும் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். புஞ்சை நிலங்கள் எல்லாம் நஞ்சை நிலங்களாக ஆகிறவகையில் பம்பை—அச்சன்கோவில் அணை என்று சொல்லப்படுகின்ற அந்த அணைத் திட்டம்—அழகர் அணைத் திட்டம் என்றும் அதைச் சொல்வார்கள். அந்தத் திட்டம் சம்பந்தமாக விருதுநகர், சிவகாசி போன்ற இடங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தரங்கம் நடத்தினார்கள். இந்தத் திட்டத்திற்கு கேரள அரசு ஒப்புதல் கொடுத்துள்ளதா? அது எந்த நிலையில் உள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்பை — அச்சன்கோவில் ஆகிய இடங்களிலே இருக்கின்ற தண்ணீரை அந்தப் பகுதிக்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு, மதுரை, விருதுநகர் போன்ற பகுதிகளுக்குத் திருப்ப வேண்டும் என்று நாம் ஒரு கோரிக்கையை வைத்தோம். National Water Development Agency அது குறித்து ஒரு ஆய்வு நடத்தி, ஏராளமான தண்ணீர் கடலிலே கலக்கின்றது, அதைத் தரலாம் என்று சொன்னார்கள். நாங்கள், பாசனத்திற்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை, குடிநீருக்காகவாவது தாருங்கள் என்று கேட்டிருக்கிறோம். ஆனால், கேரள அரசு அதை முழுமையாக மறுக்கிறார்கள். காரணம், அங்கே கேரளத்திலே, இந்தத் தண்ணீர் திருப்பப்பட்டால் கடல் தண்ணீர் உள்ளே புகுந்துவிடும்.





ஆகையினால், நாங்கள் தரமுடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும், இதிலே National Water Development Agency செய்திருக்கிற ஆய்விற்கேற்ப, இதிலே தலையிட வேண்டும் என்று மத்திய அரசை நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியில் பாசிமுத்தன் ஓடையில் 5 கண் அணை இருந்தது. அது உடைந்து 4 வருடங்கள் ஆகிவிட்டன. மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவந்தபோது இந்த வருடம் எடுத்துக் கொள்ளப்படும் என்று, சட்டமன்றத்திலே கேட்டபோது, சொன்னார்கள். ஆனால், இதுவரை வேலை ஆரம்பிப்பதற்கான அறிகுறியே தெரியவில்லை. எனவே, இந்த வருடமே அந்த வேலையைத் தொடங்குவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசிமுத்தன் ஓடையில் ஏற்கெனவே ஒரு ஷட்டர் போடுகிற வேலை நடந்திருக்கிறது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது இந்த ஆண்டு தூர் வாரும் நிகழ்வின்போது எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குண்டாற்றின் கிளை நதியான மலட்டாற்றில் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று அணை கட்டப்பட்டு வருகிறது. அந்த அணைக்காகப் போடப்பட்டிருந்த சிறப்புக் கோட்டம் பரமக்குடியிலேயிருந்து பணிகளைச் செய்து வந்தது. கடந்த 2 மாதங்களுக்கு முன்பு அது சென்னைக்கு மாற்றப்பட்டுவிட்டது. அதனுடைய பணிகள் மதுரையிலே உள்ள குண்டாறு பேசின் நிரந்தரக் கோட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் இராமநாதபுரம் மாவட்டத்தில் சருகணி ஆற்றுக்கு இருந்த சிறப்புக் கோட்டத்தின் பணி முடிந்துவிட்டதால் அந்தச் சிறப்புக் கோட்டத்தை மலட்டாறு பணியைக் கவனிப்பதற்கு உத்தரவிடுவதன் மூலம் அந்த அணைக்கட்டுப் பணிகளைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்களே, மலட்டாற்றுக்கு என்று ஒரு தனிக் கோட்டம் இருந்ததாக எனக்குச் சரியாக

ஞாபகம் இல்லை. ஆனால், வேறொரு division அந்தப் பணியைச் செய்து கொண்டிருந்தது. ஒருகால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல, அதை மாற்றியிருந்தால், சருகணி ஆற்றிலே வேலை முடிந்திருந்தால், அந்த division-ஐ மலட்டாற்றுக்கு மாற்றுவதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**68—**

### பணியாளர் நல வாரியம்

***38899—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் பணியாற்றும் இலட்சக்கணக்கான தனியார் மின் பணியாளர்களுக்கு நல வாரியம் அமைததிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு இந்தத் திருத்திய விடையை அளிப்பதற்கு அனுமதி கோருகிறேன்.

தமிழகம் முழுவதும் பணியாற்றும் இலட்சக்கணக்கான தனியார் மின் பணியாளர்களுக்குத் தனியாக நல வாரியம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், இவர்கள் பயனடைய இத்தொழில் பிற தொழில்களுடன் அட்டவணையில் சேர்க்கப்பட உள்ளது. எனவே, தனியார் மின் பணியாளர்கள், பிற தொழிலாளர்களுக்குக் கிடைக்கப்பெறும் அனைத்துப் பலன்களையும் பெற வழிவகை செய்யப்படுகிறது.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கடந்த ஆண்டு போடப்பட்ட கேள்வி. இந்த டிசம்பர் மாதத்திலிருந்து அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் பல பணியாளர்களுக்காக, 64 வித பணியாளர்களுக்காக, வாரியம் அமைத்தார்கள். அதில் இன்னும் சேர்க்கப்படவில்லை என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். சேர்க்கப்படும் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்து,



கிராமப்புறங்களில் இருக்கின்ற விவசாய மின் இணைப்புகளையும், வீட்டு மின்னிணைப்புகளையும் பழுது பார்க்கின்ற அந்த அனாதைத் தொழிலாளர்களுக்கு ஆதரவு அளிக்கின்ற கழக அரசுக்கு நன்றி தெரிவித்து, தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து விரைவில் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று வேண்டுகோளை வைத்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 69, திரு. ஏ.வி.ஏ. நாசர். மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**69—**

### ஈட்டுறுதி மருத்துவமனை

***39598—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கடலூரில் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கடலூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் சிப்காட் பகுதியிலே அதிகமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே அதிகமாகத் தொழிலாளர்களும் இருந்துகொண்டு இருக்கிறார்கள். எனவே, அங்கே E.S.I., திட்டத்தின்கீழ் அந்த ஈட்டுறுதி மருத்துவமனையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்கிற அதே நேரத்திலே, அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியம் என்று அமைத்திருக்கின்றோம். பள்ளிவாசலிலே பணிபுரியக்கூடிய இமாம்கள், முஆதினார்கள் மற்றும் கோயில்களிலே பணிபுரியக்கூடிய பூசாரிகள் இவர்களையும், இப்படிப்பட்ட ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 25

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரிக்கை வைத்ததைப் போல அங்கே மருத்துவமனை தொடங்க முடியாவிட்டாலும் dispensary தொடங்குவதற்கு அரசு ஆணை வழங்கியிருக்கிறது. இந்த பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதியிலேயிருந்து அங்கே இரண்டு மருத்துவர்களைக் கொண்ட அந்த dispensary செயல்படுத்தப்படும். அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய அனுமதியும் பெறப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மருத்துவமனை இல்லாவிட்டாலும், அவருடைய கோரிக்கைக்கு ஏற்ப மருந்தகம் 1-2-2001 இலே திறக்கப்படவிருக்கிறது. அவர் குறிப்பிட்டிருக்கிற இந்த அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கான அதுபோன்ற விண்ணப்பங்கள் அவர்களிடம் வருமானால் மாண்புமிகு முதல்வரோடு கலந்து பேசி அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 70, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

70—

### சாலையை அகலப்படுத்துதல்

***32078—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம், பழைய குற்றாலம், மத்தளம்பாறை வரையிலான தார்ச் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் - பழைய குற்றாலம், மத்தாளம்பாறை வரையிலான தார்ச் சாலையைத் தற்போது அகலப்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய குற்றாலம் செல்லுகின்ற சாலை மிகவும் குறுகிய சாலையாக



2001 ஜனவரி 25]

இருப்பதால், குறிப்பாக குற்றாலம் சீசன் காலங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதோடு, சிலசமயங்களிலே விபத்துகளும் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தச் சாலையை அகலப்படுத்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிற இந்தச் சாலை 7.4 கிலோமீட்டர் தொலைவு இருக்கிறது. அவர் குறிப்பிடுவதைப்போல, குற்றாலத்திலே சீசன் ஏற்படுகிறபோது அங்கு போக்குவரத்து அதிகம் இருக்கிறது. மற்றக்காலங்களிலே அவ்வளவு இல்லை. என்றாலும், இதை அகலப்படுத்துவதற்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. உடனடியாக நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் அந்தப் பணியை அகலப்படுத்தும் பணியை எடுத்துக்கொள்ள முடியவில்லை. அது மட்டுமல்ல, இருபுறங்களிலும் நல்ல மரங்கள் இருக்கின்றன. அந்த மரங்களையும் வெட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதில் ஒரு சிக்கல் இருக்கிறது. என்றாலும் இப்போது இருக்கின்ற சாலையைச் சரிசெய்வதற்கு 54 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பணி நடைபெறுகிறது.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும் அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தால் என்னிடம்தான் முதலில் நீங்கள் அனுமதி வாங்க வேண்டும். அமைச்சரைப் பார்த்துப் பேசக்கூடாது, கேளுங்கள்.

**திரு. ச. அழகிரி:** சிதம்பரம் பகுதியில், சிதம்பரம் — கந்தகுமாரன் சாலை, புத்தூர் - கந்தகுமாரன் சாலை ஆகியவை நீண்டகாலமாகச் செயல்படாமல் இருக்கின்றன. எந்தப் பேருந்தும் அங்கே இயங்கவில்லை. அனைத்துப் பேருந்துகளும், அரசாங்கப் பேருந்துகள் உட்பட நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. பலமுறை அந்தப் பகுதி மக்கள் சாலை மறியல் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய

[2001 ஜனவரி 25

கவனத்திற்கும் இதை நான் கொண்டுவந்து இருக்கிறேன். எனவே, அதை இந்த முறையாவது மறுபரிசீலனை செய்து சீர் செய்து தரமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சாலையை மேம்படுத்துவது குறித்து, செப்பனிடுவது குறித்து என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். உரிய வகையில் அதிகாரிகளுக்கு விபரம் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. நான் கருதுகிறேன், மத்திய அரசின் நிதியிலே இருந்து இந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

71—

**மாற்றுவழிப் பாதை**

***32296—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் கருதி மாற்றுவழிப் பாதை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குத்தாலம் நகரத்தில் மாற்றுவழிப் பாதை அமைப்பதற்கான திட்டம் ஏதும் இல்லை.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் ஒரு வளர்ந்து வருகிற பேரூராட்சிப் பகுதியாகும். அதிலும் மயிலாடுதுறை - கும்பகோணம் முதன்மைச் சாலையில் அமைந்திருக்கிற ஒரு நகரம்; வளர்ந்து வருகின்ற நகரம். குத்தாலம் கடைவீதிப் பகுதியில் போதிய இடவசதியில்லாமல், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. மாற்றுப்பாதை அமைப்பதற்குப் போதிய இட வசதியும் இருக்கிறது. எனவேதான் அதன் அவசியத்தைக் கருதி, 11-1-2001 அன்று அஞ்சாறுவார்த்தலையில் நடைபெற்ற பாலம் திறப்பு விழாவிலே கலந்துகொண்டபோது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்



2001 ஜனவரி 25]

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே இதைப்பற்றிப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு மறுபரிசீலனை செய்து, குத்தாலம் நகரத்திற்கு ஒரு மாற்றுப் பாதை அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று விளக்கமாகவே தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மொத்தம் 60,000 கிலோமீட்டர் அளவுக்கு சாலைகள் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகின்றன. அதிலே 40,000 கிலோமீட்டர் அளவுக்கு O.D.R. என்று சொல்லக்கூடிய இதர மாவட்ட சாலைகளாக வருகின்றன. எனவே, இந்த 60,000 கிலோமீட்டர் சாலைகள் கடந்த 18 ஆண்டுகாலமாகப் பராமரிக்கப்படாமல் சிதைந்து, உடைந்துபோய் இருந்தன என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இந்த 60,000 கிலோமீட்டரில் கிட்டத்தட்ட 22,000 கிலோமீட்டர் இந்த நாலரை ஆண்டுக்காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவையெல்லாம் சீர்செய்யப்பட்டு வருகின்றன. இன்னும் மிச்சமிருக்கிற பகுதிகளும் சீர் செய்யப்பட வேண்டும். அதற்குத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னுரிமை அளிக்கிறார்கள். குத்தாலம் போன்ற பேரூராட்சிகளுக்கு Bye-pass சாலை அமைப்பதற்கு உடனடியாக நாம் பணியை எடுத்துக்கொள்வதற்கான நிதி ஆதாரம் இல்லை. என்றாலும், நம்முடைய அரசு, மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் தொழில் நகரங்கள் ஆகிய இப்படிப்பட்ட இடங்களுக்கு புறவழிச்சாலைகள் அமைப்பது என்று கொள்கை முடிவு எடுத்து, அவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. குத்தாலத்தைப் பொறுத்தவரையில் புறவழிச்சாலை அமைப்பதற்கு இடம் இருக்கிறது என்று உறுப்பினர் சொல்கிறார். நாங்கள் ஆய்வு செய்தவகையில் அந்தப் பகுதியில் இரண்டு இரயில்வே கடவுகள் வருகின்றன. அந்த ரெயில்வே கடவுகளிலும் மேம்பாலங்கள் அமைக்கப்பட வேண்டும். அந்த மேம்பாலங்களை அமைப்பதற்கு, இரயில்வே துறையினர் 50 சதவீதம் தொகை கொடுப்பார்களா என்று தெரியாது. காரணம் அவர்களுடைய ஆய்வில், ஒரு இலட்சம் T.C.U. கணக்கு வரவேண்டும். அது இந்த இரயில்வே கடவில் வராது என்று கருதுகிறேன். எனவே, இப்படிப்பட்ட சிக்கல் இருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சற்றுப் பொறுத்திருக்க வேண்டும். எதிர்காலத்தில் நிதி ஆதாரத்திற்குத் தக்கபடி இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 ஜனவரி 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

72—

## பெட்ரோல் தரக் கட்டுப்பாடு

***32825— திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களில் தரக் கட்டுப்பாட்டைச் சோதனை செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், அவ்வாறு சோதனை செய்யும் முறை கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மைய அரசு வெளியிட்டுள்ள மோட்டார் ஸ்பிரிட் மற்றும் உயர்வேக டீசல் (வழங்கல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்துதல் மற்றும் முறைகேடுகளைத் தடுத்தல்) ஆணை, 1998-ஐ, தமிழக அரசு, அரசாணை (நிலை) எண் 1603, உள்துறை (போக்குவரத்து-4), நாள் 30-11-1999-ன்படி மறு அறிவிக்கை செய்ததன் மூலமாக மேற்குறிப்பிட்ட கட்டுப்பாட்டு ஆணையின்கீழ், பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களைத் தமிழகத்தில் மாநில அரசால் தரக் கட்டுப்பாடு சோதனைகள் மேற்கொள்ள இயலும்.

(ஆ) வினா எழவில்லை.

முற்பகல் 10-10

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மாநில அரசால் கடந்த ஆண்டு எத்தனை விற்பனை நிலையங்கள் சோதனை செய்யப்பட்டன? அதில் ஏதேனும் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டனவா? கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் அவற்றைச் சரி



2001 ஜனவரி 25]

செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் சார்பாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினுடைய அனைத்து உதவி ஆணையர்கள் (ஆய்வு) மற்றும் வருவாய்த் துறையின் வட்டாட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள், வட்டாட்சியர் நிலையில் உள்ள வட்ட வழங்கல் அலுவலர்கள், அனைத்து மாவட்ட வழங்கல் அலுவலர்கள், ஆய்வாளர்கள், பணி நிலையில் உள்ள தொழில் துறை அலுவலர்கள், குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை கண்காணிப்பாளர் பணி நிலைக்குக் குறையாத அலுவலர்கள் இவர்கள் எல்லாம் ஆய்வு செய்ய அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகஸ்ட் மாதம் 37 முறைகேடுகளும், செப்டம்பர் மாதம் 35 முறைகேடுகளும், அக்டோபர் மாதம் 29 முறைகேடுகளும், நவம்பர் மாதம் 19 முறைகேடுகளும் கண்டுபிடிக்கப்பட்டு, நடவடிக்கை யெடுக்கப்பட்டு அதற்காக அபராதம் வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

73—

## வீடுகள்

***35526— திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புது ஆவடி சாலை லெட்சுமிபுரம் பகுதியில் வாழும் மக்களுக்கு குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டித்தர அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், இருக்கையில் இல்லை.

[2001 ஜனவரி 25

வினா எண் 74, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**74—**

**வட்டாட்சியர் அலுவலகம்**

***37342—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில், வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களும் ஒரே வளாகத்தில் அமையும் விதத்தில் இடம் தேர்வு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில், வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களும் ஒரே வளாகத்தில் அமையும் விதத்தில் இடம் தேர்வு செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி நகரின் மையப்பகுதியிலே, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சுமார் 400 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, அதிலே 50,55 ஏக்கர் நிலத்தில் மட்டும்தான் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அந்த வீடுகளும் இன்னும் சரியாக விற்பனையாகவில்லை. அந்த நிலையிலே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்திய நிலம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய வட்டாட்சியர் அலுவலகம், கருவூலம் - Treasury - தீயணைப்பு நிலையம் மற்றும் அரசு அலுவலகங்களுக்கான கட்டடங்கள் அத்தனையையும் கடடுவதற்குத் தகுதியான இடம்; அத்துடன், சேலம்—ஈரோடு செல்லும் National Highways-லே அமைந்துள்ள இடம்; குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அங்கே மேல்நிலைத் தொட்டி கட்டி, எந்த நேரமும் குடிநீர் கிடைக்கக்கூடிய இடம்; அரசு போக்குவரத்துக் கழகத்தின் தலைமை இடத்தைக் கொண்ட



2001 ஜனவரி 25]

இடம்; ஆகையாலே, அந்த இடத்தைத் தேர்வு செய்து, அனைத்து அரசு அலுவலகங்களையும் ஒரே இடத்தில் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது சம்பந்தமாக சின்னமணலி கிராமத்திலே நிலம் தேர்வு செய்யப்பட இருக்கிறது. அதனால், அந்தத் தேர்வுப் பணிகள் முடிந்ததற்குப் பிறகு மற்ற பணிகள் தொடர்ந்து நடத்தப்படும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு Master-Plan Complex போல, இந்த வட்டாட்சியர் அலுவலக கட்டட வளாகத்திலேயே மற்ற அலுவலகங்களையும் உள்ளடக்கி கட்ட முடியுமா என்று கேட்கிறார். அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று துறையின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நிலம் கிடைப்பதும் சிரமம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட நிலத்தைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இங்கே முன்னாள் வருவாய்த் துறை அமைச்சரவர்களிடமும் சுட்டிக்காட்டியதாகச் சொன்னார்கள். இது குறித்து அரசு கவனத்தில கொண்டு, சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? கட்டாயம் இரண்டாவது கேள்வி கேட்க வேண்டுமா? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே நம்முடைய மறைந்த மாமேதை நாஞ்சிலார் அவர்கள் நான் சொன்ன அந்த வீட்டுவசதி வாரியத்தின் நிலத்தைக் கையகப்படுத்தி அதிலே அலுவலகங்கள் கட்ட ஆவன செய்யப்படும் என்ற உறுதியை அளித்திருந்தார்கள். தற்போது அது வேறு இடத்திற்கு மாற்றப்படலாம் என்கிற ஐயப்பாட்டை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்களே, அதில், இருக்கக்கூடிய முரண்பாடுகள் என்ன? ஏற்கெனவே கையகப்படுத்திய அந்த நிலம் தற்போது காலியாக இருக்கிறது. அந்த இடத்திலே கட்டுவதற்குண்டான வசதிகள் இருக்கின்றன. அதற்குத்தான் நான் சொன்னேன், அந்த இடத்திலே அனைத்து வசதிகளும் இருககின்றன, ஊரினுடைய மையப்பகுதி அது; பஸ் ஸ்டாண்டிலிருந்து மிக விரைவிலே. பொதுமக்கள் எந்தவிதமான தொல்லையும் இல்லாமல் செல்வதற்கு தகுதியான இடம். ஆகையினாலே, அந்த இடத்திலே கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என் பதிலிலேயே சொன்னேன்; மாவட்ட தலைநகரங்களிலேதான் பொதுவாக Master Plan Complex-லே பல்வேறு அலுவலகங்கள் ஒன்றாக இருப்பது போன்ற நிலையை ஏற்படுத்துகின்ற கட்டடங்கள் கட்டுவது வழக்கம். அதுபோன்ற அமைப்புகள் இப்போது தமிழ்நாட்டில் வேறு எங்கும் இல்லை என்பதுதான் பதில். இருந்தாலும் நம்முடைய முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, ஒரு இடத்திலே அதுபோன்று பரிசீலனை செய்யலாம் என்று குறிப்பிட்டதைச் சொன்னார்கள். நானும் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அதுகுறித்து என்ன கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள், இப்போது அதில் கட்டுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா என இரண்டையும் பரிசீலித்து, அதிகாரிகளிடம் கேட்டு, முதலமைச்சரோடும் கலந்து இந்தக் கருத்து குறித்து அரசு உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

75—

### கட்டடம்

***32407—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடம் பழுதடைந்துள்ள நிலையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடம் பழுதடைந்துள்ள நிலையில், புதிதாகக் கட்டடம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.





**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறில் உரிமையியல் நீதிமன்றக் கட்டடம் மிகவும் பாழடைந்து இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. சமீபத்தில் பெய்த மழையில்கூட நீதிமன்ற ஆவணங்கள் எல்லாம் நனைந்து, வீணாகி, நீதிபதி தலையிலேயே கற்கள் விழுகின்ற அளவுக்கு அந்தக் கட்டடம் இருக்கிறது. அந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு 10 ஆண்டுகளாக நிலம் கையகப்படுத்தப் பட்டிருக்கிறது. எனவே, அவசர, அவசியத்தைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, புதிய கட்டடத்தை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறில் ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் அமைப்பதற்காக 24-1-1998-ல் ரூ.148.50 இலட்சம் மதிப்பில் ஒரு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நிதிநிலை நெருக்கடியின் காரணமாக அந்தத் திட்டம் ஏற்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நீதிமன்றக் கட்டடத்தைப் பழுதுபார்ப்பதற்காக ரூ.13.75 இலட்சத்திலே ஒரு செயற்குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறது. அதற்கும் நிதித் துறை ஒத்துழைக்கவில்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானது; அது உடனடியாக பரிசீலிக்கப்பட வேண்டியது. எனவே, மீண்டும் நிதித் துறையினிடத்திலே, வற்புறுத்தி, அந்தப் பழுது பார்க்கின்ற பணியைத் துரிதப்படுத்த, சட்டத் துறை முற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

76—

### மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகம்

***40982—திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குறிப்பாக கோவை மாவட்டத்தில் உள்ள தொறையர் சமூகத்தை மிகப் பிற்பட்ட சமூகமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2001 ஜனவரி 25

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொறையர் வகுப்பினை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை எப்போது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைத்து வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலை குறித்த கணக்கெடுப்பு முடிந்த பின்னர் ஆணையத்தின் பரிந்துரை மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77. திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

77—

### நினைவுச் சின்னம்

***36438—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பௌதீகத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் சர். சி.வி. இராமன் அவர்களுக்கு கொல்கத்தா சோதனைக்கூடத்தில் இராமன் விளைவு என்ற புதிய கண்டுபிடிப்பிற்கு பேருதவியாக இருந்த டாக்டர் கே.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு அவர் பிறந்த ஊரான வத்திராயிருப்பில் நினைவுச் சின்னம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையில் இல்லை.



2001 ஜனவரி 25]

முற்பகல் 10-20

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பாரத ரத்னா Nobel Laureate சர்.சி.வி. இராமன் அவர்கள் கொல்கத்தா ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது கண்டுபிடித்த இராமன் விளைவு Raman Effect என்ற அந்த அதிசய கண்டுபிடிப்புக்கு, அவருக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றியது மட்டுமல்லாமல், 1954 ஆம் ஆண்டு ஹோமிபாபா அவர்களும், பண்டித நேரு அவர்களும் அணுமின் நிலையத்தை எங்கே நிறுவவேண்டுமென்று ஆலோசித்தபொழுது Baba Atomic Research Centre-அணு ஆராய்ச்சி நிலையம் பம்பாயில்தான் நிறுவப்பட வேண்டுமென்பதற்கு ஆணித்தரமாக வாதாடி, அங்கே நிறுவுவதற்கு உறுதுணையாக இருந்த திரு. கே.எஸ். கிருஷ்ணன் அவர்கள் பௌதீகத்திலும், நம்முடைய நாட்டினுடைய அறிவியல் துறைக்கும் முன்னோடியாக விளங்கியவர். எப்படி கலைஞர்களை நாம் போற்றுகின்றோமோ, அதேமாதிரி அறிவியல் துறையில் முன்னோடியாக இருக்கின்றவர்களையும் போற்றுவதன் மூலமாகத்தான் நாம் அறிவியல் துறை வளர்வதற்கு ஆதரவு அளித்தவர்கள் ஆவோம் என்பதால், வத்திராயிருப்பில் பிறந்து, கொல்கத்தாவில் ஆராய்ச்சி செய்து உலகப் புகழ் பெற்ற கே.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு வத்திராயிருப்பில் ஒரு நினைவுச் சின்னம் நிறுவ அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் கே.எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவி இருக்கிறார் என்பது உண்மை. இரஷ்யாவிலிருந்து லெனின் விருதுகூட அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் மொழிக்காக, நாட்டுக்காக தியாகம் செய்த பெருமக்களுக்கும், இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்காகப் போராடிய தியாகப் பெருமக்களுக்கும் நினைவுச் சின்னங்கள் எழுப்பி மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, இந்தியாவிலேயே தியாகிகளை, சிறந்த அறிஞர் பெருமக்களை பாராட்டுகிற ஒரு அரசாக கலைஞர் அரசு இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருங்காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்பு உருவாக்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 ஜனவரி 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

78—

### கால்நடை மருந்தகம்

***34527—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், குச்சனூரில் கால்நடை மருந்தகம் அமைக்க இலவசமாக நிலம் தர ஊர் மக்கள் தெரிவித்திருப்பதால், அங்கு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா இருக்கையில் இல்லை.

வினா எண் 79. திரு. இ. புகழேந்தி. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

79—

### குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல்

***6350—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், கடலூர் நகரம், அருந்ததியர் வசிக்கும் குடியிருப்புகளைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?



2001 ஜனவரி 25]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், கடலூர் நகரம், அருந்ததியர் வசிக்கும் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் செயல்படுத்தப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி இருக்கையில் இல்லை.

வினா எண் 80, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

80—

### கருப்பட்டியின் மருத்துவப் பயன்கள்

***41668—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருப்பட்டியின் மருத்துவப் பயன்களைப் பொதுமக்கள் அறிந்துகொள்ள நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கருப்பட்டியின் மருத்துவப் பயன்களைப் பற்றிப் பொதுமக்கள் அறிந்துகொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்பட்டி என்று சொல்லக்கூடிய பனை வெல்லம் உடல் நலத்திற்கு உகந்ததாக இருக்கிறது. உதாரணத்திற்கு, சர்க்கரை வியாதி உள்ளவர்கள்கூட காப்பியில் சர்க்கரை சேர்த்துக்கொள்ளும் நேரத்திலே உடல் ஆரோக்கியம் கெடும் என்று சொல்வார்கள். ஆனால் கருப்பட்டியிலே காப்பி சாப்பிடுவது அவர்களுக்குக்கூட உடல் நலத்திற்கு நல்லது என்று சொல்வதற்கு ஏற்ப, பனை வெல்லம், பனங்கற்கண்டு மற்றும் பனையிலிருந்து தயாரிக்கக்கூடிய

[2001 ஜனவரி 25

அனைத்து உணவுப் பொருட்களும் மற்ற பொருட்களும் உடல்நலத்திற்கு ஏதுவாக இருக்கின்ற காரணத்தால் அந்தத் தொழிலை எல்லா வகையிலும் ஊக்குவிப்பதற்கு வாய்ப்பாக அது இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட பனை வெல்லத்தினுடைய மகத்துவத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய வகையிலே இந்தக் கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவற்றை எல்லாம் பயன்படுத்துவதற்கு மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு வாய்ப்பளிக்குமா? அதே நேரத்திலே இன்றைய சூழ்நிலையில் பனை ஏறும் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் வைத்திருக்கிறார்கள். அவை நியாயமான கோரிக்கைகள். அடித்தட்டு மக்கள், உழைக்கக்கூடிய மக்கள், அவர்கள் வாழ்க்கைகள் முன்னேற்றத்திற்காக அரசு நலத் திட்டங்களையெல்லாம் கூடுதலாக அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்பட்டி—பனை வெல்லம்— புரதச் சத்துக்கள் மற்றும் ஊட்டச் சத்துக்கள், மருத்துவக் குணங்கள் அடங்கிய ஒரு உணவுப் பொருளாகும். தற்போது கருப்பட்டியானது மாவட்ட கூட்டுறவு கருப்பட்டி உற்பத்திச் சங்கங்கள், மாநில கூட்டுறவு சம்மேளனம் போன்ற கூட்டுறவு அமைப்புகள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகிறது. கூட்டுறவு அமைப்புகள் நடத்துகிற பொருட்காட்சிகளில், சர்வோதயச் சங்கங்கள் போன்றவை நடத்துகிற பொருட்காட்சிகளில், கண்காட்சிகளில் இது பொதுமக்கள் பயன்படுத்துகிற விதத்தில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் அவ்வப்போது அரசுத் துறைகள் நடத்தும் பொருட்காட்சி, மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு மாநில கூட்டுறவு ஒன்றியங்கள் போன்ற கூட்டுறவு அமைப்புகள் நடத்தும் கண்காட்சிகளிலும் அது வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. கருப்பட்டியின் மருத்துவத் தன்மை தொடர்பாக அவ்வப்போது நாளிதழ்களில், வார இதழ்களில், செய்தித் தாள்களில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. மாநில இணையம் மற்றும் மாவட்ட சம்மேளனம் நடத்தும் பாம்கிராப்ட் மற்றும் கருப்பட்டி விற்பனை செய்யப்படும் இடங்களில் பொதுமக்கள் தெரிந்துகொள்கின்ற வகையில் கருப்பட்டியின் மருத்துவ குணங்கள் பற்றிய குறிப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த அரசு வந்ததற்குப் பிறகு தமிழ்நாட்டில் மூடப்பட்டிருந்த நான்கு சர்க்கரை ஆலைகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு அந்த நான்கு சர்க்கரை ஆலைகளிலும் பனஞ்சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டு, அது சித்த மருத்துவத்திற்குப் பயன்படுகிறது. 100 கிராம்



2001 ஜனவரி 25]

பனை வெல்லத்திலுள்ள சத்துகளின் அளவுகள்: வைட்டமின்-பி 21 மில்லிகிராம் வைட்டமின் ரிப்போபிளேவின் 432 மில்லிகிராம், நிக்கோடினிக் ஆசிட் 524 மில்லிகிராம், வைட்டமின்-சி 11 மில்லிகிராம். சீசன் நேரத்தில் சுமார் ஒரு கிலோ 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதர காலங்களில் ஒரு கிலோ 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் 40 கோடி ரூபாய் அளவிற்கு கருப்பட்டி உற்பத்தி செய்யப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கிராமப்புறங்களில் தாய்மார்கள் பேறுகாலத்தில்கூட இந்தக் கருப்பட்டியைப் பயன்படுத்துகின்ற நிலைமை இன்றைக்கும் நிலவி வருகிறது. ஆகவே, இந்த மருத்துவ குணங்கள் அடங்கிய சத்தான கருப்பட்டியை உற்பத்தி செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போதுகூட மத்திய கதர் ஆணைக் குழுவின் மூலமாக ஒரு கோடி ரூபாயில் இந்தப் பனை வாரியத்திற்கு, சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்பாக 16 இலட்சம் ரூபாயும், இரண்டு தினங்களுக்கு முன்பு 20 இலட்சம் ரூபாயும் படிப்படியாக இதனுடைய தொழில் வளர்ச்சிக்கு அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தி செய்யப்படுகின்ற கருப்பட்டி ஒரு நல்ல, நோய் தீர்க்கும் மருந்தாகவும் இருக்கின்ற காரணத்தினால் கிராமப்புறங்களில் ஊட்டச் சத்துக்கு இந்தக் கருப்பட்டியை—பனை வெல்லத்தை — கொடுப்பதற்கு அரசு சிபாரிசு செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்வதோடு, பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்களுக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊதியம் வழங்கவில்லை; கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னால்கூட உண்ணாவிரதம் இருந்தார்கள்; அவர்களுக்கு ஊதியம் எப்போது வழங்கப்படும் என்பதையும் தங்கள் மூலம் அறிந்துகொள்வதோடு, இந்தக் கருப்பட்டியை உற்பத்தி செய்கின்ற......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை கேள்விகள் கேட்பீர்கள்? இரண்டு கேள்விகள் கேட்டாகிவிட்டது. அதற்கு அமைச்சர் பதில் சொல்வார்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்பட்டி என்பது புரதச் சத்து மிகுதியாக உள்ள உணவுப் பொருளாகும். இதனை அரசின் மூலம் சத்துணவுக் கூடங்கள் மற்றும் ஊட்டச் சத்துணவுக் கூடங்களுக்கு வழங்குவதற்கு அரசின்

பரிசீலனையில் இருக்கிறது. இந்த வாரியத்தின் வளர்ச்சிக்காக, இந்த வாரியத்தில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள், அரசு வழங்குகின்ற நிதியைக் கொண்டு அந்த வாரியத்திலே இருக்கின்ற தொழில்களை மேம்படுத்தி அதிக வியாபாரம் செய்து அதன் மூலமாக தங்களுடைய சம்பளத்தை, ஊதியத்தை எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுதான் சட்டத்தினுடைய விதிகளும் ஆகும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பளம் இரண்டு ஆண்டுகளாகக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார், அதற்கு என்ன சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அவ்வப்போது நிதியுதவி இந்த வாரியத்திற்கு அளித்து வருகிறது. அந்த நிதியுதவி மூலம் உற்பத்தி செய்து, அந்த இலாபத்தில் அவர்கள் சம்பளத்தைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலம் எல்லா உற்பத்திப் பொருட்களுக்கும் கடன் வழங்கப்படுகிறது. அதைப்போல பதநீர் இறக்குகிற தொழிலாளர்களுக்கு உற்பத்திக் கடன் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் சீசன் காலத்தில் அந்தந்த மாவட்ட சம்மேளனத்தின் மூலம் பதநீர் இறக்குவதற்கு அரசு நிதியுதவி அளித்து வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருப்பட்டி என்பது மருத்துவ குணம் வாய்ந்தது என்ற அடிப்படையிலே இதைப் பயன்படுத்த பல்வேறு நிலைகளில் எல்லாம் விளம்பரம் செய்கிறார்கள் என்ற தகவல் ஒருபுறம் இருந்தாலும், முக்கியமான ஒரு பகுதியாக இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போது இந்தக் கருப்பட்டி உற்பத்தி என்பது 2 சதவீதம்கூட இல்லாத ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அடிப்படையான காரணம், இந்தப் பனைமரம் ஏறுகின்ற தொழிலாளர்களுக்கு உரிய வருவாய் வராத





காரணத்தினால் அவர்கள் பிற தொழில்களைப் பார்க்கச் சென்றுவிட்டதுதான். எனவே, அதை ஊக்குவிக்கின்ற வகையில் பனை ஏறுகின்ற அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுப்பது, விவசாயத்திற்கு நிலம் கொடுப்பது, இப்படி இந்த வகையில் அவர்களை மேம்படுத்துவதற்கும், இந்தக் கருப்பட்டி தொழிலை ஊக்குவிப்பதற்கும், பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனத்தில் இருக்கின்ற அதனுடைய பல காரியாலயங்கள் மூடப்பட்டுள்ளன, அவற்றை மீண்டும் புனரமைப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட 500 வீடுகளில் இதுவரை 168 வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டன. பனைமரங்கள் 60 அடி, 50 அடி, 40 அடி என்று உயர்ந்து இருக்கின்ற காரணத்தால், வயதானவர்கள் அந்தப் பனைமரத்தில் ஏறுவது சிரமமாக இருக்கின்ற காரணத்தால், விஞ்ஞான முறைப்படி பனைமரத்தில் ஏறுவதற்கு கருவிகள் கண்டுபிடிப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*
**(பட்டியல்கள் 3 மற்றும் 4)**

## மூன்றாம் பட்டியல்

## நூலகங்கள்

1—

**வினா 41317— திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியிலுள்ள ஓமலூர் மற்றும் காடையாம்பட்டி ஒன்றியங்களில் எத்தனை நூலகங்கள் எங்கெங்கு செயல்படுகின்றன?

*உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2001 ஜனவரி 25

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியத்தில் கீழ்க்கண்ட நூலகங்கள் செயல்படுகின்றன:

**கிளை நூலகங்கள்—2**

1. ஓமலூர்
2. கருப்பூர்

பகுதிநேர நூலகங்கள் — 1

பச்சனம்பட்டி

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியத்திலுள்ள நூலகங்கள் விவரம் வருமாறு:

**1 கிளை நூலகங்கள்-2**

1 நடுப்பட்டி (2) கொங்குபட்டி

**2 ஊர்ப்புற நூலகங்கள் -2**

1 கஞ்சநாயக்கன்பட்டி (2) தீவட்டிப்பட்டி

3 பகுதிநேர நூலகங்கள் - 1

பூசாரிப்பட்டி.

2—

**தெருவிளக்கு அமைத்தல்**

**வினா 27506— திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கூத்தப்பாடி புது வீதியில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2001 ஜனவரி 25]

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி புது வீதியில் ஒரு தெருவிளக்கு அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்தால் விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட்டு உள்ளது. மேற்படி இடத்திற்கு தெருவிளக்கு அமைக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ள கூத்தப்பாடி, ஊராட்சிக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

3—

**நீர்த்தேக்கத்தொட்டி**

**வினா 30460— திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, அத்திமரத்தூர் என்ற கிராமத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, அத்திமரத்தூர் கிராமத்தில் வரும் நிதியாண்டு 2000-2001-ல் முன்னுரிமை அடிப்படையில் மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4—

**சாலை சீரமைத்தல்**

**வினா 31236— திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 25

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி மற்றும் பருவதனஅள்ளி ஊராட்சி, மோட்டுப்பட்டி, ஆணைக்கல்லானூர் பருவதனஅள்ளி வரை சுமார் 5.2 கி.மீ ஒன்றிய சாலையை நெடுஞ்சாலைத் துறை ஏற்று பழுதடைந்துள்ளதை சீர் செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி மற்றும் பருவதனஅள்ளி ஊராட்சி, மோட்டுப்பட்டி, ஆணைகல்லானூர் பருவதனஅள்ளி வரை உள்ள 5.2 கி.மீ. ஒன்றிய சாலையைச் சீர் செய்யும் பணி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செய்யப்பட்டுள்ளது.

5—

### மேல்நிலை குடிநீர்த் தொட்டி

**வினா 32817— திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், சோழபுரம் ஊராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு புதிய மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், சோழபுரம் ஊராட்சியில் உள்ள சோழபுரம் மேற்கு, சோழபுரம் கிழக்கு, சாரக்கொல்லை ஆகிய குடியிருப்புகளுக்கு சோழபுரம் மேற்கு குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் ஊராட்சியின் பராமரிப்பில் இருந்து வருகிறது. மேலும் குடிநீர் வசதி



2001 ஜனவரி 25]

இல்லாத பகுதிகளைத் தனியாகப் பிரித்து சோழபுரம் வடக்கு என புதிய குடியிருப்பாக கணக்கில்கொண்டு அதற்கு தனியாக 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்த நடப்பு நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு களப்பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6—

### மேல்நிலை குடிநீர்த் தொட்டி

**வினா 32820— திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், காசாநாடு மேலத் தெரு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை போக்க மேலத்தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், காசாநாடு புதூர் மேற்கு என்ற குடியிருப்பும், காசாநாடு மேலத்தெரு என்ற குடியிருப்பும் ஒரே குடியிருப்பாகும். தற்போது இக்குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி, பகிர்மான குழாய் 1,500 மீட்டர் மற்றும் பொதுக் குழாய்கள் கொண்ட குடிநீர்த் திட்டம் பயனில் இருந்து வருகிறது. இங்கு குடிநீர்ப் பிரச்சினை இல்லை.

7—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 32885— திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, ஆவுடையாள்புரம் கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்து மேல்மூடி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

[2001 ஜனவரி 25

(ஆ) ஆம் எனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவுடையாள்புரம் குடியிருப்பிலுள்ள மேல்நிலைத் தொட்டியின் பழுதினை சீரமைக்க ஊராட்சியின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் (2000-2001) இக்குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட திட்டமிடப்பட்டு அதற்கான புதிய நீராதாரமும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

8—

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா 30444— திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட புளியடி தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பேரூராட்சிக்குட்பட்ட புளியடி தெருவின் தற்போதைய மக்கட்தொகை



2001 ஜனவரி 25]

350 ஆகும். சுமார் 70 வீடுகள் கொண்ட இத்தெருவில் ஒரு பொதுக்குழாயும், 12 வீட்டு குடிநீர் இணைப்புகளும், ஒரு கையிறைப்பானும் உள்ளது. இவை தவிர சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பேரூராட்சி மூலம் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து காற்றழுத்த இணைப்பான் (Compressor Pump) மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 10-வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் பேரூராட்சி மூலம் புளியடி தெருவில் ரூ.1,80,000/- மதிப்பீட்டில் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து 3 குதிரைத்திறன் கொண்ட மின்விசை இறைப்பான் மூலம் 7,500 லிட்டர் கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றப்பட்டு அருகில் ஆறு பொதுக்குழாய் அமைத்து குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே திசையன்விளை நகர பேரூராட்சிக்குட்பட்ட புளியடி தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்படும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

9—

**கைப்பம்பு அமைத்தல்**

**வினா 30818— திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, முங்கம்பாடியன் கொட்டாய் அருகில் குடிநீர் வசதிக்காக நடப்பாண்டில் ஒரு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சியில் தற்போது போதிய நிதி வசதியில்லை. எனவே, முங்கம்பாடியன் கொட்டாய் அருகில் கைப்பம்பு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

[2001 ஜனவரி 25

10—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 32167— திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், மேலஉளூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்குப் புதிய சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், மேலஉளூர் மேற்கு குடியிருப்பை சார்ந்ததாகும். இக்குடியிருப்பிற்கு குடிநீர் வழங்க 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அதனுடன் சார்ந்த மேலஉளூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு குழாய் நீட்டிப்பு செய்து 1,000 லிட்டர் கொள்ளளவுள்ள புதிய சிறிய நீர்த்தேக்கத் தொட்டி கட்டி அதன் மூலம் மாணவர்களுக்கு விரைவில் குடிநீர் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

11—

### குடிநீர் வழங்கும் திட்டம்

**வினா 33928— திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழவெள்ளக்கால் ஊராட்சி, துவரங்காட்டில் குடிநீர்த் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் பணி நடைபெறாமல் காலதாமதப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2001 ஜனவரி 25]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், கீழவெள்ளக்கால் ஊராட்சியைச் சார்ந்த துவரங்காடு குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 2,100 ஆகும். தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 20 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பிற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு ரூ.7.69 இலட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மின் இயந்திர அறை மற்றும் குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மற்றும் பொதுக்குழாய்கள் கட்டுமான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளை விரைவில் முடித்து இத்திட்டத்தினை மக்கள் பயனுக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

12—

### குடிநீர் வழங்குதல்

**வினா 34007— திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூர் ஊராட்சி, சின்னநாடானூர், கோட்டைவிளையூர், அழகம்பெருமானார், சண்முகபுரம், ராயப்பநாடானூர் ஆகிய பகுதிகளிலுள்ள குடிநீர் உவர்நீராக இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை சீர்செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூர் ஊராட்சி, சின்னநாடானூர், கோட்டைவிளையூர்,

[2001 ஜனவரி 25

அழகம்பெருமானார், சண்முகபுரம், இராயப்பநாடாரூர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்க விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி நிர்ணயம் செய்து 3/2001-க்குள் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

13—

**நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா 34052— திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், தீப்பணம்பட்டி ஊராட்சி, முருகவேல்பட்டியில் உள்ள பொதுக் கிணற்றில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திப்பணம்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியே முருகவேல்பட்டி ஆகும். திப்பணம்பட்டி குடியிருப்பிற்கு ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய் மற்றும் 30 பொதுக் குழாய்களுடன் கூடிய குடிநீர்த் திட்டம், 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் நிறைவேற்றப்பட்டு தற்போது ஊராட்சியின் பராமரிப்பில் உள்ளது. முருகவேல்பட்டி பகுதியில் உள்ள திறந்தவெளிக் கிணற்றிற்கு அருகில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.



2001 ஜனவரி 25]

14—

**நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 34070— திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூர் ஊராட்சி, சிதம்பரநாடார் தெருவில் உள்ள பொதுக் கிணற்றில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், ஆவுடையானூர் ஊராட்சியைச் சார்ந்த சிதம்பரநாடார் தெருவின் தற்போதைய மக்கட்தொகை 4,600 ஆகும். இக்குடியிருப்பிற்கு 1995ஆம் வருடம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால், ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய், பொதுக் குழாய் ஆகிய அமைப்புகளுடன் கூடிய மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, தற்போது ஊராட்சியின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின் மூலம் இக்குடியிருப்பு மக்களுக்கு நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, இக்குடியிருப்பிற்கு புதிய திட்டம் எதுவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் தற்போது இல்லை. மேலும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிகள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

### கிரேன்

**வினா 35469—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தமிழகத்தில் எத்தனை கிரேன் (Crane)கள் உள்ளன?

(ஆ) துவக்கத்தில் வாங்கப்பட்டதில் எவ்வளவு தற்போது உபயோகத்தில் இருக்கிறது?

(இ) மாவட்ட ரீதியாக உள்ள எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தமிழகத்தில் 1971-ஆம் ஆண்டு ஒரே ஒரு கிரேன் வாங்கப்பட்டது.

(ஆ) துவக்கத்தில் வாங்கப்பட்டதில் தற்போது கிரேன் ஏதும் உபயோகத்தில் இல்லை.

(இ) ஒன்றும் இல்லை.

16—

### அடிப்படை வசதிகள்

**வினா 35964—திரு. கே.சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், தொட்டிபாளையம் ஊராட்சி, ராஜா நகருக்கு அடிப்படை வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அடிப்படை வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) ஏற்கெனவே உள்ள ஊராட்சியில் புதிதாக ஏற்பட்டுள்ள இந்த நகருக்கு 2000-2001-ஆம் ஆண்டில் திட்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் இவ் வேலை செய்து தரப்பட உள்ளது.

17—

### அடிப்படை வசதி

**வினா 35970—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வீரபாண்டி ஊராட்சி, பலவஞ்சிபாளையம் ஆசிரியர் காலனிக்கு அடிப்படை வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அடிப்படை வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வீரபாண்டி ஊராட்சிக்குட்பட்ட ஆசிரியர் காலனியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குழாய் விஸ்தரிப்பு வேலை நடைபெறுகிறது. மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் நடப்பாண்டில் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

18—

### அடிப்படை வசதி

**வினா 35982—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மண்ணரை ஊராட்சி, ரோஜா நகர், சத்தியா காலனி, அறிவொளி நகர் பகுதிகளில் வடிகால் உட்பட அடிப்படை வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

[2001 ஜனவரி 25

*(ஆ) ஆம் எனில், எப்போது அடிப்படை வசதி செய்து தரப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ரோஜா நகர் புதிதாக ஏற்பட்ட நகர். ஏற்கெனவே உள்ள அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை. எனவே, 2000-2001-ஆம் ஆண்டில் திட்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் இவ் வேலை எடுத்து செயல்படுத்தப்படவுள்ளது.

**19—**

**கழிவுநீர்க் கால்வாய் கட்டுதல்**

**வினா 38412— திரு. சி. ஞானசேகரன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர், அரியூர்குப்பத்தில் கழிவுநீர்க் கால்வாய் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் அரியூர்குப்பம் ஊராட்சிக்குப் போதிய நிதி வசதி இல்லாததாலும் திட்ட நிதியில் வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாலும் வேறு நிதி ஊராட்சிக்குக் கிடைக்கப் பெற்றபின் கழிவுநீர்க் கால்வாய் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

**20—**

**அடிப்படை வசதிகள்**

**வினா 38414—திரு. சி. ஞானசேகரன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் கறை அமைச்சர் கீழ்க்காணும்*



2001 ஜனவரி 25]

*(அ) வேலூர் அப்துல்லாபுரம் ஊராட்சியில், இதுவரை தெருவிளக்கு, கழிவுநீர்க் கால்வாய்கள் சரிவர செயல்படாமல் மோசமான நிலையில் உள்ளதால் அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அப்துல்லாபுரம் ஊராட்சியில் தெருவிளக்குகள் அனைத்தும் நல்ல முறையில் இயங்கி வருகிறது. கழிவுநீர்க் கால்வாய் செவ்வனே பராமரிக்கப்படுகிறது. ஊராட்சி நிதிநிலைக்கேற்ப சாலை வசதி ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் செயல்படும் மிக்க் குறைவான அளவுள்ள 30,000 லிட்டர் நீர்த்தேக்கத் தொட்டி மட்டுமே உள்ள நிலையில் ஊராட்சியில் குழாய்கள் தேவையான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கொண்டு பணிகள் ஊராட்சியில் நிதி ஆதாரத்தைப் பொறுத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

**21—**

**நிலக்கடலை உற்பத்தி**

**வினா 26449—திரு. கே. ரவி அருணன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் குமுளூர் வேளாண் பொறியியல் கல்லூரியில் பயிர் செய்து 1996-97, 1997-98-ஆம் ஆண்டுகளில் விற்பனை செய்த காய்ந்த நிலக்கடலையின் எடையில் 67% வரை எடை குறைவு ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) இதனால் ரூ.2.32 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது குறித்து அரசு அறியுமா?*

*(இ) அனுமதிக்கப்பட்ட 37% எடையை விட கூடுதலாக குறைவு ஏற்பட்டதன் காரணம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கும் குமுளூர் வேளாண்மைப் பொறியியல் கல்லூரியில் 1996-97-ல் அறுவடை செய்யப்பட்ட 6773 கி.கி. நிலக்கடலையை உலர்த்தியதில் 5487 கி.கி. கிடைத்துள்ளது. அதாவது நிலக்கடலை உலர்த்தப்பட்டபின் 18.40 விழுக்காடு குறைந்துள்ளது. இது உலர்த்துவதால் ஏற்படும் அனுமதிக்கப்பட்ட 37 விழுக்காட்டைவிட குறைவாகும். அதேபோல் 1997-98-ல் அறுவடை செய்யப்பட்ட 9330 கி.கி. நிலக்கடலை உலர்த்தியபின் 8065 கி.கி. கிடைத்துள்ளது. 13.6 விழுக்காடு குறைந்துள்ளது. இதனால் ரூ.2.32 இலட்சம் நட்டம் ஏதும் ஏற்படவில்லை.

22—

**குளிர்பதன வசதி**

**வினா 29869—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலத்திலுள்ள பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகையில் நிரந்தரமாகக் குளிர்பதன வசதி செய்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எ..ரில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலத்தில் உள்ள பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகையில் அறை எண் 1-இல் 1.5 டன் எடையுள்ள சன்னலில் பதிக்கக்கூடிய குளிர்சாதன வசதி செய்வதற்கு ரூ.28,000 அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணி முழுமையாக முடிக்கப்பட்டு விட்டது.



23—

**மணல் எடுத்தல்**

**வினா 34710—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், ஆண்டிப்பாளையம் ஊராட்சி, குளத்துப்புதூர் குளத்தில் வியாபாரத்திற்காக மணல் எடுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் ஆண்டிப்பாளையம் ஊராட்சியில் உள்ள குளத்துப்புதூர் குளம் (ஆண்டிப்பாளையம்) பொதுப் பணித் துறையைச் சார்ந்தது. மேற்படி குளத்தில் தற்போது முழு கொள்ளளவிற்கு நீர் உள்ளது. கோடைகாலத்தில் நீர் குறைந்த சமயம், ஊராட்சித் தலைவர் மூலமாக குளத்தில் இருந்து மண் மட்டும் எடுத்து ஊராட்சி சாலைப் பராமரிப்பு பணிகளுக்கும் மற்றும் குளத்தின் கரையில் தாழ்வான பகுதிகளுக்கும் போடப்பட்டது. மேலும் நேரடி விசாரணையில் மேற்படி குளத்தில் யாரும் மண்ணோ அல்லது மணலோ எடுத்து வியாபார நோக்கில் விற்பனை செய்யவில்லை என அறியப்பட்டது. இனிவரும் காலங்களில் மேற்படி குளத்தில் மண்ணோ, மணலோ எடுப்பதாக இருந்தால் பொதுப் பணித் துறை மூலம் முன்அனுமதி பெற்று எடுக்க ஊராட்சி தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

24—

**மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்**

**வினா 36951—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 25

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 1999-2000-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

| | செலவு செய்த தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| **(1)** சேலம் கோட்டம் - கொல்லி மலை | |
| (1) நெல்லி, கடுக்காய் தோட்டம் - 5 எக்டேர் பரப்பில் உற்பத்தி செய்தல் | 0.21 |
| (2) சிறு வனப்பொருட்கள் தோட்டம் 5 எக்டேர் பரப்பில் உற்பத்தி செய்தல் | 0.21 |
| (3) ஆக்ரோ பாரஸ்ட்ரி திட்டத்தின்கீழ் பழங்குடியினருக்கு 15,000 சில்வர் ஓக் நாற்றுக்கள் இலவசமாக வழங்குதல் | 0.30 |
| (4) செடிகளை நன்கு பாதுகாத்த பழங்குடியினருக்கு 5000 செடிகள் - ஊக்கத்தொகை வழங்குதல் | 0.15 |
| **(2)** ஏற்காடு மலை | |
| (5) செடிகளை நன்கு பாதுகாத்த பழங்குடியினருக்கு 2,860 செடிகள் - ஊக்கத்தொகை வழங்குதல் | 0.09 |
| | **0.96** |
| **(3)** ஆத்தூர் கோட்டம் - பச்சைமலை பெரியகல்வராயன்மலை மற்றும் அரனூத்துமலை | |
| 1. கடுக்காய் தோட்டம் 5 எக்டேர் பரப்பில் உண்டாக்குதல் | 0.15 |
| 2. பழைய தோட்டங்களைப் பராமரித்தல் | 0.03 |
| | **0.18** |



2001 ஜனவரி 25]

மொத்தம் ரூ.1.14 இலட்சங்கள் சேலம் மாவட்டத்தில் இத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

**25—**

**சிறு பேருந்துகள்**

**வினா 34041—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் அனுமதி பெறப்பட்ட சிறு பேருந்துகள் எத்தனை இயக்கப்படுகின்றன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் 2 மினி பேருந்துகளுக்கு உரிமம் வழங்கப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) திரு. எஸ். ரத்தினசாமி என்பவருக்குக் குமராட்சி-திட்டக்குடி (வழி) மேலபாருண்குடி, கங்கிவாய்க்கால், கழபாருதிகுடி, முன்னாங்குடி மற்றும் கருப்பூர் வழித்தடத்திலும் திரு. பி. நாகநாதன் என்பவருக்கு அல்லூர் புதுவிலகம் (வழி) வேலையக்குடி, நர்தான்குடி (மற்றும்) சேத்தியூர் ஆகிய வழித்தடத்திலும் சிற்றுந்து இயக்க உரிமம் வழங்கப்பட்டு மேற்படி வழித்தடங்களில் சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**26—**

**வாகன ஆய்வாளர் அலுவலகம்**

**வினா 37559—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்ட பகுதிக்கென சுரண்டையில் பகுதி நேர மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2001 ஜனவரி 25

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டைப் பகுதியில் போக்குவரத்து வாகனங்கள் 204 மட்டுமே உள்ளன. மேலும், இப் பகுதியில் இருந்து 17, கிலோ மீட்டர் தொலைவில் தென்காசியில் பகுதி அலுவலகம் செயல்பட்டு வருவதாலும் போதுமான போக்குவரத்து வாகனங்கள் சுரண்டையில் இல்லாததாலும் பகுதி அலுவலகம் ஏற்படுத்தும் அவசியம் எழவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

27—

### பணிக்கொடைத் தொகை

**வினா 40532—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூடப்பட்ட சேலம் கண்ணாடித் தொழிற்சாலையில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்குப் பணிக்கொடைத் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் சௌத் இண்டியா கிளாஸ் மற்றும் எனாமல்வி ஓர்க்ஸ் தொழிற்சாலை 1981-ல் மூடப்பட்டது. மேற்படி நிறுவனம் செலுத்த வேண்டிய கடன் தொகைக்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சென்னை உயர் நீதிமன்றத்தில் சி.எஸ். 530/87 எண்ணிட்ட வழக்கினை தாக்கல் செய்து, நிறுவனத்தினை ஏலம் விட்டு கிடைத்த தொகையான ரூ.60,00,000-ல் தங்களுக்குச் சேரவேண்டிய தொகையினைக் கழித்து மீதமுள்ள ரூ.31,29,909-ஐ மட்டும் இதர 7 கடன்தாரர்கள் சார்பாக சென்னை, உயர் நீதிமன்றத்தில் டெபாசிட் செய்துள்ளனர். மேற்படி தொகையில் சென்னை, உயர் நீதிமன்றத்தில் தொழிலாளர்களுக்கு வழங்க ஒதுக்கப்பட்டுள்ள ரூ.7,88,370.32 மட்டும் பெற்றுக்கொண்டு, தொழிலாளர் தமக்குச் சேர வேண்டிய பணிக்கொடை மற்றும் சம்பளத் தொகை கோரிக்கையை முடித்துக்கொள்ள ஒப்புக் கொண்டுள்ளனர். இத் தொகையினை இந்த மூடப்பட்ட நிறுவனத்தில் பணிபுரிந்த சுமார் 500 தொழிலாளர்களுக்கு பட்டுவாடா செய்யும்பொருட்டு, ஒதுக்கீடு செய்து ஆணைகள் பிறப்பிக்க சென்னை உயர் நீதிமன்றத்தை இத் துறை வாயிலாக அணுகியுள்ளனர். உயர் நீதிமன்றத்தில் ஆணை பெறப்பட்ட பின்னர்தான் அத் தொகையை தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்க இயலும். உயர் நீதிமன்ற உத்தரவு பெற தொழிலாளர் ஆணையரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.





28—

### பாலத்தை அகலப்படுத்துதல்

**வினா 34565 — திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் - ஸ்ரீகண்டபுரம் சாலையில் சொக்கூர் மகிமாலை குறுக்கே பாலம் பேருந்து செல்லும் வகையில் அகலப்படுத்தி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

நிதிப் பற்றாக்குறை காரணமாக உடனடியாக இப் பணியினை மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[2001 ஜனவரி 25

29—

## சாலை சீரமைத்தல்

**வினா 35662—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, பின்னலூர்-அம்பாபுரம் சாலை சீரமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

0/0-3/6 கி.மீ நீளமுள்ள அம்பாபுரம் சாலையில் கி.மீ. 0/0-1/0 வரையிலான சாலையினை 1995-96-ஆம் ஆண்டிலும் கி.மீ. 1/0-3/6 வரையிலான சாலையினை 1996-97 ஆண்டிலும் சாலை சீரமைப்பு நிதியின்கீழ் புதுப்பிக்கப்பட்டு வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் உள்ளது. இச் சாலையில், ஆங்காங்கே ஏற்பட்டுள்ள பழுதுகளை ஆண்டு பராமரிப்பு நிதியிலிருந்து நிதி நிலைமைக்கேற்ப சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

30—

## இயந்திரம் வாங்க மானியம்

**வினா 39173—திரு. ந. கருப்பண்ண உடையார்:-**

மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

உணவு பதப்படுத்தும் தொழிலில் உள்ளவர்களுக்கு இயந்திரம் வாங்க மானியம் அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உணவு பதப்படுத்தும் தொழிலில் உள்ளவர்களுக்கு இயந்திரம் வாங்க கூட்டுறவுத் துறை மூலம் மானியம் அளிக்கும் திட்டம் எதுவும் இல்லை.



2001 ஜனவரி 25]

பதப்படுத்தும் அலகுகள் நடத்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு தகுதியின் அடிப்படையில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் திட்டம் மூலம் சங்கங்களுக்கு நிதியுதவி அனுமதிக்கப்படுகிறது.

31—

## பதவி உயர்வு

**வினா 31119 — திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) 10 ஆண்டு பணி முடித்த காவலர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவது போல, சிறைத் துறைக் காவலர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்படுமா என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவல் துறையில் 10 ஆண்டு பணிமுடித்த காவலர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவது போல சிறைத் துறைக் காவலர்களுக்குப் பதவி உயர்வு வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

## சலவைப் பட்டறைகள்

**வினா 35456 — திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சிப் பகுதியில் இயங்கும் சாயம் மற்றும் சலவைப் பட்டறைகள் எத்தனை?

(ஆ) அவற்றின் கழிவு நீர் எவ்வாறு வெளியேற்றப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் முருகம்பாளையம் ஊராட்சிப் பகுதியில் 56 சாயப்பட்டறைகளும் 22 சலவைப் பட்டறைகளும் உள்ளன.

[2001 ஜனவரி 25

(ஆ) மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகள் சொந்தமாகத் தனித்தனியே கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துக் கழிவு நீரைச் சுத்தம் செய்து கொள்கின்றன. இவற்றைத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது.

**33—**

**கைத்தறிக் கண்காட்சி**

**வினா 39972—திரு.ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1999-ஆம் ஆண்டு மே மாதம் சேலத்தில் நடைபெற்ற கைத்தறிக் கண்காட்சியில் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

1999-ஆம் ஆண்டு மே மாதம் சேலத்தில நடைபெற்ற கைத்தறிக் கண்காட்சியில் ரூ. 50.74 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

**34—**

**கடன் வழங்குதல்**

**வினா 41355—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில், வெள்ளாண்டிவலசுவில் உள்ள கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2001 ஜனவரி 25]

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

நெசவுக்குப் புதிய தறிகள் வாங்கி வழங்குதல், தறிகளுக்கான அச்சு, விழுது போன்ற உபகரணங்கள் வழங்குதல், புதிய வடிவமைப்புகள் வழங்குதல், தறிக்கூடம் அமைத்தல், புதிய ரகங்களில் பயிற்சி அளித்தல் போன்ற இனங்களின்கீழ் நெசவாளர்களுக்கு நிதியுதவி மானியமாக வழங்கப்படுகிறது. புதிய தறிகள் இனத்தில் மட்டும் 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் கடனாகவும் நெசவாளர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருவதால் சேலம் மாவட்டம் எடப்பாடி நகரில் வெள்ளாண்டிவலசுவில் உள்ள கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களின் மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

**35—**

**கடன்**

**வினா 41368—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள அண்ணா கைத்தறி நெசவாளர் உற்பத்தி விற்பனை சங்க ஊழியர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலுள்ள அண்ணா நெசவாளர் கூட்டுறவுச் சங்க ஊழியர்கட்குக் கடன் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாக சங்க துணை விதிகளில் அனுமதித்துள்ளபடி திருமணம், ஈமச்சடங்கு போன்றவைகளுக்குச் சங்க ஊழியர்கள் தங்களது வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம் பெற்றுக்கொள்ளவும், சங்கப் பணியாளர் சிக்கனக் கடன் சங்கத்திலிருந்தும் குறைந்த வட்டியில் கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் வழிவகைகள் உள்ளது.

[2001 ஜனவரி 25

36—

## மனைப்பட்டா

**வினா 36436—திரு. கே.சி. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனை ஊர்களில் எத்தனை மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) இன்னும் எத்தனை கிராமங்களுக்கு எத்தனை பேருக்கு மனைப்பட்டா கொடுக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், ஜெயங்கொண்டம் தொகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

| பசலி | ஆண்டு | பிற்படுத்தப் பட்டோருக்கு வழங்கப்பட்ட பட்டாக்கள் | மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு வழங்கப்பட்ட பட்டாக்கள் | மொத்தம் விஸ்தீரணம் |
|---|---|---|---|---|
| (1401) | 1997-98 | 27 | 206 | 2,33,0 ஹெக்டேர் |
| (1408) | 1998-99 | 8 | 65 | 0,73,0 ” |
| (1409) | 1999-2000 | 31 | 122 | 1,53,3 ” |
| | மொத்தம் | **66** | **393** | **4,59,3** ” |



2001 ஜனவரி 25]

(ஆ) பிற்படுத்தப்பட்ட நலத் துறை மூலம் கிராமங்களில் மனைப்பட்டா வழங்க அரசின் பரிசிலனையில் உள்ள கிராமங்கள்.

| கிராமம் | வழங்கப்படவேண்டிய பட்டாக்களின் எண்ணிக்கை |
|---|---|
| பெரியகிருஷ்ணாபுரம் | 55 |
| தருக்களம்பூர் | 170 |
| உடையன்பாளையம் (மே) கிராமம் | 254 |
| மொத்தம் | 479 |

37—

## பால்வாடி கட்டடம் சீரமைத்தல்

**வினா 30612—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், வேல்வார்கோட்டை ஊராட்சி, முத்தனாங்கோட்டை பால்வாடி கட்டடத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) முத்தனாங்கோட்டை பால்வாடி மையம் 2000-2001-ஆம் ஆண்டில் ரூ.10,000-செலவினத்தில் பழுதுபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2001 ஜனவரி 25

38—

## சுயதொழில் தொடங்கக் கடன்

**வினா 38813—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில், ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 1999-2000 ஆம் ஆண்டு பிரதமர் நிதியுதவி திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்க கடன் கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் கடன் வழங்கத் தேர்வு செய்யப்பட்ட மனுக்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் பிரதமரின் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் எடப்பாடி தொகுதி, சேலம், ஈரோடு, தருமபுரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் பற்றிய விவரம், கடன் வழங்கத் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மாவட்டம் | வருடம் 1999-2000 | |
|---|---|---|---|
| | | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஒப்புதல் அளிக்கப்பட்ட/கடன் வழங்கத் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
| 1. | எடப்பாடி | 89 | 19 |
| 2. | தருமபுரி | 1255 | 509 |
| 3. | ஈரோடு | 2357 | 927 |
| 4. | நாமக்கல் | 1337 | 515 |
| 5. | சேலம் | 2727 | 616 |



2001 ஜனவரி 25]

39—

## சிறுதொழில்கள் விரிவாக்கம்

**வினா 38828—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் குடிசைத் தொழில்கள் விரிவாக்கம் ஏற்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் விவரம் என்ன?

(ஆ) இவ்வாண்டு சிறுதொழில்கள் விரிவாக்கத்திற்கு அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் குடிசைத் தொழில்கள் விரிவாக்கத்தை அதிகரிக்க சேலம் மாவட்டத்தின் மாவட்டத் தொழில் மையத்திற்கு மேற்படி ஆண்டிற்கான பதிவுகளுக்கு குறியீடு 240 என்று நிர்ணயிக்கப்பட்டது. சேலம் மாவட்டத்தில் உள்ள 608 கிராமங்களில் குடிசைத் தொழில் விரிவடையும் வகையில் 249 குடிசைத் தொழில்கள் பதிவு செய்யப்பட்டு நடந்து வருகின்றன. இதன் மூலம் 719 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வாண்டு (2000-2001) கடந்த ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 30,000 எண்ணிக்கையிலான நிரந்தர சிறுதொழில் பதிவினை 33,000 என்ற அளவில் 10% அதிகரித்து குறியீடு நிர்ணயிக்கப்பட்டும் செயல்படுத்தப்பட்டும் வருகிறது. அத்துடன் தற்காலிக சிறுதொழில் பதிவு 50,000 என்ற குறியீடு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 2000-2001-ம் ஆண்டில் சிறுதொழில் விரிவாக்கத்திற்கென சேலம் மாவட்டத்தில் மாநில முதலீட்டு மானியமாக ரூ.0.75 இலட்சம், மின் மானியம் ரூ.2.81 இலட்சம் மற்றும் மின் உற்பத்தி இயந்திர மானியம் (Generator Subsidy) ரூ.0.12 இலட்சம் ஆக மொத்தம் ரூ.3.68 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது.

[2001 ஜனவரி 25

40—

**லைசென்சு புதுப்பித்தல்**

**வினா 38547—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்காலிக சினிமா தியேட்டர் லைசென்சு ஓராண்டுக்கு ஒருமுறை புதுப்பித்து வருவதை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பார்வையாளர்களின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதி 109 (1-ஏ)-ன்படி தற்காலிக உலவும் திரையரங்குகள் மற்றும் நிரந்தரத் திரையரங்குகளுக்கு முதலாவதாக லைசென்ஸ் ஓராண்டுக்கு வழங்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டாக (ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாமல்) நீட்டிக்கப்படவேண்டும் என்றும், கட்டடம் உறுதியாக இருக்கிறதா எனவும் விதிகள் சரிவரப் பின்பற்றப்படுகின்றனவா என்பது குறித்தும் உரிமம் வழங்கும் அதிகாரி, சோதனையிட்டு திருப்தி அடைந்த பின்புதான் இந்த நீட்டிப்பு உத்திரவு வழங்கப்படவேண்டும். திரையரங்குகளில் லைசென்ஸ் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க உத்தேசிக்கும்பட்சத்தில் பார்வையாளர்களின் நலன் பாதிக்கும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, பார்வையாளர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தற்போதைய நடைமுறையான ஆண்டுக்கு ஒருமுறை புதுப்பித்து வருவதை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க இயலாது.

41—

**பட்டா**

**வினா 18515—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 25]

சேலம் மாவட்டம், தாராமங்கலம் தொகுதி செம்மன்கூடல் ஆதிதிராவிடர் காலனியில் குடியிருந்து வருபவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, செம்மன்கூடல் ஆதிதிராவிடர் காலனியில் குடியிருந்து வருபவர்களுக்கு பட்டா வழங்க நில எடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

42—

**'மனோரா' சீர்ப்படுத்துதல்**

**வினா 11193—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், 'மனோரா' சீர்படுத்தும் பணி எந்த நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், மனோரா சுற்றுலாத் தலத்திலுள்ள பயணிகள் உடைமைகள் காப்பறை, சிற்றுண்டி அறை மற்றும் கழிப்பறை ஆகியவற்றில் மின்வசதி செய்யும் பணிகள் ரூ.14,715/- செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 1998-99-ம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.4 இலட்சத்தில் மனோரா சுற்றுலாத் தலத்தில் ஓய்விடம்/அமருமிடம் கட்டுதல் மற்றும் மேடையை சிறப்புப் பழுது நீக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்காகச் செலவிடப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

43—

**பூமிதான வாரியம்**

**வினா 32848—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 25

(அ) தமிழ்நாட்டில் 1999-2000 ஆம் ஆண்டில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த நிலமற்ற ஏழை, விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் விநியோகம் செய்ய தமிழ்நாடு பூமிதான வாரியம் எண்ணியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில், 1999-2000 ஆம் ஆண்டில், பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த நிலமற்ற ஏழை, விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

44—

**இலவச வீடு கட்டுதல்**

**வினா 32907—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியப் பகுதியில் உள்ள பனை ஏறும் தொழிலாளர்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி பனை ஏறும் தொழிலாளர்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு எடுத்துரை அனுப்பப்பட்டு, அதன் வாயிலாக எண்.01194, முத்து கிருஷ்ணபேரி பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்த 2 பனைத் தொழிலாளர்களுக்கு இலவச வீடுகள் வழங்கிட அனுமதிக்கப்பட்டுள்ளது.



2001 ஜனவரி 25]

45—

**ஊதியம், போனஸ் வழங்குதல்**

**வினா 35455—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், பெருமாநல்லூர் கதர்-கிராமிய நூற்பு நிலையத் தொழிலாளர்களுக்கு எந்த அடிப்படையில் ஊதியம், போனஸ் போன்றவை வழங்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

திருப்பூர், பெருமாநல்லூர் கதர் கிராமிய நூற்பாளர் தொழிலாளர்களுக்கு மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு நிர்ணயம் செய்து கொடுக்கும் கூலி விகிதத்தில் உற்பத்தியின் அடிப்படையில் கூலி வழங்கப்படுகிறது. மேலும், தொழிலாளர்கள் பெறும் கூலியில், 12 விழுக்காடு நலநிதியாகவும், 10 விழுக்காடு ஊக்குவிப்பு கூலியாகவும் சேர்த்து, நூற்பாளர்களின் திறமைக்கு ஏற்ப வழங்கப்படுவதால், அவர்களுக்கு போனஸ் வழங்கப்படுவதில்லை. எனினும், சராசரியாக நாள் ஒன்றுக்கு ரூ. 25-லிருந்து ரூ. 30 வரை கூலியாக வழங்கப்படுகிறது.

46—

**பட்டு நெசவு மையங்கள்**

**வினா 37646—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், நாமக்கல், தர்மபுரி, ஈரோடு முதலிய மாவட்டங்களில் கதர் வாரியத்தின் மூலம் பட்டு சேலை நெசவு மையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதன் விவரம் அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

[2001 ஜனவரி 25

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் நான்கு இடங்களிலும், ஈரோடு மாவட்டத்தில் மூன்று இடங்களிலும் கதர் பட்டு சேலை நெசவு மையங்கள் இயங்கி வருகின்றன.

2. சேலம் மாவட்டத்தில், சேலம், இராசிபுரம், குஞ்சாண்டியூர் மற்றும் காட்டம்பட்டி ஆகிய இடங்களிலும் ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம், அந்தியூர் மற்றும் வெள்ளங்கோவில் ஆகிய இடங்களிலுமாக சுமார் 216 நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும், நாமக்கல் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் கதர் வாரியத்தின் மூலம் பட்டு சேலை நெசவு மையங்கள் எதுவும் செயல்படவில்லை.

47—

**டீசல் மானியம்**

**வினா 41483—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மானியத்தை மேலும் உயர்த்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. இருபது மீட்டர் நீளத்திற்குக் குறைவாக உள்ள மீன்பிடி விசைப்படகுகள் பயன்படுத்தும் டீசலுக்கான மைய ஆயத்தீர்வையை ஈடு செய்வதற்கான செலவினத்தை மைய மற்றும் மாநில அரசுகள் முறையே 80:20 என்ற விகிதாச்சார அடிப்படையில் 1996-97-ம் ஆண்டுவரை பகிர்ந்து கொண்டன. அதன்படி ஒரு லிட்டருக்கான மைய ஆயத்தீர்வையான 35 காசுகளில் மைய அரசு தனது 80% பங்காக 28 காசுகளும், மாநில அரசு தனது 20% பங்காக 7 காசுகளும் 1996-97 ஆம் ஆண்டுவரை விசைப்படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. 1997-ம் ஆண்டில் டீசல் விலையுயர்வைத் தொடர்ந்து, டீசல் மானியத்தை ஒரு லிட்டருக்கு 87 காசுகளாக உயர்த்தக்கோரி மீனவர்கள் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து, மாநில அரசு தனது 20% பங்கினை ஒரு லிட்டருக்கு 7 காசுகளிலிருந்து 17 காசுகளாக உயர்த்தியது. ஆனால் மைய அரசு தனது பங்கினை 28 காசுகளிலிருந்து 70 காசுகளாக உயர்த்தாமல் தொடர்ந்து ஒரு லிட்டருக்கு 28 காசுகளாகவே வழங்கி வருகின்றது. எனவே, 1997-98-ம் ஆண்டுமுதல் மீன்பிடி விசைப்படகுகளுக்கான டீசல் மானியம் ஒரு லிட்டருக்கு 45 காசு வீதம், (மைய அரசின் பங்கு 28 காசு, மாநில அரசின் பங்கு 17 காசு) வழங்கப்பட்டு வருகின்றது. டீசல் மானியம் மைய அரசின் திட்டத்தின்கீழ், மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுவதால், இன்னும் டீசல் மானியத்தை உயர்த்த இயலாது.





48—

**வீடு கட்டுதல்**

**வினா 41485—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (2000-2001) வீடு கட்டித்தரக் கோரும் உள்நாட்டு மீனவர்களுக்கு கீழ்க்கண்ட தகுதிகள் இருப்பின் அவர்களது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வீடுகள் கட்டித்தரப்படும்.

(1) பயனாளி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

(2) உள்நாட்டு மீனவர் பெயரில் அல்லது அவரது மனைவி பெயரில் பட்டா நிலம் இருக்க வேண்டும்.

[2001 ஜனவரி 25

(3) வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மீனவராக இருத்தல் வேண்டும்.

**49—**

**நிவாரண நிதி**

**வினா 41488—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடலில் மீன்பிடிக்கும் பொழுது இறந்த மீனவருக்குக் கிடைக்க வேண்டிய மத்திய/மாநில விபத்து காப்புறுதி நிவாரண நிதி உடனடியாக மீனவருக்குக் கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

கடலில் மீன் பிடிக்கும்பொழுது இறக்க நேரிடும் மீனவருக்குக் கிடைக்க வேண்டிய மத்திய/மாநில விபத்துக் காப்புறுதி நிவாரண நிதி கேட்டு, முக்கிய ஆவணங்களுடன் (கடல் வளம்) மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட மீனவரின் வாரிசுதாரர் மனு கொடுத்தவுடன், அவை பரிசிலிக்கப்பட்டு உரிய கருத்துரு புதுடெல்லி, தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனம் மற்றும் காப்புறுதி நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு, சராசரியாக ஆறு மாத காலத்திற்குள் காப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் தவறாமல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**50—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா 41506—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதிக்குட்பட்ட கோட்டையூர் பண்ணவாடி, சேத்துக்குழி, குள்ளவீரன்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



2001 ஜனவரி 25]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பாண்டில் (2000-2001) வீடுகள் கட்டித்தரக்கோரும் மீனவர்களுக்கு கீழ்க்காணும் தகுதிகள் இருப்பின் அவர்களது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வீடுகள் கட்டித்தரப்படும்.

(1) பயனாளி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

(2) உள்நாட்டு மீனவர் பெயரில் (அ) அவரது மனைவி பெயரில் பட்டா நிலம் இருக்க வேண்டும்.

(3) வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மீனவராக இருத்தல் வேண்டும்.

## நான்காம் பட்டியல்

**1—**

**சிறப்புக் காவல்படை**

**வினா 26772—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கர்நாடகா மற்றும் ஆந்திர மாநில எல்லைப் பகுதியில் அமைந்துள்ள ஓசூரில் பெரிய அளவில் நடைபெறும் சங்கிலி பறித்தல், நெடுஞ்சாலை வழிப்பறி மற்றும் வீடு புகுந்து கொள்ளை அடித்தல் போன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கு ஒரு சிறப்புக் காவல் படையை அமைப்பதற்கு செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

2—

## ஏற்றுமதி

**வினா 27059—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு சர்க்கரைப்பாகு கழிவான மொலாசஸ்ஸை வெளிநாடுகளுக்கு எத்தனை இலட்சம் டன் ஏற்றுமதி செய்ய தமிழக அரசு நிர்ணயித்தது?

(ஆ) இதனால் தமிழக அரசுக்கு எவ்வளவு தொகை அந்நியச் செலாவணித் தொகை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக சர்க்கரை ஆலைகளிலிருந்து தனியார் மூலம் வெளிநாடுகளுக்கு 1998-99 ஆம் ஆண்டில் 60249.240 மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு நேரடியாக கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில்லை. வணிகர்கள், தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து வாங்கி, வெளிநாடுகளுக்கு சென்னை துறைமுகம் மூலமாக ஏற்றுமதி செய்கிறார்கள். இந்த ஏற்றுமதி வாயிலாக 1998-99 ஆம் ஆண்டில் தமிழக சர்க்கரை ஆலைகளிலிருந்து எடுத்து ஏற்றுமதி செய்யப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு 927.69 இலட்சம் ரூபாயும், வெளிமாநில சர்க்கரை ஆலைகளிலிருந்து எடுத்து ஏற்றுமதி செய்யப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு 382.62 இலட்சம் ரூபாயும் தமிழக அரசுக்கு அந்நியச் செலாவணித் தொகை கிடைத்துள்ளது.

3—

## ஒயர்லஸ் கருவிகள்

**வினா 31806—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல் துறைக்கு மேலும் 20 ஒயர்லஸ் கருவிகள் தேவைப்படுகிறது என்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து காவல் நிலையங்கள், தனிப்பிரிவு மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு ஒயர்லஸ் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, மேலும் 20 ஒயர்லஸ் கருவிகள் வழங்குவதற்கான அவசியம் தற்போது எழவில்லை.

4—

## தணிக்கை

**வினா 41242—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விற்பனை வரிக் கணக்குகளைத் தணிக்கை செய்யும் முறையினை எளிமையாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) விற்பனை வரி கணக்குகளைத் தணிக்கை செய்யும் முறை ஏற்கெனவே எளிமையாக்கப்பட்டுவிட்டது.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தபடி சுயவரிவிதிப்பிற்கான வரம்பு ஆண்டுக்கு ரூபாய் இருபது இலட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது குறித்த சட்டத் திருத்தம் 1-4-2000 முதல் கொண்டுவரப்பட்டு 1999-2000 வரி விதிப்பு ஆண்டிற்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 1999-2000 ஆம் ஆண்டில் மொத்த விற்பனைத் தொகை ரூபாய் ஒரு கோடிக்கு மிகாமல் உள்ள வணிகர்கள் அவ்வாண்டிற்கான ஆண்டு நமூனா ஒன்று வரிவிதிப்பு அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவர்களில் 20 விழுக்காடு

[2001 ஜனவரி 25

வணிகர்களின் கணக்கு மட்டுமே தணிக்கை செய்யப்படும். ஏனைய 80 விழுக்காடு வணிகர்களின் கணக்குகள் தணிக்கை செய்யாமலே, அவர்கள் சமர்ப்பித்த நமூனா அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆணை வரிவிதிப்பு அலுவலரால் பிறப்பிக்கப்படும்.

5—

## கிளை நூலகம்

**வினா 9217—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, திருப்புறம்பியம் ஊராட்சியில் பகுதிநேர நூலகத்தைக் கிளை நூலகமாக மாற்றவும், புதிய கட்டடம் கட்டவும் அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** பாபநாசம் தொகுதி, திருப்புறம்பியம் ஊராட்சியில் உள்ள பகுதிநேர நூலகம் தற்போது வாடகையில்லாத இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நூலகங்கள் முதற்கட்டமாக ஊர்ப்புற நூலகங்களாகவும் பின்னர் ஊர் மக்களின் ஒத்துழைப்பு மற்றும் பயன்பாட்டை கருத்தில்கொண்டு கிளை நூலகங்களாகவும் தரம் உயர்த்தப்படுகின்றன. ஆனால் திருப்புறம்பியம் ஊராட்சியில் உள்ள பகுதிநேர நூலகத்தை ஊர்ப்புற நூலகமாகத் தரம் உயர்த்தத் தேவையான கீழ்க்கண்ட நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யாததால் மேற்கண்ட பகுதிநேர நூலகம் ஊர்ப்புற நூலகமாகத் தரம் உயர்த்தப்படவில்லை.

(1) நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக்குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

(2) ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ. 1,000 செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



2001 ஜனவரி 25]

எனவே, மேற்கண்ட நிபந்தனைகளை ஊர்மக்கள் நிறைவு செய்து தருவார்களேயானால் மேற்குறிப்பிட்ட பகுதிநேர நூலகம் ஊர்ப்புற நூலகமாகவும், அரசின் நிதி வசதிக்குட்பட்டு கிளை நூலகமாகவும் தரம் உயர்த்தப்பட்டு நூலக ஆணைக்குழுவின் நிதி வசதிக்கேற்ப கட்டடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

6—

## பள்ளிகள் இணைப்பு

**வினா 21346—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பள்ளிச் சட்டத்தில் மெட்ரிகுலேஷன் பள்ளியையும் இணைக்கும் திருத்தம் கொண்டு வர அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

7—

## தலைமை ஆசிரியர் நியமனம்

**வினா 23082—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புளியரை அரசு உயர்நிலைப் பள்ளியில் 1 முதல் 5 வரையிலான வகுப்புகளுக்கு தனியாக ஒரு தலைமை ஆசிரியரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

[2001 ஜனவரி 25

(அ) மற்றும் (ஆ) பொதுவாக மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் இருந்து தொடக்கக்கல்விப் பிரிவுகளை பிரித்து தொடக்க வகுப்புகளுக்கு தனியே தலைமை ஆசிரியர் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

8—

### கட்டட வசதி

**வினா 30157—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், குமரன் மகளிர் கல்லூரியின் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போதுள்ள மாணவர்களுக்குப் போதுமானதாக உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) நிரந்தரக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கட்டடம் தற்போதுள்ள மாணவிகளுக்குப் போதுமானதாக உள்ளது.

9—

### கட்டிட வசதி

**வினா 36676—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி, அரசு கலைக் கல்லூரி தொடங்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், சொந்தக் கட்டடம் இல்லாதது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2001 ஜனவரி 25]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அறியும்.

(ஆ) பரமக்குடி அரசு கலைக் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டும் பொருட்டு, அரசாணை எண். 349, உயர்கல்வித் (டி2) துறை, நாள்: 15-7-1999-ல் ரூ. 215.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆட்சி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது கட்டடப்பணி தொடங்குவதற்குரிய ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

10—

### கூடுதல் வகுப்பறைகள்

**வினா 39477—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் மாணவிகளுக்கு போதுமான வகுப்பறைகள் இல்லாததால் கூடுதல் வகுப்பறைகள் நடப்பு நிதியாண்டில் (2000-2001) கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் பெறப்படவில்லை.

11—

### மின் கம்பங்கள்

**வினா 35054—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் குமரானந்தபுரம் 5-வது வார்டில் உயர்மின் அழுத்தம் கொண்ட இரண்டு கம்பங்கள் நடு வீதிகளில் அமைந்து மின்பாதை வீடுகளின் மேலே செல்கிற காரணத்தால் அடிக்கடி விபத்து ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அக்கம்பங்கள் பாதுகாப்பாக மாற்றி அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் குமரானந்தபுரம் 5-வது வார்டில் 11 கி.வோ. உயர்மின் அழுத்தம் கொண்ட இரண்டு மின் கம்பங்கள் நடு வீதிகளில் அமைந்து மின்பாதை வீடுகளின் மேல் செல்கிறது. மேற்படி மின் பாதை மற்றும் கம்பத்தை மாற்றி அமைக்கக் கோரும் விண்ணப்பம், திருப்பூர் நகராட்சியிடமிருந்து பெறப்படவில்லை. விண்ணப்பம் கிடைக்கப் பெற்று, அதற்கு உண்டான செலவுத் தொகையை செலுத்தினால், மேற்படி மின் கம்பங்கள் மாற்றி அமைக்கப்படும்.

12—

### விவசாய மின் இணைப்பு

**வினா 37120—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி முழுவதும் விவசாய மின் இணைப்பு கோரி 1999-2000 வரை மனு செய்து நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி முழுவதும் விவசாய மின் இணைப்பு கோரி 1999-2000 வரை நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் 2,878.





| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சாதாரண முன்னுரிமை | - | 2,811 எண்ணிக்கைகள் |
| | சுயநிதி திட்டம் ரூ.10,000/- | - | 22 எண்ணிக்கைகள் |
| | சுயநிதி திட்டம் ரூ.25,000/ | - | 45 எண்ணிக்கைகள் |

13—

### மின் இணைப்புகள்

**வினா 37238—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மின் விநியோக வட்டத்தில் கொங்கணாபுரம் ஒன்றிய பகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் 1998-99 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மின் இணைப்புகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மேட்டூர் மின் விநியோக வட்டத்தில் கொங்கணாபுரம் ஒன்றிய பகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி வந்துள்ள மனுக்களின் எண்ணிக்கை 382 ஆகும்.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மின் இணைப்புகள் 15 ஆகும்.

14—

### மின் இணைப்பு விண்ணப்பங்கள்

**வினா 37239—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றிய பகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் 1998-99-ல் வழங்கப்பட்ட இணைப்புகள் எத்தனை?

[2001 ஜனவரி 25

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றிய பகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி 855 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) அதில் 1998-99-ல் 38 விண்ணப்பங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

15—

**மருத்துவமனைக்கு கூடுதல் வசதி**

**வினா 38859—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி அட்டெண்டர் மற்றும் கிளீனர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடங்களை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் அவசர ஊர்தி அட்டெண்டர் மற்றும் கிளீனர் என தனியாக பதவியிடம் ஏதுமில்லை. 30-12-1987 நாளிட்ட நல்வாழ்வுத் துறை அரசு ஆணை எண் 2408-ன்படி 63 வகைப்பட்ட பணியிடங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு 'மருத்துவமனைப் பணியாளர்' பணியிடம் என மாற்றப்பட்டுள்ளது. இதில் அவசர ஊர்தி அட்டெண்டர் பணியிடமும் அடங்கும். மேலும் எடப்பாடி அரசு மருத்துவமனையில் ஒரு மருத்துவமனைப் பணியாளர் பணிபுரிகிறார்.

(ஆ) 21-12-1992 நாளிட்ட நல்வாழ்வுத் துறை அரசு ஆணை எண் 1364-ன்படி ஆறு படுக்கைக்கு ஒரு நபர் எனும் விகிதாச்சாரம்



2001 ஜனவரி 25]

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் மருத்துவமனைப் பணியாளர், துப்புரவுப் பணியாளர், சமையலர் மற்றும் செவிலிய உதவியாளர் தரம்-2 பணியிடங்கள் ஒருங்கிணைப்பட்டு கணக்கில் கொள்ள வேண்டும். எடப்பாடி அரசு மருத்துவமனையில் கீழ்க்காணும் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

| | | |
|---|---|---|
| துப்புரவுப் பணியாளர் | - | 3 |
| மருத்துவப் பணியாளர் | - | 1 |
| செவிலிய உதவியாளர் | - | 3 |
| சமையலர் | - | 1 |
| மொத்தம் | .. | 8 |

6:1 எனும் விகிதாச்சாரப்படி தற்போது 4 பணியாளர்கள் மிகுதியாக பணிபுரிகின்றனர் என்பதால் அவசர ஊர்தி அட்டெண்டர் பணியிடம் புதியதாக உருவாக்கிட தேவை எழவில்லை.

16—

**கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள்**

**வினா 38860—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு, 24 படுக்கை கொண்ட மருத்துவமனை ஆக்கப்பட்டதால், கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள் தேவை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், 3 துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனை 26 படுக்கை வசதிகள் கொண்டது. அரசு நிர்ணயம் செய்துள்ள குறியீட்டின்படி 6 படுக்கைக்கு ஒரு நபர் என்ற வகையில் 4 பேர் மட்டுமே தகுதியுடையவர்கள். ஆயினும், அங்கே 8 பேர் பணிபுரிகின்றனர். இதில்

[2001 ஜனவரி 25

3 துப்புரவுப் பணியாளர்கள், மருத்துவமனை பணியாளர் ஒருவர், செவிலிய உதவியாளர் 3, சமையலர் ஒருவர் என்பதாகும். எனவே, கூடுதல் துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள இயலாது.

17—

### ஓய்வு ஊதியம்

**வினா 39630—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில், வயது முதிர்ந்த சித்த மருத்துவர்களுக்கான ஓய்வு ஊதியம் எத்தனை பேர் எவ்வளவு தொகை பெறுகின்றனர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியில் பதினொரு, வயது முதிர்ந்த சித்த மருத்துவர்கள் மாதந்தோறும் ரூ. 500/- வீதம் ஓய்வூதியம் பெறுகின்றனர்.

18—

### கூடுதலாகக் கட்டடம்

**வினா 17397—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி, ஊராட்சியிலுள்ள பிச்சக்காரனூர் பள்ளிக்கு கூடுதலாக ஒரு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2001 ஜனவரி 25]

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சியிலுள்ள பிச்சக்காரனூர் பள்ளிக்கு கூடுதலாக பள்ளிக் கட்டடம் ஒன்று புதிதாக கிஸ்காஸ் நிர்வாகத்தால் கட்டப்பட்டு வருகிறது.

19—

### தொடக்கப்பள்ளிக்குக் கட்டடம்

**வினா 22371—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், இலுப்பை விடுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், வெட்டிக்காடு ஊராட்சி, இலுப்பை விடுதி கிராமத்தில் செயல்பட்டு வந்த ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடம் பயன்படுத்த இயலாத நிலையில் இருந்ததால் 1999-2000 ஆம் ஆண்டு வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 2.90 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு 20-8-2000 அன்று திறக்கப்பட்டுள்ளது.

20—

### புதிதாக தெருவிளக்குகள்

**வினா 26548—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சியைச் சேர்ந்த கே. அக்ரஹாரம் கீழ் வீதி, கீழுர் மற்றும் மடம் கிராமம் ஆகிய இடங்களில் புதிதாக தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கே. அக்ரஹாரம் கீழ் வீதிக்கு ஐந்து மின் விளக்குகள் அமைக்க தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. மடம் பகுதியில் தற்போது 5 மின் விளக்குகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மடம் கவுன்சிலர் ஆறுமுகம் வீடு அருகில் ஒரு மின்கம்பம் அமைக்க பணி நடைபெற்று வருகிறது.

21—

**தெருவிளக்கு வசதி**

**வினா 29744—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் கிராமத்தில் (1) பழைய இண்டூர், (2) பழைய இண்டூர் காலனி, (3) ஆத்துக்கொட்டாய், (4) இண்டூரிலிருந்து அரசு மேல்நிலைப்பள்ளி வரை தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பழைய இண்டூர் மற்றும் ஆத்துக்கொட்டாய் கிராமங்களுக்கு மின்சார வாரியத்தால் தெரு விளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பழைய இண்டூர் காலனிக்கு தற்போது இரண்டு தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஊராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தால் இண்டூரிலிருந்து அரசு மேல்நிலைப்பள்ளி வரை தெரு விளக்குகள் அமைக்க தற்போது இயலாது.



22—

**தெருவிளக்கு வசதி**

**வினா 29981-திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சியை சார்ந்த செஞ்சிமலை கிராமம், இராஜகோபால் வீட்டருகில் நடப்பாண்டில் தெருவிளக்கு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சியைச் சேர்ந்த செஞ்சிமலை கிராமம், இராஜகோபால் வீட்டருகில் மாவட்ட பரவலாக்கத் திட்டத்தின்கீழ் புதிதாக தெருவிளக்கு அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

23—

**பொறியாளர் நியமனம்**

**வினா 42239—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் பொறியாளர் இல்லாததால் அங்கு பொறியாளரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சியில் கீழ்க்காணும் பொறியாளர், உதவிப் பொறியாளர் ஆகியோர் அவர்களது பெயர்களுக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள நாளிலிருந்து பணிபுரிகின்றனர்.

| | |
|---|---|
| (1) திரு. செந்தில்குமார், நகராட்சிப் பொறியாளர், நிலை-3. | 21-2-2000 முதல் பணிபுரிகிறார். |
| (2) திரு. என். புகழேந்தி, உதவிப் பொறியாளர் | 12-1-2000 முதல் பணிபுரிகிறார். |

24—

## நிதி ஒதுக்கீடு

**வினா 38446—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், சேலம் மாவட்டம் மற்றும் எடப்பாடி தொகுதி ஆகிய இடங்களில் தரிசு நில மேம்பாட்டு திட்டப்பணிக்காக 1998-99 ஆம் ஆண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கம் அரசு வழங்கியது?

(ஆ) அதில் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அதனால் பலனடைந்த தரிசு நிலம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், சேலம் மாவட்டம் மற்றும் எடப்பாடி ஆகிய இடங்களில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டப் பணிக்காக 1998-99 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழவில்லை.

25—

## தரிசு நிலங்களை மேம்படுத்துதல்

**வினா 42118—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் தரிசாக உள்ள நிலங்களை மேம்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

23-10-2000 நாளிட்ட அரசு வேளாண்மைத் துறையின் ஆணை (நிலை) எண் 406-ல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் 800 எக்டேர் பரப்பில் ரூ.32.00 இலட்சத்தில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் கீழ்க்கண்ட கிராமங்களில் நடைபெற்று வருகின்றன:-

| வ.எண் | கிராமத்தின் பெயர் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|
| (அ) | சித்தாமூர் வட்டாரம் | |
| (1) | இரும்புலி | 48.82.5 |
| (2) | கொளத்தாமல்லூர் | 2.00.0 |
| (3) | பூங்குளம் | 48.00.0 |
| (ஆ) | ஸ்ரீபெரும்புதூர் வட்டாரம் | |
| (1) | வடமங்கலம் | 28.03.0 |
| (2) | திருமங்கலம் | 42.51.0 |
| (இ) | படப்பை வட்டாரம் | |
| (1) | எழிச்சூர் | 54.96.0 |
| (2) | பூந்தண்டலம் | 45.00.0 |
| (ஈ) | அச்சிரப்பாக்கம் வட்டாரம் | |
| (1) | காரசங்கல் | 4.00.0 |
| (2) | பாபுராயன்பேட்டை | 5.80.0 |
| (3) | சித்தாமூர் | 6.40.0 |
| (4) | மூரப்பாக்கம் | 7.92.0 |
| (5) | கடலூர் | 20.30.0 |
| (6) | இடையாலம் | 4.60.0 |

[2001 ஜனவரி 25

(இ) கொல்லிமலை மூலிகைப்பண்ணை, ஒரு மூலிகை தாவர பாதுகாப்பு பகுதி. ஆதலால் இப்பண்ணையில் ஒட்டு மூலிகைச் செடிகள் மற்றும் விதைகளைப் பாதுகாத்து, சேகரம் செய்து அருகிலுள்ள விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய மூலிகை தாவர அபிவிருத்தி பண்ணை மற்றும் நாற்றங்கால்களுக்கு விநியோகிக்கப்படுவதால் மூலிகை தாவர பாதுகாப்புப் பண்ணையில் நிதி வருமானம் ஏதுமில்லை.

27—

**கால்வாய் தூர்வாரல்**

**வினா 38203—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சதுப்பேரிக்கு ஆற்றிலிருந்து நீர்வரத்துக் கால்வாயைத் தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொகுதிக்கு ஒரு ஏரி தூர்வாரும் திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் இப்பணி ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்டு, 6/98-ல் தொடங்கப்பட்டு 9/98-ல் முழுமையாக முடிக்கப்பட்டது.

28—

**ஓய்வூதியம்**

**வினா 41818—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள பென்ஷன் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) மத்திய அரசு அனுமதி வழங்கி விட்டதா?



2001 ஜனவரி 25]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஏதுவாக 27-9-2000 ஆம் நாளிட்ட தொழிலாளர் (மற்றும்) வேலைவாய்ப்புத் துறை, அரசாணை நிலை எண் 157-ல் தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி (மற்றும்) பல்வகை வழிவகைச் சட்டம் 1952 (Employees Provident Fund and Miscellaneous Provision Act 1952) ஆளுகையிலிருந்து போக்குவரத்துக் கழகங்களை விடுவித்து ஆணையிடப்பட்டது. 12 பேர் கொண்ட ஓய்வூதிய நிதிப்பொறுப்பாட்சி அமைக்கப்பட்டு ஓய்வூதியத் திட்டத்திற்கான விதிமுறைகளுக்கு 15-12-2000 நாளிட்ட போக்குவரத்துத் துறை அரசாணை (நிலை) எண் 135-ல் ஒப்புதலளிக்கப்பட்டது. 17-12-2000 முதல் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

29—

**சாலை வசதி**

**வினா 29689—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம்-பரங்கிப்பேட்டை நெடுஞ்சாலையில் சேத்தியாதோப்பு கூட்டுரோடு முதல் புவனகிரி வரையிலான சாலையினை, இயந்திரங்கள்மூலம் தரமான சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 010-51/2 கி.மீ. நீளமுள்ள விருத்தாசலம்-பரங்கிப்பேட்டை சாலையில் கி.மீ.25/6-37/2 வரையிலான 11.6 கி.மீ. சாலையினை சுடுகலவை இயந்திரம்மூலம் ரூ.167.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கும், கி.மீ.37/2 முதல் 45/4 வரையில், புதிய தேசிய நெடுஞ்சாலை (கி.மீ.95/8-104/0) சாலையினை மத்திய சுடுகலவை இயந்திரம்

மற்றும் பேவர் இயந்திரங்கள்மூலம் தரமான சாலை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கி.மீ.45/4-51/2 வரையிலான சாலைப்பகுதியில் ஏற்பட்டுள்ள சிறுசிறு குழி பள்ளங்களை தார் நொடிகள் போட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**30—**

**சாலையைச் செப்பனிடல்**

**வினா 33283—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சிலம்பிமங்கலம்-சாமியார்பேட்டை சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 3.850 கி.மீ. நீளமுள்ள சிலம்பிமங்கலம்-சாமியார்பேட்டையில் கி.மீ.0/0-0-1/0 வரையிலான சாலையினை பழுதடைந்த இதர மாவட்ட சாலைகளை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள அரசு ஆணை நிலை எண் 6, நெடுஞ்சாலைத் துறை, நாள்: 21-1-2000 இல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 1/0-3/850 வரையிலான 2.85 கி.மீ. சாலையினை பழுதடைந்த இதர மாவட்ட சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டத்தில் ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் 2000-2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ள அரசு ஆணை நிலை எண் 115, நாள்:5-7-2000 இல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**31—**

**கணிப்பொறி**

**வினா 42740—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நகர வங்கிகளில் எத்தனை வங்கிகள் முழுவதும் கணிப்பொறிமயமாக்கப்பட்டன?

(ஆ) படிப்படியாக மற்ற எல்லா கூட்டுறவு நகர வங்கிகளையும் கணினிமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் 127 நகர கூட்டுறவு வங்கிகளில் 41 நகர கூட்டுறவு வங்கிகள் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 86 நகர கூட்டுறவு வங்கிகளில் கணிப்பொறி அமைத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**32—**

**கூட்டுறவு சங்கம்**

**வினா 27751—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, மேட்டுப்பட்டியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் தற்பொழுது செயல்படாததால் அதனை மீண்டும் செயல்படுத்த நடப்பாண்டில் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, தபி.பி.247, மேட்டுப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், கொள்முதல் செய்யாததால், கலைப்பதற்கு முன் அறிவிப்பு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, 23-12-1991-ல் கலைக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் தொடங்குதல் தொடர்பாக பால் உற்பத்தியாளர்கள் முன்மொழிவுகள் ஏதும் உற்பத்தியாளர்கள்மூலம் பெறப்படவில்லை. ஆர்வத்துடன் சமர்ப்பித்தால் சங்கத்தை புத்துயிரூட்டி மீண்டும் தொடங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2001 ஜனவரி 25

33—

## வீட்டுமனைப் பட்டா

**வினா 17613—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள அரசு நிலங்களில் வீடுகட்டி வாழ்கின்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் அரசு நிலங்களில் வீடுகட்டி வாழ்கின்ற ஏழை மக்களுக்கு கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

| ஒன்றியம் | வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை |
|---|---|
| எடப்பாடி | 210 |
| கொங்கணாபுரம் | 221 |
| மகுடஞ்சாவடி | 69 |

எடப்பாடி தொகுதியில் இதுவரை 500 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

34—

## இலவச வீட்டுமனை

**வினா 20209—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு மிக மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நாமக்கல் மாவட்டத்தில் எத்தனை பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?



2001 ஜனவரி 25]

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டில் மிகப் பிற்படுத்தப்பட்ட 233 இனத்தவருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

35—

## இலவச பட்டா

**வினா 34306—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் இலவச பட்டா கோரி 1998-99-ல் வந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) வழங்கப்பட்ட பட்டாக்கள் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் இலவச பட்டா கோரி 1998-99-ல் மனுக்கள் ஏதும் வரப்பெறவில்லை.

36—

## குடியிருப்போருக்கு பட்டா

**வினா 34768—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் 22-வது வார்டு, கொங்கணகிரி ஏரியா புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருப்பூர் 22-வது வார்டு, கொங்கணகிரி பகுதி, 15 வேலம்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ளது. இதன் புல எண் 527/1 ஆகும். இப்பகுதி

[2001 ஜனவரி 25

நகர்ப்புற எல்லைக்குள் அமைந்துள்ளது. இதன் நகர்ப்புற புல எண் வார்டு ஏ. பிளாக் 5, டசு. 31 ஆகும். கிராமக் கணக்குகளில் இப்புலம் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி என வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ்விடத்தில் பட்டா வழங்க இயலாது.

37—

**பட்டா வழங்கல்**

**வினா 34770—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், 22-வது வார்டு, சத்யா நகரில் புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் பொதுமக்களுக்கு எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருப்பூர் 22-வது வார்டு சத்யா நகர் 15 வேலம்பாளையம் கிராம புல எண் 516/2-ல் அமைந்துள்ளது. இது நகர்ப்புற எல்லைக்குட்பட்டது. இதன் நகர அளவை எண் வார்டு ஏ, பிளாக் 3, டச.23/5 ஆகும். இந்த நிலம் பட்டா எண் 127 மதுரை பூமிதான போர்டு தலைவர் என்ற பெயரில் கிராமக் கணக்குகளில் தாக்கலாகியுள்ளது. மேற்கூறிய காரணங்களால் இந்நிலத்தில் பட்டா வழங்க இயலாது.

38—

**பட்டா வழங்கல்**

**வினா 34776—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், 28-வது வார்டு, எம்.ஜி.ஆர். நகரில் குடியிருக்கும் பொதுமக்களுக்கு இன்னும் பட்டா வழங்காமல் இருப்பதேன்?

(ஆ) அவர்களுக்கு எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், மண்ணரை கிராமம், 28-வது வார்டு, எம்.ஜி.ஆர். நகர் என்பது வாய்க்கால் புறம்போக்கு ஆகும். இதன்



2001 ஜனவரி 25]

நகரளவை எண் எப்.9/3, எப்.9/5 ஆகும். இங்கு குடிசைகள் அமைத்தும் வீடுகள் கட்டியும் மக்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இந்த ஆக்கிரமிப்புப் பகுதியை ஒட்டினாற்போல் தென்புறம் திருப்பூர் கிராமத்தில் நொய்யல் ஆறு உள்ளது. மழைக்காலங்களில், நொய்யல் ஆறில் தண்ணீர் பெருகி வரும்போது, ஆக்கிரமிப்பு பாகத்திற்கு சேதாரம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்பதால், மேற்படி இடத்தில் பட்டா வழங்க இயலாது.

39—

**வீட்டுமனைப் பட்டா**

**வினா 34777—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் 30-வது வார்டு, கே.வி.ஆர். நகர் கள்ளிக்காடுத் தோட்டத்தில் புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு எப்போது வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருப்பூர் வட்டம் மற்றும் நகரம், மங்கலம் ரோடு, கே.வி.ஆர். நகர் கள்ளிகாடு தோட்டம் நகர அளவை எண் எம்.33/110 ஓடைப்புறம்போக்கில், மேடான பகுதிக்கு ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. சற்று குறைந்த மேடான பகுதி நிலத்தில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மேம்படுத்தப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஓடையின் பள்ளமான பகுதியில் வீடுகள் கட்டியுள்ள இடத்தில், மழை காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதால், இந்தப் பகுதியில் பட்டா வழங்க இயலாது.

40—

**மனைப் பட்டா வழங்குதல்**

**வினா 34779—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், 41-வது வார்டு, செம்மேடு தோட்டம் பகுதியில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு எப்போது வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்?

[2001 ஜனவரி 25

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருப்பூர் வட்டம் மற்றும் கிராமம், செம்மேடு தோட்டத்திற்கு அருகில் நல்லூர் கிராமம், மணியக்காரம்பாளையம் செல்லும் ரோட்டின் ஓரத்தில், வண்டிப்பாதைப் புறபோக்கில், சுமார் 16 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து, வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றனர். மேற்படி இடம் சாலை விஸ்தரிப்புக்கு தேவைப்படுவதால், மேற்படி ஆக்கிரமிப்பாளர்களுக்கு பட்டா வழங்க இயலாது.

41—

**பட்டா வழங்குதல்**

**வினா 34792—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டிபாளையம் ஊராட்சி, நேரு நகர் பொதுமக்கள் 96 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொட்டிபாளையம் ஊராட்சி நேரு நகர் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்துள்ள 96 நபர்களில் 48 பேருக்கு நிலக்கிரையத்தின்பேரில் பட்டா வழங்கப்பட்டு உள்ளது. மீதம் உள்ள 48 நபர்களுக்கு நிலக்கிரயம் செலுத்திய பின்னர் பட்டா வழங்கப்படும்.

42—

**இலவச பட்டா வழங்குதல்**

**வினா 34901—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் மற்றும் எடங்கணசாலை பேரூராட்சியில் 1998-99-ல் இலவச பட்டா கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் வழங்கப்பட்ட பட்டாக்கள் எத்தனை?



2001 ஜனவரி 25]

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் மற்றும் எடங்கணசாலை பேரூராட்சியில் 1998-99-ல் இலவச பட்டா கோரி மனுக்கள் ஏதும் இல்லை.

43—

**புறம்போக்கு நிலங்களில் மனைப் பட்டா**

**வினா 39699—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், சிங்கம்பேட்டை பகுதியில் பவானி-மேட்டூர் நெடுஞ்சாலையின் இருபுறமும் 70 குடும்பங்கள் 40 ஆண்டு காலமாக குடிசைகள் அமைத்து வசித்து வருவது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேறு அரசு புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பவானி வட்டம், சிங்கம்பேட்டை கிராமம், ரீ.ச.எண்.53, 63 சாலை புறம்போக்கின் இருபுறமும் சுமார் 70 குடும்பத்தினர் கூரை வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். இந்த சாலைப் புறம்போக்கு பவானி மேட்டூர் பிரதான நெடுஞ்சாலை ஆகும். இச்சாலை இருபுறமும் அகலப்படுத்த வாய்ப்பு உள்ளது என்பதால் இப்புலங்களில் உள்ளவர்கட்கு இப்புலத்திலேயே வீட்டுமனை ஒப்படை வழங்க இயலாது. இவர்கட்கு மாற்றிடம் வழங்க இக்கிராமத்தில் தகுதியான புறம்போக்கு இல்லை.

(ஆ) இவர்கட்கு மாற்றிடத்தை "பட்டா புலங்களில் நேரடிக் கிரயம் மூலம் விலைக்கு வாங்கி" வீட்டுமனை ஒப்படை வழங்க ஈரோடு மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

[2001 ஜனவரி 25

44—

சுகாதார வசதி

**வினா 40606—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலை அறைகளில் காற்றோட்டமும், உணவு, குடிநீர் வசதி மற்றும் கொசுத் தொல்லையை ஒழித்து சுகாதார முறையில் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) சிறைச்சாலை அறைகளில் காற்றோட்ட வசதிக்காக கம்பிவலை பொருத்தப்பட்ட ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சிறை நடைமுறை விதிகளின்படி அமைக்கப்பட்ட உணவு வழங்கப்படுகிறது. குடிநீர் பகுப்பாய்வாளர் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கொசுத் தொல்லையினை முறியடிக்க மாநகராட்சி, நகராட்சி மூலம் தடுப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

45—

சிறைச்சாலையில் வசதி

**வினா 40665—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், பெண்கள் சிறைச்சாலையில் போதிய வசதிகள் கைதிகளுக்கு இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பெண் கைதிகளுக்குப் போதிய வசதிகள் சிறைச்சாலையில் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



2001 ஜனவரி 25]

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர், பெண்கள் தனிச்சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிறைவாசிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

46—

கூட்டுறவு நூற்பாலைகள்

**வினா 41362—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மொத்தம் எத்தனை உள்ளன?

(ஆ) எவ்வளவு நூற்பாலைகள் கூட்டுறவுத் துறையின் மூலம் இலாபத்தில் உள்ளன?

(இ) நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலை இலாபத்தில் இயங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் மொத்தம் 18 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன.

(ஆ) 18 கூட்டுறவு நூற்பாலைகளில் அண்ணா கூட்டுறவு நூற்பாலை, பாரதி கூட்டுறவு நூற்பாலை மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஆகிய மூன்று கூட்டுறவு நூற்பாலைகள் நடப்பு ஆண்டில் இலாபத்தில் இயங்குகின்றன.

(இ) நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகள் இலாபத்தில் இயங்க கீழே குறிப்பிட்டவை போன்ற பல்வேறு உதவிகளை அரசு அளித்து வருகிறது.

[2001 ஜனவரி 25

(1) நபார்டு வங்கி மூலம், மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து நடைமுறை மூலதனக் கடன் பெற அரசு உத்தரவாதம் மற்றும் விளிம்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது;

(2) விற்பனை வரியை செலுத்தும் காலத்தை தள்ளி வைத்து தவணை முறையில் செலுத்த அனுமதி;

(3) தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் மூலம் அதிகப்படியாக உள்ள தொழிலாளர்களையும், பணியாளர்களையும் ஓய்வில் செல்ல அனுமதிக்க நிதியுதவி;

(4) வழிவகைக் கடனை நீண்ட காலக் கடனாக மாற்றிக்கொள்ள அரசு உத்தரவாதம்;

(5) இடருதவி நிறுவனங்கள் என்று அரசு அறிவித்ததன் மூலம் நிதி நெருக்கடியிலிருந்து நிவாரணம்; மற்றும்

(6) சட்டபூர்வமான நிலுவைகளைச் செலுத்த நிதியுதவி.

47—

**நூற்பாலைகள்**

**வினா 41645—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மூடப்பட்டிருக்கும் கூட்டுறவு நூற்பாலைகளை உடனடியாகத் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

கடந்த சில ஆண்டுகளாக ஜவுளித் தொழிலில் ஏற்பட்டுள்ள தொய்வு, பஞ்சு விலையேற்றம் மற்றும் நூல் விலை சரிவு ஆகிய காரணங்களினால்



2001 ஜனவரி 25]

ஏற்பட்ட கடுமையான நிதி நெருக்கடியால் மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மிசிரியர் கூட்டுறவு நூற்பாலை, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள் ஆகிய நான்கு கூட்டுறவு நூற்பாலைகளின் இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவற்றைத் திறந்து இயக்குவதற்கு தமிழக அரசு கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன:

மூடிய ஆலைகளைத் திறந்து இயக்கவும், நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளை இலாபகரமாக மாற்றவும், தமிழக அரசு கூட்டுறவு நூற்பாலை புனரமைப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி அதன்கீழ், ரூ. 185.26 கோடி அளவிற்கு நிதிச் சலுகைகளையும், பணப் பயன்களையும் அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ் மூடப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் பின்வருமாறு உதவிகள் வழங்கப்பட்டன:

மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை

| வ.எண் | விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | புதிய காசுக்கடன் | 150.00 |
| 2. | தன் விருப்ப ஓய்வுத் திட்டம் | 20.00 |
| 3. | விளிம்புத் தொகை | 30.00 |
| 4. | காசுக் கடன் நிலுவையினை நீண்டகாலக் கடனாக மாற்றுதல் | 351.74 |
| 5. | டான்ஸ்பின் நிலுவையினை பங்கு மூலதனமாக மாற்றுதல் | 239.32 |
| 6. | அரசு வழிவகை கடனை அரசு பங்கு மூலதனமாக மாற்றுதல் | 171.50 |
| 7. | சட்டபூர்வ நிலுவை செலுத்த | 109.14 |
| 8. | நவீனமயமாக்கல் | 200.00 |
| 9. | விற்பனை வரி தள்ளி வைத்தல் | 130.49 |
| | மொத்தம் .. | 1402.19 |

[2001 ஜனவரி 25

மிசிரியர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை

| வ.எண் | விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | புதிய காசுக் கடன் | 105.00 |
| 2. | தன் விருப்ப ஓய்வுத் திட்டம் | - |
| 3. | விளிம்புத் தொகை | 21.00 |
| 4. | காசுக் கடன் நிலுவையினை நீண்டகாலக் கடனாக மாற்றுதல் | 142.47 |
| 5. | டான்ஸ்பின் நிலுவையினை பங்கு மூலதனமாக மாற்றுதல் | 42.68 |
| 6. | அரசு வழிவகை கடனை அரசு பங்கு மூலதனமாக மாற்றுதல் | 96.88 |
| 7. | சட்டபூர்வ நிலுவை செலுத்த | 16.00 |
| 8. | நவீனமயமாக்கல் | - |
| 9. | விற்பனை வரி தள்ளி வைத்தல் | - |
| | மொத்தம் .. | 424.03 |

விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை

| வ.எண் | விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | புதிய காசுக் கடன் | 150.00 |
| 2. | தன் விருப்ப ஓய்வுத் திட்டம் | 20.00 |
| 3. | விளிம்புத் தொகை | 30.00 |
| 4. | காசுக் கடன் நிலுவையினை நீண்டகாலக் கடனாக மாற்றுதல் | 247.69 |
| 5. | டான்ஸ்பின் நிலுவையினை பங்கு மூலதனமாக மாற்றுதல் | 143.99 |
| 6. | அரசு வழிவகை கடனை அரசு பங்கு மூலதனமாக மாற்றுதல் | 165.58 |
| 7. | சட்டபூர்வ நிலுவை செலுத்த | 50.25 |
| 8. | நவீனமயமாக்கல் | 200.00 |
| 9. | விற்பனை வரி தள்ளி வைத்தல் | 65.88 |
| | மொத்தம் .. | 1,073.39 |



2001 ஜனவரி 25]

வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை

| வ.எண் | விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | புதிய காசுக் கடன் | 200.00 |
| 2. | தன் விருப்ப ஓய்வுத் திட்டம் | - |
| 3. | விளிம்புத் தொகை | 40.00 |
| 4. | காசுக் கடன் நிலுவையினை நீண்டகாலக் கடனாக மாற்றுதல் | 262.30 |
| 5. | டான்ஸ்பின் நிலுவையினை பங்கு மூலதனமாக மாற்றுதல் | 128.44 |
| 6. | அரசு வழிவகை கடனை அரசு பங்கு மூலதனமாக மாற்றுதல் | 223.00 |
| 7. | சட்டபூர்வ நிலுவை செலுத்த | 385.63 |
| 8. | நவீனமயமாக்கல் | 200.00 |
| 9. | விற்பனை வரி தள்ளி வைத்தல் | 71.58 |
| | மொத்தம் .. | 1,510.95 |

மேற்காணும் சலுகைகள் தவிர தற்போது மூடப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்/பணியாளர்களில் தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தில் செல்ல விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில் அனைத்து நிதிப் பயன்களையும் வழங்கி விடுவிக்க மாநில புதுப்பிக்கும் நிதியிலிருந்து ரூ. 17.52 கோடி பெறப்பட்டு அதன் மூலம் 1,354 தொழிலாளர் மற்றும் பணியாளர்கள் பணிக்கொடை உள்ளிட்ட அனைத்து பணப் பயன்களுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் 346 நபர்களே ஆகும்.

புனரமைப்புத் திட்டத்தின் முக்கியமான அம்சமான புதிய காசுக் கடன் மற்றும் நிலுவையிலுள்ள கடனை நீண்டகாலக் கடனாக மாற்றக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளை மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பரிந்துரை செய்ய மறுத்துவிட்ட காரணத்தால், மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை மற்றும் மிசிரியர் கூட்டுறவு நூற்பாலைகள்

[2001 ஜனவரி 25

புதிய காசுக் கடன் பெற இயலாமல் திறந்து இயக்கப்பட முடியாத நிலையில் உள்ளன.

வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள் தயாரித்த பிரேரணைகள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பரிந்துரையுடன் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் மாநில தலைமை கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் வழியாக நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டு மேற்படி வங்கியின் பரிசீலனையில் உள்ளது. அவை அங்கீகரிக்கப்பட்டு சிபாரிசு செய்யப்படும் பட்சத்தில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் புதிய காசுக் கடன் வரவு-செலவு ஆரம்பிக்கப்பட்டு வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள் மூலப் பொருள் கொள்முதல் செய்யப்பட்டு திறந்து இயக்க இயலும்.

**48—**

**பட்டா வழங்குதல்**

**வினா 18514—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், அமரம் ஊராட்சியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், அமரம் ஊராட்சியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா



2001 ஜனவரி 25]

வழங்குவதில் நில உடமையாளர் வழக்கு தொடர்ந்துள்ளதால் வழக்கு முடிவுற்ற பின்னரே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**49—**

**பனைவெல்ல சங்கங்கள்**

**வினா 39987—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் ஆரம்பப் பனைவெல்ல சங்கங்கள் எத்தனை செயல்படுகின்றன?

(ஆ) இவைகளின் மூலம் 1996-97 முதல் 2000 மார்ச் 31 முடிய உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் என்ன? எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் 132 ஆரம்பப் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

(ஆ) 1996-97 முதல் 31-7-2000 முடிய உற்பத்தி செய்யப்பட்ட பொருள் கருப்பட்டியாகும். இச்சங்கங்களில் செய்யப்பட்ட உற்பத்தி மதிப்பு 1996-97-ல் ரூ. 85,07,819-ம், 1997-98-ல் ரூ. 84,93,538-ம், 1998-99-ல் ரூ. 76,43,065-ம், மற்றும் 1999-2000-ல் ரூ. 63,21,945-ம் ஆகும்.

**50—**

**தேனீ வளர்ப்பு**

**வினா 42495—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 25

கதர் கிராமத் தொழில்கள் துறையின் மூலமாக எடப்பாடி தொகுதியில் தேனீ வளர்ப்புத் தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

அதிகமாக பூக்கின்ற மரங்கள் அடங்கிய பகுதி மற்றும் பழத்தோட்டங்கள் போன்றவற்றில் இருந்து தேனீக்கள் தேனை சேகரித்து தேனீ கூட்டில் நிரப்பி வரும். எனவே, தேனீ வளர்ப்புத் தொழில் தொடங்குவதற்கு சம்பந்தப்பட்ட பகுதியில் இதுபோன்ற இயற்கை சூழ்நிலை அமைய வேண்டியது அவசியமானதாகும். ஆனால் எடப்பாடி தொகுதியில் பழத்தோட்டங்களோ அல்லது வருடம் முழுவதும் தேன் தரும் செடி, கொடிகளோ அப்பகுதியில் இல்லாத காரணத்தால் இத்தொகுதியில் தேனீ வளர்ப்புத் தொழில் தொடங்குவதற்கு சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினாக்கள்-விடைகள முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

### (அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பதிலாக, மாண்புமிகு பேரவை முன்னவர் பதிலுரை அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு இறுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வது வாடிக்கை. ஆனால், தொடர்ந்து உடல்நிலை சரி இல்லாத காரணத்தால், தன்னால் இன்று பதில் சொல்ல முடியவில்லை என்பதால், மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்குமாறு என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குப் பதிலாக பேரவை முன்னவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இறுதியாகப் பேசுவார்கள்.



2001 ஜனவரி 25]

### (ஆ) அவையில் காட்டப்பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் படத்துடன் வந்துள்ள வாக்காளர் அட்டை குறித்து தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த உத்தரவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றையதினம் அவையில் காட்டப் பெற்ற வாக்காளர் அடையாள அட்டையைப் பொறுத்தவரை, நானே முதலமைச்சர் வீட்டுக்குச் சென்று, அவருடைய அட்டையைப் பார்த்து, அவரிடம் இருக்கிற அட்டை வேறு; இந்த அட்டை வேறு என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆகவே, இந்த அட்டைகள் எப்படி வந்தன என்று தேர்தல் ஆணையம் ஒரு விசாரணை நடத்த வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் என்று சொன்னேன். இந்த விவாதத்திற்குப் பதில் சொல்கின்ற நாட்களில் வேறு எந்தப் பொருளையும் எடுக்கக்கூடாது என்பது முன்வரிசையிலே இருக்கின்ற திரு. சி. ஞானசேகரனுக்கு 5 வருடம் கழிந்தும்கூட இன்னும் தெரியவில்லை என்பது எனக்கு வருத்தம் அளிக்கிறது.

ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது இன்றைய விவாதத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களைத் தொடங்கி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 2. அறிவிப்பு—தொடர்ச்சி.

**(ஆ) அவையில் காட்டப்பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் படத்துடன் வந்துள்ள வாக்காளர் அட்டை குறித்து தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த உத்தரவு**—தொடர்ச்சி.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. இரா. விசுவநாதன்:** போலி அட்டை பற்றி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த அட்டை அவருடையது இல்லை என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. விசுவநாதன்:** அது போலி அட்டை..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போலி அட்டை என்று நான் எப்படிச் சொல்ல முடியும்? அந்த அட்டை அவருடையது இல்லை. அவரிடம் ஏற்கெனவே அட்டை இருக்கிறது.

**திரு. இரா. விசுவநாதன்:** நீங்கள் சொன்னது போலி அட்டைதான். (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். அவருக்குரிய ஒரு அட்டை அவருக்கு இருக்கிறது. அதை நான் பார்த்துவிட்டேன். அதனாலே, இந்த அட்டை எப்படி வந்தது என்று விசாரிக்கச் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன், பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதுவும் பேச முடியாது.



## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தத் தங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு இந்த அரசு செய்து இருக்கிற ஏற்பாட்டினை நான் வரவேற்கும் அதேநேரத்தில் கோவை மாவட்டத்தில் மங்களக் கருவிகளை இசைக்கின்ற பல கலைஞர்கள் நலிந்த பிரிவைச் சார்ந்தவர்கள், அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், நாதஸ்வரம், தவில் போன்ற கருவிகளை இசைப்பவர்கள் நீண்டகாலமாக வறுமையிலே வாடிக்கொண்டிருப்பவர்கள்; அவர்களையும் இந்தப் பட்டியலிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த ஆளுநர் உரையிலே பல்வேறு நல்ல அறிவிப்புகள் வெளிவரும் என்று நான் எதிர்பார்த்த நேரத்திலே சில செய்திகள் சொல்லப்படாமல் இருப்பது எனக்கு பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. இதே அவையிலே முதல்வர் அவர்கள், 10 ஆண்டுகாலம் புறம்போக்கு நிலத்திலே குடியிருக்கிற அனைவருக்கும் பட்டா வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், கோவை மாநகராட்சியிலே கடந்த ஓராண்டுகாலமாக அப்படிக் குடியிருக்கிற யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அது எப்போது வழங்கப்படும் என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 1,80,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. பட்டா வழங்க தடை செய்யப்பட்டிருக்கக்கூடிய ஊட்டியிலேகூட, தனி நிகழ்வாகக் கருதி, ஒவ்வொருவருடைய நிலையையும், வழக்கையும் கருதி 6,000-க்கும்

[திரு. அ. இரகுமான்கான்] [2001 ஜனவரி 25

மேற்பட்டவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) கோவைக்கு வருகிறேன். சேதுசமுத்திர திட்டத்தின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்திலே 100 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த தடையை நீக்கி, அங்கேயுள்ள மக்கள் 4,000 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. கோவையிலே மட்டும் யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தெரிவிக்கிறார்கள். அதற்கு ஒரு காரணத்தையும் சொல்கிறார்கள், மாநகராட்சியிலே அதற்கான தீர்மானம் போடப்படவில்லை என்று. Municipality Act-ன்படி மாநகராட்சித் தீர்மானம் அவசியம் இல்லை. அங்கே நீர்ப்பிடிப்பு இடமாக இல்லாமல் இருந்தால், Classification-ன்படி 10 ஆண்டுகளுக்கு மேலே குடியிருந்து, அதை அவர்கள் ஆதாரத்தோடு நிரூபிப்பார்களேயானால், அரசுக்கு அந்த நிலம் தேவைப்படவில்லை என்று சொன்னால், பட்டா வழங்குவதிலே எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஏன் வழங்கப்படவில்லை என்பதற்கான காரணத்தை மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லி, அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய விளக்கம் ஏற்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால், L.P.A., அதாவது உள்ளூர் திட்டக் குழுமம் என்று ஒன்று ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது. அந்த உள்ளூர் திட்டக் குழுமத்திலிருந்து 8 கிலோமீட்டர் தொலைவிற்கு எங்குமே பட்டா கொடுக்கக் கூடாது என்று நீங்கள் சட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால்தான், நகராட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய எந்தப் பகுதிக்கும் இதுவரை ஒரு பட்டா கூட தமிழகத்திலே கொடுக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில்கொண்டு, எங்களுடைய வேலூர், கோயம்புத்தூர்.....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிக்குப் பக்கத்தில் 8 கிலோமீட்டர் தூரத்திற்கு எந்தப் பட்டாவும் கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார். நேற்றுவரை 236 பட்டாக்கள் என்னுடைய தொகுதியில், நகராட்சிக்குப் பக்கத்தில் கொடுத்திருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்படியென்றால் மந்திரிகள் தொகுதியில் மட்டும் கொடுக்கிறார்கள், எங்களுக்கெல்லாம் இல்லையென்று அர்த்தம். மந்திரிகள் தொகுதியில் மட்டும் கொடுத்திருக்கிறார்கள், எங்களுக்கு இல்லை.



2001 ஜனவரி 25]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்று புகார்கள் இதுவரையில் வரவில்லை. இப்போதுதான் உறுப்பினர் அவர்கள் இப்படி எங்கேயுமே கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அந்த அரசாணையின்படி கொடுப்பதற்குத் தகுதியிருந்தால், கொடுக்க வேண்டுமென்று எங்கள் துறையிலும் தெரிவித்திருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** வேலூரில் ஒன்றுகூடக் கொடுக்கவில்லை. ஆதாரத்தோடு சொல்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் கேட்டிருக்கிறேன். அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்தால் நான் இராஜினாமா செய்யக்கூடத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. வி.கே. லட்சுமணனைப் பேச விடுங்கள். அவர் பேசுவதற்கு 7 நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் கேளுங்கள். கொடுத்திருந்தால் நான் இராஜினாமா செய்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளிலே பட்டா வழங்குவதற்கு பல்வேறு ஆட்சித் தலைவர்கள் சரியாக இருந்தாலும்கூட பல்வேறு இடங்களிலே வருவாய்க்கு அதிகமானவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் பணம் கட்டினால் அந்தப் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஆகவே அதைச் செய்தால் மாண்புமிகு உறுப்பினர் கேட்டபடி பட்டா வழங்க முடியும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, G.O.-விலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. Eligibiliy போக, அதற்குத் தகுதியில்லாதவர்கள் மார்க்கெட் ரேட்டின்படி கொடுக்க வேண்டும். அடுத்து, இன்னொன்று முனிசிபாலிட்டி தீர்மானமோ, பஞ்சாயத்து தீர்மானமோ பிரச்சினை அல்ல. நகராட்சி எல்லைக்குள் பல இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டார்கள். ஆனால், கோவை பற்றி நீங்கள் இப்போது சொல்கின்ற புகார் குறித்து நான் விசாரிக்கின்றேன். அது உண்மையாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2001 ஜனவரி 25

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோயம்புத்தூர் கிழக்கு சட்டமன்றத் தொகுதி என்பது சங்கனூர்பள்ளத்தின் கரையிலே அமைந்திருக்கின்ற பகுதி, வாலாங்குளம் கரையிலே அமைந்திருக்கிற ஒரு பகுதி. அங்கே வாழ்கிற மக்கள் அத்தனை பேரும் தினக்கூலிகள். அவர்கள் யாருக்கும் பட்டா வழங்கவில்லை என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இனிமேலாவது பட்டா வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின் இணைப்பு. நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். கோவையிலே ஒரு நல்ல Chief Engineer இருக்கிறார். அவர் இந்த அறிவிப்பு வந்தவுடனே பல ஆயிரக்கணக்கான குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கினார். ஆனால் திடீரென்று அது நிறுத்தப்பட்டிருக்கிறது. எல்லா குடிசைகளுக்கும் Indemnity Bond வாங்கிக் கொண்டுதான் மின் இணைப்பு வழங்கப்பட்டது. இப்போது Indemnity Bond கொடுத்தாலும்கூட மாநகராட்சியிலே இருந்து N.O.C. வாங்கினால்தான் அது கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிற காரணத்தினாலே அந்தத் தேதியிலிருந்து இதுவரையில் யாருக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. எனவே, அதை எதிர்பார்க்காமல் மின் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளிலே இருக்கிறவர்கள் மனைகளை விற்கிற பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு மாதிரி அரசாணை பிறப்பித்திருக்கிறது. குறிப்பாக வணிகவரித் துறை, உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த தலைவர்களிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெற்று அதைப் பதிவு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறது. ஆனால், அதற்குப் பின்னாலே பதிவுத் துறையிலே இருந்து வந்த ஒரு கடிதம் என்ன சொல்கிறது என்று சொன்னால், கிராமப் பஞ்சாயத்து என்று வருகின்றபோது கிராமப் பஞ்சாயத்துக்கு தடையில்லாச் சான்றிதழ் பிறப்பிக்கின்ற நபர், அதாவது தகுதி பெற்ற நபர் Authorised Officer யார் என்று கேட்டால் B.D.O. என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் B.D.O.-க்களை அணுகி நீங்கள் தடையில்லாச் சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்று கேட்கின்றபோது, எங்களுக்கு எந்த உத்தரவும் வரவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, ஒட்டுமொத்தமாக கிராமங்களிலே இந்த அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளில், எந்த



2001 ஜனவரி 25] [திரு. வி. கே. லட்சுமணன்]

மனைக்கட்டும் விற்கப்படவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 7 நிமிடம் ஆகிவிட்டது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். இந்த ஆளுநர் உரையில் நிறைய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று நான் மிகவும் எதிர்பார்த்தேன். அச்சன்கோயில்-பம்பாவும் இல்லை; பாண்டியாறு-புன்னம்புழாவும் இல்லை; அவினாசி நீர்த் திட்டமும் இல்லை; கிருஷ்ணா தண்ணீர் நாங்கள் குடிப்பதாகச் சொல்கிறீர்கள். அது உண்மையாக இருக்கலாம். ஆனால் கிருஷ்ணாவிலிருந்து எவ்வளவு டி.எம்.சி. தண்ணீர் வந்திருக்கிறது என்பதைப் பற்றித் தாங்கள் சொல்லியிருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்டகாலமாக கோவையில் ஒரு சிறுவர் உலகம் நிறுவ வேண்டுமென்று கோரிக்கை இருந்து வருகிறது. அதுபோல, ஒரு கோளரங்கம்.....

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** துணைத் தலைவர் அவர்களே, விவரத்தைச் சொல்லிவிடுகிறேன். கரெக்டாக புள்ளிவிவரத்தோடு சொல்லிவிடுகிறேன். 29-1-1996 முதல் 16-10-1996 முடிய 0.076 டி.எம்.சி.; 4-7-1997 முதல் 30-11-1997 முடிய 2.300 டி.எம்.சி.; 24-7-1998 முதல் 5-11-1998 முடிய 2.81 டி.எம்.சி.; 17-7-1999 முதல் 11-11-1999 முடிய 1.83 டி.எம்.சி.; 15-3-2000 முதல் 22-6-2000 முடிய 0.101 டி.எம்.சி.; இந்த ஆண்டு 30-8-2000 முதல் 19-1-2001 வரைக்கும் கணக்கு வந்திருக்கிறது. 19-1-2001 வரைக்கும் 4.13 டி.எம்.சி.; தண்ணீர் வந்திருக்கிறது. இன்றைக்கு சராசரியாக ஒவ்வொரு நாளும் தற்போது வினாடிக்கு 373 கன அடி தண்ணீர் தமிழ்நாட்டின் எல்லைக்குள் நுழைந்து கொண்டிருக்கிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** 12 டி.எம்.சி. தண்ணீர் வர வேண்டியதற்கு 4 டி.எம்.சி.தான் வந்திருக்கிறது. இன்னும் 8 டி.எம்.சி. வரவில்லை என்பதைத்தான் உங்களுடைய விளக்கம் தெளிவாக்குகிறது என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஒரே நாளில் வராது. மெல்ல மெல்லத்தான் வந்து கொண்டிருக்கும்.

**திரு. ச. அழகிரி:** மொத்தம் 12 டி.எம்.சி. வரவேண்டும். ஒரு வருஷத்திற்கு 12 டி.எம்.சி. வரவேண்டும். நீங்கள் சொல்வதிலே எத்தனை மாதங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** துணைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு 12 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை, அதுதான் சட்டம். ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை எல்லாம் சீர்பண்ணி, இப்போதுதான் continue-வாக கிருஷ்ணா வாட்டர் கொண்டுவந்து கொடுத்திருக்கிறோம். இதற்கு முன்னே, கிருஷ்ணா வாட்டரே இல்லை, வராது என்ற நிலை இருந்தது. ஆனால் தண்ணீர் இன்றைக்குத் தொடர்ந்து வரக்கூடிய நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட 10 டி.எம்.சி. தண்ணீர் வந்திருக்கிறது. மொத்தமாகக் கூட்டிப் பார்த்தால் வரும். ஆகையினால் ஆண்டு ஒன்றுக்கு 12 டி.எம்.சி. தண்ணீர் வருகிற அளவுக்கு, இப்போது ஏற்பட்டிருக்கிற முயற்சி தொடர்ந்து வரும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** கோவையில் ஒரு கோளரங்கம் நிறுவ வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நாட்களாகக் கல்வி அமைச்சரிடம் வைத்திருக்கிறேன். அது இன்னும் நிறுவப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவையில் கோளரங்கம், அதைப்போல அறிவியல் மையம் இரண்டையும் சேர்த்து அமைப்பதற்கு முதலில் மாநகராட்சி மன்றம் தந்த ஓர் இடம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அந்த இடம் அவ்வளவு ஏற்ற இடமாக அமையாது என்ற ஐயம் ஏற்பட்டு, அதைவிட மிக நல்ல இடம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன அந்த இடம், இப்போது உறுதி செய்யப்பட்டு, அந்த இடம் கிடைத்திருக்கிறது. ஆனால் அந்தக் கோளரங்கம் அமைப்பதற்குக் குறைந்தது 3 கோடியிலிருந்து 4 கோடி ரூபாய் தேவை. எனவே, அதுகுறித்து ஒரு குழு — விளையாட்டுத் துறையைச் சார்ந்தவர்கள் ஈடுபடக்கூடிய பல காரியங்களுக்கு குழுக்கள் மூலமாக நிதி வசூலிக்கப்படுகிறது. அதுபோல ஒரு குழு — அமைக்கலாமா என்ற ஆலோசனை எழுந்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவரை அந்தக் குழுவின் தலைவராக நியமிப்பது அவ்வளவு உசிதமல்ல என்ற ஒரு கருத்து ஏற்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், உரியவர்கள், யார் யார் அதிலே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை சொன்னால் அந்தக் குழு அமைக்கப்பட்டு, தொடர்ந்து அது செயல்பட்டு, இரண்டு, மூன்று ஆண்டுகளில் அது வரக்கூடும்.



முற்பகல் 10-45

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியிலே மொழிப்போர் காவலர்களுடைய வாரிசுகளுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களுடைய வாரிசுகளுக்கும் பணியில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. அதேபோல் கோவை மாநகராட்சியிலும் இந்த மொழிப்போர் காவலர்களுடைய வாரிசுகளுக்கும், சுதந்திரப் போராட்ட வீரர்களுடைய வாரிசுகளுக்கும் (மணியடிக்கப்பெற்றது) பணியில் முன்னுரிமை அளிக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு காரியங்களுக்கு மற்ற மாநிலங்களை முன்மாதிரியாகக் காட்டுகின்ற தமிழக அரசு தியாகிகளுக்கு மானியம் வழங்குகின்ற இந்த விஷயத்திலும், அண்டை மாநிலங்களிலே வழங்கப்படுவதைப்போல தன்னுடைய பங்காக 500 ரூபாய்க்குப் பதிலாக 1,000 ரூபாயாவது அளிக்க முன்வர வேண்டுமென்று மட்டும் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துகளைக் கூறக் கிடைத்த இந்த நல்ல வாய்ப்புக்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த இரண்டு தினங்களில் பல உறுப்பினர்கள், பல்வேறுபட்ட தங்களுடைய கருத்துகளை இந்த மாமன்றத்திலே வழங்கியுள்ளார்கள்.

துணைத் தலைவர் அவர்களே, முக்கால் பங்கு நீரால் நிரப்பப்பட்ட ஒரு டம்ளர் இரு வேறுபட்ட கருத்துகளைக் கொண்ட இரு நபர்கள் முன்னால் வைக்கப்பட்டபோது, அதைப் பார்த்த ஒருவர் இந்த டம்ளரில் முக்கால் பங்கு நீர் நிறைந்து இருக்கிறது என்று சொல்லுகின்றார். அடுத்த நபர், அந்த டம்ளரில் கால் பங்கு தண்ணீர் இல்லை, கால் பங்கு காலியாக இருக்கிறது என்று சொல்லுகின்றார். இது அந்த இரண்டு பேர்களுடைய

மாறுபட்ட மனங்களைக் காட்டுகின்றது. மாற்றுக் கட்சியினர் தங்களுடைய உள்ளங்களை வெற்றிடங்களாக மாற்றிக்கொண்டு, இல்லை, இல்லை என்று உரக்க குரல் கொடுத்து அமர்ந்திருக்கிறார்கள். பாவம் தேர்தல் குளிர். (குறுக்கீடு) அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கின்ற மனப்பான்மை. மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் நான் yield ஆகாததால் தயவுசெய்து நான் பேசுகின்றபோது என்னுடைய உரையிலே குறுக்கிட வேண்டாமென்று தங்கள் வாயிலாக பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பொய் நெல்லைக் குத்தி பொங்க நினைக்கின்ற மனப்பான்மை; மகாமக குளத்தில் விழுந்த பிணங்களை ஒரு மெகா கூட்டணி அமைத்து மறைத்துவிட நினைக்கின்ற அவலம்; ஒருவகையான அறிதுயில்; தண்டுவடம் முழுமையாக உடைந்தவர்களை அச்சாணி இல்லாத கம்யூனிச தள்ளு வண்டியில் தள்ளிக்கொண்டு போக நினைக்கின்ற ஒரு அவசரம்; அஞ்ஞானம் என்றுகூடச் சொல்லலாம். பொதுவுடைமைக் கொள்கைகளைப் புறந்தள்ளிவிட்டவர்களின் நெஞ்சறிந்த நீதி. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனிதனை நேசிக்கின்றவன், மனித நேயத்தோடு இன்னொரு மனிதனைப்பற்றி யோசிக்கின்றவன்தான் உண்மையான கம்யூனிஸ்ட் என்று சொன்னால் கலைஞர் கருணாநிதியைவிட ஒரு நல்ல கம்யூனிஸ்ட்டை காட்டுங்களேன் பார்க்கலாம்.

தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவர் டாக்டர் கலைஞர் என்று அவரின்பால் பாசம் கொண்ட அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த நான்கே முக்கால் ஆண்டு காலத்தில் ஒவ்வொரு முறை சட்டமன்றக் கூட்டத் தொடர் கூடுகின்றபோதும், கூட்டத் தொடர் முடிந்து வீட்டுக்குப் போகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் என்னென்ன நிலைகளில் அவரவர்களுடைய தொகுதிக்குத் திரும்பிப் போகின்றார்கள் என்பதை நினைவுகூர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். திருமணம் முடித்து கணவன் வீட்டுக்குச் செல்லுகின்ற பெண், ஒரு வருடத்தில் இரண்டு, மூன்று முறை சீராடுவதற்காகத் தாய் வீட்டிற்கு வருகின்றாள். அவள் கணவன் வீட்டுக்குத் திரும்பிச் செல்லுகின்றபோது, அந்தப் பெண்ணின் தாய் தன்னுடைய பொருளாதாரம் எந்த அளவிற்கு இடம் கொடுக்கிறதோ அந்த அளவிற்கு, மாப்பிள்ளைக்கு, மகளுக்கு, துணிமணிகள், பேரக் குழந்தைகளுக்கு சிறு சிறு நகை நட்டுகள், தண்டை, கொலுசு, காதுக்குத் தோடு இப்படி......



முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீராடுவதற்கு என்று சொல்லிவிட்டு அதிகம் கேட்டுப் போராடுவதற்கு என்பதுபோலச் சொல்கிறீர்கள்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** இல்லை, இல்லை. அந்தத் தாயுள்ளம், ஏதேனும் மகள் கையிலே கொடுத்து அனுப்ப வேண்டும் என்று எப்படியெல்லாம் நினைக்கின்றதோ, அதைப்போல, ஒவ்வொரு கூட்டத் தொடரும் முடிந்து சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளுக்குத் திரும்புகிறபோதெல்லாம், நம்முடைய தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள், ஒவ்வொரு திட்டமாகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர்களின் தொகுதிகளில் மரியாதை, கௌரவம், பாராட்டுகள் அவரவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மக்கள் நல்வாழ்வுத் திட்டம், நமக்கு நாமே திட்டம், வருமுன் காப்போம் திட்டம், வாழ்வொளித் திட்டம், இப்படி ஒவ்வொரு முறையும் ஏதேனும் ஒன்றைக் கையிலே கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை இந்த நல்ல ஆட்சியை நடத்துவதற்காக அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் வாயிலாக இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, ஒரேயொரு அறை; நடுவிலே ஒரு திரை; வருகின்றவர்களை எங்கே உட்கார வைப்பது; நாங்கள் எங்கு உட்காருவது என்று அல்லாடி கொண்டிருந்த நிலைமையை மாற்றி வெகு அழகான முறையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்து இருக்கிறார்களே; இது காலத்தைக் கடந்து நிற்கின்ற ஒரு மாட்சி என்பதை நான் உங்கள் முன்னால் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இவை எல்லாவற்றிற்கும் மேலாக — நான் என்னுடைய உரையிலே இந்த மாமன்றத்திலே பல தடவை குறிப்பிட்டிருக்கின்றேன். எத்தனையோ அறிஞர் பெருமக்கள், கவிஞர்கள் பெண்ணினுடைய வாழ்க்கை நிலை பற்றி, பெண் இனம் மேன்மை அடைய வேண்டும் என்பதைப் பற்றி, பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி, பெண்களுக்குச் சலுகைகள் காட்டப்பட வேண்டும் என்பதைப் பற்றி, அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நிறையப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்; கருத்துகளை வழங்கியிருக்கிறார்கள்; கட்டுரை தீட்டியிருக்கிறார்கள்; புத்தகங்களை

வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், உள்ளபடியே 1989 ஆம் ஆண்டு பெண்ணிற்குச் சொத்திலே சம பங்கு கொடுக்க வேண்டும் என்பதிலே ஆரம்பித்து, இன்று வரையிலே — மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு ஓட்டப் பந்தயத்திலே கலந்து கொள்கின்ற ஒரு பந்தய வீரன், ஒரு உயரம் தாண்டுதல் போட்டியில், ஒரு நீளம் தாண்டுதல் போட்டியிலே கலந்து கொள்ளக் காத்துக்கொண்டு இருக்கிறபோது, அவன் அந்தப் போட்டியிலே பங்கெடுக்கின்றபோது, உயரம் தாண்டுகின்றவனுடைய மனம், முன்னாலே அவன் தாண்ட நினைக்கின்ற உயரத்தைத் தாண்டுகிறது. அதற்குப் பின்னால்தான் அவனுடைய உடல் தாண்டுகிறது. என்ன காரணம் என்று சொன்னால், அது ஒரு தன்னம்பிக்கை. அப்படிப்பட்ட ஒரு தன்னம்பிக்கையை இந்தப் பெண் குலத்திற்கு, இந்தப் பெண் இனத்திற்கு, "வாழ்ந்து காட்டுவோம்" என்று அழகான ஒரு சொற்றொடரைக் கொடுத்து, பெண் இனத்தை வாழ வைத்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பூமாலைத் திட்டத்தின் மூலமாக இப்போது கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற அந்த மகளிர் சிறு வணிகக் கடனைப் பெற்று, கைவினைஞர்களாக, கிராமப்புறங்களிலே இருக்கின்ற பெண்கள், கூடை முடைதல், பொம்மை செய்தல், கற்றாழை நாறெடுத்துக் கயிறு திரித்தல், மிதியடிகள் செய்தல் போன்ற பல கைத்தொழில்களைச் செய்து, அவர்களெல்லாம் இன்றைக்குக் கிராமப்புறங்களிலே நாட்டு நடப்புத் தெரிந்தவர்களாக, பொருளாதாரத்தினுடைய உயர்வு எந்த அளவிற்கு அவர்களுடைய குடும்பத்தை வலிவும், பொலிவும் உள்ளதாக்கும் என்ற நடப்புத் தெரிந்தவர்களாக இருந்துகொண்டு, இன்றைக்கு எல்லாத் தரப்பிலும், கிராமப்புறங்களிலே குறிப்பாகப் பெண்கள் தங்களை உயர்த்திக் கொள்கின்ற ஒரு நல்ல நிலைமைக்கு இன்றைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த காலங்களிலே பெண்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்திலேகூட எந்த அளவிற்குப் பெண்களுடைய நலன் புறக்கணிக்கப்பட்டது? ஆனால், டாக்டர் கலைஞர் அவர்கள் ஆண்டு கொண்டிருக்கிற இந்தக் கால கட்டத்தில் எந்த அளவிற்குப் பெண் இனம் மேன்மைப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை உங்களுக்குச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். 33 சதவிகிதம் உள்ளாட்சி அமைப்புகளில்



பெண்களுக்கு இட ஒதுக்கீடு என்று ஆரம்பித்து, மறக்க முடியாத நல்ல திட்டங்களைப் பெண்களுக்காக, ஏற்படுத்தியிருக்கிறார்கள். கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி என்றும், பெண் இனம் உயர வேண்டும் என்று, கலப்புத் திருமணங்கள், விதவைத் திருமணங்கள், விதவைத் தாயார் பெற்றெடுத்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டம், பத்தாம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு திருமண உதவி, இப்படி திருமண உதவியிலேயே பல நிலைகளிலே பல திட்டங்களை வகுத்து இன்றைக்கு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, எல்லா அம்சங்களும் நிறைந்த ஒரு நல்ல உரையாக, நல்ல மனம் கொண்டவர்கள் எல்லோரும் பாராட்டி வரவேற்கக்கூடிய ஓர் உரையாக, இன்றைக்கு நம்முடைய ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-55

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுத்தது மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மரியாதை ஏற்படுத்தக்கூடிய வகையிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் மீண்டும் தொகுதிக்குச் செல்கின்றபோது ஒரு தன்னம்பிக்கையோடு அவர்கள் பணியாற்றக்கூடிய ஒரு நிலையிலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு நமக்கு மரியாதை செய்து இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காஞ்சனா கமலநாதன் பேசுகின்றபோது, ஒரு டம்ளரில் முக்கால் பாகம் தண்ணீர் இருப்பதாகவும், கால் பாகம் காலியாக இருப்பதாகவும், அவர்கள் உதாரணமாக இங்கே காட்டினார்கள். எங்களுடைய கண்ணிலே கோளாறு இல்லை. அவர்களுடைய கண்ணிலேதான் கோளாறு இருக்கிறது. முழுக்க, முழுக்க காலி டம்ளரை வைத்துவிட்டு, அதிலே முக்கால் அளவு தண்ணீர் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு எந்த கிலியும் இல்லை. எனவே, தைரியமாகத் தேர்தலைச் சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

[2001 ஜனவரி 25

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் காஞ்சனா கமலநாதன் முழுவதும் உண்மையைச் சொன்னார். ஒரு டம்ளரிலே முக்கால் பங்கு தண்ணீர் இருக்குமானால், ஒருவர் கண்ணுக்கு முக்கால் பங்கு தண்ணீர் தெரிகிறது. இன்னொருவருக்கு கால் பங்கு தண்ணீர் இல்லையென்பது தெரிகிறது. அது அவரவர் கண்ணோட்டம் என்று சொன்னார். அப்படிச் சொன்ன கருத்தையே இப்படி மாற்றிச் சொல்வதாக இருந்தால், நீங்கள் சொல்கிற பொருளிலேதான் நீங்கள் காண்கிறீர்கள் என்று நான் உணர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** எல்லாம் வல்ல என்னுடைய இதய தெய்வம் முருகனையும், எங்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களையும் வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 7 நிமிடம் கொடுத்தாலும், இறைவனை நினைக்காமல் பேசுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. தலைவர் அவர்களே, இன்றைக்கு, இந்த ஆளுநர் உரையிலே இருக்கின்ற கருத்துகளை எடுத்துப் பாராட்டலாம் என்று நினைத்தாலும், . . . .

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** ஐயா அவர்களுக்கு நன்றி. என்னுடைய பெயர் ஏ.எல். சுப்பிரமணியன் என்றாலும் முருகன் என்றுதான் என்னை அழைப்பார்கள். என்னை நினைவுபடுத்தியதற்காக நன்றி. (சிரிப்பு)

**திரு. ப. மோகன் கந்தசாமி:** அதிலே புதிதாகச் செய்திகள் இல்லை என்று நினைத்துத்தான் நாங்கள் வேதனைப்படுகிறோம். பொதுவாக இன்றைக்கு நாட்டிலே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் விவசாயிகள். அந்த விவசாயிகளுக்காக, இந்த ஆளுநர் உரையிலே ஏதாவது இருக்கும் என்று எதிர்பார்த்தால் மீண்டும் அது வெற்றிடமாகத்தான் இருக்கிறது. விவசாயிகளுக்காகக் கொப்பரைத் தேங்காயின் விலையை நிர்ணயித்துக் கொடுத்தீர்கள். ஆனால், அதிலே இருக்கின்ற பல்வேறு முரண்பாடுகளைச் சொன்னால், அமைச்சர் அவர்களுக்குக் கோபம் வருகிறது. ஒரு நல்ல திட்டத்தைக் கொடுக்கிறீர்கள். அதிலே கொள்முதலிலே இருக்கின்ற பிரச்சினைகளை விவசாயப் பெருமக்கள் சொல்லும்போது, அதை நேர்மையாகச் சொல்கிறார்கள் என்று எடுத்துக்கொண்டு, அதற்கு உரிய நிவாரணம் கொடுப்பதில்லை. இன்றைக்குக்கூட, கடந்த ஒன்றரை மாத காலமாக பணம் கொடுக்கப்படாமல் இருந்து, நேற்றைக்குத்தான் ஏதோ பட்டுவாடா செய்ததாகச் சொல்கிறார்கள். எல்லா சொசைட்டிகளுமே, அந்தக் கொப்பரைத் தேங்காயை வாங்கினால், இந்தப்



2001 ஜனவரி 25] [திரு. ப. மோகன் கந்தசாமி]

பிரச்சினை வராது. நபார்டில் சொல்லி, அவர்களோடு சேர்ந்து இணைத்துச் செய்தால், கிராமத்திலேயிருக்கின்ற அந்தக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அந்தந்தக் கிராமங்களிலே இருப்பவர்களுக்குத் தெரியும். எனவே, அதைச் செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வதை அவர்களிடமே விட்டுவிட வேண்டும். அப்படிச் செய்தால்தான் விவசாயம் பிழைக்க முடியும். எனவேதான், நீண்ட நெடுநாட்களாக நாங்கள் மட்டுமல்ல, எல்லோருமாகச் சேர்ந்து கேட்டுக்கொள்வது, விவசாயத்தை ஒரு தொழிலாக அங்கீகரிக்க வேண்டுமென்பதுதான். ஆகவே, விவசாயத்தை ஒரு தொழிலாக அங்கீகரித்தால் நிச்சயமாக அந்த விவசாயப் பெருமக்களுடைய பிரச்சினைகளுக்கு ஒரு நிவாரணம் கிடைக்கும் என்று நாங்கள் நினைக்கின்றோம்.

ஈரோடு கீழ்பவானி பாசனத்திலே இருக்கின்றவர்களுக்கு ஏக்கர் அடிப்படையிலே தீர்வை விதித்து இருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் இருக்கின்ற அனைத்துக் கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு அந்தத் தண்டத் தீர்வையை, ஏக்கர் அடிப்படையிலே செய்துகொள்வதோடு மட்டுமல்லாமல், பழைய தண்டத் தீர்வையையும் நீக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறோம்.

நமக்கு நாமே திட்டம் ஒரு நல்ல திட்டம்தான். ஆனால், அந்தத் திட்டத்திலே முன்பணம் செலுத்தியவர்களுக்கு இப்போதுவரை உரிய நிதி கிடைக்கவில்லை. காரணம் அங்கே பணம் பற்றவில்லை என்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 2000-க்கு முன்னாலே 7-வது மாதம் நமக்கு நாமே திட்டத்திலே பணம் செலுத்தினோம். இன்று வரைக்கும் அந்தக் காரியங்கள் நடைபெறாமல் இருக்கின்றன. எனவே, அதைச் சரியான முறையிலே இயக்குவதற்கு அதிகாரிகளை முடுக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

விவசாயம் பொய்த்துப் போன காரணத்தினால்தான், ஏராளமான கோழிப் பண்ணைகள் இப்போது இருந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்திலே

குறிப்பாக எங்கள் பகுதியிலேயும், நாமக்கல்லிலேயும் கோழிப் பண்ணைகள் இருக்கின்றன. இந்த மாமன்றத்திலே ஒவ்வொரு முறையும் நான் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். தயவுசெய்து இதைச் செய்து தாருங்கள். அமைச்சர் அவர்களைப் பார்க்கும்போது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. மின்கட்டணத்தைப் பொறுத்தவரை கோழிப் பண்ணைக்கு மட்டும் அந்த tariff-லே பாதியாகப் பண்ணிக் கொடுங்கள். Commercial tariff-லே போட்டிருக்கிறீர்கள். அது வேண்டாம், வீட்டு tariff-லேயும் வேண்டாம். தயவுசெய்து நீங்கள் அதைச் செய்து கொடுப்பீர்களேயானால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். அதுவும் கோழிப் பண்ணைகள் வைத்து இருப்பவர்களுடைய பாடு ரொம்ப கஷ்டம். கறிக் கோழிக்கு விலை கிடைக்காமல் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நேற்றைக்கு முன்தினம்கூட என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் அதை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, தயவுசெய்து இந்தக் கோழிப் பண்ணைகளுக்கு இதனை நீங்கள் கொஞ்சம் மாற்றிவிட்டு, domestic tariff என்பதும் இல்லாமல், commercial tariff என்பதும் இல்லாமல் நடுநிலையாக நீங்கள் நிர்ணயம் செய்துதர வேண்டும். மற்ற மாநிலங்களில் அப்படிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சரிடத்தில் பலமுறை சொன்னேன். அவர்கள் அதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால், என்ன காரணத்தாலோ அது தட்டிப் போய்க் கொண்டிருக்கிறது. தயவுசெய்து கோழிப் பண்ணைகளுக்கு அவ்வாறு நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எங்களுடைய பகுதியிலே ஏரிகள் இல்லை. குட்டைகள் தூர்வார கொஞ்சம் பணம் கொடுத்தார்கள். திடீரென்று எனக்கு sanction செய்த குட்டையிலேகூட கொஞ்சம் நிறுத்தியிருக்கிறார்கள். அந்தக் கிராமங்களிலே மற்ற பெரிய, பெரிய ஏரிகளைத் தூர் வாருவதற்கு sanction செய்திருக்கிறார்கள். பழைய குட்டைகளைத் தூர் வாருவதற்காகவாவது கொஞ்சம் sanction செய்தால் சரியாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

அமைச்சர் அவர்கள் பெரிய மனது பண்ணி எங்கள் தொகுதியிலே விளைகின்ற அழுகும் பொருளான வெங்காயத்திற்குக் குளிர்பதனக் கிடங்கு கொடுப்போம் என்று சொன்னார்கள். நான் ரொம்ப மகிழ்ச்சியடைகிறேன். அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. தயவுசெய்து, இந்த ஆண்டு அதை ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் நீண்டகாலமாக ஒவ்வொரு முறையும் எங்களுடைய தொகுதியிலே, 15 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி



வேண்டுமென்று கேட்டேன். அது அமைச்சருடைய மனதிலே இருந்தாலும், (குறுக்கீடு) ரொம்ப நன்றி. உங்கள் காலத்திலேயே அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றுதான் எனக்கொரு ஆசை. பின்னாலே நாங்கள் அதைச் செய்கிறோமோ செய்யவில்லையோ, உங்களுடைய காலத்திலேயே, உங்களால் இது வந்தது என்று நான் சொல்ல வேண்டுமென்றுதான் அதை விரும்பிக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்களே செய்து கொடுப்போம். அடுத்த ஆண்டிற்குள்ளாகச் செய்து கொடுப்போம்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** நன்றி. அடுத்து, மண்பாண்டத் தொழில் ஒரு மிகப் புராதனமான தொழில். கலைநயம் மிக்கது. நம்முடைய இதிகாச காலங்களிலேயிருந்து இருந்து வந்துள்ள இந்தத் தொழில் இன்று வர, வர ஷீணித்துப் போய்விட்டது. கிராமத்திலே இருக்கிறவர்களுக்குத்தான் அதனுடைய அருமை தெரியும். நகரத்திலே இருக்கிறவர்களுக்குத் தெரியாது. ஆகவே, அந்த மண்பாண்டத் தொழிலாளர்கள் இன்றைக்கு வாடிக்கொண்டிருக்கிற சூழ்நிலையிலே அவர்களுக்கென்று ஒரு வாரியம் அமைத்துக் கொடுத்தால் நல்லது. அதை ரொம்ப பேர் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அதைப் பண்ணவில்லை. ஆகவே, தயவுசெய்து அதற்கு ஒரு தனி வாரியம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொங்கலூர்-கோயம்புத்தூர் சாலையில், பல்லடம் வரை இருக்கிற சாலை மிக, மிகப் பழுதுபட்டுப் போய் கிடக்கிறது. ஏராளமான மணல் லாரிகள் அந்தப் பகுதியில் வருகின்றன. ஆகவே, அந்தச் சாலையை உடனடியாகப் பழுதுபார்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த இக்கட்டான நேரத்திலேகூட எனக்காக நேரத்தை ஒதுக்கிக் கொடுத்ததற்கு மீண்டும் நன்றி கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 21 ஆம் நூற்றாண்டில் இந்த 11-வது சட்டப் பேரவை நிறைவுக் கூட்டத் தொடரிலே பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த கலைஞர் அவர்களை வணங்கி, நான் என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். நடைபெறுகின்ற கலைஞருடைய ஆட்சி ஊழலற்ற ஆட்சி. குறிப்பாக

அரசியல்வாதிகளிடம் ஊழல் இல்லாத ஒரு நல்ல ஆட்சியை உருவாக்கி, சட்டம் ஒழுங்கைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, ஆட்சி நடைபெறுவதை இந்த நாட்டு மக்கள் அனைவரும் போற்றுவதை நான் பெருமையோடு இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, சாதி, மதக் கலவரங்கள் இன்று வெகுவாகக் குறைக்கப்பட்டு, இந்த நாட்டு மக்கள் மிகவும் சுமுகமான நிலையில் வாழ்கின்ற நிலையை உருவாக்கியிருக்கின்ற தலைவர் அவர்களை இந்த நாட்டு மக்கள் போற்றுகிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ரேஷன் கடைகளிலே பொருட்கள் அனைத்து மக்களுக்கும் சீராகக் கிடைக்கின்ற வாய்ப்பினை உருவாக்கி, சிறப்பாகச் செயல்படுவதை இந்த நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயப் பெருமக்கள் வாழுகின்ற இந்த நாட்டில் விவசாயிகளுக்குப் பல நல்ல, நல்ல திட்டங்களை எல்லாம் உருவாக்கி, அந்தத் திட்டங்கள் எல்லாம் விவசாயிகள் அனுபவித்து, பாராட்டுகின்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, இலவச மின்சாரம் எந்தக் காலத்தை எடுத்துக் கொண்டாலும் விவசாயப் பெருமக்கள் மிகப் பெருமையாகப் பேசிப் பாராட்டுவதற்கு ஒரு பெரிய எடுத்துக்காட்டாகும். விவசாயக் குடும்பங்களில் தாய்மார்கள், கழுத்திலே, மூக்கிலே உள்ள நகைகளை எல்லாம் வைத்து, மாதா மாதம் மின் கட்டணத்தைக் கட்டுவதற்கு கஷ்டப்பட்ட காலங்கள் மாறி, இன்று அந்த விவசாயிகள் எல்லாம் அந்தக் கவலையே இல்லாமல், எப்போது வேண்டுமானாலும் பம்ப்செட்டை 'on' செய்துவிட்டு மின்சாரம் வருகின்ற போதெல்லாம் அது ஓடுகின்ற நிலையும், அதுவாக நிற்கின்ற போதெல்லாம் நிற்கின்ற நிலையும் இருப்பதை அவர்கள் வெகுவாகப் பாராட்டுகிறார்கள் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

முற்பகல் 11-05

அதேபோன்று, நெல் அதிகமாக விளைந்திருக்கின்ற இந்தக் காலத்தில் குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாய் மானியமாகக் கொடுத்து ஆங்காங்கே அரசு கொள்முதல் செய்வதை இந்த விவசாயப் பெருமக்கள் பெரிதும் பாராட்டி மகிழ்கின்றார்கள். ஆனால், இங்கே எதிர்கட்சியிலே இருக்கின்றவர்கள் பேசுகின்றபோது சென்ற தேர்தலிலே வெங்காயம் விலை



ஏறிவிட்டது என்று அதைச் சொல்லி நாடாளுமன்றத் தேர்தலிலே வாக்குகளைக் கேட்டார்கள். அதைக் குறைக்க இந்த அரசு முன்வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால், வரப்போகின்ற இந்தத் தேர்தலிலே வெங்காய விலை வீழ்ச்சியடைந்துவிட்டது; விவசாயிகளெல்லாம் நிலத்திலிருந்தே வெட்டியெடுக்க முடியாமல், வெட்டியெடுப்பதற்கான அந்தக் கூலிகூட வரவில்லை என்பதனால் வெங்காயமெல்லாம் அழுகுகிறது என்று சொல்கிறார்கள். இப்படி வெங்காயத்தை வைத்து அரசியல் பேசுகின்ற அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீங்கள் மனசாட்சியைத் தொட்டுப் பாருங்கள். விவசாயிகளுக்கு இந்த ஆட்சியைவிட எந்த ஆட்சி வெகுவாகச் செய்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

விவசாயிகளுக்கு கரும்புக்கு 1,000 ரூபாய் கொடுக்கவில்லை என்று ஏதோ நீங்கள் குற்றஞ்சாட்டுகிறீர்களே தவிர, அந்த விவசாயிகள் உங்களை என்ன சொல்கிறார்கள் என்பதை நீங்கள் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும். விவசாயிகளுக்கு 8.5 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு 850 ரூபாயும், எங்கள் பகுதியிலே விளைகின்ற 10.5 சதவிகிதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு Ambur Sugar Mill-லிலே ரூபாய் ஆயிரத்திற்கு மேற்பட்டு கிடைக்கிறது என்று அந்த விவசாயப் பெருமக்கள் சொல்கிறார்கள். ஆனால் ஒரேயொரு குறைபாட்டைச் சொல்கிறார்கள். உரிய நேரத்திலே கரும்பு பில்லைப் பட்டுவாடா செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அதற்கும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சிறப்பான நடவடிக்கையை எடுத்து அந்தத் தொகைகளையெல்லாம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, விவசாயிகளுக்கு நண்பனாக விளங்குகின்ற இந்த அரசை விவசாயப் பெருமக்கள் என்றென்றும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏதோ தேர்தலுக்காகவோ இந்த ஆட்சியில் இருப்பதற்காகவோ இந்தச் சாதனைகளைச் செய்யாமல், வருங்காலச் சந்ததியினரை எண்ணி, கிராமப்புறத்திலேயுள்ள மாணவர்களுக்குக்கூட கணினிக் கல்வி என்னும் கல்வியைக் கற்பிப்பதற்கு வழிவகைகளைச் செய்து தந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சி நண்பர்கள் சற்று எண்ணிப்பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களிலே உள்ள மாணவர்கள் நகர்ப்புறங்களிலே உள்ள வசதியுள்ளவர்களைப் போல அந்தக் கணினிக் கல்வியைக் கற்க முடியுமா? ஆனால், கிராமப்புற பள்ளிகளிலேயே பிளஸ் 2 வரையிலும் அந்த அனைத்துக் கிராமப்புற மாணவர்களும்

கம்ப்யூட்டர் கல்வியைக் கற்பதற்காக தமிழக முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிற திட்டத்தை அந்த கிராமப்புறங்களிலேயுள்ள ஏழையெளிய மக்களெல்லாம் பாராட்டி, கலைஞர் அவர்களைப் போற்றுகிறார்கள் என்பதை உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, விவசாயிகளுக்காகப் பொதுப் பணித் துறையின் சார்பாக சோழ மன்னர்கள் காலத்தைப் போல, ஏரிகள் அமைப்பது, புதிய புதிய அணைகள் கட்டுவது, ஏரிகள் தூர் வாருவது, ஆற்றுக் கால்வாய்களைச் சீரமைப்பது, ஏரிக் கால்வாய்களைச் சீர்செய்வது போன்ற அனைத்துப் பணிகளையும் செய்து கிராம மக்களுடைய, விவசாயிகளுடைய நலனுக்காகவே இந்த அரசு செயல்படுவதை மக்கள் பெரிதும் பாராட்டிப் போற்றுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்றுதான் உள்ளாட்சித் துறையின் மூலமாக இன்று சட்டமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், அது எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, தலை நிமிர்ந்து தொகுதியிலே மக்களைச் சந்திக்கின்ற நிலையை உருவாக்கித் தந்திருப்பதற்குக் காரணம், உள்ளாட்சித் துறைதான் என்பதை மனச்சாட்சியுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். காரணம், எங்கு சென்றாலும் உள்ளாட்சித் துறையின் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர், கிராமப்புறங்களில்கூட சிமெண்ட் சாலைகள், தார்ச் சாலைகள், கிராமப்புற இணைப்புச் சாலைகள், மின்சார வசதிகள் போன்ற அனைத்து அடிப்படையான வசதிகளையும் செய்து, இன்று சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் கேட்காதபோதுகூட, பல பணிகள் உள்ளாட்சித் துறையின் மூலமாக அந்தந்த தொகுதி மக்களுக்குக் கிடைத்ததை எண்ணி கிராம மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். நடைபெறாமல் இருந்த உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, உள்ளாட்சித் துறையின் மூலமாக அனைத்து கிராமப்புற மக்களுக்கும் நகர்ப்புற மக்களுக்கும் அடிப்படையான வசதிகளை நிறைவேற்றித் தந்திருப்பது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசுதான் என மக்கள் பெரிதும் போற்றி மகிழ்கின்றனர்.

அதேபோன்றுதான் 'வருமுன் காப்போம்' திட்டம். இந்தத் திட்டத்தை நீங்கள் சற்று எண்ணிப்பார்க்க வேண்டுமென்று நான் இந்த நாட்டு மக்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். வசதியுள்ளவர்களும், வாய்ப்புள்ளவர்களும், தங்களுடைய உடலை முழுமையாகப் பரிசோதித்து நோய்கள் பற்றிக் கண்டறிந்து மருத்துவம் பெறுகின்ற இந்தக்



காலகட்டங்களில் கிராமப்புறங்களிலுள்ள மக்கள், ஏதோ தலைவலி, ஜுரம் என்றால்கூட மருத்துவமனைக்குச் செல்ல முடியாமல் அவர்களாகவே ஏதோ செய்துகொண்டு, வைத்தியம் செய்துகொள்வதைத் தவிர்த்து வருகிறார்கள். ரூபாய் 1,000-லிருந்து 3,000 வரையிலும் செலவு செய்தால்கூடக் கிடைக்காத மருத்துவ வசதிகளை எல்லாம் அனைத்து முகாம்களின் மூலமாக, வருமுன் காப்போம் திட்டம் மூலமாக, அனைத்து கிராம மக்களும் தங்கள் உடல்களைப் பரிசோதித்து அந்த அட்டையிலே குறிப்பை எடுத்துக் கொண்டு, தங்கள் வியாதிகளுக்குச் சிகிச்சை பெறுகின்ற அளவுக்கு ஒரு நிலையை இந்த அரசு உருவாக்கித் தந்திருக்கிறது. பெற்ற குழந்தைகளுக்கும், பெற்றெடுத்த தந்தை, தாய்மார்களுக்கும் அந்தந்தக் குடும்பங்களிலே உள்ளவர்கள் செய்ய முடியாத கடமைகளையெல்லாம்கூட, இந்தத் தமிழக அரசு மூலம் இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டுமக்கள் பெரிதும் போற்றிப் பாராட்டி மகிழ்கின்றனர் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று உழவர் சந்தை, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சமத்துவபுரம் திட்டம், நமக்கு நாமே திட்டம், மகளிர் மேம்பாட்டுத் திட்டம், இவற்றை எல்லாம் இந்த நாட்டு மக்கள் பெரிதும் போற்றி வரவேற்கிறார்கள். எனவே, இந்த ஆட்சி தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று நாட்டு மக்களே விரும்புகிறார்கள், வாழ்த்துகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-10

என்னுடைய தொகுதியின் சார்பாக ஒருசில கோரிக்கைகளை மட்டும் வைத்து நான் என் உரையை முடிக்க விரும்புகின்றேன். பொதுப் பணித் துறையின் மூலமாக கமண்டலநாக நதியின் குறுக்கே பையூர், இரும்பேடு கால்வாய்களுக்கிடையே ஒரு தடுப்புச் சுவரைக் கட்டி, அந்தத் தடுப்புச் சுவரின் மூலமாக சுமார் 25 ஏரிகளில் நீர் நிரம்புகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டும். அதேபோன்று, சம்புவராயநல்லூரிலே, அதற்கு அருகிலே ஒரு தடுப்புச் சுவரைக் கட்டி, அங்கேயுள்ள 20 ஏரிகள் நிரம்புகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டும். அதேபோல குன்னத்தூர் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று மின் வாரியத்தின் மூலமாக 2 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக பணிகள் எடுக்கப்பட இருக்கின்றன. பையூர், குன்னத்தூர்

ஆகிய இடங்களில் அந்தத் துணை மின்நிலையங்களை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய இந்திய அரசியலிலே மிகப்பெரிய சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கும் பாட்டாளி மக்கள் கட்சி அதன் தன்மானத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள் மறுக்க முடியாத வலிமைமிக்க ஒரு சக்தியாக இன்று தமிழகத்தில் விளங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பது உலகறிந்த உண்மை. ஒவ்வொரு பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டனும் தாயாகவும், தந்தையாகவும் தன்னுடைய தலைவனை எண்ணிக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, வரக்கூடிய பொதுத் தேர்தலிலே பாட்டாளி மக்கள் கட்சி எந்தக் கட்சியோடு இணைகிறதோ அந்தக் கட்சிதான் இந்த நாட்டை ஆளமுடியும் என்று 3 வயது சிறுவன் முதல் 90 வயது கிழவன் வரை பேசக்கூடிய ஒரு மாபெரும் இயக்கமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இன்று துளிர்விட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்த இயக்கம் கிராமங்களிலே வேராகவும், விழுதாகவும் அகன்று, விரிந்து பரவிக் கொண்டிருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சி இன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய 234 தொகுதிகளில் 233 தொகுதிகளில் மகாநாட்டை நடத்தி தன்னுடைய பலத்தை நிரூபித்திருக்கிறது. அந்தந்தப் பகுதிகளுடைய பிரச்சினைகளைப் பல்வேறு தீர்மானங்கள் மூலமாக இந்த அரசுக்கு நாங்கள் எடுத்து வைத்திருக்கிறோம். கிராமத்திலே தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்வார்கள். அதேபோல தைலாபுரம் தோட்டத்திற்குச் சென்றால் நிச்சயமாக வழி பிறக்கும். பாட்டாளி மக்கள் கட்சியோடு கூட்டணி அமைக்கக்கூடிய கட்சிதான் வெற்றிக் கூட்டணி என்ற அறிவிப்போடு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் பேசத் தொடங்குகிறேன்.

முற்பகல் 11-15

முதலிலே எடப்பாடியினுடைய பிரச்சினையைச் சொல்லிவிடுகின்றேன். ஏனென்றால் மாவீரன் வீரப்பனை எடுத்தால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. எனக்குத் தெரியும். ஆகையினால், எடப்பாடியிலே இன்றைய மிக முக்கியப் பிரச்சினை பவர் லூம் பிரச்சினை. நூல் என்பது புத்தகத்தையும் குறிக்கும். அதைப் படித்தால் அறிவு வளரும். அதேபோல



நூல் என்பது மனிதனுடைய மானத்தையும் காக்கக்கூடியது. அதை ஒரு காலத்திலே பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக்கனல், அறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய தோளிலே சுமந்து விற்றார். அந்த நூலினால் உற்பத்தியான கைத்தறி ஆடைகளைத் தெருத் தெருவாக விற்றது திராவிட இயக்கம். இன்றைய நூல் விலையேற்றம் என்பது சாதாரண பிரச்சினை அல்ல. எடப்பாடியிலே, எலம்பள்ளியிலே, இடநெல்சாலையிலே, குமாரபாளையத்திலே, பள்ளிப்பாளையத்திலே, மற்ற பகுதிகளிலே நூல் விலை நாளுக்கு நாள் ஏறுகிறது. திருப்பூரிலும் நாளுக்கு நாள் நூல் விலை ஏறுகிறது. இதனால் உற்பத்தி செய்யக்கூடிய அந்த உற்பத்தியாளர்கள் பெரும் கஷ்டப்படுகிறார்கள். உற்பத்தியாளர்கள் தங்களுடைய தறிகளை நிறுத்திவிட்டு, பல்வேறு போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்கள் மூலமாக இந்த அவைக்கும் அரசுக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது ஒன்றேயொன்றுதான். மனிதனுடைய மானத்தைக் காக்கக்கூடிய இந்த ஆடை உற்பத்தியாளர்களுடைய மானம் போகக்கூடிய அளவிற்கு அவர்களுடைய நிலை இன்று மிகவும் தாழ்ந்திருக்கிறது. அரசினுடைய சார்பாக அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பு எடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் தற்போது பவர்லூம் இல்லாமல் ஸ்டிரைக். விலையேற்றத்தினால்— முதலாளிகள் ஸ்டிரைக். தொழிலாளர்களுக்கு வேலை இல்லை—அவர்களுடைய குடும்பம் பசியோடும், பட்டினியோடும் இருக்கின்றது. தயவுசெய்து இதைக் களைய வேண்டும். நூல் என்றாலே சிக்கல்தான். சிக்கலை எப்படியாவது போக்க வேண்டும். சிக்கலை நீக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து நெசவுத் தொழிலாளர்களுடைய குடும்பங்களையும் காப்பாற்ற வேண்டும் என்று பணிவோடு உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, எங்களுடைய எடப்பாடி நகரத்திலே க. புதூரில் பெரியார் பெயரிலே ஒரு நகர் அமைந்து இருக்கிறது. அதிலே கிட்டத்தட்ட 200, 300 ஆண்டுகாலமாகக் குடிசை போட்டுக் குடியிருந்து வருகிறார்கள். அந்த நிலம் எடப்பாடி நகராட்சிக்கு, வட்டாட்சியர் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இங்கே குடியிருக்கிறார்கள். ஆனால் முனிசிபாலிட்டிக்கு அந்த நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். என்ன நியாயம்

இது? இதை யார் செய்திருந்தாலும், அந்த ஏழை எளியவர்கள், பாடுபடக்கூடிய அந்தத் தொழிலாளர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். தமிழக அரசு, நல்லதை மட்டும் செய்யக்கூடிய இந்த அரசு ஏன் விட்டுவிட்டது? சிந்திக்க வேண்டாமா? அந்தத் தொழிலாளர்கள் 200 ஆண்டுகாலமாக அங்கே குடியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்காமல், முனிசிபாலிட்டிக்கு அந்த நிலத்தைக் கொடுத்திருக்கிறார்களே, இது என்ன நியாயம்? இதை மாற்றி, அங்கே பெரியார் நகரிலே குடியிருக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு அந்த ஏழைகளுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்று நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நான் இங்கே பேச வேண்டியது என்னவென்றால், கூட்டுறவுத் துறை அமைச்சர் இந்த இடத்திலே இல்லை. பாவம், இந்த அவைக்குக் காது இருந்தால், அழகிரி அண்ணன்தான் சொல்ல வேண்டும். இந்த அவைக்குக் காது இருந்தால்......

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வார விழாக்கள் நாடு முழுவதும் நடைபெற வேண்டிய ஒரு நிலைமை இருப்பதன் காரணமாக சில வேலைகளைக் கவனிக்க வேண்டிய அவசியம் கூட்டுறவுத் துறை அமைச்சருக்கு இருக்கிறது. ஓர் அமைச்சர் இல்லாவிட்டாலும், இந்த அமைச்சரவையிலே உள்ள எங்கள் எல்லோருக்கும் பொறுப்பு உண்டு. இங்கே ஒரு பெரிய கூட்டுறவு இருக்கிறது. இதைப் பார்த்து திரு. கணேசன் அவர்கள் பேசலாம்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையினுடைய முன்னவரை நல்லவரை, வல்லவரை எந்த அளவிற்கு மதிக்கிறேன் என்பது என்னுடைய உள்ளத்திற்குத்தான் தெரியும். அவர் இந்தப் பெரிய திராவிட இயக்கத்தினுடைய முகக்கிய தூண். நான் அந்த இயக்கத்திலே சிறு வயதிலிருந்தே இருந்தவன் என்ற காரணத்தினால், இந்த அவையினுடைய முன்னவர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தக் கருத்துகளை அப்படியே ஏற்றுக் கொண்டாலும், என்னை நம்பி வாக்களித்தார்களே, எவ்வளவு பெரிய போராட்டத்திற்கு மத்தியிலே, எவ்வளவு பெரிய சூறாவளிக்கு மத்தியிலே என்னை நம்பி வாக்களித்தார்களே, அந்த வாக்காளர்கள், அங்கே இருக்கக்கூடிய நெசவாளப் பெருங்குடி மக்கள், அவர்களுக்கு நான் நன்றி காட்ட வேண்டாமா? இந்த அவையிலே என்னுடைய கன்னிப்



பேச்சியிலேயிருந்து ஆரம்பித்திருக்கிறேன். இந்த அவையில் இருக்கக்கூடிய நல்லவர்கள் அத்தனை பேருக்கும் தெரியும்.

முற்பகல் 11-20

கொங்கணாபுரம் என்றால் சிரிப்பார்கள். அந்த அளவிற்கு 'கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சொசைட்டியைப் பிரிக்க வேண்டும், பிரிக்க வேண்டும்' என்று எத்தனை முறை சொன்னேன்? இந்த மாவட்டத்திலே கொங்கணாபுரம் நாமக்கல்லோடு இருக்கும்போதே இதைப் பிரிக்க வேண்டும்; இதைத் தலைமையிடமாகக் கொள்ள வேண்டுமென்ற நியாயத்தை இந்த அவையிலே எடுத்து சொன்னேன். மறைந்த உத்தமர், கூட்டுறவுத் துறை அமைச்சர் தங்கபாண்டியன் அவர்கள் 46 ஆயிரம் உறுப்பினர் கொண்ட அந்த கொங்கணாபுரம் நிச்சயமாக உடனடியாகத் தலைமையிடமாக மாற்றப்படும் என்று இந்த அவையிலே உத்தரவாதம் கொடுத்தார்கள். 23-8-1996-ல் குறித்துக் கொள்ளவும். தவறாக இருந்தால் பதில் சொல்ல உதவியாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். 23-8-1996-ல், மறைந்த முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே. தங்கபாண்டியன் அவர்கள் நல்ல உள்ளம் படைத்தவர்கள். 46 ஆயிரம் உறுப்பினர்கள் கொண்ட அந்த இடத்திலே கிட்டத்தட்ட 194 ரேஷன் கடைகள் இருக்கின்றன: அதிலே பல மாநிலங்கள், ஆறேழு மாநிலங்கள், கர்நாடகம், கேரளா, ஆந்திரா, மற்ற மாநிலங்களிலிருந்தெல்லாம் பருத்தி கொண்டு வந்து குவிக்கிறார்கள். மழை தூறி விட்டது என்றால் 2 கிலோ, 5 கிலோ என்று கழிக்கிறார்கள். இதில் அந்த விவசாயிகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் சிக்கல். இதைத் தீர்க்க திருச்செங்கோடு செல்ல வேண்டும். இது நியாயமா? 1 கோடி அல்ல, 2 கோடி அல்ல. தலைவரவர்களே, 100 கோடி ரூபாய்க்கு ஆண்டொன்றுக்கு விற்பனையாகிறது. பெரிய மாவட்டங்களையெல்லாம் பிரிக்கிறோம். பெரிய தாலுக்காவையெல்லாம் பிரிக்கிறோம். ஆனால் இந்தக் கூட்டுறவு சொசைட்டி மட்டும் பிரிக்கப்படாத காரணம் என்ன? இந்த சிதம்பர இரகசியம் என்ன, சொல்ல வேண்டும். நான் சொல்வது தவறா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** நீங்கள் தண்ணீர் குடித்துக் கொள்ள வேண்டும் முதலில். (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் தங்கபாண்டியன் அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் திருச்செங்கோடு விற்பனை சங்கத்தைப் பிரித்துக் கொங்கணாபுரத்திற்குத் தனியாகவும், திருச்செங்கோட்டிற்குத் தனியாக வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள்

தெரிவித்தார்கள். அப்படியொரு சங்கத்தை இரண்டாகப் பிரிக்கின்றபொழுது, கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற சங்கடங்களெல்லாம் என்னவென்றால், General Body-யைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்றித் தர வேண்டும்; ஒன்று அப்படி நிறைவேற்றி வருகின்றபொழுது சாதாரண சங்கமாக இருந்தால் 1 கோடி ரூபாய், 2 கோடி ரூபாய்க்குள், சொத்துக்கள் இருக்கின்ற சங்கமாக இருந்தால், உடனடியாகப் பிரித்து நாம் வழங்க இயலும்.

ஆனால், இது பெரிய சொத்துள்ள, தமிழ்நாட்டிலே சிறந்த முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற கூட்டுறவுச் சங்கம், விற்பனைச் சங்கம். இந்தச் சங்கத்தைப் பிரிக்க வேண்டுமென்கிறபொழுது, கொங்கணாபுரத்திலும் அதற்குச் சொத்துக்கள் இருக்கின்றன; திருச்செங்கோட்டிலும் சொத்துக்கள் இருக்கின்றன. யாருக்கு என்னவென்பதை ஒரு தனி அதிகாரி மூலம் பிரிக்கலாம் என்று தனி அதிகாரி நியமிக்கலாம் என்று கருதப்பட்டது. அப்படிக் கருதப்படுகின்ற நேரத்தில், நமது மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் ஒரு மனுவைக் கொடுத்தார்கள். அந்த மனுவைக் கொடுத்தவுடன், கணேசன் விருப்பப்படி அந்தச் சங்கத்தைப் பிரித்துக் கொடுத்து விடுங்கள் என்று முதலமைச்சரவர்கள் சொல்லி விட்டார்கள். பிரிப்பதற்குப் போகின்றபொழுது நாம் பிரித்து ஒரு ஆர்டர் தருவோமானால் அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் செல்வதாகச் திருச்செங்கோட்டில் இருக்கின்றவர்கள் சொல்ல, சரி, இதற்கு என்ன செய்வது என்று அதிகாரிகள் மட்டத்திலே யோசனை செய்து, ஏன் இதை ஒரு இணையமாக மாற்றி விடக்கூடாது; இணையமாக மாற்றி விட்டால், கொங்கணாபுரத்திலும் புதிய சங்கம் தொடங்கலாம்; அங்கேயிருக்கிற சொத்துகளிலும் அவர்களுக்குப் பங்கு இருக்கும்; தனிப்பட்ட முறையிலே அவர்களும் செயல்படுவதற்கு ஒரு வாய்ப்பிருக்கும் என்று கருதித்தான் இப்பொழுது இணையமாக மாற்றப்பட்டிருக்கிறது. இணையமாக மாற்றப்பட்டு, அரசு ஆணை வழங்கப்பட்டு இருக்கிறது. இதிலே மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள், எங்களுக்கு அதிலே பங்கு பெற விருப்பம் இல்லை; விருப்பம் இல்லாத காரணத்தால் எங்களுக்குப் பிரித்துத் தர வேண்டுமென்று மீண்டும் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் அது பற்றி அதிகாரிகள் மட்டத்திலே அமர்ந்து பேசி, பிரித்துக் கொடுப்பதற்குரிய முயற்சியை நிச்சயமாக நாங்கள் எடுக்கிறோம். நீதிமன்றம் செல்வார்களென்றால் அதை கணேசன் அவர்களும், அந்த சங்கங்களும் அதைப் பார்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, எங்களைப் பொறுத்த அளவில் நாங்கள் பிரித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.



முற்பகல் 11-25

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இன்று அல்ல, நேற்றல்ல, ஐந்தாண்டு காலமாக இதையேதான் சொல்கிறார்கள்—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரோ அல்லது நமது அரசாங்கமோ ஒரு சங்கத்தைத் திடீர் என்று நினைத்துப் பிரித்துவிட முடியாது. குறிப்பாக ஏழு மாவட்டங்களில் மத்திய கூட்டுறவு வங்கிகள் பிரிக்கப்பட வேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட மூன்றாண்டுகளாக அந்த முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சொத்தைப் பிரிக்க வேண்டும். அதை நிர்ணயம் செய்ய வேண்டும். யார், யார், எந்த எந்தப்பக்கம் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் நிர்ணயம் செய்துதான் பிரிக்கவேண்டுமே தவிர, ஒரே அரசாணையின் மூலம் அதைப் பிரித்துவிட வேண்டுமென்று சொல்ல இயலாது. ஏனென்றால், கூட்டுறவுச் சங்கத்தில் அரசின் பங்குத் தொகை என்பது மிக மிகக் குறைவு. பொதுமக்களுடைய பணம்தான் அதிலே இருக்கிறது; உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பெரும்பான்மையான உறுப்பினர்களுடைய கருத்தை அறிந்து செய்தால்தான் கணேசன் அவர்கள் விருப்பப்படி அதைப் பிரித்துத் தர முடியும். திடீர் என்று அரசாணை ஒன்றை வெளியிட்டுவிட்டோம் என்றால் நீதிமன்றம் சென்று ஒரு stay- தடையாணை— வாங்கிவிடுவார்களேயானால் வருடம் ஐந்தானாலும் அவர்களுக்கு அது கிடைக்காது. அது கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதில் தாமதம் இருந்தாலும் அதை நல்ல முறையிலே செய்ய வேண்டுமென்றுதான் இந்த அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு ஐ. கணேசன் அவர்களுடைய வேதனையை, வருத்தத்தை இந்த அரசாங்கம் உணர்ந்து இருக்கிறது. முதலமைச்சர் அவர்களே எப்படியும் இதைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரிடத்திலேயும் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய வேளாண்மைத் துறை

அமைச்சரிடத்திலேயும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் திருச்செங்கோடு கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவர் நம்முடைய அன்புக்குரிய தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். அங்கேயுள்ள உறுப்பினர்கள் அதைப் பிரிக்கக்கூடாது என்று அவருக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரே நேரில் சென்று திருச்செங்கோட்டிலே உள்ள தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அந்த சங்கத் தலைவரைச் சந்தித்து, முதலமைச்சர் அவர்களும் விரும்புகிறார்கள். இதைப் பிரிப்பதனாலே உங்களுக்கு எந்தவிதமான இழப்பும் இல்லை. எனவே பிரிப்பதற்கு ஒரு தீர்மானத்தைப் போட்டுத் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அங்கே இருக்கக்கூடியவர்கள், அப்படித் தீர்மானம் போடக்கூடாது, நாம் நீதிமன்றத்திற்குப் போவோம் என்று இப்போது கூட்டுறவுத் துறை அமைச்சர் சொன்னதைப் போல, அங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அவர்களிடம் பேசி, எப்படியும் தீர்மானத்தைப் பெற்றுத் தருவார்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன், தேர்தலில் வாக்காளர்களைப் போய்ச் சந்திப்பதற்கு முன்னாலே, அந்தச் சங்கம் பிரிக்கப்படுவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகி விட்டது. ஒரு நிமிடம்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய குரல்வளையைத் தயவுசெய்து நெரித்து விடாதீர்கள்; என்னுடைய மனம் தாங்காது. நான் பேச ஆரம்பித்தவுடனே முதலிலேயே சொல்லிவிட்டேன். நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், தேர்தலுக்கு முன்னாலே எப்படியும் இந்தச் சங்கம் பிரிக்கப்படும் என்ற அரசின் உத்தரவாதத்தை அளித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றி. இருப்பினும் ஏன் இதை வலியுறுத்துகிறேன் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லி சென்றிருந்தபோது, இதே ஆளுநர் உரைக்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் 26-4-1997-ல் முதலமைச்சர் அவர்களின் சார்பாக இதே பேரவையில் பதில் சொல்லியிருந்தார்கள். எப்படியும் நடந்தது நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இதிலே இன்னொன்று, கொங்கணாபுரம் பண்டகசாலை 17 உறுப்பினர்களைக் கொண்டது. தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும்.



அந்தப் பண்டகசாலையை கொங்கணாபுரம் டி.சி.எம்.எஸ். எடுத்துக் கொண்டு விட்டது. ஆமாம்; எடுத்துக் கொண்டுவிட்டது. ஆனால் 17 பேரில் 14 பேருக்குத்தான் வேலை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். மீதி 3 பேர்கள் மிக மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஏழைகள். அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. வேலை கிடைக்காமல் இரண்டாண்டுக் காலமாக அந்தக் குடும்பங்கள் எவ்வளவு அவதியுறுகின்றன என்று இந்த அவையிலே நான் பலமுறை எடுத்துச் சொன்னேன். எங்களுடைய மாவட்டத்தில் அமைச்சர் மக்கள் மன்றத்திலேயும் என்னிடத்திலேயும் நிச்சயமாக அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்று சொல்லி வந்தார். அப்படியிருந்தும் இதுவரை வேலை கொடுக்கப்படவில்லை என்ற வேதனையை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடம். அதேபோல்...

முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பண்டகசாலை நட்டத்திலே நடைபெற்ற காரணத்தாலே கலைக்கப்பட்டது. அதிலே சில பேர்களுக்குப் பணி கொடுத்துவிட்டார்கள். மற்ற மூன்று பேர்களுக்குப் பணி தரவில்லை. இதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னிடத்திலும் சொன்னார்கள்; கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் எடுத்துச் சொன்னார்கள். சொன்னவுடனே. திருச்செங்கோடு விற்பனைச் சங்கத்திற்கு எடுத்துச் சொல்லி, அந்தப் பணியாளர்களுக்கு நீங்கள் வேலை கொடுங்கள் என்று கேட்டோம். அவர்கள், பண்டகசாலை நட்டத்திலே நடைபெற்று, பணி நீக்கம் செய்யப்பட்ட அந்தப் பணியாளர்களில் தேவையான பணியாளர்களை எடுத்துக் கொண்டோம், மற்றவர்களுக்கு வேலை தரமுடியாது என்றார்கள். அது அவ்வளவு ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தல்ல. அவர்களுக்கும் பணி கொடுத்துவிட வேண்டும். தீர்மானம் போடுங்கள் என்று கேட்டோம். பிறகு நான் சொன்னதன்பேரில் தீர்மானம் போட்டு, பதிவாளருடைய அனுமதிக்காக அனுப்பியிருக்கிறார்கள். அந்தப் பணியாளர்களை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம், பதிவாளர் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பதிவாளரிடத்திலேயிருந்து அனுமதி வந்தும், அவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தினுடைய அமைச்சர் அந்த மூன்று பேர்களுக்கும் நிச்சயமாக வேலை கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார். அதற்காக, அவருக்கும், இந்த அரசுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) திரு. பழனிசாமி பேசி, எதிர்க்கட்சித் தலைவர் பேசி, பிறகு பதிலுரை அளிக்க வேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** எல்லாவற்றையும் மூடி வைத்து விட்டேன். சொசைட்டி பற்றி மட்டும் ஒரு கருத்து சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கு ஒரு மணி நேரம் ஆகும்.

**திரு. ஐ. கணேசன்:** சொசைட்டி பற்றி மட்டும் ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை. அனுமதிக்க முடியாது.

**திரு. ஐ. கணேசன்:** சரி, அதைக்கூட விட்டுவிடுகிறேன். எடப்பாடி தொகுதியிலே, கிராமப் பகுதிகளிலே—ஏற்கெனவே நெடுஞ்சாலைத் துறை அமைச்சருக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் புத்தகமாகவே அச்சடித்துக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) ஏற்கெனவே, உள்ளாட்சித் துறைக்குக் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கல்ல. அந்தத் துறைகளுக்கு, அந்தத் துறை அமைச்சர்களுக்கு— உள்ளாட்சித் துறை அமைச்சர், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் ஆகிய அமைச்சர்களுக்கு, புத்தகமாக அச்சடித்துக் கொடுத்திருந்தேன். எடப்பாடி தொகுதியிலே, கிராமப்புறங்களிலே ரோடு மிக மிக மோசம். அந்த அதிகாரியே எழுதிக் கொடுத்ததைக் கொண்டு வந்திருக்கிறேன். இதைத்தான் நான் அவர்களுக்குக் கொடுத்திருந்தேன்.

(உறுப்பினர் புத்தகம் ஒன்றைப் பேரவையில் காண்பித்தார்)

எடப்பாடி-தாராபுரம் சாலையிலிருந்து கச்சிப்பள்ளி-புதுப்பாளையம் செல்லும் சாலை நடக்க முடியாத அளவுக்கு இருக்கிறது. அதேபோல, கச்சிப்பள்ளி-புதுப்பாளையம்-பணிக்கனூர் சாலை மிக மிக மோசம். (குறுக்கீடு) சாதாரண விஷயம் இல்லை. ஊருக்குள்ளே போக முடியாது.



அதேபோல, செவண்டாபுரம் சாலை, அடுத்து, வேம்பனேரி சாலை. இன்னும் பல்வேறு சாலைகள் இருக்கின்றன. இதை இந்த அரசினுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன் என்று, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சந்தனம் என்றாலே எட்டுத் திக்கும் மணக்கும். மீண்டும் சொல்கிறேன். சந்தனம் என்றாலே எட்டுத் திக்கும் மணக்கும். அதைப்போல இன்று நாடு பூராவும் பேசப்படக்கூடியது ஒன்றே ஒன்றுதான். மாவீரன் வீரப்பனைப் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) நேரமாகிவிட்டது, அனுமதிக்கமுடியாது.

**திரு. ஐ. கணேசன்:** ஒரே ஒரு கருத்து. சத்தியமங்கலத்துக்காரன் சத்தியத்தை நிறைவேற்றியிருக்கிறான்; கன்னட நடிகரை விடுதலை செய்திருக்கிறான்; அவனைத் தேவையில்லாமல் இங்கே பிரச்சினையாக்குவது நன்றாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஐ. கணேசன்:** ஒரே ஒரு கருத்து சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 22 நிமிடங்கள் ஆகிவிட்டன. திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் பேசவில்லை என்றால், நான் எதிர்கட்சித் தலைவரைப் பேச அழைத்து விடுவேன்.

**திரு. ஐ. கணேசன்:** வேறு ஒன்றும் இல்லை. நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையேதான் 10 நிமிடங்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். சரி, சொல்லி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலில் பா.ம.க. இருக்கும் அணி, வெற்றிக் கூட்டணி என்பதை மீண்டும் சொல்லி, இதை இரண்டு முறை நிரூபித்திருக்கிறோம் நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் என்று நான் சொல்லிக் கொண்டு, இந்த அளவுக்கு வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு, ஐயா, நன்றி.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு Clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் கணேசன் அவர்கள் பா.ம.க. இருக்கும் அணி, வெற்றிக் கூட்டணி என்று இரண்டு முறை சொன்னார்கள். இப்போது எந்தக் கூட்டணியிலே இருக்கிறார் என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** பொறுத்திருங்கள். உண்மை புரியும். நாங்கள் எப்போதும் ஒரே நிலையில்தான் இருக்கிறோம். அதிலே மாற்றம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளுநர் உரைக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. திரு. சுதர்சனம், நீங்கள் உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி.

முற்பகல் 11-35

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகச் சில கருத்துகளைச் சொல்ல நான் விரும்புகிறேன். பொதுவாக ஆளுகிற கட்சியினுடைய அடுத்த ஆண்டுக்கான திட்டங்களை கவர்னரின் மூலமாகக் கொள்கை அளவிலே சொல்லக்கூடியதுதான் ஆளுநர் உரை. ஆனால் இந்த ஆளுநர் . உரை என்பது நேருக்கு மாறாகவே அமைந்திருக்கிறது. எதிர்காலத் திட்டங்களை நாட்டு மக்களுக்குக் கொடுக்கின்ற வாக்குறுதிகள் என்று இல்லாமல் ஒரு கவர்னர் உரையை இந்த மாமன்றத்திலே என்னால் பார்க்க முடிகிறது. இது அநேகமாகத் தேவையில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும் பார்த்துக் கேட்கிறேன், ஆளுநர் உரையைப் படிக்கக்கூடிய நிகழ்த்தக்கூடிய, இந்தச் சபையில் நிதிநிலை அறிக்கையைக்கூட நீங்கள் படிப்பதற்கு வாய்ப்புகளை உருவாக்கியிருக்கலாம். அதன்மூலம் நாட்டு மக்களுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு, இந்தத் திட்டங்களைச் செய்யப் போகிறோம் என்று உங்களுக்கு தைரியம் இருந்தால் கண்டிப்பாகச் சொல்லி இருக்கமுடியும். ஆனால்...



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள், நேரடியாக அவை முன்னவரையும், முதலமைச்சரையும் பார்த்துக் கேட்கிறேன் என்று சொன்னார். கேட்ட பிறகு அதற்குப் பதில் தரவில்லை என்றால் நன்றாக இருக்காது. ஆளுநர் உரையில் எதிர்காலத் திட்டம் எல்லாம் இல்லை என்று சொன்னார். அதற்கு இரண்டு, மூன்று காரணங்கள் இருக்கின்றன. ஒரு காரணம், அது ஆளுநர் உரை; அது அடக்கமாகத்தான் வாசிக்கப்படும். இரண்டாவது காரணம். இது தேர்தல் வருகிற ஆண்டு. நிதிநிலை அறிக்கையை முழு ஆண்டுக்கு வழங்குவதற்கு உரிமை இல்லை. மூன்றாவது, ஆளுநர் உரையில் அரசியல் கட்சியினுடைய கண்ணோட்டத்திலே சொல்லப்பட வேண்டிய பல செய்திகள் அதிலே இடம் பெறுவதற்கு அவசியம் இல்லை. ஆகவே, அரசாங்க அடிப்படையில், தற்போது நடைபெற்று வருவதும், ஒரு அளவோடு சொல்லக்கூடிய கருத்துகளும் தான் இடம் பெற முடியும். இன்னும் சொல்லப்போனால், அறிஞர் அண்ணா அவர்களே ஒருமுறை ஆளுநர் உரையைப் பற்றிச் சொல்கிறபோது, ஆளுநர் உரை என்பது கோடிட்டுக் காட்டுகிற உரையாகத்தான் இருக்கும். அதற்கு மேற்பட்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று மிக விரிவாக விளக்கி இருக்கிறார்கள். இன்னும் பதில் வேண்டுமென்றால் நேரம் இருக்கிறபோது சொல்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்திலே கூடுதல் அதிகாரம் கொண்டிருக்கிற ஒரு சுயாட்சி தேவை என்று ஆளுநர் உரையிலே இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்திலே, 5 ஆண்டுகாலம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதற்குப் பின்னால், செய்திருக்கிற பல்வேறு நலத் திட்டங்கள் மட்டுமே இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனால், மத்தியிலே இன்றைய தினத்திலே 24 கட்சிகள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற பாரதிய ஜனதா கட்சிக் கூட்டணியிலே அங்கம் பெற்றிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம், மத்தியிலே கொண்டு வந்திருக்கிற மக்கள் விரோதத் திட்டங்களைத் தட்டிக் கழிக்கிற வகையில் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற பாரதிய ஜனதா கட்சி மக்களைப் பாதிக்கக்கூடிய பல்வேறு விலைவாசி உயர்வுகளை இப்போது தந்து இருக்கிறது. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால், பெட்ரோல் விலை உயர்ந்து இருக்கிறது; மண்ணெண்ணெய் விலை உயர்ந்து இருக்கிறது; டீசல் விலை உயர்ந்து

இருக்கிறது; விவசாயிகள் பிரதானமாகப் பயன்படுத்தக்கூடிய யூரியா விலை உயர்ந்து இருக்கிறது. ஏன்? அரை நூற்றாண்டுகளாக இல்லாத வகையில், மத்திய அரசினால், இன்றைக்கு விலைவாசிகள் இந்தியாவிலே உயர்ந்து இருக்கின்றன. இங்கே மாநில அரசாக இருக்கக்கூடிய, பிரதானமாக அங்கம் வகிக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு இதுசம்பந்தமாக என்ன கருத்துகளைக் கூற விழைகிறது, தமிழ்நாட்டு மக்களுக்கு? ஆந்திராவிலே முதலமைச்சராக இருக்கிற சந்திரபாபு நாயுடு, மத்திய அமைச்சரவையிலே பங்கு பெற்றிருக்கிற இரயில்வே அமைச்சர் மம்தா பானர்ஜி போன்றவர்கள்கூட தைரியமாக, உங்கள் அமைச்சரவையிலிருந்து நாங்கள் விலகுவோம். விலைகளைக் குறைக்க வேண்டுமென்று, கண்டித்துக் கேட்கிறபோது, கண்டிக்கிறபோது, மாநில அரசாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன காரணத்தால் கேட்க முடியவில்லை? பயம் உங்களுக்கு ஏன் வந்திருக்கிறது என்பதை நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, இப்போது மத்தியிலே இருக்கிற ஒரு மத்திய அமைச்சர், டீசல் விலையைக் குறைக்க வேண்டும். இரயில்வே கட்டணத்தைக் குறைக்க வேண்டும், இல்லையென்றால் மத்திய அமைச்சரவையிலிருந்து நான் விலகுவேன் என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்? பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன் என்று சொல்கிறார். ஒரு தடவை, இரண்டு தடவை அல்ல. சேலம் உருக்காலை தனியார் மயமாக்கம், கடிதம் எழுதியிருக்கிறேன்; டீசல் விலை உயர்வுக்குக் கடிதம் எழுதி இருக்கிறேன். மண்ணெண்ணெய் விலைக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். இப்படி அத்தியாவசியமான பொருட்களின் விலையை உயர்த்துகிறபோது மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்களே தவிர, இந்த மாநில அரசை மதித்து...

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் ஆந்திர முதலமைச்சரையும், மம்தா பானர்ஜியையும் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, அவர்களெல்லாம் வெளிப்படையாக எதிர்த்தார்கள். நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். அவர்கள் எதிர்த்த காரணத்தாலே அந்த விலையைக் குறைத்துவிட்டார்களா? ஆனால் நாங்கள் கடிதம் எழுதிய காரணத்தால்



அவர்கள் குறைக்காவிட்டாலும், நாங்கள் குறைத்திருக்கிறோம். இது ஒன்று. இரண்டாவது, திராவிட முன்னேற்றக் கழகம் என்பது விளம்பரத்திற்காக எதையும் செய்து கொண்டிருப்பதில்லை. அன்னை இந்திரா காந்தி அவர்கள் கடற்கரையில் பேசும்போது ஒருமுறை சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தாலும், ஆதரித்தாலும் உறுதியாக இருக்கும் என்று. எனவேதான், அடிக்கடி மத்திய அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்துவது, அறிவிப்புச் செய்வது என்பதெல்லாம் தேவையில்லை என்று முதலமைச்சர் கருதுகிறார்; இந்த அரசும் கருதுகிறது. பேசியே பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று நம்புகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலையைக் குறைக்கவில்லையென்றால் கேட்க வேண்டிய அவசியம் உங்களிடத்திலும் இருக்கிறது; எங்களிடத்திலும் இருக்கிறது. நான் அதைத் தட்டிக் கழிக்க விரும்பவில்லை. ஆனால், பல தடவை மாநில முதலமைச்சர் பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்கு, இந்த மாநில அரசை மதித்து பாரதப் பிரதமர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறாரா? அல்லது பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறாரா? அது ஏதோ பண்ணையார் வீடு போலவும், மாநில அரசுகள் பண்ணையாருடைய மாட்டுக் கொட்டகைகள் போலவும் மத்திய அரசினர் நடந்து கொண்டிருக்கிறார்கள். எதையாவது உங்களைக் கலந்தார்களா? விலைவாசியை உயர்த்துவதற்கு உங்களைக் கலந்து மத்திய அரசு நடவடிக்கை எடுத்ததா? அந்தக் கூட்டணியில் அங்கம் பெற்றிருக்கிற கட்சியினர் என்ன சொல்கிறார்கள்? விலைவாசியை உயர்த்தும்போது கூட்டணிக் கட்சிகளைக் கலந்து ஆலோசிக்கவில்லையே என்று அவர்களெல்லாம் சொல்கிறபோது, நீங்கள் வாய் மூடி மௌனமாக இருக்க வேண்டிய அவசியம் என்ன வந்திருக்கிறது என்பதுதான் என்னுடைய கேள்வி.

அதேபோன்று இன்னொன்றை எடுத்துக்கொண்டால், தமிழகத்தில் விவசாயிகளுக்கு விரோதமான ஒரு ஆட்சியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நாலரை ஆண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது நான் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் விவசாயிகள் பட்டு இருக்கிற...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள், நாலரை ஆண்டு காலமாக விவசாயிகளுக்கு விரோதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். முதல் இரண்டரை ஆண்டுகாலம் இது எப்படி

பழனிசாமிக்குத் தெரியாமல் போனது? அது பழனிசாமிக்குத் தெரிந்திருந்தால்தானே எங்களுக்குத் தெரியும்.

**திரு. ஜி. பழனிசாமி:** திராவிட முன்னேற்றக் கழகம் சேராத இடத்தில் சேர்ந்ததன் விளைவாக இந்த விபரீதங்கள் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றன. அதுதான் உண்மை. வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த நாலரை ஆண்டுகளாக மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள், வேளாண்மை சம்பந்தமாக அவர் ரொம்ப தெரிந்திருக்கக் கூடியவர் என்ற காரணத்தால், அதுவும் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்தால், நிரம்பப் பாராட்டிப் பேசியிருக்கிறார். இப்பொழுது அணி மாறி, பிணியாகி இருக்கிறார். (சிரிப்பு)

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னதைப் போன்று முதலில் கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டுகளாக இதைப் பற்றி எதையும் சொல்லவில்லையே, இப்போது நாலரை ஆண்டுகள் என்று சொல்கிறார்களே என்ன காரணம் என்று புரியவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** நேரம் இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தேயிலைக்கு விலை இல்லை; தேங்காய்க்கு விலை இல்லை; ஏன் மஞ்சளுக்கு விலை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்களாலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இன்றைக்குத் தென் மாவட்டங்கள் என எடுத்துக்கொண்டால்கூட கரிசல் மண் உள்ள இடத்தில் பெண்கள் தொழிலில் பிரதானமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பது தீப்பெட்டித் தொழில் மற்றும் பீடித் தொழில். இறக்குமதிக் கொள்கையால் மிகப்பெரிய அளவிற்கு இத்தொழில்கள் பாதிக்கப்பட்டு, அவர்கள் கைக்குழந்தைகளோடு வீதியிலே கையேந்திட வேண்டிய அவசியம் வந்திருக்கிறது. இதைக்கூட மாநில அரசு எப்படி மூடி மறைக்க முடியும்? இன்றைக்குப் பிரதானமான மத்திய அரசினுடைய கொள்கையால் மிகப் பெரிய பாதிப்புகள் வந்திருக்கின்றன.

தற்போது விலைவாசிக் குறைப்புக்காக உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிக்கிறது. ஆனால் உயர்மட்டக் குழுவால் விலைவாசி எந்த அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது? சொல்ல முடியுமா? ஒரு நல்ல நோக்கத்தோடுகூட உருவாக்கப்பட்டிருக்கலாம். ஆனால், எந்தவொரு விலைவாசியையும் கட்டுப்படுத்த முடியாத ஒரு குழுவாக உயர் மட்டக் குழு இருக்கிறது. ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது வருடத்திற்கு



ஒரு தடவையாவது அந்த உயர்மட்டக் குழு கூடி, என்னென்ன விலைகள் ஏறியிருக்கின்றன, எந்தத் தேதியிலிருந்து எந்த விலைகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன, இறக்கப்பட்டிருக்கின்றன அல்லது சீராக இருக்கின்றன என்றாவது சொல்ல முடியுமா? ரேஷன் அரிசியை மட்டும் சொல்லலாம். ரேஷன் பொருளை மட்டும் சொல்லலாம். வேறு எதையும் சொல்லவே முடியாது. விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடுமா என்று. வாரந்தோறும் வெள்ளிக்கிழமை காலையில் தலைமைச் செயலாளர் தலைமையில், உணவுத் துறைச் செயலாளர், உணவுத் துறை ஆணையர் மற்றும் விவசாயத் துறைச் செயலாளர் ஆகியோரது கூட்டம் நடைபெறுகிறது. அப்படி வாரந்தோறும் கூடி, ஒவ்வொரு வாரமும் என்ன விலை விற்கிறது என்பதை ஆய்வு செய்கிறார்கள். ஆய்வு செய்து முதலமைச்சருக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அறிக்கையைத் தந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கைகள் அவ்வப்போது, அந்தந்தத் துறையின் சார்பாக, பல்வேறு துறைகளில் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-45

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலைவாசி என்பது அரிசி மட்டுமல்ல. அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மக்களுக்குத் தேவையான அத்தனை பொருட்களுடைய விலையையும் பரிசிலிப்பதற்கான அதிகாரம் உங்களிடத்திலே மட்டும் இல்லையென்று நான் கருதுகிறேன். ஆகையினால் நான் அதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற விவசாயிகளைப் பார்த்து, இந்தச் சட்டமன்றப் பேரவையிலே இருக்கின்ற விவசாயிகளைப் பார்த்து நீங்கள் எல்லாம் யோசித்து இந்த அரசினுடைய நிதி நிலைமையைக் கணக்கில் கொண்டு ஒரு ஆலோசனை கூறுங்கள், நாங்கள் பரிசிலிக்கிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வகையிலேதான் சொன்னேன். விவசாயிகள் பட்டிருக்கின்ற கடனிலே, அவர்கள் பட்டிருக்கின்ற வட்டியை, அவர்களுடைய அபராத வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று, நாங்கள் அனைத்துக் கட்சிகளும் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே எழுத்து பூர்வமாகக் கொடுத்தோம். அந்த அசலை

[திரு. ஜி. பழனிசாமி] [2001 ஜனவரி 25

மட்டுமாவது ஒரு ஐந்து தவணைகளில் கொடுக்க அனுமதிக்க வேண்டுமென்று நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம். இப்போதும் அதை வலியுறுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று ஊக்கத்தொகை; விவசாயிகளுக்கு நெல்லுக்கு குவிண்டாலுக்கு 40 ரூபாய் ஊக்கத்தொகை என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 50 ரூபாய் தமிழ்நாட்டிலே விவசாயிகளுக்கு நேரடிக் கொள்முதல் நிலையங்கள் இருக்கின்ற இடங்களுக்கு வழங்கியிருந்தார்கள். இப்போது 40 ரூபாய்தான் வழங்குகிறார்கள். இதில்கூட மத்திய அரசு 15 ரூபாய் கொடுக்கிறது, மாநில அரசுதான் 25 ரூபாய் கொடுக்கிறது. ஆகவே, அதை 100 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நான் உழவர் சந்தையைக் குற்றம் சொல்ல, குற்றத்தைக் கண்டுபிடிக்க, அதிலே ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை. ஒரு திட்டத்தைக் கொண்டு வரும்போது அதில் நன்மையும் நடக்கலாம். சில தீமைகள்கூட நடக்கலாம். ஆனால் உழவர் சந்தைகள் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலமாக எவ்வளவு காய்கறிகள் எவ்வளவு காரட், எவ்வளவு மிளகாய், எவ்வளவு கத்தரிக்காய் விற்பனையாகின்றன என்று விற்பனை செய்கின்ற அந்தக் கணக்குகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், உழவர் சந்தை உருவாக்கப்பட்ட கட்டடத்திற்கான அந்தப் பணம் இன்னும் வழங்கப்படவில்லை. இது அக்ரோ என்ற ஒரு கூட்டுறவு வங்கி மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் இல்லையென்று தலையாட்டுகிறார். நான் ஆதாரபூர்வத்தோடு சொல்கிறேன். அநேகமாக அதற்குரிய பணம் இன்னும் சென்றடையவில்லை. ஓராண்டு காலம் ஆகியும் வழங்கப்படவில்லை என்பதை....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தையில் 50 கடைகள் கட்டுவது என்றால் இவ்வளவு தொகை, 80 கடைகள் கட்டுவது என்றால் இவ்வளவு மதிப்பீடு, 100 கடைகள் என்றால் இவ்வளவு மதிப்பீடு என்று பொதுப் பணித் துறைப் பொறியாளர்கள், அதைப்போல, வேளாண்மைப் பொறியியல் துறைப் பொறியாளர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு மதிப்பீடு தயார் செய்து,



2001 ஜனவரி 25] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

ஒரு மாடல் தயாரித்து, இப்படித்தான் அந்த உழவர் சந்தை அமைக்கப்பட வேண்டுமென்றும் வரையறை செய்து அனுப்பப்பட்டது. ஆனால், சில இடங்களில் பள்ளமான இடத்திலே அது கட்டப்படுகிறபோது, கூடுதலாக அவர்கள் செலவு செய்கிறார்கள். அதைப்போல 50 கடைகளுக்குப் பதிலாக 100 கடைகள் என்ற அளவுக்கும் கட்டிவிடுகிறார்கள். ஆக, அந்தக் கூடுதல் செலவுகளுக்குத் தனியாக அவர்கள் எழுதுகிறார்கள். ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட, 50 கடைகள் கட்டுவது என்றால், 60 கடைகள் கட்டுவது என்றால், 80 கடைகள் கட்டுவது என்றால், 100 கடைகள் கட்டுவது என்றால், கட்டுவதற்கு அனுமதித்த அந்தத் தொகையையெல்லாம் நாங்கள் கொடுத்து விட்டோம். மற்ற கோரிக்கை வந்திருக்கிறது. அதைப் பரிசீலித்துத்தான் கொடுக்க முடியும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓராண்டு காலம் ஆகிவிட்டது. இதைக் கட்டுகிற நிறுவனமே அக்ரோ நிறுவனம். அந்த அக்ரோ நிறுவனம் தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரால் உருவாக்கப்பட்ட நிறுவனம். இரண்டாயிரத்திற்கு மேல் அங்கே தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அந்த நிறுவனத்திற்கு ஒப்படைத்துத்தான் அந்தப் பணிகளை நீங்கள் செய்யச் சொல்லியிருக்கிறீர்கள். அவர்களுக்கு நிதியே கொடுக்காமல், அவர்கள் எல்லாம் பல இடங்களிலிருந்தும் பணத்தைப் பெற்று, கடனை வாங்கி, இன்றைக்கு உழவர்சந்தைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு ஏன் இன்றையதினத்திலே பணம் கொடுக்கவில்லை? அவர்களுக்கு என்ன நிதிநிலைமை? அநேகமாக அக்ரோ நிறுவனம் பூராவும் தமிழ்நாட்டிலே ஒரு மோசமான துறையாக மாற்றப்பட்டிருக்கிறது, வேளாண்மைத் துறையிலே, அந்தத் துறை...

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அதற்காகத்தான், தனியார்களுக்கெல்லாம் டெண்டர் கொடுத்து, அதில் தவறு நடக்கக் கூடாது என்றுதான் அக்ரோ நிறுவனத்திற்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம். கட்டுமானப் பணியை அக்ரோ நிறுவனத்திற்குத்தான் கொடுத்திருக்கிறோம். அதே நேரத்தில் கூடுதலாக இவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று ஒரு கோரிக்கை இப்போது வந்திருக்கிறது. பொறியாளர்களுடைய கருத்துகளை எல்லாம் கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அவை வந்த பிறகு அரசு அனுமதிக்க இருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோன்று அந்த நிறுவனத்திலே, இருக்கக்கூடிய தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நிதி கொடுத்து பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி தேயிலை விவசாயிகள் மீது வழக்குகள் போடப்பட்டுள்ளன. மனித உரிமை கமிஷன் அறிவித்திருக்கக்கூடிய, அந்த அறிக்கைமீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆகையினால், அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

அதேபோன்று மதுரையிலே 2 தினங்களுக்கு முன்பு தலித் மாணவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி ஊர்வலம் சென்றிருக்கிறார்கள். காவல் துறைக்கும் அவர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டு, அவர்களைக் காவல் துறை அனுமதிக்காத காரணத்தால் பிரச்சினை ஏற்பட்டு இருக்கிறது. பொதுச் சொத்துக்கள் மற்றும் எந்த சொத்துக்களையும் அவர்கள் சேதப்படுத்தவில்லை. 26 பேர் காயமடைந்து இருக்கிறார்கள். 180 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் வழக்கிலே கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இதனால் தலித் மக்களிடத்திலே ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. எனவே, உடனடியாக, அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

அடுத்ததாக, இந்த ஆளுநர் உரையிலே கணினியைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. மக்களிடத்திலே இதன் மீது ஒரு இமேஜை உருவாக்கக்கூடிய அளவிற்குத் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. கணினியைப் பொறுத்தவரை அதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கணினி என்பது ஒரு அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அது பொருத்தமாக அமைந்துவிட முடியாது. ஏனென்று சொன்னால், கணினி என்பதை நிர்வாகத்தில் சிக்கனத்தை உருவாக்குவதற்கு, அழியாத ரிக்கார்டுகளைத் தயார் பண்ணுவதற்கு, அவசர வேலைகளைச் செய்வதற்கு வேண்டுமானால் பயன்படுத்த முடியும். ஆனால், அடிப்படைத் தேவைகளை அதனால் பூர்த்தி செய்ய முடியாது.



சமீபத்தில்கூட மத்திய தேசிய மனித வள மேம்பாட்டுத் துறையின் சார்பாக, தமிழ்நாட்டில் 55 இலட்சம் மக்கள் இன்றையதினம் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள்; நகர்ப்புறத்திற்கும் கிராமப்புறத்திற்கும் உருவாக்கக்கூடிய திட்டங்கள் கிராமப்புறத்திற்குப் போய்ச் சேரவில்லை; இதில் தமிழ்நாடு முதலிடம் ஆக இருக்கிறது என்று மக்களுடைய வாழ்க்கைத்தரம் பற்றி ஒரு ஆராய்ச்சி நடத்திக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். எந்தெந்த குடும்பங்களில் Gas இல்லாத குடும்பங்கள் உள்ளன, எந்தெந்த குடும்பங்களில் சைக்கிள் இல்லாமல் மனிதன் நடந்து கொண்டிருக்கிறான்: இன்னும் பார்த்தால், கதவு இல்லாத, நிலை இல்லாத வீடுகளில் எத்தனை குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்பது பற்றியெல்லாம் தமிழக அரசுக்குச் சுட்டிக்காட்டக்கூடிய விதத்தில் தேசிய மனித வள மேம்பாட்டுத் துறை தமிழக அரசுக்கு ஒரு அறிக்கையே தந்து இருக்கிறது. ஆகவே, கிராமப்புற மக்களுடைய வாழ்க்கையில்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இந்தியாவிலேதான் இருக்கிறது. ஆகவே, இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுக்கூடப் பேசலாம்; கிராமப் பகுதி எங்கு வளர்ச்சி பெற்று இருக்கிறது என்பது பற்றி, திரு. பழனிசாமி அவர்கள் கேரளா, மேற்கு வங்காளம் இவற்றோடு ஒப்பிட்டுக் கூடப் பேசலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரளா பற்றியும் சொல்லி இருக்கிறார்கள். ஒரு மனிதனுக்கு வருமானம் கேரளாவிலே 50 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை கிடைக்கிறது. அது தமிழ்நாட்டில் கிடைக்கவில்லை. இங்கு வேலைவாய்ப்புக்கான உத்தரவாதமும் இல்லை. விளம்பரமான பணிகளில்தான் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. அதைப்பற்றியும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்கு மன்னித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். கேரளாவிலேதான் இப்போது நடுத்தர வயது உடையவர்கள், நடுத்தர பொருளாதார நிலையிலுள்ள குடும்பங்களிலே உள்ளவர்கள் எல்லாம்கூடத் தற்கொலை செய்துகொள்ள வேண்டிய சூழ்நிலையும், இந்தியாவிலுள்ள மொத்த சராசரி விகிதாச்சாரத்தில் 2 மடங்கு, 3 மடங்கு தற்கொலை அதிகமாகிற அளவிற்கு அங்கே ஒரு நெருக்கடி நிலை மக்கள்

வாழ்க்கையில் இருப்பது ஒரு பெரிய ஆய்வுக் கட்டுரையாக வந்து இருக்கிறது. அதனால் இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது எங்களுக்கும் பொருந்தும்; பழனிசாமி அவர்களுக்கும் பொருந்தும்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் நேரத்தைக் கருதி உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். கடந்த 2, 3 நாட்களாக விவாதம் இந்த மாமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஆளும் கட்சியைச் சார்ந்து இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்கட்சிகளாகிய எங்களைப் பார்த்து, சேராத இடத்திலே சேர்ந்ததன் விளைவாக உங்கள் குணம் மாறி இருக்கிறது; கொள்கை மாறி இருக்கிறது; உங்கள் சித்தாந்தம் மாறி இருக்கிறது என்று கேள்விக் கணையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1996 ஆம் ஆண்டு மத்தியிலே ஐக்கிய முன்னணி அரசு அமைக்கப்பட்டது. அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் அந்த மந்திரி சபையிலே இடம் பெற்றிருந்தன. தமிழ் மாநில காங்கிரசும் இடம் பெற்றிருந்தது. மேலும் 13 கட்சிகள் அந்த மந்திரி சபையில் இடம் பெற்றிருந்தன. அன்றையதினம் முன்னாள் பாரதப் பிரதமர் மறைந்த ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டது பற்றி விசாரித்த ஜெயின் கமிஷன் ரிப்போர்ட் நாடாளுமன்றத்திலே வைக்கப்படுவதற்கு முன்னாலேயே, அது வெளி வந்தது, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்குத் தெரியும். அந்த நேரத்திலே காங்கிரஸ் கட்சி வெளியே இருந்து தார்மீகமான ஆதரவைத் தேசிய முன்னணி அரசுக்குத் தந்தது. அப்போது காங்கிரஸ் கட்சி ஒன்று சொன்னது. திராவிட முன்னேற்றக் கழக கலைஞர் அவர்களும், அவரைச் சார்ந்தவர்களும் ராஜீவ் காந்தி கொலையிலே குற்றஞ்சாட்டப்பட்டு இருக்கிறார்கள்; அவர்களை மந்திரி சபையிலே இருந்து விலக்கினால் உங்களுக்குத் தார்மீகமான ஆதரவைத் தருவோம் என்று சொன்னார்கள். அன்றைக்கு இருந்த கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ், இன்னும் பிற கட்சிகளும்கூட சேர்ந்து—அந்த மனிதாபிமானம் எப்படி இருந்தது என்பதற்காகச் சொல்கிறேன்; முற்றிலுமாக மத்தியிலே இருக்கிற ஆட்சி கலைந்தாலும் பரவாயில்லை; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர்களை அமைச்சரவையிலிருந்து விலக்கக் கூடாது என்று சொன்னோமே தவிர, பதவி ஆசை பிடித்து அலையவில்லை. இதுதான் எங்களுடைய மனித நேயம். இன்றைக்கும் சொல்கிறோம். மனித நேயத்தோடுதான் இருக்கிறோம்.



முற்பகல் 11-55

இன்னும் சொன்னார்கள். மாண்புமிகு சகோதரி டாக்டர் அவர்கள் இன்றையதினத்திலே இங்கே சொன்னார்கள். ஊழலோடு உறவு கொள்ளலாமா என்று எங்களைப் பார்த்துக் கேட்டார். நான் உங்களைப் பணிவோடு வேண்டி கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே இருக்கிற அரசியல் கட்சிகளில் ஊழல் செய்யாத கட்சி எந்தக் கட்சி என்று அந்தக் கட்சியின் பெயரைச் சொல்லி, அந்தக் கட்சியிலே போய் கூட்டணி வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால், நாங்கள் பரிசீலிக்கிறோம். சொல்ல முடியுமா? ஆட்சி, அதிகாரங்களுக்கு யார் வந்தாலும் பல குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிற கடமை பொது மக்களுக்கும் இருக்கிறது. அரசியல் கட்சிகளுக்கும் இருக்கிறது. நீங்கள் எங்களைப் பார்த்துக் குற்றச்சாட்டு சொல்லலாமா? எந்தக் கட்சி ஊழல் இல்லாத கட்சி? அந்தக் கட்சிப் பெயரைச் சொல்லுங்கள். நாங்கள் போய்ச் சேருகிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கட்சி ஊழல் இல்லாத கட்சி என்று கேட்கிறார்? திரு. பழனிசாமி தெரிந்து கேட்கிறாரா, தெரியாமல் கேட்கிறாரா என்று எனக்குத் தெரியாது. அதற்கு என்ன அளவுகோல் என்று முதலிலே சொல்ல வேண்டும். ஒன்று, ஊழல் குற்றச்சாட்டை யார் மீது வேண்டுமானாலும் சுமத்தலாம். ஆனால், நீதிமன்றத்திலே ஒரு வழக்குத் தொடரப்பட்டு, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் குற்றவாளிகள்தான், கிரிமினல்கள்தான், மூன்றாண்டு காலம் சிறைச்சாலைத் தண்டனை, இரண்டாண்டு காலம் சிறைத் தண்டனை என்று சொன்னது ஒரு பக்கம். ஆனால் ஒரு வழக்குத் தொடரப்பட்டு இவர்கள் நிரபராதிகள், இவர்கள் மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை என்று தீர்ப்பு வருவது ஒரு பக்கம். எனவே, நீதிமன்றம்தான் இதை முடிவு செய்ய வேண்டும். திமுகவைப் பொறுத்தவரையிலே எந்த வழக்கிலும் யார் மீதும், குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபடி, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் மீதான கீழ் கோர்ட் தீர்ப்பே இறுதியானதல்ல. மீண்டும் அப்பீல் இருக்கின்றது. இறுதித் தீர்ப்பு வருகிறவரை பொறுத்திருக்காமல் இப்பொழுதே இவர்களே தீர்ப்பெழுதிக்கொள்வது நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்பராயன்*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அந்த அம்மையார் நிற்கலாமா கூடாதா என்பது தேர்தல் அதிகாரி முடிவு பண்ண வேண்டியது. நீங்கள் இரண்டு பேரும் ஏன் இந்த வாதத்தில் தேவையில்லாமல் இறங்கிக் கொண்டிருக்கிறீர்கள்?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு கருத்தை நான் சுப்பராயன் அவர்களிடத்திலே இருந்து எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் தேசிய ஜனநாயகக் கூட்டணி..*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *காலம் மாறும்போது எப்படி நீங்கள் எதிர்பார்க்காமல் இருக்க முடியும்?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியிலே இருக்கும்போது, அந்தக் கூட்டணியிலே இடம் பெற்றிருந்த பீகார் மாநிலத்தைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள், லல்லு ஊழல் செய்துவிட்டார்— அவர் மீது அப்போது நீதிமன்றம் எந்தவிதமான தண்டனையும் கொடுக்கவில்லை. வழக்குதான் தொடுத்தார்கள். அப்போதே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்கள் அந்தக் கூட்டத்திலே ஒரு முடிவு செய்து, லல்லு ஊழல் செய்திருக்கிறார்— குற்றச்சாட்டு வந்திருக்கிறது. அவர்களுடைய அமைச்சர்கள் இந்த அமைச்சரவையிலே இருக்கக் கூடாது; இருந்தால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று சொன்ன மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் இன்று இப்படிச் சொல்வது விந்தையாக இருக்கிறது.

(திரு. ஜி. பழனிசாமி, திரு. பி.ஆர். சுந்தரம் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, உங்கள் சார்பிலே திரு. சுந்தரம் பேசுகிறார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதவாதக் கட்சி என்று கூறி, பண்டாரங்கள், பரதேசிகள் தமிழ்நாட்டில் நுழைகிறார்கள், நுழைய விடக்கூடாது என்று கூறிவிட்டு, அவர்களுடன் நீங்கள் கூட்டுச் சேர்ந்திருக்கும்போது, ஒரே கருத்தையுடைய நாங்களெல்லாம் கூட்டுச் சேருவதிலே எந்தவிதமான தவறுமே இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் யார் வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் சேருங்கள். எனக்கு நெருக்கடியை ஏற்படுத்தாதீர்கள். நீங்கள் ஒழுங்காகப் பேசி, அவையை முடிக்க விடுங்கள்.*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முகம்மது இஸ்மாயில்கூட நேற்றையதினம் எங்களைப் பார்த்துச் சொன்னார். மதவாதமே இல்லை; மதவாதத்தைப் பாதுகாக்கக்கூடிய அரசுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று சொன்னார். நான் மறுக்கவே இல்லை. தந்தை பெரியார் இந்தப் பூமியிலே பிறந்த காரணத்தினால்தான் தமிழகம்கூட......

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மதவாதத்தைப் பாதுகாக்கக்கூடிய என்பதற்குப் பதிலாக, மத நல்லிணக்கத்தைப் பாதுகாக்கக்கூடிய என்று சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மத நல்லிணக்கத்தைப் பாதுகாக்கக்கூடிய அரசு என்று சொன்னார். மரியாதைக்குரிய நம்முடைய எஸ்றா. சற்குணம் அவர்களைக்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குஜராத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அவர் நேரடியாகப் போய், குஜராத்திலே இருக்கிற கட்சிகளோடு....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *முதலமைச்சர் அனுப்பவில்லை, அவராகப் போனார்.*

**திரு. ஜி. பழனிசாமி:** அனுப்பி வைத்தார்கள். முதலமைச்சர் அனுப்பி வைத்ததாக அவர் ஒரு ஸ்டேட்மெண்டில் சொன்னார்; பத்திரிகைகளில் செய்தி வந்தது. (குறுக்கீடுகள்) கடிதங்களையே கொடுத்தனுப்பியதாகச் சொன்னார்கள். ஆகையினால் அவர் போனார். போய்விட்டு அவர் வந்து சொன்னார், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்திலே ஏறிவிட்டது; இந்தியாவிலே பி.ஜே.பி.-யைத் திருத்தவே முடியாது; அப்படிப்பட்ட ஒரு கட்சிதான் மத்தியிலே இருக்கிறது என்று அவரே சொன்னார். இதைவிட இஸ்மாயிலுக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஏனென்று சொன்னால் நிலைமைகள் அப்படி இருக்கின்றன.

அதேபோன்று நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இறுதியாக இதைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இன்றைக்கு சிமெண்ட் விலையை நாம் பார்த்தோம் என்று சொன்னால், நிறைய வாரியங்கள் எல்லாம் கொண்டு வந்திருக்கிறீர்கள். உண்மையிலேயே பாராட்டுக்குரியது. நல்ல நோக்கத்தோடு கடந்த காலங்களில்

திராவிட முன்னேற்றக் கழக அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியபடி, இந்த வாரியங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. ஆனால் இன்றைக்கு சிமெண்ட் விலையைப் பார்த்தால் ரூ. 215-லிருந்து 220 வரை உயர்ந்திருக்கிறது. கடுமையான நெருக்கடி; தொழிலாளர்களுக்கு வேலை கிடையாது. அதை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை? கேரளாவைக் காண்பிக்கிறோம். கேரளாவிலே ரூ. 120 முதல் 130 வரைதான் விற்கிறது. இங்கே விற்க முடியவில்லை. என்ன காரணம்?

நண்பகல் 12-00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பழனிசாமி அவர்கள் தயவுசெய்து தவறான கருத்துகளைச் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அவர் நேற்றைக்கு அவையிலே இல்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** கேரளாவிலே 120 ரூபாய்க்கு சிமெண்ட் விற்பதாக நிரூபித்தால் நீங்கள் எந்தத் தண்டனை கொடுத்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. கேரளாவிலே 190, 185 ரூபாய்க்குக் கீழாக எந்த சிமெண்ட்டும் விற்கவில்லை. எந்த கம்பெனி சிமெண்டும் கேரளாவிலே விற்கவில்லை. தமிழ்நாட்டில் என்ன விலை விற்கிறதோ அதே விலைதான் கேரளத்திலும் விற்கப்படுகிறது. மகாராஷ்டிரத்திலும் விற்கப்படுகிறது. இதை ஒரு மாநில அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாது. அந்த அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. ஆகவேதான், மத்திய அரசாங்கத்திடம் சொல்லி, மத்திய அரசாங்கத்தில் நம்முடைய வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் தொழில் முதலாளிகளைக் கூப்பிட்டு இரண்டாம் தேதி பேசவிருக்கிறார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இறுதியாக ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். இன்றைக்குப் பார்த்தால் ஒரு லாரி மணல் விலை 6,000 ரூபாய்; ரொம்ப அதிகபட்சமாகப் போய் இருக்கிறது. (குறுக்கீடு) 9,000 ரூபாய் வரைக்கும் போகிறது. ஏனென்றால் பக்கத்தில் இருக்கின்ற ஊர்களுக்கு 6,000 ரூபாய், ரொம்ப தூரத்தில், நகரங்களுக்குக் கொண்டுபோக வேண்டுமென்றால் 9,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் வரை விற்கிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோல, ஈரோடு, கோவை மாவட்டங்களில் 11 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 30 இலட்சம் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருப்பது அத்திக்கடவு -அவினாசி குடிநீர்த் திட்டம். சுமார் 200-க்கு மேற்பட்ட குளங்கள் குட்டைகளில் நீர் நிரப்பி குடி தண்ணீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கான அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய மாவட்டத்தில் மினி பஸ் எல்லாம் விட்டு, கிராமத்து மக்கள் நகரத்திற்கு வருவதற்கான நல்ல முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதைப் பாராட்டுகிறேன். ஆனால் இன்றைக்கு சாலைகள் எல்லாம் மிக மோசமாகப் போய்விட்டன. பஞ்சாயத்து யூனியன் சாலைகள், நெடுஞ்சாலைகள் முற்றிலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சாலைகள் சீர்குலைந்த நிலையிலே இருக்கின்றன. அந்தச் சாலைகளை எல்லாம் பிரதானமாக வரக்கூடிய தேர்தலுக்குள்ளாவது சீரமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, பேச அனுமதி தந்த தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள், அவினாசி-அத்திக்கடவுத் திட்டம் பற்றி. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஒரு Expert Committee report கேட்டார்கள். டில்லியில் இருக்கிற கம்பெனி செய்து கொடுத்திருக்கிறது. சுமார் 400 கோடி ரூபாய் அளவில் ஒரு ஸ்கீம் தயார் பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய பொதுப் பணித் துறையைச் சேர்ந்த என்ஜினியர்கள், குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள் இணைந்து ஒரு கமிட்டி போடப்பட்டுள்ளது. அதை எப்படி அமல்படுத்தலாம் என்பது பற்றிச் சொல்ல ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட் வந்தவுடன் அதற்குப் பிறகு அங்கே தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** சம்பந்தப்பட்ட கமிட்டி, தன்னுடைய இறுதி அறிக்கையை அரசுக்கு அளித்துவிட்டதாகவும், ஆனால் அதன்மீது அரசு இன்னும் முடிவு எடுக்காமல் இருப்பதாகத்தான் தகவல் வெளி வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதாவது Expert Committee report கிடைத்திருக்கிறது அரசுக்கு; இல்லை என்று சொல்லவில்லை. டில்லியில் இருக்கிற ஒரு பெரிய expert company-யிடம்தான் ஒப்படைத்தார்கள், குடிநீர் வடிகால் வாரியத்தினர், இதுபற்றி ஸ்கீம் போட்டு கொடுங்கள் என்று கேட்டு, அந்த ரிப்போர்ட் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த ரிப்போர்ட் மீது நம்முடைய பொதுப் பணித் துறைப் பொறியாளர்களும், குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்களும் சேர்ந்து, அதை எப்படி implement பண்ணலாம் என்பதற்காக ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். ரிப்போர்ட் உடனே கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு) இல்லை, இல்லை, முந்தாநாள்தான் நாங்கள் கமிட்டி போட்டிருக்கிறோம். இப்போதுதான் போட்டிருக்கிறோம். ஆகையினால் அந்த கமிட்டி ரிப்போர்ட் வந்தவுடன், நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையில் பேசுவதற்கு நீங்கள் அனுமதி அளித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசின் ஐந்தாண்டு காலம் நிறைவடைய இருக்கின்ற இந்த நேரத்தில் இந்த ஆளுநர் உரை இப்போது இந்த அவைக்கு விவாதத்திற்கு வந்திருக்கிறது. நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு தேர்தல் வருகிறது என்ற சிந்தனை இருக்கிறதா இல்லையா என்பதே தெரியவில்லை. உதாரணமாக தேர்தல் சிந்தனையோடு அவர்கள் இருந்திருந்தால், இப்போது மின்சாரத்திற்கு 200 ரூபாய் ஃபீஸ் கட்ட வேண்டுமென்றால், அதற்கு 600 ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டுமென்று உத்தரவைப் போட்டு இருக்கவே மாட்டார்கள்.

பிற்பகல் 12-05

அதுமாதிரி, நம்முடைய பத்திரப் பதிவுத் துறை அமைச்சரிடம் போன தடவை நாங்கள் எவ்வளவோ சொன்னோம். இந்தப் பத்திரப் பதிவினால் நம்முடைய அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானம் குறைவதோடு, பொதுமக்களுக்கும் ஏராளமான தொல்லைகள், துன்பங்கள் ஏற்படுகின்றன என்று அவர்களிடம் சொல்லிப் பார்த்தோம், அவர் கேட்கவில்லை. இன்றைக்கு என்ன நடந்திருக்கிறது என்றால், நம்முடைய Rural Development Commissioner-ஆக இருந்த திரு. அசோக் வரதன் ஷெட்டி ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார். என்ன உத்தரவு போட்டிருக்கிறார் என்றால், பத்திரம் பதிவதற்கு, அதாவது Unapproved Lay-out என்று



சொல்லக்கூடிய இடங்களுக்கு யார் சர்டிபிகேட் கொடுக்க வேண்டுமென்றால் B.D.O. கொடுக்கக்கூடாது, பஞ்சாயத்துத் தலைவர்தான் கொடுக்க வேண்டும். ஆனால் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு எப்படி சர்டிபிகேட் கொடுப்பது என்று அவர்களுக்குத் தெரியாது. ஆகவே இந்தத் துறை அவர்களுக்கு சரியான பயிற்சி கொடுத்து, எப்படி சர்டிபிகேட் வழங்க வேண்டுமென்று பயிற்சி கொடுக்க வேண்டுமென்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் நம்முடைய பத்திரப் பதிவு அதிகாரி, அதாவது Registrar என்ன உத்தரவு போட்டிருக்கிறார் என்றால், B.D.O.-தான் கொடுக்க வேண்டுமென்று அவர் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார். அந்த இரண்டு உத்தரவுகளும் என் கையில் இருக்கின்றன. கிராமங்களிலே கேட்டால் B.D.O. எனக்கு அப்படி ஒரு உத்தரவே வரவில்லை, நான் கொடுக்கவே முடியாது என்று சொல்லுகிறார். Panchayat Board President அவர்களிடம் போய் நீங்கள் ஒரு certificate கொடுங்கள் என்று கேட்டால், என்ன சர்டிபிகேட்? நீங்கள் எழுதிக் கொடுங்கள் நான் கையெழுத்துப் போடுகிறேன் என்று அவர் சொல்லுகிறார். இதற்கிடையில் V.A.O.-விடம் சென்று ஒரு சர்டிபிகேட் வாங்கி—என்னுடைய personal experience-ஐ சொல்லுகிறேன். எங்கள் ஊரில் 10 சென்டுக்கு பத்திரம் வாங்குவதற்குள் 5 ஆயிரம் ரூபாய் செலவழித்து, ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தும், பெற வேண்டியதைப் பெறுவதற்கு 3 மாத காலம் அலைந்து, போன வாரம்தான் பத்திரம் போட்டிருக்கிறார்கள். இந்த அவல நிலை இருக்கிறது. இரண்டு அரசாணைகளை ஏன் போட்டார்கள் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு G.O. போடவில்லை. V.A.O. இதிலே சர்டிபிகேட் கொடுக்க முடியாது. மறுப்பின்மை சான்றிதழைப் பொறுத்தவரையில் உள்ளாட்சித் துறையில் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சி போன்ற பகுதிகளிலே உள்ளாட்சித் துறை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதிலே V.A.O. சர்டிபிகேட் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. அதிலும், குறிப்பாக கிராம நத்தம் என்றால், N.O.C.-யே வேண்டியதில்லை. மறுப்பின்மை சான்றிதழ் நிச்சயமாக வேண்டியதில்லை என்று இதே அவையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்திலே நான் சொல்லியிருக்கிறேன். குறிப்பாக, கிராமப் பஞ்சாயத்துகள், ஊராட்சி மன்றங்கள், எல்லாமே பெரும்பாலும், கிராம நத்தமாக இருக்கின்ற [illegible] நிச்சயமாக N.O.C. வேண்டியதில்லை.



184811
சென்னை-600 009

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள். ஆனால் Sub-Registrar அலுவலகத்தில் என்ன கேட்கிறார்கள் என்றால், எங்களுக்கு சான்றிதழ் வாங்கிக் கொடுத்தால்தான் பதிய முடியும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். இதுகுறித்து ஒரு தெளிவான உத்தரவை நீங்கள் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிமெண்ட் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குஜராத்தில் இருக்கின்ற அம்புஜா என்ற பெரிய சிமெண்ட் தொழிற்சாலையினர் எங்களை அணுகி நாங்கள் 120 ரூபாய் அல்லது 130 ரூபாய்க்குக் கொடுக்கிறோம், நம்முடைய மாநில அரசு எங்களுக்கு Pollution Control Certificate கொடுத்தார்கள் என்றால் தூத்துக்குடியிலேயே இறக்கி குறைவான விலைக்குக் கொடுக்கிறோம் என்ற உறுதியை அளித்ததன் பேரில், நாங்களும் அவர்களிடம் சிமெண்ட் வாங்கி எங்களுடைய அலுவலகத்தில் வைத்து 125 ரூபாய்க்கு ஆயிரக்கணக்கான சிமெண்ட் மூட்டைகளை விற்றோம். இப்போது என்ன செய்துவிட்டார்கள் என்றால், இங்கே இருக்கின்ற சில சுயநல முதலாளிகள், அந்த அம்புஜா கம்பெனியினரைப் பார்த்து நீங்கள் ஏன் இப்படிப் பைத்தியக்காரத்தனமாகக் குறைத்து விற்கிறீர்கள், எல்லோரும் சேர்ந்து கூட்டுக் கொள்ளை அடிப்போம் என்று பேசி, இன்று இந்தியா முழுவதும் இந்தக் கொள்ளை நடந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே, நம்முடைய மாநில அரசு இதில் கவனம் செலுத்தவில்லை என்று நாங்கள் சொன்ன குற்றச்சாட்டு மட்டுமல்லாமல், மத்திய அரசும் இதில் கவனம் செலுத்தவில்லை என்று சொல்கிற அளவுக்கு இப்போது குற்றச்சாட்டு போய்விட்டது. சிமெண்ட் விலை 200 ரூபாய்க்கு மேல் போய்விட்டது என்றால் இது தாங்கவே முடியாத ஒரு பெரிய கொடுமையாகும். நான் ஒரு பெரிய சிமெண்ட் உற்பத்தியாளரை, முதலாளியைப் பார்த்துக் கேட்டேன். இவ்வளவு விலை விற்கிறீர்களே என்று கேட்டேன். அதற்கு அவர் 130 ரூபாய்தான் எங்களுடைய விலை. அதற்கு மேல் 10 ரூபாய் எங்களுக்கு இலாபம் இருந்தால் போதும். அதற்குமேல் வருகின்ற இலாபத்தைப் பற்றி நான் சொல்ல முடியாது என்று மிகவும் இரகசியமாக ஒரு செய்தியைச் சொன்னார் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த முதலாளி யார் என்பதை நான் தனியாகச் சொல்லுகிறேன்.

பிற்பகல் 12-10

அடுத்து, நம்முடைய கஜானாவில் பணம் இருக்கிறதா இல்லையா என்பதில் எனக்கு மிகவும் சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால்



எங்களுடைய தொகுதியில் மலட்டாறு என்ற ஒரு அணைத் திட்டத்தை நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பெரிய மனதோடு பார்த்து, sanction செய்து, வேலை செய்து 6 மாதங்கள் ஆகிவிட்டன. 5 கோடி ரூபாய்க்கு வேலை பார்த்து இருக்கிறார்கள். 3¼ கோடி ரூபாய் அளவிற்கு இன்னும் பணம் கொடுக்கவில்லை. அதன் காரணமாக, 20 கோடி ரூபாய்க்கு sanction பண்ணிய அந்த மலட்டாறு அணை அப்படியே பாதியிலே நிற்கிறது. அதிலே நான் ஒரு கோரிக்கைகூட, முதலமைச்சர் அவர்கள் பரமக்குடிக்கு வந்தபோது வைத்தேன். அந்த அணையின் பக்கத்தில், இந்த நாட்டில் வெள்ளையர்களோடு எதிர்த்துப் போராடிய வீர மறவர்களான, கட்டபொம்மனுடைய வாரிசுகளான கம்பளத்து நாயக்கர்கள் குடியிருக்கிறார்கள். இன்று அவர்கள் மிக ஏழைகளாக அந்தப் பகுதியில் குடிசை போட்டு வாழ்கிறார்கள். இந்தப் பகுதியில் நாம் ஒரு அணை கட்டுவதன் மூலம் அந்தக் கிராமமே அழிந்துவிடும், ஆகவே, அவர்களுக்கு நீங்கள் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். அதற்கு அவர்கள் பெரிய மனதோடு, பெருந்தன்மையோடு, உடனடியாகக் கட்டி விடுவோம் என்று உறுதி சொன்னார்கள். அந்த வேலையும் நடக்கவில்லை. பணமும் கொடுக்கவில்லை. வேலையும் இப்போது பாதியிலே நின்றுவிட்டது. நீங்கள் பணம் கொடுக்கவில்லையென்றால், பெரிய பிரச்சினை வந்துவிடும். பெரிய agitation வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகின்ற மலட்டாறு அணைக்கு சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது 2 கோடி ரூபாய். இதுவரையிலே 5 கோடியே, 70 இலட்சம் ரூபாய்க்கு வேலை நடைபெற்று இருக்கிறது. 2 கோடி ரூபாய் பட்டுவாடா செய்திருக்கிறோம். மீதியிருக்கிற பணத்தைத் தரவேண்டும். இந்த நிதியாண்டிலே மீண்டும் அவர்களுக்குப் பணம் தரப்படும். வேலை அதற்காக நிறுத்தப்பட மாட்டாது; அது நடந்து கொண்டிருக்கும். சென்ற வருடம் ஒதுக்கிய பணத்தை அவர்களுக்குக் கொடுத்துவிட்டோம். 5½ கோடி ரூபாய்க்குக் கிட்டத்தட்ட வேலை நடந்திருக்கிறது. அதிலே 2 கோடி ரூபாய் போக, மிச்சத்தைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதிலே 2 கோடி ரூபாயைக் கொடுத்தால் போதும் இப்பொழுது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இந்த நிதியாண்டு என்றால், உடனே இப்பொழுது இந்த வாரத்திற்குள்ளே கொடுக்கவில்லையென்றால், ரொம்பப் பெரிய பிரச்சினை வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [2001 ஜனவரி 25

அடுத்தது, எங்களுடைய தொகுதியில், கூத்தன் என்று சொல்லக்கூடிய ஒரு அரிசனத் தோழன், மிகப்பெரிய ஒரு நாடக நடிகன், 500 ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் தாலுகாவினுடைய வறட்சியைக் கருதி, ஊர் ஊராக நாடகம் ஆடி, அந்த மக்களையெல்லாம் திரட்டி, ஒரு கால்வாய் வெட்டினார். அதற்கு கூத்தன்கால் என்று பெயர். 60 கண்மாய்களுக்குத் தண்ணீர் தரக்கூடிய அருமையான ஒரு திட்டம். இது இப்போது தூர்ந்துவிட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் இதை உடனே வெட்டி மராமத்து செய்ய வேண்டுமென்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே நான் கோரிக்கை வைத்தேன். இது ஒரு அருமையான கோரிக்கை; நான் உடனே நிறைவேற்றுகிறேன் என்று சொன்னார்கள். இப்போது உங்கள் அரசு முடியப்போகிறது. இன்னும் அதற்கு sanction பண்ணவில்லை. Atleast இப்போதாவது, வேலைகளை நீங்கள் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, கதர் கிராம வாரியம் இருக்கிறதே, அது நம்முடைய காந்தியடிகளால் தொடங்கப்பட்டு, இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு திட்டம். அதிலே rebate என்று சொல்லக்கூடிய பணம், நம்முடைய அரசாங்கம் 23 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. 23 கோடி ரூபாயை நீங்கள் வைத்துக் கொண்டீர்களென்றால், அந்த Department எப்படி வேலை செய்யும்? அவர்கள் யாருக்காவது சம்பளம் கொடுக்க முடியுமா? தொழில் செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, பொன்விழா ஆண்டை முன்னிட்டு, மைய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் மத்திய கதர் ஆணையத்தின் ஆணைக்கு ஏற்ப, ரிபேட், தள்ளுபடி மானியம், சிறப்புத் தள்ளுபடி மானியம் அளித்ததன் விளைவாக தமிழ்நாட்டிலே இருக்கிற சர்வோதய சங்கங்கள் அந்தத் தள்ளுபடி மானியத்தைப் பயன்படுத்தி, அதிகமாக, ஏற்கெனவே இருந்த ஸ்டாக்குகளையெல்லாம் விற்பனை செய்துள்ளன. அதிலே 10 சர்வோதய சங்கங்கள் முறைகேடுகள் செய்திருக்கின்றன. அந்த முறைகேடுகள், மத்திய கதர் ஆணைக் குழுவின் ஆடிட்டர்கள் அங்கே ஆய்வு செய்தபோது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறைகேடுகள் நடந்ததைப் பற்றி இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஆய்வு முடிந்ததற்குப் பிறகு அந்தத் தள்ளுபடி மானியம் வழங்குவதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 ஜனவரி 25]

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்ததாக, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் எனக்கு வந்த ஒரு மனுவை நான் கொடுத்திருக்கிறேன். எங்களுடைய பகுதியில், கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களிடம், உள்ளாட்சித் துறை அதிகாரிகள், அதாவது பஞ்சாயத்து அதிகாரிகள், A.D. பஞ்சாயத்து என்று சொல்லக்கூடியவர்கள், திடீரென்று ஒரு நாள் அங்கே லாரியில் வந்து, தார்பாலின், பஞ்சாயத்துக்குப் பஞ்சாயத்து இறக்குகிறார்கள். இது என்ன, அரசாங்கம் இனாமாகக் கொடுக்கிறதா என்று கேட்டால், இல்லை, இதற்கு 13,000 ரூபாய் பில். நீங்கள் ஒரு செக் கொடுங்கள் என்று கேட்டார்கள். எங்களுக்கு 13,000 ரூபாய் ஒரு வருட வருமானம்கூடக் கிடையாதே, இது என்ன திடீரென்று கேட்கிறீர்கள் என்று சொன்னால், இல்லை, இல்லை கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும், நீங்கள் செக்கை மட்டும் கொடுங்கள், நாங்கள் பணம் பார்த்துக் கொள்கிறோம், பின்னால் வரும்போது வாங்கிக் கொள்கிறோம் என்று சொல்லி 10 பஞ்சாயத்துகளில் இப்போது தார்பாலின் இறக்கிவிட்டார்கள். அதேமாதிரி கடலாடி பஞ்சாயத்து பகுதியில் திருப்புல்லாணியிலேயும், இந்தமாதிரி 7, 8 பஞ்சாயத்துகளில் தார்பாலினை இறக்கி, 13,000 ரூபாய் ஒரு தார்பாலின் என்று சொல்லி, செக் கேட்பதாகவும் தகவல் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக, நான் தார்பாலின் தயாரிப்பாளர்களிடம் கேட்டேன். 1,500, 2,000 ரூபாய்க்குக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று quotation கூடக் கொடுத்திருக்கிறார்கள். இதை இலேசாக விட்டுவிட்டால் என்ன ஆகும் என்றால் 15 கோடி ரூபாய் ஊழல் இதிலே நடந்துவிடும். இது அமைச்சருக்கு தெரியுமோ, தெரியாதோ என்று எனக்குத் தெரியாது. ஆனால், இது சம்பந்தமாக ஒரு விசாரணையே போட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் என்னிடத்தில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் புகாரைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒன்றியத்தின் பெயர் மட்டும்தான் இருக்கிறது. 10 பஞ்சாயத்துகள் என்று இருக்கிறது. எந்த எந்தப் பஞ்சாயத்து என்று அவர்களிடத்திலே கேட்டிருக்கிறேன். இப்போது இரண்டு பஞ்சாயத்துகளையும் சொல்லியிருக்கிறார்கள். கூடுமானவரை, பேசி முடித்துத் தருவதற்கு, அந்தப் பஞ்சாயத்தினுடைய பெயரையும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், இங்கேயிருந்து அதிகாரி ஒருவரை இன்று இரவு அனுப்புகிறேன். அவர்

அங்கு சென்று எல்லா ஒன்றியங்களிலும், குறிப்பாக அந்த இரண்டு ஒன்றியங்களிலேயும் — அதாவது எந்த எந்தப் பஞ்சாயத்துகளில் இப்படி நடந்திருக்கிறது என்பதை விசாரிக்கச் சொல்லி இருக்கிறேன். அப்படி சம்பந்தப்பட்டவர்கள் யாராவது தங்களிடத்தில் தெரிவித்திருந்தால், அந்த விசாரணையின்போது, இந்த அதிகாரிதான் இப்படி என்னிடத்தில் சொன்னார் என்று நிச்சயமாகச் சொல்ல வேண்டும். காரணம், இப்படிச் சில காரியங்களை நாம் செய்கிறபோது, அங்கே அந்த அதிகாரிகள் சென்று, சொல்லாமலும் செய்து விடுகிறார்கள். நடவடிக்கை எடுக்க முடியாமல் திணறுகிற நிலை ஏற்படக்கூடும். ஆகையினால், யாருக்கும் எந்த ரூபாயும் பட்டுவாடா செய்யக்கூடாது என்றும் — எந்தப் பார்சல் வந்திருந்தாலும் — தார்பாலினை எடுக்கக்கூடாது என்றும் இங்கேயிருந்து தொலைபேசி மூலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அங்கு உத்தரவை பிறப்பித்தார்கள் என்ற செய்தியையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான நடவடிக்கைகள் நாளை காலையிலிருந்து, தொடங்கப்படும், கண்டிப்பாக விசாரணை வைப்பதற்கு, இந்த அரசு தயங்கவில்லை. விசாரிப்பதற்கு, குற்றஞ்சாட்டியவர்கள் ஒத்துழைப்புத்தர வேண்டும். எந்த அதிகாரி, யார் என்பதைத் திட்டவட்டமாக நேரில் நடைபெறும் விசாரணையின்போது சொன்னால், அதற்குரிய நடவடிக்கை உடனே எடுக்கப்படும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒன்றியத்தில் குமாரகுறிச்சி என்ற பஞ்சாயத்துத் தலைவர், இன்னும் 4, 5 பஞ்சாயத்துத் தலைவர்கள் தொலைபேசி மூலம் சொன்னார்கள். எங்களிடம் பணமே இல்லை, செக் கேட்கிறார்களே, நாங்கள் எங்கே போவது என்று சொன்னால், செக் மட்டும் கொடுங்கள், நாங்கள் பணம் வாங்கிக் கொள்கிறோம் என்று சொல்லி, செக்கையே ஒரு 10 பஞ்சாயத்திலே வாங்கிவிட்டார்கள். மற்ற பஞ்சாயத்துத் தலைவர்களை எல்லாம் அவர்கள் விரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் 13,000 ரூபாய்க்கு அவர்கள் எங்கே போவார்கள்? அது குறித்து மட்டும் ஒரு உத்தரவு போட்டு, இந்த செக்.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர்களிடத்திலேயே சொல்லி அதனுடைய நகலையும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்த காரணத்தினால், உடனடியாக அவர்



தொலைபேசியிலே தொடர்புகொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்லி, எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்த ஊரிலும், இதனை வாங்கக்கூடாது, ஒரு பைசா பணம்கூட அரசாங்கத்திலிருந்து கொடுக்கக்கூடாது என்று காலையிலே அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

இரண்டாவது, தமிழ்நாட்டிலே, எங்களுடைய பகுதியிலே, வேலூர் மாவட்டத்திலேயெல்லாம், இப்படி நடந்ததாகத் தெரியவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிற காரணத்தால், ஒரு 20 ஊரிலே கொடுத்திருக்கலாம்; அந்த 20 ஊரிலே கொடுத்திருந்தாலும்கூட, ஒரு தார்பாலின் 13,000 ரூபாய் என்றால் 20 தார்பாலின் 2,20,000 ரூபாய் ஆகிறது. இரண்டு ரூபாய் என்றால்கூட, தப்பு, தப்புதான். இந்த அரசாங்கம் அதை ஆதரிக்கவில்லை. ஆனால், அதில் 15 கோடி ரூபாய், ஏதோ ஊழல் நடந்தது என்று சொன்னார்கள், அவ்வாறு நடக்க இந்த அரசாங்கம் அனுமதிக்காது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இதை இலேசாக விட்டுவிட்டோம் என்றால் 13 ஆயிரம் பஞ்சாயத்துகள் இருக்கின்றன. 13,000 X 13,000 எவ்வளவு என்று பார்த்தால் 15 கோடி வருகிறது. அதற்காகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே உங்களுடைய வார்த்தைகளுக்கு மரியாதை கொடுத்து, உடனே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, நீங்கள் அடுத்த பிரச்சினைக்கு போங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** சரி. அடுத்தது கரும்பு விவசாயிகளைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகப் பேச வேண்டும். கரும்பு விவசாயிகள் விஷயத்தில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் பல விவசாயிகள் தற்கொலை செய்துகொள்வார்கள் என்பதை நான் மிகக் கடுமையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

18 தனியார் சர்க்கரை ஆலைகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. ஆரூரான் குரூப்பிலே, நான்கு; ஈ.ஐ.டி. பாரி குரூப்பிலே 4; சக்தி, தரணி அதிலே 2; பன்னாரி, பொன்னி, கோத்தாரி, ராஜஸ்ரீ, சௌத் இண்டியா, எஸ்.வி. ஷுகர்ஸ் என்று 18 ஆலைகள்தான். 10 பேர் முதலாளிகள்; 18 ஆலைகள். அங்கே என்ன செய்கிறார்கள் என்றால், நம்முடைய அரசாங்கம் ஏற்கெனவே கொடுக்கச் சொன்னதையும் கொடுக்கவில்லை. அரசாங்கம் ஏற்கெனவே அவர்களுக்கு என்ன சொன்னது என்று சொன்னால்,

1998-99 ஆம் ஆண்டு 8.5 சதவீதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு டன்னுக்கு ரூ. 702.50 காசு கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டது. அதுவும் இன்னும் கொடுக்கப்படவில்லை. 1999-2000-த்திலே 740 ரூபாய் என்று அரசு விலை நிர்ணயித்தது. அதுவும் இன்னும் விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை. அதன் பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 5-8-2000 அன்று 10 சதவீதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு 1,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள்; அதற்கு இன்னும் உத்தரவே வரவில்லை என்று சொல்கிறார்கள்.

பிற்பகல் 12-20

கரும்பு விவசாயிகள் படுகின்ற துயரம் என்பது சாதாரணமானது அல்ல. இதற்கு ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பணம் கொடுக்கச் சொல்ல வேண்டும். இதைக் கொடுக்க முடியாது என்று அவர்கள் சொன்னால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்க ஒரு முன்னுதாரணம் இருக்கிறது. உத்தரபிரதேசத்தில் ரமேஷ் பண்டாரி என்று ஒரு கவர்னர் இருந்தார். அரசாங்கம் இல்லாத நேரம் என்று நினைக்கின்றேன். அதாவது நம்முடைய நரசிம்மராவ் அவர்கள் காலத்திலே, அப்போது இந்தக் கரும்பு ஆலை முதலாளிகள் எல்லாம் அரசு நிர்ணயித்த விலையைக் கொடுக்க முடியாது என்று கோர்ட்டுக்குப் போனார்கள். உடனே, அந்த கவர்னர் என்ன செய்தார் என்றால், ஓர் அவசரச் சட்டம் போட்டு, ஜனாதிபதிக்கு அனுப்பினார். உடனடியாக அந்தக் கரும்பு ஆலை முதலாளிகள் எல்லாம் சரண்டர் ஆகி, அரசாங்கம் சொன்னதைச் செய்கிறோம் என்று ஒப்புக்கொண்டார்கள். அதுமாதிரி, நீங்கள் இப்போது இந்த 18 ஆலை அதிபர்களையும் உடனடியாக விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்கச் சொல்ல வேண்டும். கொடுக்காமல் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள் என்று நாம் சொல்லிக்கொண்டே இருப்பதில் அர்த்தமே கிடையாது. உடனடியாக ஓர் அவசரச் சட்டம் போட்டாவது இந்த விவசாயிகளுக்குப் பணத்தைப் பட்டுவாடா செய்வதற்கு இந்த அரசாங்கம் மிகத் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) பாக்கிப் பணம் நிறைய அப்படியே இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் கொடுக்காமல் அப்படியே பாக்கியாக இருக்கிறது. இதை detailed-ஆக எழுதி இருக்கிறார்கள். நான் உங்களிடம் அப்புறம் கொடுத்து விடுகிறேன்.



அடுத்தது, கொப்பரைத் தேங்காய்ப் பற்றி அமைச்சர் நேற்று விளக்கமெல்லாம் சொன்னார். இதிலே ரொம்பப் பெரிய மோசடி நடக்கிறது. எங்கள் ஊரிலே தென்னை மரம் என்பதே கிடையாது. ஏன் என்றால், அது வறட்சியான பகுதி. அங்கே ஒரு சொசைட்டி; என்னுடைய தொகுதியிலே ஒரு சொசைட்டி, இந்தக் கொப்பரைத் தேங்காயை வாங்குவதற்காகவே பதிவு செய்யப்பட்டதாகவும், அதிலேயிருந்து சான்றிதழ் பெற வேண்டும் என்றும் ஒரு பெரிய பேச்சு அடிபடுகிறது. அதுமட்டுமல்லாமல் உடுமலைப்பேட்டை தாலுகாவில் தென்னை சாகுபடியாளர்கள் எல்லாம் பெரிய கோரிக்கைகளையெல்லாம் வைத்திருக்கிறார்கள். இதிலே நடக்கிற கொள்ளை என்பது ஒரு சம்பந்தம் இல்லாத, விவசாயிகளுக்குத் தொடர்பே இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள். அதையெல்லாம் நான் அமைச்சரிடம் கொடுக்கிறேன். நான் உங்களுக்கு நேரடியாக இதிலே சம்பந்தம் என்று சொல்லவில்லை. ஆனால், இருக்கிற சொசைட்டி தலைவர்கள் பல தவறு செய்கிறார்கள் என்பதற்காக நான் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நெல்; நான் தஞ்சாவூருக்குக்கூடப் போயிருந்தேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், நெல்லை வைப்பதற்கு இடம் இல்லை. அவ்வளவு விளைந்திருக்கிறது; நம்முடைய தஞ்சைத் தரணியில். ஒன்று, நம்முடைய அரசாங்கமே அந்த நெல்லை வாங்கி அவர்களுக்கு ஒரு விடிவு காலத்தை உண்டாக்க வேண்டும். நல்ல விலை கொடுக்க வேண்டும். இப்போது ஆந்திரா அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்றால் எங்கே வேண்டுமானாலும் அவர்களுடைய நெல் செல்லலாம் என்று உத்தரவு போட்டுவிட்டார்கள். அதன் காரணமாக, நம்முடைய மாநிலத்திற்கு ஏராளமான நெல் வருகிறது. அது ஒரு வகையில் நல்லதுதான். விலைவாசி குறையும். அதே நேரத்திலே விவசாயிகளை நாம் காப்பாற்றியாக வேண்டுமில்லையா? இப்போது கேரளாவில் நம்முடைய நெல்லுக்கு ஏராளமாக கிராக்கி இருக்கிறது. ஒன்று, அரசாங்கமாவது வாங்கி கேரளாவிற்கு அனுப்ப வேண்டும், அல்லது அவர்களுக்காவது பர்மிட் கொடுத்து அந்த நெல்லை கேரளாவிற்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டையும் செய்யவில்லை என்றால், அந்த விவசாயிகள் என்ன பண்ணுவார்கள்? வெறும் நெல்லை வைத்துக்கொண்டு என்ன பண்ணுவது? விளைந்த நெல்லுக்கு விலை இல்லை; விற்பதற்கும் வழியில்லை. இப்படி ஒரு சூழ்நிலையை நம்முடைய அரசு பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது என்பதை மிக ஆணித்தரமாக நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளைந்த நெல்லை வாங்குவதற்கு வழியில்லை என்று சொன்னார்கள். நேற்று தமிழ்நாடு முழுவதும் 1998 ஆம் ஆண்டு எப்படி நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டதோ, அதேபோல் மாவட்ட ஆட்சித் தலைவரும் அங்கேயிருக்கின்ற நுகர்வோர் வாணிபக் கழகத்தினுடைய முதுநிலை மண்டல மேலாளரும் இணைந்து, அனைத்து இடங்களிலுமே, தமிழ்நாடு முழுவதும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்கச் சொல்லி அரசு ஆணையிட்டிருக்கிறது. அத்தனை இடங்களிலும் கூடுதல் தொகையும் வழங்கப்படுகிறது. ஏற்கெனவே ஏகபோக கொள்முதல் திட்டம் உள்ள இடங்களிலே மட்டும்தான் கூடுதல் தொகை வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது இணை கொள்முதல் நிலையங்களிலும், மற்ற இடங்களிலும், தமிழ்நாடு முழுவதும் அந்தக் கூடுதல் தொகையான 40 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையில்...

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு அமைச்சர் சொல்வது, அது ஒரு உதவிதான் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா, எப்படி என்று அதைச் சொல்லிவிட்டுப் பேசுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதாவது நம்முடைய விவசாயிகள் திருப்திப்படுகிற வகையில் நீங்கள் எது செய்தாலும் எனக்குத் திருப்திதான். அதுபற்றி ஒன்றும் இல்லை. என்னுடைய எண்ணம் அரசாங்கம் அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேற்றிலேயிருந்து எல்லா நெல்லையும் வாங்கச் சொல்லி உத்தரவு போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** உத்தரவு போட்டிருந்தால் மகிழ்ச்சி. நான் சென்ற வாரம் அங்கே போயிருந்தேன். இந்த வாரம் நீங்கள் அந்த உத்தரவைப் போட்டிருப்பீர்களேயானால் அதற்கு மகிழ்ச்சி. நன்றி.

கூட்டுறவுத் துறை பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்களே இங்கே சொன்னார்கள். கூட்டுறவிற்காகப் படித்திருக்கக்கூடிய பட்டதாரிகளுக்கெல்லாம் நேரடியாகக் கூட்டுறவுத் துறையில் வேலை



கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு, அரசாணையும் போட்டிருக்கிறார்கள். இந்த அரசுத் துறைகளிலேயே, நம்முடைய பேராசிரியர் அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். காரணம் என்னவென்றால், கல்வித் துறையைப் பொறுத்தவரையில் ஒருவிதமான ஊழலும் இல்லாமல் முறையாக ஆசிரியர் பணி நியமனங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் என்றால் நீங்கள் செய்கின்ற நல்ல காரியங்களைச் சொல்லாமல் இருக்கக்கூடாது. அது சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால், இந்தக் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டசபையிலே அறிவித்தும்கூட, உத்தரவு போட்டும்கூட, ஒரு இடத்தில்கூட அது அமல்படுத்தப்படவில்லை. 5,000-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருக்கின்றன. 15 ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். வேலையே கொடுக்கவில்லை. ஏனென்றால் உங்கள் உத்தரவை அமல்படுத்தமாட்டேன் என்கிறார்கள் இந்தத் துறையிலே. காரணம், அந்தக் கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் இதிலே தங்களுக்குப் பலன் இல்லையே என்று கருதுகிறார்கள் என்றும் நான் சந்தேகிக்கின்றேன். ஆகவே, தயவு செய்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி கூட்டுறவுத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற காலியிடங்களிலே வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பதிவு முன்னுரிமை அடிப்படையிலே வேலைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று அப்படி அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. இன்றுகூட, ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பை மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். பல இடங்களிலே Cadre strength இவ்வளவுதான் இருக்க வேண்டும். 3 சதவீதத்திற்கு மேல் செலவினம் இருக்கக்கூடாது என்று சொல்கின்ற இடங்களிலேயெல்லாம் ஏற்கெனவே 4 சதவீதம், 5 சதவீதம் என்று செலவை வைத்திருக்கிறார்கள். இப்போது நம் அரசாங்கம் கண்டிப்பாக 3 சதவீதத்திற்கு மேல் செலவு வரக்கூடாது என்கின்றபோது இந்த cadre strength அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஏற்கெனவே இருந்தவர் ரிட்டையர்ட் ஆகியிருந்தால்கூட புதியவரை எடுத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. அதனாலேதான் இப்போது செலவினத்தைக் கூடுதலாகக்கூட, 4 சதவீதம் என்கின்ற அளவிலேகூட வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வங்கிக்கும் தேவையான ஆட்கள் எவ்வளவு பேர் என்பதை

[திரு. கா.நா. நேரு] [2001 ஜனவரி 25

அங்கேயிருக்கின்ற இணைப் பதிவாளரோடு இணைந்து அதைத் தெரிந்துகொண்டு உடனடியாக வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக எடுத்துக்கொள்வதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஏற்கெனவே அரசாணையும் இடப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஆணையை அமல்படுத்தவில்லை என்பதுதான் என்னுடைய கோரிக்கையே தவிர ஆணை போடவில்லை என்று நான் சொல்லவில்லை.

அடுத்தது, Model Act என்பதை நீங்கள் 5 ஆண்டு காலமாகியும்கூட, கொண்டுவரவில்லை. ஆந்திராவிலே மட்டுமல்ல, பீகாரிலும்கூட இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டார்கள். பீகார்தான் இருக்கிறதிலேயே ஒரு மிகவும் மோசமான அரசாங்கம் என்று சொல்வார்கள். அங்கேயே இந்தச் சட்டம் வந்துவிட்டது. பல மாநிலங்களில் இந்த Model Act-ஐச் சிறப்பான முறையிலே கொண்டு வந்துவிட்டார்கள். ஏன், இங்கே இந்த Model Act-ஐக் கொண்டு வரமாட்டேன் என்று சொல்கிறீர்கள்? இந்தக் கூட்டுறவுத் துறையைச் செம்மைப்படுத்த வேண்டும்.

இதுகுறித்து, திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மிகவும் அருமையாகப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய மறைந்த பாரதரத்னா சி. சுப்பிரமணியம் அவர்கள், 'இந்த நாட்டிலே வெள்ளைக்காரர்கள் காலத்திலே ஒரேயொரு நல்ல காரியம் மிகச் சிறப்பாக நடந்தது என்று சொன்னால் அது கூட்டுறவுத் துறைதான். அந்தக் கூட்டுறவுத் துறை இப்போது அரசியல்வாதிகளாலும், அதிகாரிகளாலும் பாழ்பட்டுப் போய்விட்டது என்பதை நான் கண்ணீர் வடித்துச் சொல்கிறேன்' என்று மிக வேதனையோடு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனாலே, இந்த Model Act-ஐ உடனடியாக, இப்போதே நீங்கள் அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்புறம், இந்த நிதி நிறுவன மோசடி இருக்கிறதே, இந்தமாதிரி ஒரு மோசமான மோசடி நடந்தது இந்தியாவிலே வேறு எங்கேயும் கிடையாது. இதற்கு நாங்கள் சட்டமன்றத்திலேயே பேசினோம். முதலமைச்சர் அவர்கள் உடனே தனி கோர்ட் எல்லாம் போட்டார்கள். ஆனால் யாருக்கும் எந்த இலாபமும் வரவில்லை என்று நாள்தோறும் பத்திரிகையிலே செய்தி வந்துகொண்டிருக்கிறது. கடிதங்கள் எழுதுகிறார்கள். அந்தத் தனி கோர்ட்டுகளெல்லாம் என்ன செய்கின்றன? ஏன் அவர்களுக்கெல்லாம் உடனடியாக பணத்தை வசூல் செய்து கொடுக்கவில்லை என்பதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2001 ஜனவரி 25]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு தனியார் நிதி நிறுவனங்கள் செய்த மோசடியைக் கண்டுபிடித்து, சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து, அவர்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்து, பெரிய, பெரிய முதலாளிகளையெல்லாம்கூட சிறைச்சாலையிலே தள்ளி, 250 கோடி ரூபாய் அளவிற்கு இன்றையதினம் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நீதிமன்றங்கள் பெற்றிருக்கின்றன. அதைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் பிரித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பாராட்டி பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இந்த அளவிற்கு வந்திருக்கிறது, இன்னும் முழுப் பணத்தையும் வாங்கித்தர வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறார்கள்.

பிற்பகல் 12-30

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்தபடியாக தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் மாநாட்டிலே என்ன சொன்னார்கள் என்றால், அதுசம்பந்தமாக கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது, அந்த வழக்கு முடிந்துவிட்டால் உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருகிறேன் என்று சொன்னார்கள். வழக்கு முடிந்து இப்போது அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்திருக்கிறது. ஆகவே, அதை உடனடியாக நிறைவேற்றி, பாதிக்கப்பட்ட அந்த அப்பாவி ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கள்ளச்சாராயம் என்பது இன்று நாட்டிலே மிகவும் சாதாரணமாகப் போய்விட்டது. இதிலே பாருங்கள், 2 அப்பாவிப் பெண்களைக் கள்ளச்சாராய வியாபாரிகள் அடித்தே கொன்றிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக இன்னும் யாரையும்கூட, சரியான முறையிலே, தண்டனை அளிக்க எதிரிகளைக்கூட பிடிக்கவில்லை என்று குற்றச்சாட்டு இருக்கிறது.

இந்த நாட்டில் போலீஸ் துறை என்பது சிறந்த துறையாக இருந்த ஒரு காலம் மாறி, இன்று இந்த அவையிலேயே கேலியும், கிண்டலும் செய்கின்ற வகையில் இருக்கிறது. நம்முடைய வீரப்பன் மாவீரனாகப் போய்விட்டார். நம்முடைய நெடுமாறன் அவர்கள், என்னுடைய அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் நன்றாகச் சொல்கிறார் நான் அழைத்துவந்து

உங்களிடம் விடத் தயார், என்னுடைய கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா என்று பலதடவை சவாலே விட்டுவிட்டார். ஏன் இதற்கு நீங்கள் பதிலே சொல்லமாட்டேன் என்கிறீர்கள்? நெடுமாறனைக் கண்டு பயப்படுகிறீர்களா, அல்லது வீரப்பனைக் கண்டு பயப்படுகிறீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. அவர் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இரண்டு பேரையும் பார்த்து இந்த அரசாங்கம் பயப்படவில்லை. அவர் என்ன சொல்கிறார் என்றால் அவருக்குப் பொது மன்னிப்புக் கொடுத்தால் நாங்கள் அதைச் செய்கிறோம் என்று சொல்கிறார். பொது மன்னிப்புக் கொடுப்பது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. இரண்டு மாநில அரசுகளும் ஒத்துக்கொள்ள வேண்டும்; நீதிமன்றங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். நீதிமன்றங்கள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கே தெரியும். எதைச் செய்தாலும் உடனடியாக உச்சநீதிமன்றம் வரையிலே பாதிக்கப்பட்டவர்கள் சென்று தடை உத்தரவைப் பெறுகிறார்கள். எனவே இப்படிப்பட்ட சிக்கல்களாலேதான் — பொது மன்னிப்பு வழங்குவது என்பது நாம் எடுக்கக்கூடிய முடிவு அல்ல — நாங்கள் அதிலே அக்கறை காட்டவில்லை.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார், உட்காருங்கள். திரு. சோ. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இல்லை, அவர் முக்கியமாக ஏதோ சொல்ல நினைக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதுதான் முக்கியம் எங்களுக்கு. சரி, டாக்டர் செல்லக்குமார் பேசுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். நெடுமாறன், வீரப்பனுக்குப் பொது மன்னிப்புக் கொடுத்தால் நான் அழைத்து வருகிறேன் என்று சொன்னதாகச் சொல்கிறார்கள். எங்களுடைய கேள்வியே அதுதான். பொது மன்னிப்புக் கொடுப்பதாக இருந்தால் அழைத்து வருகிறேன் என்று சொல்கிற வீரப்பன் எங்கே மறைந்திருக்கிறான் என்பதைத் தெரிந்து வைத்திருக்கிற நெடுமாறனை நீங்கள் ஏன் விசாரணை



செய்யவில்லை என்பதுதான். நீங்கள் நெடுமாறனைக் கைதுசெய்து வீரப்பன் எங்கே இருக்கிறார் என்பதை அவரிடமிருந்து கண்டுபிடிப்பதற்கு ஏன் முயற்சி செய்யவில்லை என்பதுதான். ஏனென்று சொன்னால் விஞ்ஞான ரீதியாக மனிதனைக் கண்டுபிடிப்பதற்குக்கூட கம்ப்யூட்டர் மூலமாக அடையாளம் தெரிந்துகொள்கிற அளவுக்கு ஆற்றல் இன்றைக்கு வளர்ந்திருக்கிறது; விஞ்ஞான ரீதியாக வளர்ந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது நெடுமாறனிடமிருந்து ஏன் அந்த உண்மையைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சாதாரண சங்கதி; வீரப்பனைக் காணப் போவதாக உள்ளவர்கள், போனால் — ஏற்கெனவே அரசு அனுப்பியவர்கள்கூட — அவன் இருக்கின்ற இடத்திற்கு அவர்களை அழைத்துக் கொண்டு போனால்தான் காணமுடியும். ஆகவே பொது மன்னிப்பு என்ற செய்தி வெளிப்படுமானால், அப்படி ஒரு கருத்து வெளியிலே வந்து அது நிறைவேறும் என்ற நம்பிக்கை இருந்தால், அப்போதுதான் அவன் இருக்கிற இடத்தைக் காட்டுவானே தவிர நெடுமாறனே போய் சத்தியமங்கலம் ரோட்டிலே நின்றால்கூட அவனைக் கண்டுபிடிக்க முடியாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நேற்றுகூட நம்முடைய திருவாடனை சட்டமன்ற உறுப்பினர் இங்கே பேசினார். தேவகோட்டையிலே ஒரு கோவில் ஐயர், பட்டு ஐயர் என்று சொல்லக்கூடிய ஒரு அர்ச்சகரை — பட்டு குருக்கள் — கொலை செய்து 2 வருடம் ஆயிற்று என்று நாங்கள் முதலமைச்சர் அவர்களிடம் போய் நேரடியாகச் சொன்னோம். அவர் உடனடியாக போலீஸ் அதிகாரிகளுக்குச் சொல்லி சி.பி.சி.ஐ.டி.-யிடம் உடனே விசாரியுங்கள் என்று சொன்னார்கள். இது ஏன் இன்னும் இவ்வளவு நாளாகிறது என்று தெரியவில்லை. பட்டு ஐயரைக் கொலை பண்ணியவர் யார் என்று ஊரெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது போலீஸ்காரர்களுக்கு மட்டும் அது தெரியமாட்டேன் என்கிறது. இதிலெல்லாம் கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டும். ஏனென்றால் பட்டு குருக்கள் என்பவர் யாருக்கும் எந்தவிதமான துன்பங்களும், துயரங்களும் தராத ஒரு அப்பாவி சமுதாயத்தைச் சேர்ந்த, அனைவராலும் பாராட்டப்படக்கூடிய ஒரு மனிதர். அவருக்கே இந்தத் துன்பம் வந்துவிட்டதே என்று வேதனையோடு எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக எல்லோரும் சேர்ந்து ஒரு நாள் பந்த் நடத்தினார்கள். பந்த் நடத்திய உடனே போலீஸ்காரர்களுக்கு மிகவும்

கோபம் வந்துவிட்டது. உடனே ஆசிரியர் ஒருவர் அதற்கு ஏற்பாடு பண்ணினார் என்று சொல்லி அவர் மேலே ஒரு Untouchability Act-ல் P.C.R. Act-ல் வழக்குப் போட்டார்கள். அந்த ஆசிரியர் எழுதிக் கொடுத்ததைக்கூட அமைச்சரிடம் கொடுத்தேன். அவர் தன்னுடைய மகனைக்கூட பள்ளியிலே சேர்க்கிறபோது எனக்கு சாதி கிடையாது என்று சொன்ன மிகப் பெரிய தீவிரவாதி. பெரியாருடைய உண்மையான பக்தர். அவர்மீது போய் P.C.R. Act-ல் கேஸ் போட்டிருக்கிறார்கள். இன்னும் நிறைய பேர்மீது கேஸ் போடப்போகிறோம் என்றும் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றிலே எல்லாம் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

ஏராளமான வாரியங்கள் அமைத்திருக்கிறார்கள். மண்பாண்ட வாரியம்; அந்த இன்விடேஷனி-லே என்ன போடப்பட்டிருக்கிறது என்றால், மண்ணில் பானை செய்யக்கூடியவர்கள் படத்தைப் போட்டு இருக்கிறார்கள். ஆனால் அந்த மண்பாண்ட வியாபாரிகளுக்கு மட்டும் வாரியம் அமைக்கவில்லை. இது என்ன? அந்த இன்விடேஷனைப் பார்த்தீர்கள் என்றால் — அந்த இன்விடேஷனை நான் உங்களுக்குக் காண்பிக்கிறேன். இன்விடேஷனிலே பாருங்கள் — மண்பாண்டங்களைப் பண்ணக்கூடியவர்களைப் படமாகப் போட்டுவிட்டு, அந்த மண்பாண்ட வியாபாரிகளுக்கு மட்டும் வாரியம் அமைக்கவில்லை....

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் படம் போட்டிருப்பதற்குக் காரணம், அந்தத் தொழில் செய்பவர்களும் அந்த வாரியத்திலே இருக்கிறார்கள் என்பதற்காகத்தான். கைவினைஞர் தொழில்கள் என்று பெயர்; மொத்தம் 64 தொழில்கள் இருக்கின்றன. அதையே இன்னும் அதிகமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த 64 தொழில்களிலே இருப்பவர்களுக்கும் 64 வாரியங்கள் கொடுக்க முடியாது. கைவினைஞர் தொழிலாளர்களுக்கு என்று ஒரு வாரியம் கொடுத்திருக்கிறோம். அதிலே இந்த மாதிரி, பொற்கொல்லர்கள், மண்பாண்டங்கள் செய்பவர்கள் ஆகிய இவர்கள் எல்லாம் அந்த வாரியத்திலே வருவார்கள். அதனால் அதை அதிலே படமாகப் போட்டுக் காண்பித்திருக்கிறார்கள். இதிலே ஒன்றை மாண்புமிகு உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது எல்லோருமே தனித் தனி வாரியம் வேண்டும்



என்று கேட்கிறார்கள். அப்படித் தனித் தனி வாரியம் வேண்டும் என்ற கோரிக்கைபற்றி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எல்லா தொழிலாளர்களும் இப்போது டிமாண்டு வைக்கிறார்கள் தங்களுக்குத் தனித் தனியாக வாரியம் வேண்டும் என்று. அதனாலே, எந்தவிதமான பிரயோசனமும் கிடையாது. ஏனென்றால், முதலிலே எப்படி இருந்தது என்று சொன்னால், கட்டுமானத் தொழிலாளர்களுக்குத் தரும் சில சலுகைகள் மற்றவர்களுக்கு இல்லை என்று இருந்தது. இப்போது எல்லா தொழிலாளர்களுக்கும் ஒரே மாதிரி சலுகைகள்தான். அதனாலே தனித் தனி வாரியங்களாக அமைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அப்படியென்றால், ஏன் 12 அமைத்தீர்கள் என்றுகூடக் கேட்கலாம். ஆரம்பத்தில் அந்தச் சூழ்நிலை இருந்த காரணத்தினாலே கேட்பவர்களுக்கேற்ப கொடுத்திருந்தோம். இந்த 12 வாரியங்களிலே எல்லா தொழில்களும் உள்ளடங்கும். அதனாலே, தனித் தனி வாரியங்களாக அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைப்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர்கள் ஆகிய நீங்கள் மட்டுமல்ல, அந்தத் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் விட்டுவிட வேண்டுமாய் உங்கள் மூலமாக அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இப்போது அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. அந்த மண்பாண்டத் தொழிலாளர்களுக்கும் அதில் பங்கு உண்டு என்று உத்தரவாதம் கிடைத்தால் போதும். அவர்களுக்கு வேண்டியது மண்பாண்ட வாரியம்தானே தவிர வேறு ஒன்றும் இல்லை. அவர்களையும் சேர்த்துவிட்டால் மிக்க மகிழ்ச்சி.

பார்வையற்றவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு மாநாடு கன்னியாகுமரியில் நடத்தினார்கள். 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையிலேகூட உண்ணாவிரதம் இருந்தார்கள். நான் போய் அந்த உண்ணாவிரதத்தை முடித்துவைத்து, நீங்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டாம். நான் சட்டமன்றப் பேரவையிலே பேசுகிறேன் என்று சொல்லி, சட்டமன்றத்திற்கு வந்து கோரிக்கையை வைத்தேன். அப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இந்தப் பார்வையற்றவர்கள்கூடவா என்னை எதிர்த்துப் போராட வேண்டும்? நான் செய்ய மாட்டேனா என்று சொன்னார்கள். அப்போது நான் சொன்னேன், உங்களுக்கு எதிராக

அவர்கள் போராடவில்லை, அவர்களுடைய கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள், அந்தக் கோரிக்கை மனுவை உங்களிடம் கொடுக்கிறேன் என்று சொன்னேன். அவை நியாயமான கோரிக்கைகள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன ஹாஸ்டலில் உள்ள சமையல் பண்ணுபவர்களுக்கு 2,500 ரூபாய் சம்பளமாம்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஹாஸ்டலில் சமையல் பண்ணுபவர்களுக்கு 500 ரூபாய் சம்பளமாம். இது என்ன நியாயம்? நம்முடைய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சி.ஐ.டி. நகர் என்று சென்னையிலே ஒரு நகர் இருக்கிறது. நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக வந்தவுடன் ஏழைகளுக்காகக் கட்டிக்கொடுக்கப்பட்ட அந்த வீடுகளை, எல்லா குடிசைவாழ் மக்களுக்கும் இலவசமாகக் கொடுத்ததுபோல, இவர்களுக்கும் அந்த வீடுகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு விசைத்தறி. இன்று நூல் விலை கூடியதன் காரணமாக மிக மோசமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கும் ஒரு தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நம்முடைய கணேசன் அவர்கள் இங்கே கூட்டணி பற்றியெல்லாம் பேசினார்கள். டாக்டர் ராமதாஸ் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. காரணம், இந்தத் தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளுக்கும் சென்று, மாநாடுகள் நடத்தி, மக்களுடைய பிரச்சினைகளை மிக நன்றாக, தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பவர்கள். அவர் நம்முடைய அரசாங்கத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அது கல்கி பத்திரிகையிலே வந்தது. அதை மட்டும் படித்துவிடுகிறேன். "கலைஞர் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார். ஆனால் அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. திட்டங்களின் பலன் மக்களுக்குச் சென்றடையவில்லை. திருமண உதவித் தொகை கேட்டால், குழந்தை பிறந்த பிறகுதான் வந்து சேர்கிறது. கிராமங்கள் இன்னமும் முன்னேறாமல்தான் இருக்கின்றன. எனது சொந்தக் கிராமமான கீழ்ச்சிவிரியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் கிடையாது. சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் கலைஞர் அரசின் செயல்பாடுகளில் வேகம் கிடையாது.



பிற்பகல் 12-40

போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் பெரிய ஜீரோ! 50 சதவிகித மக்களுக்குத்தான் போக்குவரத்து வசதி கொடுக்கப்படுகிறது. நீலகிரி போன்ற மலைப் பகுதிகளில் மக்கள் பஸ்களுக்காகப் படும்பாட்டைச் சொல்ல முடியாது. நெடுஞ்சாலைகளில் நடைபெறும் விபத்துக்களைத் தடுக்க எந்த நடவடிக்கையும் கிடையாது. கிராமங்களில் சிமெண்ட் சாலைகள் போடுவதற்குக் காரணம் 10 சதவிகித கமிஷன்தான்! கொஞ்சம் ஆறுதலான விஷயம் சமத்துவபுரங்களும், உழவர் சந்தைகளும்தான். அதிலும் சில சமத்துவபுரங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகள் தரத்தில் மிக மோசமாக இருக்கின்றன.

விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைக்கவில்லை. காவிரி தண்ணீருக்குப் போராடிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு வருடமும் கடலில் நிறைய நீர் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க நடவடிக்கை இல்லை. சமூக ரீதியில் இன்னமும் அக்கறை காட்டலாம். வீரப்பன் விவகாரத்தில் தமிழக அரசு நடந்து கொண்ட விதம் இதுவரை சரி. ஆனால் கர்நாடக முதல்வர் கிருஷ்ணா எல்லோரையும் கலந்து ஆலோசிக்கிறார். கலைஞர் குறைந்தபட்சம் கூட்டணிக் கட்சிகளைக்கூடக் கலந்து ஆலோசிக்கவில்லை" என்று சொல்லிவிட்டு, இறுதியாக அவர் ஒரு ஜட்ஜ்மெண்டே சொல்கிறார். என்ன சொல்கிறார் என்றால், "1962-67இல் காங்கிரஸ் ஆண்டு கொண்டிருந்தபோது அதை மாற்ற வேண்டுமென்ற வெறி மக்களிடம் இருந்தது. இப்போது காங்கிரஸ், தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. ஆட்சியை மக்கள் பார்த்தாகிவிட்டது. ஒரு மாற்றத்தை மக்கள் விரும்புகிறார்கள். ஒரு புதிய கட்சி ஆட்சிக்கு வர வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். அந்த எதிர்பார்ப்புக்கு ஏற்ப பா.ம.க. நடந்து கொள்ளும்" என்று. அந்தப் புதிய கட்சி தமிழ் மாநிலக் காங்கிரஸ்தான் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானம் இந்த அவையில் பரமக்குடி திரு. சுப. தங்கவேலன் அவர்களால் முன்மொழியப்பட்டு திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களால் வழிமொழியப்பட்டு, 32 உறுப்பினர்கள் பங்கேற்று, இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் உரையாற்றி, அதற்கு விடையளிக்க வேண்டிய பொறுப்பில் நான் இருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு சில நாட்களாக ஒரு தளர்ச்சி; நின்று நெடுநேரம் பேச முடியாத ஒரு நிலை. ஆகவே, டாக்டர்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதுதான் பெரிய மருந்து என்று தெரிவித்து இந்த 3 நாட்கள் கட்டாயம் நீங்கள் எழுந்து நின்று பேச வேண்டாமென்று அவரைக் கேட்டுக் கொண்டதன் காரணமாக அவர் இந்த விடையளிக்கிற பொறுப்பை, இந்த அவை ஏற்றுக்கொள்ளும் என்று நம்பி, முன்னவர் என்ற முறையிலே என்னிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். அவர் பதில் சொல்கிற அந்த வகையில், அந்த அளவில், அந்த முறையில், அந்தத் தரத்தில் நான் பதில் சொல்லக்கூடியவன் அல்ல என்பதை நான் அறிந்திருக்கிறேன். அதற்கு இரண்டு மூன்று காரணங்கள். உங்களுக்குப் பதில் சொல்லியே அவர் பழக்கப்பட்டவர். நான் அப்படிப் பழக்கப்பட்டவன் அல்ல.

பிற்பகல் 12-45

அடுத்து, இந்தத் துறைகளையெல்லாம் நிர்வகிக்கிறபோது, ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு துறையைப் பற்றியும் ஒவ்வொரு முறையிலே விசாரணை நடத்தி, செயல்பாடுகளை விரைவுபடுத்துகிற அந்தக் கடமையை, நான் இதுவரையில் அறிந்த எந்த முதலமைச்சரையும்விட (மேசையைத் தட்டும் ஒலி) அதிக அளவில், அதிலும் கல்வி அமைச்சர் அன்பழகனை என்னுடைய இணையாக, மூத்த தோழராக, சகோதரராகக் கருதுகிறேன் என்று சொல்லிவிட்டு, என்னையும் காரணம் கேட்கக்கூடிய அளவுக்குச் செயல்பாடுகளிலே மிகுந்த அக்கறையோடு திட்டங்களை நிறைவேற்றுவதிலே ஒவ்வொரு துறையும் சுணங்கிவிடக் கூடாது என்று அத்தனை அமைச்சர்களுடைய துறைகளையும், மாதந்தோறும் திட்டப் பணிகள் ஆய்வு என்று அந்தந்த அமைச்சர்கள் நடத்தி, அந்த ஆய்வு அறிக்கை அவருக்குச் சென்று, அதற்கு ஒரு ஆய்வு நடத்தப்பட்டு, அந்தக் குறிப்புகளை அவர் பார்த்து, அமைச்சர்களைக் கேட்கிற அளவுக்குச் செயல்படுகிறவர் கலைஞர் அவர்கள். உங்களுடைய பேச்சு ஒன்றாக இருந்து, எண்ணம் ஒன்றாக இருப்பினும் அந்தப் பேச்சுக்கும், எண்ணத்திற்கும் சேர்த்து பதில் சொல்லக்கூடிய அந்த அளவுக்கு ஆற்றலுடையவர் மாண்புமிகு முதலமைச்சர். அவர்களுடைய இடத்தில் நான் பதில் சொல்கிறேன் என்றால் என்னுடைய பதில் அவ்வளவு நிறைவான திருப்தி அளிக்காவிட்டாலும், உங்களுக்கு வேறு வழியில்லை என்ற காரணத்தால் (சிரிப்பு) இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் முன்கூட்டியே நன்றி தெரிவிப்பதற்காகக் கேட்டுக்கொள்கிறேன்.



மற்றும் ஒன்று, இந்த அவையில் ஆளுநர் உரையின்மீது திரு. பழனிசாமி அவர்கள், அதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எல்லாம் பல கருத்துகளைத் தெரிவித்தார்கள். திரு. பழனிசாமி அவர்கள், ஆளுநர் உரை அவசியமே இல்லை என்றார். ஒருவேளை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி வந்தால் ஆளுநர் உரை அவசியம் இல்லாமல் போகிற ஒரு காலம் வரலாம். ஆனால், கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகிற மாநிலங்களில் எல்லாம் ஆளுநர் உரையோடுதான் அவைக்கூட்டம் தொடங்குகிறது. ஒரு அரசாங்கம், சட்டமன்றத்தின் ஒரு கூறாக இருக்கிற வகையில், சட்டமன்றத்தோடு சேர்த்து இணைக்கப்பட்ட நிலையிலே ஆளுநர் இருக்கிறார். ஆகவே, மாநிலச் சட்டமன்ற ஜனநாயக மரபு முறைகள் அடிப்படையில், ஆளுநரை வைத்துத்தான் சட்டமன்றத்தின் ஒரு ஆண்டின் பணி தொடங்கப்படவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட, நடைமுறைப்படுத்தப்பட்ட ஒன்று. அந்த முறையில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துகின்ற அந்தக் கடமையை அவர்கள் நிறைவேற்றவேண்டுமென்ற முறையில், இந்த உரை உங்கள் மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது.

ஆளுநர் உரை என்று மதிப்போடு குறிப்பிட்டாலும்கூட, ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தைப் பிரதிபலிப்பதாகத்தான் இருக்க முடியும். பிரதிபலிக்காவிட்டால், ஆளுநர் வேறு, அரசாங்கம் வேறு என்ற நிலைமை ஏற்படுமானால், ஜனநாயக நடைமுறை வெற்றிபெறாது.

ஜனநாயகத்திலே மைய அரசினுடைய இறையாண்மையின் ஒரு சின்னமாகத்தான் ஆளுநர் அவர்கள் இங்கே அமருகிறார்கள். தவிர, ஆளுநர் வேண்டுமா, வேண்டாமா என்பதெல்லாம் கொள்கை வேறுபாடுகள். நடைமுறையிலே அவர்கள் இறையாண்மையினுடைய ஒரு சின்னமாக இருக்கிற ஒரு நிலை காரணமாக, நம்முடைய சட்டமன்றம், முறைகளை மதிக்கின்ற ஒரு சட்டமன்றம் என்ற அடிப்படையில், முறைகளை மதிப்பதனாலேதான் ஜனநாயகம் காப்பாற்றப்படும் என்ற அடிப்படையில், ஒரு ஆளுங்கட்சி தன்னைக் காப்பாற்றிக் கொள்வதைவிட, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதுதான் நாட்டினுடைய எதிர்காலத்திற்கு நல்லது என்ற அடிப்படையில் ஆளுநர் உரையோடு தொடங்கப்பட்டிருக்கிறது.

ஆளுநர் உரை பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளியில் சொல்கிறபோது, உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று சொன்னார்கள் என்பதை நான் குறிப்பிலே பார்த்தேன். அது அவர்கள் எளிதாகச் சொன்ன ஒன்று. ரொம்ப கோபம் வரவில்லையென்றால் உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று சொல்வது வழக்கம். அதாவது அவருக்குக் கோபம் வரவில்லை என்று தெரிகிறது. (சிரிப்பு) ஆனால், உப்பு கொஞ்சம்

அதிகம் போட்டுவிட்டால் சப்பமுடியாது. (சிரிப்பு) ஆகவே அது ஒரு வழக்கத்திலே சொல்கிற சொல்லாக வந்துவிடுகிற காரணத்தால் அதனுடைய பொருள் தெரியாமலேயே நாம் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறோம். அது அவ்வளவு பயன் உடையதாக இல்லை என்ற கருத்தை, பாலகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அதற்காக ஒன்றும் அவர் கடுமையாக இந்த அரசை மாறுபட்ட நோக்கத்தோடு பார்ப்பதாக என்னால் கருத முடியவில்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பேசுகிறபோது அறிந்த இரண்டு உண்மைகளை நான் இந்த அவையில் உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்று, எதிர்க்கட்சி என்ற எண்ணத்தோடு யாரும் பேசவில்லை. ஒரே ஒருவர்தான் பேச முயற்சித்து, என்ன சொல்கிறார் என்று அவருக்கும் தெரியாமல், நமக்கும் தெரியாமல், அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டதே தவிர, மற்றவர்கள் எல்லாம் ஒரு அரசாங்கத்தை விமர்சிக்கிறபோது தங்கள் தங்கள் நிலையிலிருந்து எதையெதைச் சொல்லவேண்டுமென்ற நிலைமை இருக்கிறதோ அந்தக் கருத்துகளை, குறைகளைச் சொன்னார்கள். அதிலே மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்ற ஒன்று, அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசுகிறோம் என்ற அந்த நிலையில் அல்ல; குறுக்கிட்டுப் பேசுகிறோம் என்றால், உறுப்பினர்களைப் பேசவிடக்கூடாது என்பதற்காக குறுக்கிடுவது என்ற அந்த நோக்கத்திலே அல்லாமல், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் சொல்கின்ற கருத்துகளில், தங்கள் தங்கள் துறைகளிலேயிருந்து என்ன விளக்கம் சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோமோ, நாளை கேள்வியாக எழுப்பினால் அதற்கு என்ன பதில் சொல்லவேண்டுமோ, அந்தப் பதில்களைத்தான் சொல்கிறோம். அப்படிச் சொல்லாமல் விட்டுவிட்டு, இறுதியாக முதலமைச்சரோ, அவை முன்னவரோ பதில் சொல்கிறபோதும், தெளிவு அளிக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய் அதனால் அந்தப் பிரச்சினை அப்படியே, எழுப்பப்பட்ட பிரச்சினையாக நின்றுவிடக் கூடும். அவ்வாறு நின்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் எந்த அளவுக்கு எங்களால் விளக்கம் சொல்ல முடியுமோ அந்த நல்ல எண்ணத்தோடுதான் அமைச்சர்கள் எல்லாம் விளக்கம் சொல்லியிருக்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர்களோ, எதிர்க்கட்சி உறுப்பினர்களோ பேசுவதைத் தடை செய்யவேண்டுமென்ற நோக்கம் இந்த அவையில், இந்த ஐந்தாண்டு காலத்தில், என்றைக்கும் இருந்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). எவ்வளவு ஆழமான கருத்து அல்லது அதிக மாறுபாடு எழக்கூடிய கருத்து எழுப்பப்பட்டாலும்கூட அந்தக் கருத்தும் பதில் சொல்லப்படவேண்டிய கருத்து என்ற உணர்வோடுதான் கலைஞருடைய



அரசு இந்த ஐந்தாண்டு காலம் தொடர்ந்து செயல்பட்டு வந்திருக்கிறது என்பதை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெருமை என்ற முறையில் கூட இல்லாமல், ஜனநாயகத்தில் எங்களுக்கு இருக்கிற ஈடுபாட்டினுடைய விளைவு என்பதையும் இந்த அவையில் மாற்றுக் கட்சி உறுப்பினர்களும் மனதார ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் நடைபெற்று வந்திருக்கிறோம் என்பதையும், இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

இன்னும் ஒன்று. நான் முதலிலே சொன்னாலும்கூட, இப்போதும் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் உரை என்பது, அரசாங்கத்தைத்தான் பிரதிபலிக்க முடியுமே தவிர, வேறுவிதமாக இருக்கமுடியாது. எந்த மாநிலத்திலும், எந்த ஆளுநர் உரையிலும் மாறுபாடு வருமானால் ஆளுநர் உரையே நடைபெறாது. ஆகவே, ஒரு மாநிலத்தில் அல்லது அரசாங்கத்தில் ஒரு மாறுபட்ட சூழ்நிலை ஏற்பட்டால்தான் அந்தப் பிரச்சினையெல்லாம் வரும். அப்படி ஒரு நிலையை ஏற்படுத்திக்கொள்ள இந்த அரசு விரும்பவில்லை.

ஜனநாயகம் இயங்க இயங்கத்தான் செம்மை என்பது மெல்ல மெல்ல மலரும். செம்மை என்பது ஒரே நாளில் வந்துவிடாது. அதுவும், கடந்த ஐந்தாண்டு காலம் நடைபெற்ற ஆட்சியினால் ஏற்பட்ட கேடுபாடுகள்பற்றி என்னைவிட திரு. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நாம் பத்திரிகையிலே படிக்கிறோம்; அவர் நேராகவே அனுபவித்தவர். ஆகவே, அப்படிப்பட்ட கேடுபாடுகளிலேயிருந்து ஓர் அரசாங்கத்தை, சகதியிலே சிக்கிவிட்ட வண்டியைக் கரையேற்றி ஓட்டுகின்ற ஒரு பொறுப்பிலே வருகின்றவர்கள், சகதியிலே இருந்து வெளியே கொண்டுவந்துவிட்டார்களானால், அதற்குப் பின்னரும் சக்கரத்திலே சகதி ஒட்டியிருக்கத்தான் செய்யும். சக்கரத்திலே ஒட்டியிருக்கிற சகதியைப் பார்த்து, சக்கரத்திலே சகதி இருக்கிறது, சகதி இருக்கிறது என்றால், அது கிடந்தது சகதியிலே; தற்போது வெளியே வந்திருக்கிறது.

இப்போதுகூட நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், டாக்டர் ராமதாஸ் அவர்கள் கொடுத்த அறிக்கையிலே சொல்லப்பட்ட செய்திகளை எடுத்துச் சொல்லி, இந்த அரசாங்கம், முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள் எல்லாம் செயல்பட்டாலும்கூட, அரசு அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை, அதைச் செயல்படுத்தவில்லை என்று சொன்னார்கள். அதற்குக்கூட இரண்டு விளக்கங்கள். ஒன்று, இந்த அதிகாரிகளில் பலபேர் கடந்த கால ஆட்சியிலே இடம்பெற்றவர்கள். அதிலே இலாபம் பெற்ற பல பேர் இருக்கிறார்கள். அவர்களில் இந்த அரசு வந்ததிலேகூட

திருப்தியில்லாதவர்கள் சிலபேர் அடிமட்டத்திலே இருக்கிறார்கள். சில கிராம அலுவலர்களில் அந்த ஆட்சியிலே நாங்கள் வைத்ததுதான் சட்டம்; இந்த ஆட்சியிலே, இடையிலே கோ.சி. மணி குறுக்கிடு இருக்கிறது என்று குறைபடுகிற அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். உள்ளாட்சி மன்றமோ அல்லது மக்களிடத்திலே பழகுகின்ற அமைச்சர்களோ, இவர்களுடைய போக்கை ஆதரிக்காத காரணத்தினால், அதுவே ஒரு வெறுப்பாக வளர்ந்துள்ளது. இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டு அரசியலிலேகூட, சில இணைப்புகள் ஏற்படுவதிலேகூட, அவர்களிலே சிலபேர் அக்கறையாக இருக்கிறார்கள். ஆகவே, அவற்றை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எண்ணிப்பார்ப்பார்களேயானால், வர வர முன்னேறியிருக்கிறோம், வர வர செம்மை ஏற்பட்டு வருகிறது, வர வர சீர்திருந்தி வருகிறோம், வர வர முன்னேற்றம் காணப்படுகிறது, வர வர இருள் விலகுகிறது என்ற நம்பிக்கையை நிச்சயமாக அவரும் மற்றவர்களும் பெறமுடியும் என்று நம்புகிறேன்.

இன்னொன்று, எதிர்க்கட்சியிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள்கூட குறைகளை எல்லாம் சொன்னார்கள். சொன்னாலும்கூட, இடையிடையே, இதைச் செய்ததற்கு நன்றி; அமைச்சர் சொன்ன விளக்கத்திற்கு நன்றி; அரசாங்கத்திற்கு எங்களுடைய பாராட்டுக்கள் என்று அத்தனை பேரும் சொன்னார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்றால், நல்லவற்றை வரவேற்றால்தான் நல்லதைச் செய்வதற்கு ஒரு ஊக்கம் ஏற்படும். ஆகவே, அந்த நோக்கத்திலே சொல்லப்பட்ட, வரவேற்றுச்சொல்லப்பட்ட அந்தக் கருத்துகளையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இருந்தாலும், குறை சொல்லியாக வேண்டும் என்ற ஒரு நிலைமை இருப்பதையும் நான் அறிவேன். பல பேர் பேசுகிறபோது பார்த்தால், மனச்சான்றை அப்படியே மடித்து வைத்துவிட்டு உரையாற்றுவதற்கென்று சில சொற்களைத் தேடிக் கண்டுபிடித்ததை நான் பார்த்து, சரி வெற்றி பெறுக! (மேசையைத் தட்டும் ஒலி) இது மனிதனுக்கு ஏற்படுகிற ஒரு நிலைதான்; இன்னும் சொல்லப்போனால், இது பழைய மாவையே அரைத்த மாவையே, அரைப்பது என்று அழகிரி சொன்னதாக நினைக்கிறேன். நான் அழகிரி வீட்டுக்குப் போகிறபோது அவர் என்னுடைய நண்பருடைய மகன். அவருடைய தந்தையார் எனக்குப் பழக்கம். நண்பர் என்றால், என்னுடைய தந்தையாருக்கு நண்பர், என்னிடத்திலே நண்பரைப் போல் பழகுகிறவர். அவருடைய மகன் அழகிரி. அவர்கள் இந்த பட்ஜெட் ஏதோ அரைத்த மாவையே அரைப்பது போல இருக்கிறது (குறுக்கீடு) மன்னித்துக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் நான் முதலிலேயே சொல்லிவிட்டுத்தான் ஆரம்பித்தேன்.



எண்ணங்கள் எழுகிறபோது வார்த்தைகள் தடுமாறி விடுகின்றன. எனவே, ஆளுநர் உரை அப்படி இருப்பதாகச் சொன்னார்கள். ஆளுநர் உரை, அரைத்த மாவையே அரைப்பது போல் இருந்தால்தான் நன்றாக இருக்கும். ஏதாவது புதிதாகச் சொல்கிற அந்த நிலை ஆளுநருக்குப் பெரும்பாலும் வராது. அந்தப் பொறுப்பும் அவருக்குக் கிடையாது. நிச்சயமாக, நிரந்தரமாக செய்யப்படுவதைத்தான் சொல்வார்கள். அது அரைத்த மாவாகத்தான் இருக்கும். ஒருவேளை யாராவது உறுப்பினர் அழகிரி மாதிரி ஒருவர் வீட்டிற்குப் போகிறபோது, நீங்கள் பழைய வீட்டுக்குத்தான் திரும்பத் திரும்பப் போகிறீர்கள் என்று யாராவது சொன்னால் (பலத்த சிரிப்பு) அது மாதிரிதான்; என் நிலையும் அதுதான்; பழைய வீட்டிற்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன் (சிரிப்பு) ஆகவே, சொல்லப்பட்டவற்றிலே நமக்குப் பயன் இருக்குமானால், அதை மேலும் வலியுறுத்துவதற்கும், அது நமக்கு இடையூறாக இருக்குமானால் கண்டிப்பதற்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அதிக உரிமை இருக்கிறது. அந்த உரிமையை நான் வரவேற்கிறேன். அதன்மூலமாக பல நல்ல உண்மைகளை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

பிற்பகல் 12-55

இன்னும் சொல்லப்போனால், இந்த அரசேகூட மேலும் மேலும் தெரிந்துகொள்ள வேண்டிய அரசுதான். திரு. பழனிசாமி அவர்கள் சொன்னார், சமுதாயத்திலே, கிராமத்திலே உள்ள மக்களெல்லாம் இப்போது ரொம்ப பாதிக்கப்பட்டு வறுமையிலே இருப்பதாகச் சொன்னார். அவர்களே, 1996-லே இருந்ததைவிட இப்போது நன்றாக இருப்பார்கள், அதை அங்கே இருப்பவர்களைக் கேட்டால் தெரியும். ஒன்றுமில்லை என்றாலும் எம்.எல்.ஏ. நன்றாக இருக்கிறார். 1996-லே இருந்த எம்.எல்.ஏ. சாராய வழக்கிலே சிக்கிய எம்.எல்.ஏ. எல்லாம் இருக்கிறார்கள். ஆகவே, அதைவிட இப்போது எவ்வளவு பாதுகாப்பு, எவ்வளவு நிம்மதி, எப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதி, எவ்வளவு செம்மையாகக் கட்டித் தரப்பட்டிருக்கிறது? குட்டிச் சுவர் நின்ற இடத்தில் எல்லாம் கலெக்டர் அலுவலகம் எவ்வளவு பெரிதாகக் கட்டப்பட்டு இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒன்றும் சாதாரண சங்கதி அல்ல.

நான் கலைஞரை கருணாநிதி என்று சொல்கிற உரிமையோடு அவரோடு பழகத் தொடங்கியவன். இப்போது என்னாலே கருணாநிதி என்று சொல்ல முடியவில்லை. ஒரேயொரு காரணம், அவரைப் பற்றி அல்ல. அவர் செயல்படுகிற முறையைப் பார்த்து, அவரால் நாட்டுக்கு ஏற்படுகிற நன்மையைப் பார்த்து, அவர் போடுகிற திட்டங்களைப் பார்த்து.

(மேசையைத் தட்டும் ஒலி) கன்னியாகுமரியில் இருக்கிற வள்ளுவன் சிலையையும் பார்க்கிறேன்; அரசாங்கத்தினுடைய திட்டங்களையும் பார்க்கிறேன். ஆக அவர் உடல் நலத்தோடு இன்னும் 100 ஆண்டுகாலம் வாழ்ந்து (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டும். நான் தி.மு.க.-விற்காகச் சொல்லவில்லை. நான் தி.மு.க. விலே இருந்தாலும் ஒன்றுதான், இல்லை என்றாலும் ஒன்றுதான், நான் அமைச்சராக இருந்தாலும் எனக்கு ஒன்றுதான். நீங்கள் எங்கேயாவது பொதுக் கூட்டம் போட்டுப் பேசினாலும் ஒன்றுதான். நான் இவற்றைப் பெரிதாக நினைப்பதே இல்லை. நான் ஒருவகையிலே காமராஜரைப் பின்பற்றி இருக்க வேண்டும். மனப்பான்மையிலே ஏனென்று சொன்னால், அவரும் இதையெல்லாம் ஒன்றாக நினைக்கிறவர்தான். அவருக்கு இங்கே உட்கார்ந்து இருப்பதும் ஒன்றுதான், அவர் அலுவலகத்திலே உட்கார்ந்து இருப்பதும் ஒன்று தான்; எங்கேயாவது இரண்டு நண்பர்களிடத்திலே பேசினாலும் ஒன்றுதான். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், எண்ணங்கள் வேறு; ஆனாலும் செயல்பாடு என்ற முறையில் இந்த நான்கு ஆண்டுகாலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை, ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற செய்திகளை நீங்கள் எண்ணிப் பார்த்தால் இது ஒன்றும் சாதாரணமானது அல்ல என்பது விளங்கும்.

நான் மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்திருக்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில் மிக முக்கியமான செய்திகளை மறந்து விடக்கூடாது என்பதற்காக இங்கே வரிசைப்படுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்த உரையிலே 'அரசின் செயல்பாடுகளில் ஊழலைத் தவிர்த்திட நீதியரசர் இராமானுஜம் குழு வழங்கிய ஆலோசனைகள் பல ஏற்றுச் செயல்படுத்தப்பட்டு இருக்கின்றன' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஊழல் என்றால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோது, ஆங்காங்கு 5 ஆயிரம் ரூபாய் வரைக்கும் இப்படியெல்லாம் செலவிடப்படுகிறது என்றார். இந்த ஊழல்களையெல்லாம் அரசாங்கத்தின் மேல் மட்டத்திலே உள்ளவர்கள் புரிந்துகொள்ள முடியாது; கண்டுபிடிக்க முடியாது. ஆகவே, அவற்றையெல்லாம் தடுப்பதற்கு நீதியரசர் இராமானுஜம் குழு வழங்கிய ஆலோசனைகளில் பல ஏற்றுச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் குறை இருக்கலாம். மேலும் மேலும் ஆட்கள் இருந்தால், மேலும் மேலும் குறைகள் இருக்க நேரிடும்.

இரண்டு நாட்களுக்கு முன்னாலே பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் சொல்லியிருப்பதைப்போல, ஊழலும், குறைபாடும் ஆங்காங்கே ஊறிப்போய் விட்டன. ஆனால் ஊறவைத்தவர்களுக்கு ஆதரவாகப் போகிறபோதுதான் எங்களுக்குச் சற்று வருத்தமாக இருக்கிறதே தவிர





வேறு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி), ஊழலை ஊறுகாய் போட்டு, பானையிலே வைத்து, டிரேட் மார்க் வைத்து ஒட்டி நீதிமன்றத்திலே விற்றவர்களுக்கு ஆதரவாகப் போகிற நிலைமை இருக்கக்கூடாது என்பது எங்களுடைய வேண்டுகோள். வெறும் அரசியல் அல்ல இது. தி.மு.க. ஆட்சியிலே இருக்கட்டும், இல்லாமல் போகட்டும், கலைஞருடைய மதிப்போ, தகுதியோ ஒன்றும் குறைந்து போய் விடாது. முதலமைச்சர் என்பதற்காகத்தான் அவரை மதிக்கிறார்களா? நான் என்னைப் பொறுத்தவரையில் கூட, பெருமைக்காகச் சொல்லவில்லை, வெறும் பேராசிரியராக நாட்டிலே சுற்றுவதற்கு எனக்கு மதிப்பு இல்லையா? ஆகவே அது அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் வாழ்கிற 6 கோடி மக்களுடைய வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு என்ன வழி என்பதைத்தான் அழுத்தமாக நாம் எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கேகூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடைசியாகச் சொல்கிறபோது, ஒன்றைச் சொன்னார்கள். இந்த ஆளுநர் உரை, வருகிற தேர்தலை எதிர்பார்த்து வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை என்று சொன்னார்; ரொம்ப நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தலை நோக்கி இந்த ஆளுநர் உரை வெளிவந்து இருக்கவில்லை என்ற கருத்து, ஓர் அரசாங்கத்திற்குப் பாராட்டு. தேர்தலையே நோக்கிக் கொண்டிருந்தால் கோ.சி. மணி வேலை செய்ய மாட்டாரே, தொகுதிக்கு அல்லவா போய் விடுவார். ஆகவே தேர்தல் அல்ல. தேர்தலும் இடையிலே நாம் ஏற வேண்டிய ஒரு படிக்கட்டு. சமுதாயத்தினுடைய மொத்த நன்மை, தமிழ்நாட்டிலே வாழ்கிற 6 கோடி மக்களுடைய நன்மை, 10,20 இலட்சம் அரசு அலுவலர்களுடைய நன்மை, தனியார் தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற தொழிலாளர்களுடைய நன்மை என்று அவற்றை எல்லாம் கருதுகிறபோது, அந்த உயர்ந்த நோக்கத்தில் ஒரு Statesman என்ற முறையில்,—'ராஜதந்திரி' என்றுதான் அதற்கு மொழிபெயர்ப்பு. அதைவிட ஒரு விவேகி என்று நான் சொல்ல விரும்புகிறேன். விவேகி என்ற முறையில் இந்த ஆளுநர் உரை மூலமாக வருங்கால தமிழகத்தை மனதிலே கொண்டு இன்றைக்குச் செய்யப்படுகின்ற செயல்கள் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன.

பிற்பகல் 1-00

அதிலே ஒன்று, ஒப்பந்தப்புள்ளி வழிமுறைகளில் ஒளிவு மறைவற்ற தன்மைக்கு புதிய சட்டம். ஒப்பந்தப்புள்ளிகளிலே ஏற்கெனவே பல தவறுகள் நடைபெற்றன. முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கு வெளிப்படையாக அந்த ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவு மறைவு இல்லாமல் வெளியிடப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு இப்பொழுது விளம்பரம் போடுவது கூட அதற்கென்றே ஒரு பத்திரிகை நடத்துகின்ற

அளவுக்கு - பத்திரிகையோ அல்லது கெஸட்டோ? ஒரு கெஸட்டாக வெளியிட்டு செயல்படுத்தி வருகிறோம்.

வகுப்பு மோதல்களைத் தடுப்பதற்கு நீதியரசர் ஜஸ்டிஸ் மோகன் குழு வழங்கிய அந்தப் பரிந்துரையைச் செயல்படுத்துவதில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது.

காவல் துறையை நவீனப்படுத்துவது என்பதில் சில பேர் கேலி செய்திருக்கிறார்கள். இந்தக் காலத்தினுடைய போக்கு திருட்டுகளினுடைய வழிமுறைகள் மாறிக்கொண்டே போகின்றன. புதிய புதிய முறைகளிலே திருட்டுகள், கொள்ளைகள்; ஆகவே அதைக் கண்டுபிடிப்பதற்கான நவீன முறை காவல் துறைக்கு இல்லாவிட்டால் பல குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியாமற் போகும். மனிதன் எங்கேயும் குற்றம் செய்கின்றவனாக இருப்பான். ஆனால் அவற்றைக் கண்டுபிடிக்கிற ஒரு கடமையைக் காவல் துறை செம்மையாகச் செய்வதற்காகத்தான் அந்த நவீனப்படுத்துகிற கடமை; மாநில மனித உரிமைகள் ஆணையம் மூலம் அவற்றைச் செயல்படுத்த மனித உரிமைகள் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு வழி கண்டிருக்கிற அரசின் செயல்பாடு; அத்தியாவசியப் பொருட்களின் விலை உயராமல் இருக்க உயர்மட்டக் குழு; எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு அரிசி கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.50-க்கு—குறைந்த விலையில்—பொது விநியோகத் திட்டத்தில் விநியோகம்; திரு. பழனிசாமி அவர்கள்கூட அதைப் பற்றிச் சொன்னார்கள்; அமைச்சரும் விளக்கம் சொன்னார். குழு கூடுகிறது. அவர் அவ்வப்போது நிலைமையைப் பரிசீலிக்கிறார். உடனே விலையை இறக்கிவிடவும் முடியாது, ஏற்றிவிடவும் முடியாது. ஒரு கண்ணோட்டத்தில் பேசுகிறபோது, தேயிலைக்கு விலை ஏன் குறைந்தது, கொப்பரைக்கு விலை ஏன் குறைந்தது என்று அதைக் கேட்கிறோம். இன்னொரு பக்கத்தில் நெல் விலையை ஏன் ஏற்றிக் கொடுக்கவில்லை என்று கேட்கிறோம். ஆக அது கம்பியில் நடப்பது போன்றது விலைவாசியைப் பொறுத்தவரையில் அரசு நடை போடுவது. விலை ஏறினாலும் அதற்கு உடனே நஷ்ட ஈடு தந்து விலையைக் குறைப்பதோ, இறங்கினால் உடனே எல்லா சலுகையையும் கொடுப்பதோ இயலாத காரியம். எனவே, ஒரு பேலன்சிங், அவ்வளவுதான் அரசாங்கத்தால் முடியும். இன்னும் சொல்லப் போனால், நியாய விலைக் கடை என்பது அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்குக் கிடைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் மிக அதிக அளவிலான எண்ணிக்கையில் உருவாக்கப்பட்டது நியாய விலைக் கடைகளே. மக்களுடைய பொருளாதார நிலையில் விலைவாசியினாலே பெரிய பாதிப்பு ஏற்பட்டுவிடாமல் மக்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரிசி



ஒன்றுதான் stable food என்ற முறையில் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் இன்றியமையாதது என்ற முறையில் இப்பொழுது நாம் 1,700 கோடி ரூபாய் ஓராண்டுக்கு இழப்பை ஏற்றுக்கொண்டு—அதில் 200 அல்லது 100 கோடி வித்தியாசம் இருக்கலாம்—ரூ.3.50க்கு ஒரு கிலோ அரிசி வழங்கப்படுகிறது. தயவுசெய்து நீங்கள் கேட்டுப் பாருங்கள். வேறு எங்காவது 6 ரூபாய், 7 ரூபாய்க்குக் குறைந்து, வெளி மாநிலங்களில் அரிசி கிடைக்கிறதா என்று கேட்டுப் பாருங்கள். பிற மாநிலங்களில் நியாய விலைக் கடையில் கூட இல்லை.

இப்பொழுது மத்திய அரசில் ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாங்கள் வழிமுறைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறோம். Poverty line-என்பதற்குக் கீழ் இருக்கிற மக்கள் அத்தனை பேருக்கும் கொடுப்பதற்கு, அவர்கள் குறைந்த விலை வைத்துக் கொடுப்பதாகச் சொன்ன அரிசியை நாங்கள் இன்ன அடிப்படையில் 10 இலட்சம் பேருக்கு வழங்குவோம், நீங்கள் ஏற்றுக்கொண்டு அதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். பதில் வரவில்லை. வந்ததற்குப் பின்னர் தெரிவிக்கப்படும்.

அடுத்து இன்றியமையாத பொருட்களை விநியோகிப்பதில் இப்பொழுதுள்ள நடைமுறையைத் தொடர்வது; இப்பொழுது என்ன செய்கிறோமோ அதேமாதிரி. மண்ணெண்ணெயோ, அரிசியோ, சர்க்கரையோ; இன்றைக்குள்ள முறையே தொடரும் என்பது ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் விவசாயிகளுக்கு இடைநிகழ்ச் செலவாகக் குவிண்டாலுக்கு 40 ரூபாய்; இது மத்திய அரசு தீர்மானித்ததைவிட, நெல்லைக் கொண்டு வந்து தருகிறவர்களுக்கு, வழிச்செலவு என்ற பெயரில் 40 ரூபாய். வேறு எந்த மாநிலத்தில் இது இருக்கிறது? பழனிசாமி அவர்கள் கூட சொன்னார்கள், தமிழ்நாட்டில் குறைந்திருக்கிறது என்று; 50 ரூபாய் கொடுத்ததை 40 ரூபாயாகக் குறைத்தீர்கள் என்று. 50 ரூபாய் கொடுத்தது மொத்த கொள்முதலில் மட்டும் இருந்தது. இப்போது இணை கொள்முதல்; அவர்கள் வெளியிலேயும் விற்கலாம். ஆகவே 40 ரூபாய் கொடுக்கிறோம். கடந்த ஆண்டு 35 ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆகவே இது ஒன்றும் குறைபாடாகாது. தமிழ்நாட்டில் விவசாயிகளிடத்திலே அரசுக்கு இருக்கிற அக்கறை காரணமாக இந்த 40 ரூபாய் வழங்கப்படுகிறது. அரசாங்கம் செயல்படவேண்டுமானால், கட்டமைப்புக்கள் வேண்டும். இன்றைக்கு குடிநீர் வழங்குவது அத்தியாவசியத் தேவை என்ற முறையில் ஏதோ ஒரு கிராமத்தில் டாக்டர் ராமதாஸ் என்னுடைய கிராமத்திலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை என்று தெரிவித்தார்கள் என்று

எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். அவர், ஒரு பள்ளிக்கூடத்திற்கு வாத்தியார் வரவில்லையென்றாலும் எனக்குக் கடிதம் எழுதுகிறார். இதையும் எழுதியிருந்தால் அப்போதே குடிதண்ணீர் ஒரு பீப்பாயிலாவது அனுப்பியிருப்போம். ஏனென்றால் எனக்கு எழுதித் தெரிவித்தால்தானே தெரியும்?

பிற்பகல் 1-05

நேற்றையதினம்கூட வந்தவாசி பக்கத்தில் சந்தவாசல் என்கிற பள்ளிக்கூடத்தில் யாரோ ஒரு ஆசிரியர் பிள்ளைகளைப் பாடம் கேட்டிருக்கிறார். கேட்கும்போது ஒரு பிள்ளை ஏற்கெனவே சற்று உடல்நலம் இல்லாமல் இருந்து, இப்போது நன்றாக ஆகி பள்ளிக்கூடம் வந்திருக்கிறது, அதை நிறுத்தி வைத்திருக்கிறார். அதற்குப் பிறகு கேள்வி கேட்கும்போது அடித்துவிட்டார். அடித்தவுடன் அந்தக் குழந்தை கீழே விழுந்தது. விழுந்த பிறகு குடிநீர் கொடுத்தால் குடிக்கவில்லை. உடனே மருத்துவமனைக்குக் கொண்டு போனார்கள், ஆனால் தவறிப்போய்விட்டது. ஆசிரியர் செய்தது தவறாக இருக்கலாம், ஆனால் குழந்தைகளுக்கு அப்படி ஏற்படுவது என்பது, மொத்தம் உள்ள 80 இலட்சம் குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு இப்படி ஏதோ ஏற்பட்டுவிட்டது. எவ்வளவோ குழந்தைகள் படிக்கிறார்கள். நம்முடைய வீட்டிலே அண்ணன், தம்பி 4 பேர் பழகுகிற இடத்திலே ஒரு அண்ணன், தம்பி பிள்ளையை அடிக்கிறபோது பையன் மூர்ச்சித்து விழுந்துவிட்டால், எப்படியோ அதுமாதிரிதான் இதுவும். சமுதாயம்தானே, இதில் ஆசிரியர் வேறு, எம்.எல்.ஏ. வேறு, கலெக்டர் வேறு என்று பார்க்க முடியுமா? மனிதன்தானே எல்லோரும். ஆகவே நடந்துவிட்டது. அதுபோல சில நிகழ்வுகள்; ஆங்காங்கே தனித்தனியாக ஏற்படுகிற நிகழ்வுகளை அரசாங்கத்தின்மீது ஒரு குற்றமாகச் சொல்லக் கூடாது.

இராமநாதபுரம் மாவட்டத்திலே ஒரு பள்ளிக்கூடத்தில் வாத்தியார் 9.30 மணிக்கு பள்ளிக்கூடம் போக வேண்டுமென்றால் 11.00 மணிக்குப் போய் திறந்தார். 3.00 மணிக்கே பூட்டிக்கொண்டு சென்றார். இப்போது அவரை வேலையைவிட்டு எடுத்திருக்கிறோம். குற்றச்சாட்டு எதுவும், ஆங்காங்கே இருக்கின்ற அதிகாரிகள் மூலம் தெரிந்தாலும், பஞ்சாயத்துத் தலைவர் தெரிவித்தாலும், எம்.எல்.ஏ. தெரிவித்தாலும் நடவடிக்கை எடுக்கிறோம். அதுமாதிரி சில முறைகளினால் குறைகளைப் போக்க வேண்டும்.

கட்டமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன; கிராமத்திலே சிமெண்ட் சாலைகள் போடுவதற்கு இந்த அரசு என்ன அடிப்படையிலே



அந்தப் பணியை மேற்கொண்டது தெரியுமா? மூன்று காரணங்களுக்காக, சாதாரண சாலை, மண் சாலை எவ்வளவு போட்டாலும், மழை பெய்தால் அந்தக் கிராமத்திலே மக்கள் நடக்க முடியவில்லை என்று எங்களிடத்திலே குறைபட்டார்கள். சரி, தார் சாலை போடலாம் என்றால் தார் சாலை வீட்டுக்கு முன்னால் போடுகிறபோது அந்தத் தார் சாலையின் இரண்டு கங்குகளும் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டு வீட்டுக்குள் போக வரும்போது அது இடையூறாக இருக்கிறது. சிமெண்ட் சாலை போட்டால் அந்தக் கஷ்டம் குறைகிறது. ஏனென்றால் கிராம மக்கள் பலருக்கு அவர்கள் வீட்டுக்குள்ளே ஒரு முற்றம் கிடையாது. அதனால், இந்த சிமெண்ட் சாலைகளிலே பொருள்களைக் காய வைத்துக்கொள்ளவோ, துணியைக் காய வைத்துக்கொள்ளவோ பயன்படுத்திக்கொள்கிற வாய்ப்பு இருக்கிறது. ஏழைகளுக்கு அது ஒரு மறைமுகமான பேருதவி. அதைக்கூட கமிஷனுக்காகப் போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி யார் சொன்னார் என்பதைப்பற்றிக் கேட்கவில்லை. அப்படித் தவறு நடைபெறுகிற இடங்கள் சுட்டிக்காட்டப்பட்டால்தான் நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, பொதுவாகச் சொன்னால் என்ன செய்ய முடியும்? அதேமாதிரி இன்னும் ஒன்று சொல்கிறேன். இந்த நாட்டிலே அரசியலே கமிஷனிலேதானே நடக்கிறது. (சிரிப்பு) இந்த நாட்டிலே அரசியலே கமிஷனிலே நடக்கிற அளவுக்கு நாட்டு நிலைமை இருக்கிறபோது ஏதோ எங்கேயோ இரண்டு தவறுகள் நடைபெறுமானால், தவறைச் சுட்டிக்காட்டினால், அந்தத் தவறுகளைத் திருத்துவதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது.

விவரங்களுக்காகச் சொல்கிறேன். அடிமட்டத்தில் சில குறைகள் இருக்கும். நான் நினைக்கிற முறைகளிலேயெல்லாம் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலே உள்ள ஆசிரியர் பாடம் நடத்துவாரா, நடத்த முடியுமா, அவர் விரும்புவாரா? எவ்வளவு பள்ளிக்கூடம் உள்ளதோ அவ்வளவும் நன்றாக நடக்க வேண்டுமென்று நாம் எவ்வளவோ திட்டம் போடுகிறோம். எல்லாம் செயல்பட்டுவிடுகிறதா? ஒரு கட்சியிலே மகாநாடு கூட்டுகிறார்கள். ஒழுங்காக வீட்டுக்குப் போய்ச் சேருகிறார்களா? ஆகவே, இந்த நாட்டு நிலைமையினுடைய விளைவுகள் பலமாதிரியாகத்தான் இருக்கும். அதைத் திருத்துவதற்கு தொடர்ந்து முயற்சிக்க வேண்டுமே தவிர வேறல்ல.

அடுத்து, தகவல் தொழில்நுட்பப் புரட்சி குறித்து திரு. பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். வெறும் கம்ப்யூட்டர் வைத்தால் ஏதோ நிருவாகம் வேண்டுமானால் வேகமாக நடத்தலாம், ஆட்களைக் குறைக்கலாம், அதற்கு மேலே கம்ப்யூட்டரால் பெரும் பயன் இருக்காது.

வேலைவாய்ப்பு கிடைக்காது என்று சொன்னார்கள். இதற்கு இரண்டு விளக்கம் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்காலத்திலே வேலைகளுக்கு கம்ப்யூட்டர் அறிவு என்பது 20 ஆண்டுகளுக்கு முன்னால் டைப்ரைட்டிங் அறிவு எப்படித் தேவைப்பட்டதோ அதைப்போலத் தேவைப்படும் என்பது ஒரு நிலை. ஆகவே, பின்தங்கிய சமூகத்து பிள்ளைகளோ, தாழ்த்தப்பட்ட சமூகத்து பிள்ளைகளோ கம்ப்யூட்டர் அறிவு பெற முடியாத ஒரு சூழ்நிலையிலே வளர்ந்துவிட்டால் அதற்காக அவர்கள் தனியாகப் படிக்கப் போக முடியாது. தனிப்பட்ட நிறுவனங்களிலே படிக்கப் போவதற்கு 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் கட்டிப் படிக்க வேண்டிய நிலைமையிருக்கிறது. ஆகவே, அப்படியொரு தொகை கட்டவே முடியாத கிராமத்துப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள், நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகள் ஏதோ ஓரளவுக்குக் கணிப்பொறிக் கல்வி படிப்பார்களேயானால், வாய்ப்பு இருக்குமானால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதற்காக இந்த கம்ப்யூட்டர் கல்வி வழங்கப்படுகிறது. அதையும் எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

இன்னொன்று, 21 ஆவது நூற்றாண்டு அறிவியல் கம்ப்யூட்டரை நம்பித்தான் வளர இருக்கிறது. கம்ப்யூட்டர் என்றால் நாம் நினைத்துக்கொண்டிருப்பது, நம்முடைய வீட்டிலே மேசையிலே வைத்திருக்கின்ற ஒரு கம்ப்யூட்டர் அளவிற்கு அதிலே கிடைக்கிற செய்திகள் என்று. இந்தச் செய்திகள் உலகத்திலே எவ்வளவு வேகமாக அறிவை பரிமாறிக்கொள்கிற ஓர் ஆற்றலை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறது என்று கேட்டால், அமெரிக்காவிலே காலை 10.00 மணிக்குக் கண்டுபிடிக்கப்பட்ட ஆராய்ச்சி முடிவை 11.00 மணி அளவுக்குள் இங்கே கம்ப்யூட்டரிலே தெரிந்துகொண்டு, அன்று மாலையிலே அதைப் பற்றிய கருத்துத் தெரிவிக்கக்கூடிய அளவுக்கு ஒரு internet வசதி வாய்த்துள்ளது. Internet மூலம் அமெரிக்க நூலகத்தில் இருக்கிற புத்தகங்களிலே இருக்கிற கருத்தை இங்கே சென்னைப் பல்கலைக்கழகத்திலே ஆராய்ச்சி செய்கிற மாணவர்கள் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பெரிய வாய்ப்பு இருக்கிறது. நான் கல்வி அமைச்சர்தான்; நான் ஏற்கெனவே ஆசிரியர்தான்; ஆனால் அதனுடைய அளவை என்னால் imagine செய்ய முடியவில்லை. மின்சாரம் வருவதற்கு முன்னாலே, இந்த நாட்டிலே மின்சாரம் வந்தால் ஏற்படக்கூடிய பலன்கள் என்னென்ன என்பதை அன்றைக்கு எண்ணிப்பார்த்து இருக்க முடியுமா? நான் 6 வயதிலே மின்சார விளக்கு எரிவதைப் போய் வேடிக்கை பார்த்த



பிள்ளைதான். இன்றைக்கு மின்சாரம் என்பது எவ்வளவு பெரிய மாற்றங்களுக்குக் காரணம்! அதுபோல அடுத்த நூற்றாண்டில் கம்ப்யூட்டர் அறிவுதான் நாட்டினுடைய முன்னேற்றத்திலே முதலிடம் வகிக்கும் என்ற காரணத்தினால், அந்த அடிப்படையிலே கணிப்பொறி அறிவை வளர்ப்பதற்கான ஆய்வுக்கூடங்கள் ஒரு பக்கம்; கணிப்பொறிக் கல்வியிலே மேல்நிலைக் கல்வி வழங்குவதற்கு பல்கலைக்கழகங்களிலே திட்டம்; கணிப்பொறி மென்பொருள் தொழிலை வளர்ப்பதற்கு டைடல் பார்க் என்று கலைஞருடைய தொலைநோக்கு காரணமாக, அவர் மிகத் தெளிவாக அறிந்து உருவாக்கிய டைடல் பார்க் மூலமாக இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிற வளர்ச்சி; அடுத்த டைடல் பார்க் ஏற்படுத்துகிற முயற்சி; அதைத் தொடர்ந்து பயோ டெக்னாலஜி பார்க் ஏற்படுத்துகிற முயற்சி இவை எல்லாம் எதிர்காலத்திலே அறிவியலில், விஞ்ஞானி அபுல்கலாம் எப்படிப்பட்ட சாதனை படைத்தாரோ, அப்படிப்பட்ட சாதனை படைக்கக்கூடிய ஆற்றலை யாரோ 4 பேர் பெறுவதற்கு இவ்வளவு பெரிய முயற்சி தேவைப்படுகிறது. அதனுடைய அவசியத்தை இந்த அவை ஏற்றுக் கொள்ளும் என்று நான் நம்புகிறேன். அதை நிறைவேற்றி இருப்பதும் இந்த .அரசுதான்.

அதேபோல தமிழ்மொழியினுடைய வளர்ச்சிக்கு; தமிழ் இணையப் பல்கலைக்கழகம்; இன்றைக்குக்கூட பத்திரிகையிலே வந்தது, இது டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் தலைமைப் பொறுப்பேற்று வளர்க்கின்ற ஒரு அமைப்பாக இன்றைக்கு உருவாகி இருக்கின்றது. இது உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் தமிழ் மரபு, தமிழ் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை அவர்கள் அறிந்துகொள்வதற்கு மட்டுமல்லாமல், தமிழிலே மெல்ல மெல்ல அறிவியல் வளர்வதற்கும், அகில உலக வணிகத்தில் தமிழர்கள் பங்கு பெறுவதற்கும், இந்தத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் பெரும் அடிப்படையாக அமையும். இது இன்றியமையாத ஒரு செயல். அதிலே அகில இந்தியாவிலே தமிழ்நாடு முன்னணியிலே இருக்கிறது என்ற பாராட்டைப் பெற்றுக் கொண்டு இருக்கிறது.

அதேபோல உயிரியல் தொழில்நுட்பம். அதை நான் முன்னாலேயே தெரிவித்தேன். தொலை தொடர்பு வழி மருத்துவ வசதி பெறுவது குறித்து இந்த ஆளுநர் உரையிலே பேசப்பட்டு இருக்கிறது. என்னதான் அறிவியல் துறையிலே நம்முடைய பேராசிரியர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், நியூரோ சர்ஜென்கள் இவர்கள் எல்லாம் உலகப் புகழ் பெற்றவர்களாக இருந்தாலும் கூட, சில நுணுக்கமான ஆய்வு தேவைப்படும் நிலைகள் வருகிறபோது, இந்த ஆராய்ச்சித் துறையிலே மேம்பட்டு இருக்கிற சில மருத்துவக் கல்வி நிலையங்களோடு தொடர்புகொண்டு அதைப்

பயன்படுத்திக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. அதற்குத்தான் தொலை தொடர்பு வழி மருத்துவ வசதி. அது இங்கே ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டது. அது ஒன்றும் எளிய காரியமல்ல. நன்கு பயன்படக்கூடிய மிகச் சிறந்த திட்டம்.

மாவட்ட நிர்வாகம் கணினி மயமாக்கப்பட்டு இருக்கிறது. திருவாரூரிலே நல்ல முறையில் இயங்குகிறது; திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் அது இயங்குகிறது. இன்னும் எல்லா மாவட்டங்களிலும் அது நிறைவு அடையும். பதிவுத் துறையில், இன்னும் மூன்றில் ஒரு பங்கு அலுவலகங்கள் தவிர, மற்றவற்றில் கணினி பயன்பாடு வந்திருக்கிறது.

பிற அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு எவ்வளவு முதலீடு செய்து இருக்கிறதோ, அந்தளவுக்கு ஆந்திராவிலேகூட முதலீடு செய்யவில்லை; வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை. Capital Investment என்று சொல்லப்படக்கூடிய முறையிலே பெரிய முதலீடு அது. ஏனென்று கேட்டால், நாம் ஒரு காலகட்டத்திலாவது அடிப்படையாக, கிராமங்களினுடைய முகங்களை மாற்றியமைக்க வேண்டும். The face of the villages should be changed என்பதிலே உறுதியாக இருந்துதான், இவ்வளவு பெரிய திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

அதேபோல தூர் வாருகிற பணி முதலானவை நடைபெற்று இருக்கின்றன. அதுதான் இன்றைக்கு விவசாயிகளுக்கு எவ்வளவோ உதவிகரமாக இருக்கிறது. அவர்கள், அவர்களுடைய ஊரிலே வரும் தண்ணீரை எதிர் பார்ப்பார்களே தவிர, பல காலங்களில் தணணீர் கிடைக்காது. ஆனால், இன்றைக்கு தண்ணீர் கிடைக்கிற நிலைமைக்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம். இதுவும் போதாது என்பது வேறு. கடலுக்குள் நீர் ஏராளமாக வீணாகப் போகிறது என்றுகூட ஒரு குறிப்புச் சொன்னார்கள். அது எனக்கே நீண்ட நாளாகத் தெரியும். அது போய்க் கொண்டே இருக்கிறது. அதை நிறுத்துவதற்கு இப்போது அணைகள் கட்டுகிற பணிகள்—இதற்கு முன்னர் இருந்த எந்த ஆட்சியையும்விட, இன்று திரு. துரைமுருகன் பொறுப்பில் எத்தனை அணைக்கட்டுகள் இந்த 5 ஆண்டு காலத்திலே வந்து இருக்கின்றன என்பதை திரு. ஞானசேகரனே சொல்லலாம். (குறுக்கீடு) அவர் கேட்டே சொல்லலாம். எதற்குச் சொல்கிறேன் என்றால், அவர்கள் இருவரும் அடிக்கடி பேசிக்கொள்பவர்கள், இதையும் சேர்த்தே பேசிக்கொள்ளலாம். ஆக, அவ்வளவு அணைக்கட்டுகள். இதெல்லாம் ஒரு motivation-னோடு, இலட்சிய நோக்கில் செய்யப்படுகிற காரியம், இவற்றை எப்படியாவது செய்தாகவேண்டும் என்பதே அரசின் கொள்கை.



அதேபோல, ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் செம்மையாக நிறைவேறி இருக்கிறது.

பிற்பகல் 1-15

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கிற வகையில் 1,700 கோடி ரூபாய் செலவில் மிகப் பெரிய திட்டம். அதை முதலமைச்சர் அவர்களே சனவரி 1 ஆம் நாள் சென்னையிலே தொடங்கிவைத்தார்கள். சென்னையிலே உள்ள கூவம் ஆறு, அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, இவற்றால்தான் சென்னை நகரத்தினுடைய சுகாதாரமே கெட்டுப் போகிறது என்பது ஒரு கருத்து; சுற்றுப்புறச் சூழல் ஒரே நாற்றம் உடையதாக இருக்கிறது; கொசு வளர்கிறது; அதை மாற்றுவதற்கு இத் திட்டம். அதைப்போல காவிரியிலே, வைகையிலே திருச்சி, ஈரோடு மாவட்டத்தில் பல இடங்களிலே நடைபெறுவதற்கு ஒரு பெரிய திட்டம் 1,700 கோடி ரூபாய் செலவில், பயன்மிக்கப் பெரிய திட்டம்.

சமுதாய நல்வாழ்வை அடிப்படையாக வைத்துத்தான் வருமுன் காப்போம் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 84 இலட்சம் மக்கள் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். பரிசோதனைக்கு வந்தவர்கள் 2 கோடிக்கு மேல். இந்த 84 இலட்சம் பேருக்கு சிகிச்சைக்கு மருந்துக்கு மட்டும் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் அல்லது 50 இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. ஒருவருக்கு என்று Per capita expenditure பார்த்தால் ஒருவருக்கு 5 ரூபாய், மருந்துச் செலவு. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிற காரணத்தினால், இப்போது கிராமப் பகுதிகளில் எங்கே போய் நீங்கள் கேட்டாலும், எங்களுக்குச் சிகிச்சை கிடைக்கிறது என்று சொல்கிற நிலைமை. இதேமாதிரி வேறு யாராவது செய்திருந்தால் அவர்களும் போய் மக்களிடத்திலே சொல்லாம். நாங்கள்தானே உங்களுக்கு சிகிச்சை அளித்தோம், அவர்கள் இரண்டாவதாகத்தான் சிகிச்சை செய்தார்கள். அதிலேகூட நாங்கள்தான் முதலிலே மருந்து கொடுத்தோம் என்று சொல்லலாம். ஓட்டுகூடக் கேட்கலாம். அதிலே ஒன்றும் தப்பில்லை. சொன்னால் ஏற்றுக்கொள்கிறவர்கள் ஏற்றுக்கொண்டால் ஓட்டு போடட்டும். ஆகவே, அரசு திட்டத்தில் 84 இலட்சம் மக்கள் சிகிச்சை பெற்றார்கள்.

நானேகூட 1971-லிருந்து 1976 வரையில் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்து, அப்போது கண்ணொளி வழங்குகிற திட்டம் தொடங்கப்பட்டது. மதுரை டாக்டர் வெங்கடசாமி அவர்கள் ஆலோசனை சொல்லி, அதைத் தொடங்கி, ஏறத்தாழ தமிழ்நாட்டிலே 45,000-லிருந்து 50,000 பேர் வரை பயன் பெற்றனர் அப்போது. கண்ணொளி வழங்கும்

திட்டம் அத்தனை மாவட்டங்களிலும் நிறைவேற்றப்பட்டது. ஆகவே, அந்தத் திட்டம் முன்னோடியாக இருந்தாலும்கூட, இன்றைக்கு இந்தத் திட்டம் மிகுந்த பயனுடையதாக இருக்கிறது என்று தெரிவிக்கிறேன்.

அதைப்போல கால்நடைப் பாதுகாப்புத் திட்டம், பல இடங்களில் தொடர்ந்து நம்முடைய உறுப்பினர்கள் கேட்பது, எங்கள் ஊரில் கால்நடை மருத்துவமனை வைக்க வேண்டுமென்று. நம்முடைய அமைச்சர் அதற்குப் பதில் சொல்கிறார், எங்கெங்கே கால்நடை மருத்துவமனை இருக்கிறது, எத்தனை கால்நடைகள் வந்தன, எங்கெங்கே கிளைநிலையம் இருக்கிறது என்று, அவ்வளவையும் மொத்தமாகச் சொல்லி, அந்தத் தொகுதியையே கேட்பவர்களுக்கு ஞாபகப்படுத்துகிற அளவிற்கு, அவ்வளவு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால் உண்மை என்னவென்று கேட்டால், எவ்வளவுதான் நீங்கள் மருத்துவமனை வைத்தாலும் அங்கு கால்நடைகளைக் கொண்டு வருவதில் மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை. ஏனென்றால் சந்தைக்கு ஓட்டிக்கொண்டு போகிற பழக்கம் நம்முடைய மக்களுக்கு ரொம்ப நாளாக உண்டு. ஒரு camp வைத்தால் கவன ஈர்ப்பாகிறது. அது ஒரு attraction. கொஞ்சம் உடல் சரியில்லையென்றாலும் மாட்டைக் கொண்டு வந்து காட்டுவான்; ஆட்டைக் கொண்டு வந்து காட்டுவான்; சிகிச்சை கிடைக்கும், அப்படி இன்றைக்கு அது ஒரு பயனுள்ள திட்டமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அடுத்து உழவர் சந்தை. உழவர் சந்தை உழவனுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. சிலருக்கு அது அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை. அது எனக்கு தெரியும். விவசாயிகளுக்கு அது மகிழ்ச்சி. எந்த ஊருக்கு நான் போனாலும் உழவர் சந்தை இருக்கிற ஊரிலே இருக்கிற உழவன் எங்களுக்கு இது பெரிய வாய்ப்பு என்கிறான். வேறு சில பேர் குறை சொல்கிறார்கள். குறை சொல்வதற்கு ஆள் இல்லையென்றால் அப்புறம் நாட்டிலே என்னதான் நடக்கிறது என்று தெரியாது ஆகவே, அது வேறு. ஆகவே, நடைபெறுகிற இடத்தில் பங்கேற்கும் அந்த விவசாயிக்கு, அடித்தட்டு மக்களுக்கு, சராசரியாக ஓர் உழவனுக்கு இந்த சந்தைக்குப் போய்விட்டு வந்தால் ஒரு நாளைக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை அதிகமாக வருமானம் வருவதாக என்னிடத்திலேயே தெரிவித்தார்கள். தவறு என்றால் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களைக் கேட்டால் தெரியும்; கோயம்புத்தூர் ஆர்.எஸ். புரத்தில் உள்ள உழவர் சந்தை பற்றி. ஒரு விவசாயிக்கு ஒரு நாளைக்கு சந்தைக்கு போய்வந்து 100 ரூபாய் கிடைக்கிறது என்றால் அது சாதாரணமா? இல்லையென்றால் அந்த 100 ரூபாய் தரகர்களுக்குப் போகும்; வியாபாரிக்கு போகும். ஆனால் உழவனுக்கு உதவி செய்வதற்கு



வேறு வழியில்லை நம்மிடம் ஆகவே, உழவன் பாதிக்கப்படாத வகையில் மற்ற வியாபாரம் நடக்கட்டும் என்கிற முறையில் இந்த உழவர் சந்தை வெற்றிகரமாகத்தான் நடைபெறுகிறது.

'பூமாலை' என்று ஒரு திட்டம். கிராமத்திலே உள்ள சிறு சிறு தொழில் செய்கிறவர்கள்; மாலை கட்டுகிறவர்கள், பூமாலை கட்டுகிறவர்கள்; மணி மாலை கட்டுகிறவர்கள், ஓலைக் கூடை செய்கிறவர்கள், முறம் தயாரிக்கிறவர்கள், வேறு பொம்மைகள் செய்கிறவர்கள் இவர்களெல்லாம் இந்த 'பூமாலைத் திட்டத்திலே' பயன்பெறுமாறு எந்த இடத்திலே அவசியம் இருக்கிறதோ, அங்கே இந்தத் திட்டம் தொடங்கப்படுகிறது. அந்த இடத்திலே வந்து, அங்கு வியாபாரம் செய்து இன்றைக்கு அவர்களுக்கு தங்கள் பொருள் தேங்காமல் விற்பனை ஆகிறது என்ற ஒரு மகிழ்ச்சி; அவர்கட்குக் கொஞ்சம் மன நிறைவு.

நமக்கு நாமே திட்டம். தமிழ்நாட்டிலே ஏறத்தாழ அநேகமாக எல்லா ஒன்றியங்களிலேயும், எல்லா பேரூராட்சிகளிலேயும், எல்லா நகராட்சிகளிலேயும் 'நமக்கு நாமே திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. அந்தத் திட்டம் தொடங்கியபோது நான்கிலே ஒரு பங்குத் தொகையை ஒரு திட்டம் கேட்கிறவர்கள் வழங்க வேண்டும். மீதியை அரசு வழங்கும் என்று தொடங்கி பிறகு என்ன ஆயிற்று என்றால், அரசாங்கம் அதற்கு ஒதுக்கிய நிதி, ஓரளவிற்கு அந்தப் பகுதிக்கு ஒதுக்கிய நிதி முடிந்து போனபோது, நாங்கள் நான்கிலே ஒரு பங்கு அல்ல, மூன்றிலே ஒரு பங்கு, பாதி நாங்கள் தருகிறோம் என்று உழைப்பையோ நிதியையோ கொடுத்து இந்த நமக்கு நாமே திட்டத்தினை மக்கள் பெரும் அளவிலே வரவேற்று இருக்கிறார்கள். இப்படி பல தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-20

அதைப்போல, 'சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்' என்பது ஒரு மகத்தான திட்டம். உள்ளபடியே எனக்கெல்லாம் இந்த நிதி கொடுப்பதில் உடன்பாடு இல்லை. எனக்கு வேண்டாம், யாருக்கும் வேண்டாம் என்றுகூடச் சொல்கிற மனப்பான்மை உள்ளவன் நான், ஆனால் தொகுதி நிதி கொடுத்ததற்குப் பின்னர், அந்தத் திட்டம், பொதுமக்களின் குறைகளை சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் உணர்கிற முறையில் உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கான ஒரு காமதேனுவாக இந்தச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி பயன்பட்டு இருக்கிறது. அதிலே என்னுடைய இலாக்காவுக்குத்தான் அதிக பயன்.

பள்ளிக்கூடங்களுக்குத்தான் அதிக நிதி கிடைத்திருக்கிறது. இல்லையென்றால் அந்தப் பள்ளிக்கூடங்கள் வறண்டுதான் கிடக்கும். அது உண்மைதான். ஏனென்றால் அரசாங்கமே 1,000 பள்ளிக்கூடங்கள், 2,000 பள்ளிக்கூடங்கள் கட்டினாலும் கூட, மொத்தத்தில் 35,000 தொடக்கப்பள்ளிக் கூடங்கள் 7,000 உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள், 4,000, 5,000 மேல்நிலைப் பள்ளிக்கூடங்கள் உள்ளன. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தப்படும் இந்தத் தொகுதி மேம்பாட்டு நிதி என்பது இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்தில் இருக்கிறது? திரு. பழனிசாமிதான் அடிக்கடி சொல்வார், எங்கள் கம்யூனிஸ்ட் ஆட்சி மாதிரியாகுமா என்று கேட்பார். கம்யூனிஸ்ட் ஆளும் மாநிலத்தில் இருக்கிறதா என்று கேட்டுச் சொல்லுங்கள், நான் தெரிந்துகொண்டாவது மகிழ்ச்சி அடைகிறேன். அங்கு இல்லை, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி நிதி என்பதைக்கூட நான் பாராட்ட விரும்புகிறேன். ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒரு கோடி ரூபாய் என்றிருந்ததை இப்போது இரண்டு கோடியாக வழங்குகிறார்கள். என்னதான் அரசாங்கம் இருந்தாலும், நாங்கள் மேல்தட்டில்தான் இருக்க முடியும். எங்களுக்கு வந்து சேருகிற செய்திகளை வடிகட்டித்தான் பார்க்க முடியும். பார்க்கின்ற செய்திகளுக்கு எல்லாம் உடனே நாங்கள் விரும்பியவாறு செயல்பட முடியாது. நூறு விண்ணப்பங்கள் வந்தால், பத்து விண்ணப்பங்கள் தான் எங்களால் நிறைவேற்ற முடியும. குறைபாடுகள் இருந்தால் மட்டுமே நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே அப்படி ஒரு நிலைமை இயல்பாக இருப்பதன் காரணமாக, இந்த சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி, மிகவும் பயனளிக்கிறது. அதுவும் கடந்த ஆண்டு 77 இலட்சம் ரூபாயாக கலைஞர் வழங்கினார். அடுத்த தேர்தலுக்குப் பிறகு அவருக்கு 78 வயதாகும். ஆகவே அதுவும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலாபம்தான் என்று நான் கருதுகிறேன்.

தென்மாவட்டங்களின் மேம்பாட்டுக்கு அந்தப் பகுதியிலேயே வளர்ந்து உச்சநீதிமன்ற நீதிபதியாகவும் விளங்கிய நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன் அவர்களுடைய தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டு அதிலே R.A. சீதாராமதாஸ் போன்ற ஓய்வு பெற்ற அதிகாரிகள் இடம் பெற்று அந்தப் பகுதி மக்களுக்கு இடையில் வறுமையினுடைய கடுமை காரணமாக அவர்களுக்கிடையே மாறுபாடு ஏற்பட்டு ஜாதிப் போராட்டங்கள் எல்லாம் வருகின்றன என்பதை உணர்ந்த காரணத்தால் வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருமானத்தைப் பெருக்குகின்ற வழியை ரத்தினவேல் பாண்டியன் அவர்களுடைய குழு நடுநிலை உணர்வோடு வழங்கிய, ஆலோசனைகளை நிறைவேற்றுவதில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது.



தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்; இராமநாதபுரம் போல — எதிர்க்கட்சி தலைவருக்காகத்தான் — நீர்வளம் இல்லாத நிலமாக நீண்டகாலமாக இருந்த நிலங்களை எப்படி மேம்படுத்துவது என்று ஆய்வு நடத்தி, அந்த ஆய்வுக்குழு தருகிற ஆலோசனையைச் செயல்படுத்துவதிலே இந்த அரசு ஆர்வமாக இருக்கிறது.

பாசன ஆதாரங்களைப் பராமரிக்கும் பணி; நிதி ஆதாரங்களுடன் விவசாயக் குழுக்களிடம் ஒப்படைப்பது, எங்கெங்கே பாசனம் இருக்கிறதோ, அங்கங்கே அந்த விவசாயத்திற்காக ஒரு குழு அமைத்து அதற்கு ஒரு நிதி ஏற்படுத்தி, அதை அந்தக் குழுக்களிடத்தில் ஒப்படைத்து, இதிலே அரசியல் இல்லை, அரசியலுக்கு அப்பாற்பட்டு விவசாயத்தினுடைய பாதுகாப்புக்காக பாசன ஆதாரங்கள் — அது வாய்க்காலோ, ஆறோ, குளமோ, ஏரியோ, அதைப் பாதுகாத்து. பராமரித்துக் கொண்டால்தான் தொடர்ந்து விவசாயம் இடர்ப்பாடுகள் இல்லாமல் நடக்கும் என்று அந்தப் பணியும், அந்தத் — திட்டமும் நிறைவேறி வருகிறது.

இங்கே பேசப்பட்டதுபோல அமைப்புச்சாராத் தொழிலாளர் நல வாரியங்கள் ஏறத்தாழ 12 வகையான வாரியங்கள், ஒரு வாரியத்திலே எல்லாவிதமான தொழில் செய்கிறவர்களும் இடம் பெறக்கூடிய முறையில் அந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுச் செயல்படுகிறது.

அறிஞர் அண்ணா அவர்களுடைய அன்னையார் பங்காரு அம்மையார் அவர்களுடைய பெயரால் பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம் என்ற திட்டம் மகளிர் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மகளிர் 20 பேர், 25 பேர் சேர்ந்து சங்கம் அமைத்துக்கொண்டு அதற்கு ஒரு கடனைப் பெற்றுச் செயல்படுவது, இப்போது அகில இந்தியாவிலே பாராட்டுப் பெற்ற மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சின்னப்பிள்ளை என்ற அம்மையாருக்கு, தமிழ்நாடு அரசும் பாராட்டுத் தெரிவித்து ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கியது. அவர்களுக்கு நம்முடைய வாழ்த்தைத் தெரிவித்திருக்கிறோம். ஒரு ஏழ்மைக் குடும்பத்திலே பிறந்து, கல்வி வளர்ச்சி பெறாத சூழ்நிலையிலே வளர்ந்து, சின்ன சின்னப் பிள்ளைகளை வைத்துக்கொண்டு முன்னேறி, மன திடம் காரணமாக மற்ற பெண்களுக்கு எல்லாம் வழிகாட்டி, மகளிர் நல அமைப்புகளை உருவாக்கி, ஒரு பெரிய வெற்றி பெற்ற வீராங்கனையாக அந்த அம்மையார் இன்றைக்கு மதிக்கப்படுகின்றார். இந்த அவை சார்பாகவும் நான் அவர்களுக்கு கலைஞர் வழங்கிய வாழ்த்தைத் தொடர்ந்து, வாழ்த்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தச் சமுதாயத்தில் அடிப்படையிலே மாற்றங்கள் வர வேண்டுமானால் ஒரு அடிப்படைக் கல்வி எல்லா மக்களுக்கும் கிடைத்தால் தான் மாற்றம் வரும். மேல்நிலைப் பள்ளிக் கல்வி என்பது வளர்ச்சிக்கு ஒரு அடையாளமாக இருக்கலாம். பெரிய பெரிய ஊர்களிலே கோபுரம் இருக்க வேண்டும். ஆனால் வீடுகள் இருந்தால்தான் கோபுரத்திற்கு மரியாதை. அப்படி கோபுரம் என்பது போல உயர் கல்வி, ஆய்வுக் கல்வி எல்லாம் ஒரு பக்கம் இருக்க வேண்டுமென்றாலும்கூட, எல்லோருக்கும் கட்டாயமாகக் கல்வி கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் 5 ஆம் வகுப்பு வரையில் கல்வி கிடைப்பதற்காக, 300 பேர் இருக்கிற கிராமமாக இருந்தாலும் அந்தக் கிராமத்துப் பிள்ளைகள் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் படிப்பதற்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துகிற திட்டமும் இங்கே ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-25

அதேபோல, நம்முடைய மாண்புமிகு லத்தீப் அவர்கள் இங்கே இல்லை. அவர்கள் ஏதோ கல்வி வளர்ச்சிக்கான திட்டம் இல்லை என்று கூறியிருந்தார்கள். நடப்பு ஆண்டில் மட்டும் 60, 851 மாணவர்கள் கணினிக் கல்வி பெறுகிறார்கள். கடந்த ஆண்டிலே 30 ஆயிரம் பேரில் ஏறத்தாழ 25 ஆயிரம் பேர் இந்த வாய்ப்பைப் பெற்றார்கள். இப்போது, பிளஸ் 2 மேல் வகுப்பு, பிளஸ் 1 வகுப்பு ஆகியவை சேருவதால் இந்த எண்ணிக்கை வருகிறது. 60 ஆயிரம் பேர் கணினிக் கல்வி பெறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிறகு, அரசுப் பணியாளர்களுக்கு மத்திய அரசின் ஊதிய விகிதத்தை முதன் முதலாக வழங்கியது தமிழ்நாடு அரசு. ஆசிரியர்களுடைய ஊதியத்தை உடனடியாக, எவ்வளவு முதலிலே வழங்க முடியுமோ அவ்வளவு விரைவாக, வேறு எந்த மாநிலத்திலும் வழங்கப்படாதபோது வழங்கியுள்ளது தமிழக அரசு. அதோடு, அகவிலைப்படி மற்றும் பொங்கல் ஊதியத்தை காலத்தில் வழங்கிய அரசு இந்த அரசு. இவையெல்லாம் ஆளுநர் உரையில் இருக்கிறதே, இது தி.மு.க அரசினுடைய சார்பாக வருகின்ற ஆளுநர் உரையாயிற்றே என்று பார்க்காமல், அதனுடைய மேல் அட்டையை எடுத்துவிட்டு வீட்டிலே படித்துப்பார்க்கச் சொல்லுங்கள். அவர்கள் படித்துவிட்டுச் சொல்கின்றபோது இவ்வளவும் அந்த அரசு செய்திருந்தால் போதுமே, இதை மாற்றிவிட்டு பிறகு திண்டாடினால் என்ன செய்வது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்வார்கள்.



நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் பாலகிருஷ்ணன் அவர்கள் கூடச் சொன்னார்கள், அவர்களுடைய காங்கிரஸ் ஆட்சி எல்லாம் ஏற்கெனவே நடைபெற்றுவிட்டது என்று பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள்.. ஆக, நீங்களே காங்கிரஸ் இல்லை என்று சொல்லுகிறீர்கள். அதுவே இந்த நாட்டுக்குப் பெரிய வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் காமராஜர் வழியென்று நினைத்துக் கொண்டிருந்தோம். நீங்கள் அதுவெல்லாம் கிடையாது, நாங்கள் தனிதான் என்றால் நாங்கள் என்ன செய்வது? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் என்பது தமிழ் மாநில காங்கிரஸ்தான். எங்களுடைய தலைவர் காமராஜர்தான் என்பதை நான் அழுத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மிகவும் பாராட்டுகிறேன். தமிழ் மாநில காங்கிரஸ்தான் காங்கிரஸ் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை தி.மு.க. ஒத்துக்கொள்கிறது, இளங்கோவன் ஒத்துக்கொள்கிறாரா என்பது எங்களுக்குத் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, விவசாயிகளைப் பற்றி இங்கே பேசுகின்றபோது கொப்பரைத் தேங்காய் பற்றிப் பலபேரும் குறைப்பட்டார்கள். தென்னை மரத்தில் பூச்சி ஒரு பக்கம் வந்து விழுந்தது, இன்னொன்று கொப்பரைத் தேங்காய் விலைகுறைந்தது. இதுதான் விவசாயம். இந்தியாவிலேயே விவசாயத்தைப் பற்றி 100 வருடங்களாகச் சொல்லப்படுகின்ற கருத்து; விவசாயம் என்பது நிரந்தரமாக, நிலையான வருமானம் தருகின்ற ஒரு தொழிலாக இருக்காது; பெரிய பொருளாதார வளர்ச்சிக்கும் வாய்ப்பு அளிக்காது. 10 பஸ் வைத்திருப்பவர்கள் எவ்வளவு பெரிய முதலாளிகள் ஆனார்கள் என்பது கோயம்புத்தூரில் நன்றாகத் தெரியும். 10 ஏக்கர், 50 ஏக்கர் வைத்துக்கொண்டு விவசாயம் செய்தவர்கள்கூட இப்போது கடன் வாங்கியிருக்கிறார்கள். இது இயற்கையினுடைய தாக்கம். இதை ஓர் அரசாங்கம் ஓரளவுக்குத்தான் ஈடுகட்ட முடியும். பழனிசாமி நாளையே முதலமைச்சராக வந்தாலும் உடனே கம்யூனிஸ்ட் ஆட்சி என்று அறிவித்து விடமுடியுமா? ரஷ்யாவிலேயே சொல்லுவார்கள் இப்போது அதுவெல்லாம் வேண்டாமென்று. ஆகவே, என்ன காரணம் என்று கேட்டால் விவசாயத்தில் இருக்கின்ற கஷ்ட நஷ்டத்தைப் போக்குவதற்கு அவ்வப்போது அரசாங்கம் ஒவ்வொரு நாளும், எப்படி மனிதன் என்றால்

நோய் இருக்கிறதோ, அப்படி நோய் வருகிறபோது எல்லாம் சிகிச்சை செய்தாக வேண்டுமோ அதுபோன்று—அந்தக் கடமைகளை நாங்கள் செய்கின்றோம். கொப்பரைத் தேங்காயைப் பற்றி அமைச்சர் இங்கே விளக்கம் சொல்லிவிட்ட காரணத்தால், நான் அதிகம் சொல்லவில்லை. இதுகுறித்து முறைப்படி, அகில இந்திய அளவிலே ஆதார விலை நிர்ணயிப்பதற்குரிய அந்த அமைப்பு, மத்திய அரசின் ஆதார விலைத் திட்டம் 2000 என்று அறிவிப்புச் செய்யப்பட்டு, அது இங்கே இருக்கின்ற கூட்டுறவு அமைப்பின் மூலமாக, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக முறைப்படுத்தப்பட்டு மேல் அதிகாரிகள் எல்லாம் பார்த்து நடைபெறுகிறது. இதிலே ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், தெரிவித்தால்தான் திருத்த முடியும். வீட்டிலே எல்லாம் திருட்டுப் போகின்றது என்று பொதுவாகச் சொல்லிவிட்டால், எந்த வீட்டில் திருட்டு, எங்கே திருட்டுப் போனது என்று யாருக்குத் தெரியும்? ஆகவே, குறிப்பிட்ட குற்றச்சாட்டு இருந்தால், நம்முடைய கோ.சி. மணி அவர்கள் ஏற்கெனவே திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டை விசாரிப்பதாகச் சொன்னதைப்போல, எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும் அரசு பொறுப்பேற்றுக்கொண்டு விசாரிக்கும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும் விவரமாக நான் சொல்லலாம். இப்போது நேரம் 1.30 ஆகிவிட்டது. ஆகவே, அதிக நேரம் எடுத்துக்கொண்டு நான் அதை விளக்கவில்லை; ஏற்கெனவே விளக்கப்பட்டு இருக்கிறது.

அடுத்து, தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சியைத் தனியாகப் பார்க்க மாட்டார்கள். தமிழ்நாட்டில் மட்டும் என்ன வளர்ச்சி, எவ்வளவு கூடுதல், குறைவு என்று பார்க்க மாட்டார்கள். அகில இந்திய அளவில் ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான், மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்திலே என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரியும். இங்கேகூடச் சொன்னார்கள். பீகார் மாநிலத்திலேகூட இந்தச் சட்டம் வந்துவிட்டது, தமிழ்நாட்டில் இன்னும் வரவில்லை என்று ஒருவர் சொன்னார். அங்கே சட்டம் வரும்; செயல்படாது. இங்கே சட்டம் வந்தால் செயல்படும். பீகாரில் சட்டம் செயல்படவில்லை என்பது 10 வருடங்களாக நடக்கின்ற உண்மை. இங்கே எங்கோ ஓர் இடத்தில் ஒரு கொலை நடைபெற்றுவிட்டால், பட்டு அய்யரா (குறுக்கீடு) பட்டு குருக்கள் என்று இங்கே சொன்னார்கள், நான் வருத்தப்படுகிறேன். அதைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு முதலமைச்சர் அவர்கள் என்றைக்கும் துணையாக இருப்பார்கள்.

பிற்பகல் 1-30



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** குற்றச்சாட்டு வந்தால், அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கலாம். பொதுவான குற்றச்சாட்டுக்கள் என்று சொன்னால், எங்களால் செயல்பட முடியாது. இன்ன திசையில் போவது என்று தெரிந்தால்தானே போகலாம். ஆகவே, அது ஒன்று. ஒருவேளை ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் மீது குற்றச்சாட்டு வருமானால், உடனடியாக நடவடிக்கை எடுக்கிற அரசு இந்த அரசு. அதற்கு உதாரணமாக நான் பெயர்களை எல்லாம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அது எந்தப் படுகொலையிலோ, மற்றவற்றிலோ ஈடுபட்டவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆயினும் அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பவர் கலைஞர் அவர்கள் என்பதெல்லாம் நீங்களெல்லாம் அறிந்த உண்மை. அதை நான் விளக்கத் தேவையில்லை. இப்போது நான் இங்கே சொல்ல விரும்புவது, ஒருவேளை நான் பேசினால்கூட, எங்களை நாங்களே பாராட்டிக் கொள்கிறோம் என்று நீங்கள் கருதக்கூடும். அந்த அவசியம் இன்னும் எங்களுக்கு வரவில்லை; இன்னும் ரொம்ப நாட்கள் கழித்து வந்தாலும் வரும். ஆனால், இப்போது மாநில அளவிலான ஆய்வு அறிக்கைகளைப் பற்றி மத்திய திட்டக் குழு உறுப்பினர் திரு. மாண்டக் சிங் அலுவாலியா அவர்கள் பேசுகிறபோது சொன்ன கருத்தை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போதுதான் முதல்முறையாக மாநில அளவிலான ஆய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் சில மாநிலங்கள் அதிவேகமாக முன்னேறி வருகின்றன. அங்கே இருக்கிற உறுப்பினர் அமீன் என்பவர் குறிப்பிட்டதைப்போல, ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ள 14 மாநிலங்களில் தமிழ்நாடு, முதலிடம் பெற்றுள்ள மூன்று மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. (மேசையைத் தட்டு ஒலி) மூன்றில் ஒன்றுதான். இருந்தால்கூட அது பாராட்டப்பட வேண்டும். ஒலிம்பிக் போனால், மூன்றாவதிலே வந்தால்கூட எவ்வளவு பாராட்டுகிறோம்? ஆகவே, மூன்று மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. மராட்டியத்தில், குஜராத்தில் 8 சதவிகிதம் வளர்ச்சியும், தமிழ்நாட்டிலே 6 சதவிகிதத்திற்கு மேற்பட்ட வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களில் அதிகபட்சமாக மூன்று சதவிகித வளர்ச்சியே ஏற்பட்டுள்ளது; மேற்கு வங்கம் உட்பட மூன்று சதவிகித வளர்ச்சியே ஏற்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமானது. இந்தியாவின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் பற்றிக் குறிப்பிடுகிறபோது,

1980-ல் 5.8 சதவிகிதமாக இருந்த வளர்ச்சி, 1990-ஆம் ஆண்டுகளில் 6.5 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இது தேசிய புள்ளிவிவரம். இதை மாநில அளவிலான புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடக்கூடாது. சில மாநிலங்களில் வளர்ச்சி தேசிய அளவைவிட அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் தேசிய அளவைவிட சற்றுக் கூடுதலாக உள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. அடிப்படையில் தமிழ்நாடு மிக வேகமாக முன்னேறி வரும் மாநிலமாகும். எந்த மாநிலங்கள் பொருளாதாரச் சீர்திருத்தங்களை சிறப்பாகச் செய்துள்ளனவோ அங்கு வளர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளது. திரு. பழனிசாமி அவர்கள் அதைக் கவனிக்க வேண்டும். தமிழ்நாட்டிலேதான் பரவலான பொருளாதார வளர்ச்சி; சில இடங்களிலே குறைந்திருக்கலாம்; கூட இருக்கலாம். அது பரவலாக இருக்கிறது. அவ்வாறு செய்ய முடியாத மாநிலங்களில் அது குறைந்துள்ளது. சிறந்த முறையில் நிர்வாகம் நடைபெறுகிற மாநிலங்களில் அவை சிறப்பாகச் செயல்பட்டுள்ளன என்று மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள் கூறியதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இது மத்திய திட்டக் குழு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்து.

தினமணியிலே ஒரு தலையங்கம். "தமிழகத்தில் தகவல் தொழில் நுட்பப் புரட்சி ஆரவாரமின்றி நிகழ்ந்து வருவது கண்கூடு. கணினி மென்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தமிழகம் முன்னணியில் உள்ளது. அது இப்போது மிகுந்த இலாபம் ஈட்டித் தருகின்ற ஒரு தொழில். அந்தப் பொருளாதாரத்தில் வருமானம் வருமானால், உலகத்திலேயே சில மிகப்பெரிய முதலாளிகளை உருவாக்குவதற்கு இந்த கணினி தொழில் இன்றைக்கு அவர்களுக்குப் பயன்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டிலே அவ்வளவு பெரிய தொழில் இல்லாவிட்டாலும்கூட, இந்தியாவில் இரண்டு மூன்று பேர் வளர்ச்சி அடைந்து வருகிறார்கள். அதிலே தமிழ்நாட்டிற்கு ஒரு நல்ல இடம் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்றுமதியில் தமிழகம் முன்னணியில் உள்ளது. தொழில் நுட்ப மேம்பாட்டிற்காக உன்னதமான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கட்டமைப்பு — Infrastructure— ஒரு தொழில் வளருவதற்கான தேவையான சூழல்; அதற்குத் தேவையான கட்டடங்கள் அல்லது மற்ற அமைப்புகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. உலகத் தரம் வாய்ந்த டைடல் பூங்காவை சிங்கப்பூர் நாட்டைச் சார்ந்த, அங்கேயிருந்து வந்த மிகப் பெரிய தகுதி வாய்ந்தவர்கள் பாராட்டிவிட்டுச் சென்றார்கள். வெளிநாட்டிலேயிருந்து வந்தவர்களும் பாராட்டினார்கள். அந்த உலகத் தரம் வாய்ந்த டைடல் பூங்காவைப் போல் இரண்டாவது



பூங்காவும் அமைக்கப்பட உள்ளது. அதேபோல, கண்ணாடி இழை கம்பிவடங்கள் — Optic Fibre Cable Network— உருவாக்குவதிலும், மாநில அரசு, தனியார் நிறுவனங்களும் முனைப்புக் காட்டி வருகின்றன. இந்த Optical Fiber Cable சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு கடல் வழியாக, நீருக்கடியில் இருக்கிற கண்ணாடி இழைகளாக அமைக்கப்பட்டுவிடுமானால், இந்த இன்டர்நெட் இணைப்பினுடைய வசதி உலகம் முழுவதும் மிக வேகமாகப் பரவுகிற வாய்ப்பை இது தரும். அதற்கேற்ற வாயிலாக சென்னை மாநகரம் விளங்குகிறது.

பிற்பகல் 1-35

அதேபோல, கிராமங்களில் இணைய (இன்டர்நெட்) மையங்களை அமைக்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளதாக, ஆளுநர் பாத்திமா பீவி இங்கே தெரிவித்தார்கள். நாட்டிலேயே, முதன்முறையாக, இந்த முன்னோடித் திட்டம் செயல்படவிருப்பது மிகவும் பயனுடையதாகும். இது தினமணியிலே தெரிவிக்கப்பட்ட கருத்து. இதன்விளைவாக, தற்போது, நகரங்களில் அமைந்துள்ள இணை நிலையங்களைப் போல, கிராமங்களிலும் அமைக்கப்படும் என எதிர்பார்க்கலாம். கிராமங்களிலும் அமைக்கப்படும் என்றால், ஒவ்வொரு கிராமத்திலேயும் என்று அர்த்தமல்ல. Rural Area-வையும் அது touch பண்ணும் என்றுதான் நான் சொல்வேனே தவிர, இது ஒவ்வொரு கிராமத்திலும், குடிநீர்த் திட்டம் மாதிரி ஆகும் என்று நான் கருதவில்லை. எனக்கு அது புரியவில்லை. கிராம, Rural Area-ல் இது தொடர்புகொண்டதாக ஆகிறபோது அதனுடைய பயன் கிடைக்கும். மதுரை, திருச்சியில் செயற்கைக்கோள் தரை நிலையங்களும், திருநெல்வேலியில் இது தொடர்பான கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்பட உள்ளன.

அதேபோல மென்பொருள் உற்பத்தி நிறுவனங்கள் சென்னை, கோவை ஆகிய பகுதிகளில் மட்டுமல்லாமல், தமிழகத்தின் இதர பகுதிகளிலும் பரவலாக அமைக்கப்படவிருப்பது நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. இதனால் அப்பகுதிகளிலும் வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கு இந்தத் தரை நிலையங்கள் வழி வகுக்கும். பழனிசாமி அவர்கள் எழுப்பினார்கள் சந்தேகம், இதற்கும் வேலைவாய்ப்பிற்கும் என்ன சம்பந்தம்? இதைப் பயன்படுத்தி வேறுபல தொழில்கள் வருகிறபோது, அந்தத் தொழில்கள் மூலமாக, சேலத்திலே ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை என்றால், அதிலேயிருந்து ஏற்படுகின்ற மறைமுகமான தொழில் நிலையங்கள்; அங்கே கிடைக்கிற வேலைவாய்ப்பைப் போல, எவ்வளவுக்கு எவ்வளவு

[பேராசிரியர் க. அன்பழகன்] [2001 ஜனவரி 25

போக்குவரத்து வசதியும், செய்திப் போக்குவரத்தும் வளர்கிறதோ, வளர வாய்ப்பு உருவாகிறதோ, அந்த அளவிற்கு அதனுடைய —Reflection— மறுபதிப்பாக வேலைவாய்ப்புகள் உருவாகிற வாய்ப்பு உருவாகிறது. ஆகவே, மேம்பட்ட மனிதவளம், கட்டமைப்பு வசதிகள் மட்டுமல்லாமல், மாவட்ட நிருவாகத்தைக் கணினி மயம் ஆக்குதல், அரசுப் பள்ளிகளில் கணினிக் கல்வி, கிராமங்களில் இணைய மையங்கள் அமைத்தல் போன்ற தமிழக அரசின் முனைப்பான செயல்பாடுகளின் பயனாக, இந்தியாவில் தலைசிறந்த தகவல் நுட்ப மாநிலமாக தமிழகம் திகழும் என நம்பலாம் என இப்படிப்பட்ட பல கருத்துகளை, அவ்வப்போது ஆய்ந்து வெளியிட்டு வருகிற ஏடான தினமணி தெரிவித்திருக்கிறது.

11 ஆவது நிதிக் கமிஷன் தலைவர் திரு குஸ்ரோ அவர்கள் 1-11-1999 அன்று சென்னையில் உரையாற்றிய போது, எழுத்தறிவு, பிறப்பு-இறப்பு மற்றும் சிசு மரண விகிதங்களில் தேசிய சராசரி அளவைவிட மிகச்சிறப்பான குறியீடுகளைப் பெற்றுள்ள தமிழ்நாடு, சமூகப் பணி முனையில், Social Service Sector-ல், தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது; கல்வி, சுகாதாரம், குடிநீர் வசதி, கிராமச் சுற்றுப்புறச் சூழல், இந்த அடிப்படைகளில் தமிழ்நாடு இந்தியாவில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கி, ஆயிரம், அதற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகளை அமைத்து, தமிழ்நாடு அடிப்படை கட்டமைப்பு வசதி முனையில், — Infrastructure Sector-ல் அளப்பரிய சாதனையை நிகழ்த்தியுள்ளது என்றும் அவர் பாராட்டியுள்ளார்.

நேரம் எடுத்துக்கொள்வதற்கு கொஞ்சம் மன்னித்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் இன்னொரு சந்தர்ப்பத்தில் சொல்ல நேரம் இருக்காது. சர்வதேச வளர்ச்சிக்கான ஹார்வார்டு மையத்தின் இயக்குநர் பேராசிரியர் ஜெஃப்ரி சேக்ஸ் தன்னுடைய வீடியோ உரையில் சமூகப் பரிமாணங்கள் Social dimensions—வர்த்தக சூழல்கள் — business environment—என்ற இருபெரும் அம்சங்களை மட்டுமின்றி, உயரிய வளர்ச்சி விகிதங்களை எந்த நாடும் எய்துவது என்பது இயலாத ஒன்றாகும்; தமிழ்நாடு இந்த இரண்டு அம்சங்களையும் கொண்டுள்ளதால், இந்த இரண்டுவிதமான வளர்ச்சியின் கூறுகள் இங்கே, தமிழகத்திலே இருக்கிற காரணத்தால் மிகச்சீரிய வகையில் இயங்கிட ஆற்றலைப் பெற்றுள்ளது; வளர்ச்சி வேகமாக உருவாவதற்குரிய பின்னணியைப் பெற்றுவிட்டது என்று கூறியுள்ளார். பொருளாதார நிபுணரும், சென்னைப் பொருளாதார மையத்தின் தலைவருமான டாக்டர் ராஜா செல்லையா அவர்கள்,



2001 ஜனவரி 25] [பேராசிரியர் க. அன்பழகன்]

கூறுகிறார்கள், தமிழ்நாடு அடைந்துள்ள வெற்றி நாம் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிற மாதிரி பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளால் மட்டும் உருவானது அல்ல; Economic reforms அதனாலே மட்டும் உருவானதல்ல. இங்கே உள்ள மனித வளங்களை முறையாக வளர்ப்பதில் காட்டப்பட்ட ஈடுபாடும் காரணம் ஆகும். இப்போது மத்திய கல்வி அமைச்சருக்கு Human Resources Development Minister என்றுதான் பெயர். அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், கல்வி என்பது மானிட வளர்ச்சியில், மனித ஆற்றல் வளர்ச்சியில் ஒரு கூறு. இந்தக் கல்வி தவிர வேறு பல வகைகளிலேயும் மனித வளர்ச்சி மேம்பட வேண்டும். அந்த வளர்ச்சிக்கான வாய்ப்பு, சூழல் இவற்றையெல்லாம் உருவாக்குவதில் மனித வளங்களை முறையாகக் காத்து வளர்ப்பதும் ஓர் அடிப்படை. இது ஓர் அடிப்படையில் சொல்லப்போனால் ஒரு ஜனநாயக அரசாங்கமே அதற்கோர் அடிப்படை ஒரு சட்டமன்றம் முறையாக நடப்பதே அதற்கோர் அடிப்படை பள்ளிக்கூடம் எல்லாம் மூடாமல் நடப்பதே அதற்கோர் அடிப்படை, தொழிற்சாலைகள் எல்லாம் அடிக்கடி மூடாமல் இருந்தால் அதற்கோர் அடிப்படை, மனித சங்கிலி காரணம் இல்லாமல் ஏற்படாமல் இருந்தால் அதோர் அடிப்படை; (சிரிப்பு) ஆக, இவை எல்லாமே அடிப்படை Indirect. அது எப்படி என்று கேட்டால் ஒரு நல்ல சூழ்நிலையில், திருமண வீட்டிற்குப் போகிறபோது நம்மை அறியாமலேயே மகிழ்ச்சியாக இருக்கிறோம். பெண்ணும் சொந்தக்காரி இல்லை. பையனும் சொந்தக்காரன் இல்லை. துக்க வீடு, யாரோ ரோட்டிலே ஒருத்தன் இறந்து போனால் துக்கம், நம்மை அறியாமலேயே துக்கப்படுகிறோம். ஆகவே, சமூக நிலையிலே ஏற்படுகிற மாற்றங்களில் இந்த மனித வளங்களை முறையாக மேம்படுத்துகிற வாய்ப்பு தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது என்று அவர் — அவர் ஒரு பெரிய பொருளாதார நிபுணர். அவர் தமிழ்நாட்டைப் பற்றியும் அறிவார்; அகில இந்தியாவையும் அறிந்தவர், அவர் டாக்டர் ராஜா செல்லையா. அவர் ஒரு காலத்திலே மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்தார். அப்படிப்பட்டவர் தெரிவித்த கருத்து.

பிற்பகல் 1-40

இந்திய தொழில் வர்த்தக நிறுவனங்களின் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் அமித் மித்ரா சொல்கிறார். "தமிழ்நாடு மற்ற மாநிலங்கள் பார்த்து பின்பற்றத்தக்க முன்னுதாரணமாக இன்று விளங்கி வருகிறது" — It is an example for other States —. 'இந்து' பத்திரிகையின் வர்த்தக ஆசிரியர், பேராசிரியர் எஸ். சுவாமிநாதன் அவர்கள் அரசியல்,

பொருளாதார ரீதியான பிரச்சினைகளையெல்லாம் மீறி முன்னேற்றம் கண்டு, தலைசிறந்த மாநிலமாகத் திகழ்ந்திட முடியும் என்பதைத் தமிழ்நாடு நிரூபித்துக் காட்டியுள்ளது; தமிழ்நாடு எத்தனையோ வகையிலே பின்தங்கக்கூடிய ஒரு சூழ்நிலைக்கும், தாக்கத்திற்கும் ஆளாகி, படுக்கையிலே கிடக்கிற நோயாளியைப்போல ஒரு நிலைமைக்கு ஆளாகியிருந்தது; இன்றைக்கு எப்படியோ எழுந்திருந்து நடமாடி முன்னேறுவதற்கான ஒரு திராணியோடு தமிழ்நாடு விளங்குகிறது என்று. Economic and Political Weekly என்ற அந்தப் பத்திரிகையிலே 12-2-2000 அன்று எழுதப்பட்ட செய்தி ``Overall, Tamil Nadu could be considered as one State which is most successful in reducing regional disparities in economic and social development even when there was substantial variation in the natural endowments in different parts of the State."

தமிழ்நாட்டிலே, இந்த மாநிலத்திலே வெவ்வேறு பகுதியிலே வெவ்வேறு விதமான பொருளாதாரச் சூழ்நிலை ஏற்படக்கூடிய இயற்கைத் தன்மைகள் இருந்தாலும்கூட, கூடுமானவரையில் தமிழ்நாட்டில் சமநிலை ஏற்படுவதற்கு — சமத்துவபுரம் அல்ல — சமநிலை ஏற்படுவதற்கு பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைவதற்கான வழிவகையில் தமிழ்நாடு செயல்பட்டிருக்கிறது. மொழி பெயர்ப்பு, தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இயற்கை வள அமைப்பில் வேறுபாடுகள் பல காணப்படினும், பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டை உருவாக்குவதில் மாநிலத்தின் பகுதிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளை பெருமளவிற்குக் குறைத்து, வெற்றி கண்டுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும். அதிலே சொல்லப்பட்டது நம்முடைய மாநிலம் என்று சொல்லவில்லை, ஒரே மாநிலம் தமிழ்நாடு என்று சொல்லப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணமாக, நான் உங்களைக்கூட, எதிர்க் கட்சியினரைக்கூட பாராட்ட விரும்புகிறேன். என்னதான் வேறுபாடு இருந்தாலும்கூட, தமிழ்நாட்டிலே ஓர் ஒழுங்கைக் காப்பாற்றுகிறீர்கள் அல்லவா? மற்ற மாநிலங்களில் உள்ள எதிர்க்கட்சிகள் அந்த உணர்வோடு செயல்படவில்லை. ஆட்சிகூட தரங்குறைந்ததாகக் கூட சில இடங்களிலே இருக்கலாம். எதிர்க் கட்சிகளினுடைய நோக்கம் ஆட்சியைக் கைப்பற்றுவது மட்டும் என்று அல்லாமல், இந்த மக்களுக்கு இப்போது கிடைக்க வேண்டிய நன்மையைக் கிடைக்கச் செய்து விட்டு, நம்முடைய கட்சியை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கம் அங்கே இல்லாத காரணத்தால், அந்த மற்ற மாநிலங்களை விடச் சிறந்த ஒரே மாநிலம் தமிழ்நாடு என்று பாராட்டப்படுகிற நிலைமையைப் பெற்றிருக்கிறது.

அடுத்து, இன்னோர் ஏடு Computer To-day.



அதிலே, ``Tamil Nadu is gearing up for the modern age. Shedding its image of being a conservative society, the State is now opening its doors to international companies to make use of its huge pool of resources, infrastructure and skilled manpower. The trend, which started two years ago, has helped the State position itself as one of the much sought after IT destinations in the Country" என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நவீன யுகத்திற்கு ஏற்றபடி தமிழகம் தயாராகிக் கொண்டு வருகிறது. பிற்போக்கான சமுதாயம் என்ற பழைய நிலையை விட்டொழித்து, தமிழகம் இன்று அந்த மாநிலத்திலுள்ள மிகப் பெரிய வள அமைப்புகளையும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும், சிறப்பான மனித வளத்தையும், பயன்படுத்துமாறு செய்வதற்கு ஏற்ற முறையில், தமிழ்நாட்டினுடைய நிலைமையை மாற்றி, சூழ்நிலையை மாற்றி, 2 ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் புதிய நிலையை உருவாக்கியுள்ளது. இந்த மாற்றத்தினால் தகவல் தொழில் நுட்பத்தில் ஈடுபடும் அனைவரும் விரும்பித் தேர்ந்தெடுக்கும் இடமாகத் தமிழகம் உருமாற்றம் பெற்றுள்ளது. கம்ப்யூட்டர் தொடர்பான தகவல் தொழில் நுட்பம், இன்டர்நெட் முதலானவற்றில் ஈடுபடுவதற்கு அகில இந்தியாவிலும் உள்ளவர்கள் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து இங்கே வரக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது என்பதை Computer To-day என்ற அந்தப் பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

பிற்பகல் 1-45

Economic Times என்ற அந்த ஏட்டில் 18-8-2000 அன்று எழுதிய கருத்து:

"What clearly emerges is that Chennai, Bangalore and Pune, in that order are the top three cities for I.T. in India, followed by Mumbai, Hyderabad and least of all, Delhi.

The traditional business destinations in the 1970s were also the IT destinations, which in order of priority are ranked Gujarat in the number one place, followed by Andhra Pradesh, Maharashtra, Tamilnadu and Karnataka, currently catapults Tamilnadu from fourth place to first place, followed by Delhi, Andhra Pradesh, Maharashtra and lastly Karnataka." (Thumping of Desks).

10 வருடத்திற்கு முன்னாலே இருந்த நிலை, 5 வருடத்திற்கு முன்னாலே இருந்த நிலை, அந்த ஆர்டர் மாறி அதிலே முதலிடத்திற்கு தமிழ்நாடு

வந்திருக்கிறது என்பதை விளக்க மொழிபெயர்ப்பைப் படித்து நேரத்தை எடுத்துக்கொள்ளாமல் உங்களுடைய கவனத்திற்கே விட்டுவிட விரும்புகிறேன்.

சிங்கப்பூரிலிருந்து வெளி வரும் "Strategic Intelligence" என்ற இணைய இதழில் Internet Magazine-ல் "Terrific Tamil Nadu" என்ற தலைப்பில் வெளியான கட்டுரை இது:

``Less than a decade ago, Chennai was a conservative provincial town where the stores closed early." — கடைகள் எல்லாம் பெரிய ஸ்டோர்ஸ். அது, அவர்கள் சொல்வது சாதாரண கடையாக இருக்காது; வெற்றிலை பாக்குக் கடையாக இருக்காது. சென்டிரல் ஸ்டோர்ஸ், அப்படிப்பட்ட கடைகளை மாலையிலேயே மூடிவிடுவார்கள். — Stores closed early, Today it is a humming city of 5 million, the favourite investment destination for India's software industry and fast becoming the nation's major centre for automobile productions spanking new Ford, Hyundai and Mitsubishi plants ring the city. சுற்றி வளையம் மாதிரி இந்த தொழிற்சாலைகள் வந்துகொண்டிருக்கின்றன என்று சொல்லிவிட்டு "Chennai is also home to the country's biggest supermarket chain and its biggest privately-owned internet access company. It boasts 600 cybercafes." என்று சொல்லப்பட்டிருக்கிறது.

Cybercafes என்றால் அதைத் தயாரிப்பது, அதாவது மென்பொருள் தயாரிப்பு அமைப்புக்கள்.

"It boasts 600 cybercafes, far more than any other Indian city. And within two years, it could become India's main telecommunication gateway with the laying of two giant submarine fibre-optic cables to Singapore."

ஏற்கெனவே சொன்னதிலேயே இந்தத் தகவலும் இடம் பெற்றிருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு நல்ல முயற்சி, ஒரு தெளிவான முன்னேற்றத்திலே, இடையீடு ஏற்பட்டால் நாடு என்ன நிலைக்கு ஆளாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் — எனக்காக அல்ல, நான் இன்னும் சொல்லப் போனால் இந்த வேலை, அமைச்சர் வேலை இல்லை என்றால், எனக்கு வேறு சில கொள்கைகளையெல்லாம், இப்போது பேச முடியாததையெல்லாம் பேசக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைக்கும். அதுவும் வாழ்க்கையிலே நான் பெற வேண்டிய ஒரு பேறாகும். ஆகவே, அந்த முறையிலே எனக்காக



நான் இதைச் சொல்லவில்லை. தமிழ்நாட்டிலே இருக்கிற உங்களைப்போல விவரம் தெரியாத மக்கள், தவறான பாதையிலே (மேசையைத் தட்டும் ஒலி) செல்வதற்கு (குறுக்கீடு) உங்களைப் போல் அந்த அளவு விவரம் தெரியாதவர்கள் என்றால் உங்களுக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவும் தெரியாத மக்கள் நிறைய இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது எனக்குத் தெரிந்தது என் கட்சிக்காரர்கள் எல்லோருக்கும் தெரியுமா? அதேமாதிரி மக்களுடைய நிலை. கட்சியிலேயே தொடர்பில்லாத மக்கள், அவர்களுடைய நிலை; அந்த மக்களை அனாதைக் குழந்தைகளாக நினைத்துக்கொண்டு அவர்களை யார் கையிலாவது ஒப்படைத்துவிட்டு, நாளைக்கு ஏமாந்து அவர்கள் கண்ணீர் விடுகிற நிலைமைக்குத் துணை போக வேண்டாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல செய்திகளை நான் சொல்லலாம். அது நான் ஒரு பேச்சாளன் என்பதைக் காட்டுமே தவிர, சட்டமன்றப் பொறுப்புணர்ந்து குறித்த நேரத்தில் பேசி முடித்ததாக அது காட்டாது. ஆகவே, இங்கே அவையிலே சொல்லப்பட்ட விளக்கங்கள் ஓரளவே சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நீங்கள் மனதார ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். சொன்ன விளக்கங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். அதனாலே என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று நான் கேட்கவில்லை. அந்தத் துன்பம் உங்களுக்கு வேண்டாம். ஆனால் சொல்லப்பட்ட விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய விளக்கங்கள்தான் என்பது என்னுடைய எண்ணம்.

இங்கேகூட டாக்டர் திருமதி காஞ்சனா கமலநாதன் அவர்கள், ஒரு கண்ணாடிக் குவளையில் முக்கால் பங்குத் தண்ணீர் இருக்கிறபோது அதை நாங்கள் அந்த முக்கால் பங்குத் தண்ணீர் இருக்கிறது என்று பெருமையாகச் சொல்கிறோம். எதிர்க்கட்சியிலேயுள்ளவர்கள் அதிலே கால் பங்கு தண்ணீர் இல்லாத இடத்தைக்காட்டி இது காலியாக இருக்கிறது என்று அதைச் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். இதற்குத் திரு. ஞானசேகரன் அவர்கள் வேறு என்னவோ சொன்னார். இருந்தாலும்கூட எனக்கு இன்னொரு விளக்கம் தோன்றுகிறது. அந்த அம்மா சொன்னதுகூட தப்பு. தண்ணீர் முழுமையாக இருக்கிறது. Brim-full of the glass என்று சொல்கிற அளவிற்கு இந்த அரசின் சாதனைகள்; ஒரு குவளை நிறைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்தக் குவளையும் இதைவிடப் பெரிய குவளையாக நாட்டிலே இல்லை; நிறைக்கின்ற ஆளும் இல்லை. ஆகவே இங்கேதான்

நிறைந்திருக்கிறது. அதைப் பார்க்கிறபோதுகூட என்ன தெரிகிறது என்றால் தண்ணீர் முழுவதுமாக இருந்தால் கண்ணாடி டம்ளரைப் பார்த்தால் தண்ணீர் இருப்பது தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி) திரு. ஞானசேகரன் எல்லாம் கால் கிளாஸ் தண்ணீர்தான் பார்த்திருப்பார். அதனால் தண்ணீர் இருப்பது தெரியாத ஒரு நிலைமை ஏற்படக்கூடும். (சிரிப்பு) கவிழ்த்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

**திரு. ஜி. பழனிசாமி:** குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் மிகவும் சிறந்த முறையிலே பதிலுரை அளித்திருக்கிறார்கள். இரண்டு கிளாஸிலும் தண்ணீர் இருக்கிறது என்பது உண்மை. நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதை மறுக்கவே இல்லை. ஆனால் அந்த 2 கிளாஸிலும் இருக்கிற தண்ணீரிலே அதனுடைய கலரைப் பார்த்து நாங்கள் ஏமாந்துவிட விரும்பவில்லை. ஏனென்றால் ஒன்று உப்பு கலந்த நீராக இருக்கிறது. ஒன்று நல்ல தண்ணீராக இருக்கிறது. அதனால் நீங்கள் 2 கிளாஸில் உப்புத் தண்ணீரையும் அதேமாதிரி உப்பு இல்லாத நல்ல தண்ணீரையும் வைத்து ஏமாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு இந்த நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமான விடை, உப்புத் தண்ணீரோடு நல்ல தண்ணீர் கலந்தால் உப்பு குறைந்துவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) நான் என் வீட்டு கிணற்றுத் தண்ணீர் உப்புத் தண்ணீராக இருந்தால் கூட வெளியிலே இருந்து கார்ப்பரேஷன் தண்ணீரை வாங்கி அதில் ஊற்றினால் அதில் உப்பு போய்விடுகிறது என்று பார்த்து அதைத்தான் குடித்துக் கொண்டிருக்கிறேன். நான் உப்புப் போட்டுக் குடிக்கிறவன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் என்னதான் விளக்கம் சொன்னாலும்கூட, எங்களுக்கு இருக்கக்கூடிய இந்த டம்ளரிலே காலியாக இருப்பதுதான் எங்களுக்குத் தெரிகிறது. அதனால்தான் ஆளுநர் உரையிலே ஒன்றும் இல்லை என்று நான் அன்றைக்கு மிகத் தெளிவாகச் சொன்னேன். இதில் full ஆக இருக்கிறது என்று அவர் சொன்னதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஞானசேகரன் அவர்களுக்கு என்னுடைய பாராட்டு. ஏனென்றால் இதைச் சொல்லித் தீர வேண்டிய நிலைமையில் அவர் இருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். (சிரிப்பு) இதைவிட முக்கியமானது; இந்த கவர்னர் உரையைப் பற்றி இது ஏதோ கலைஞர் கருணாநிதியினுடைய ஆட்சியிலே, அவர், தன்னுடைய ஆட்சியிலே நடைபெற்ற குற்றங்கள், குறைகள், கொலைகள், படுகொலைகள் அக்கிரமங்கள், அநீதிகள், இன்னும்கூட சில வார்த்தைகள் இருக்கின்றன, அதையெல்லாம் மறைப்பதற்குக் கவர்னரைக் கேடயமாகப் பயன்படுத்தி இருக்கிறார் என்று நம்முடைய அ.தி.மு.க. தலைவி அந்த அம்மையார் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். கவர்னரை, அதுவும் இன்றைக்கு இருக்கின்ற கவர்னரை எந்த அரசாங்கமாவது கேடயமாகப் பயன்படுத்த முடியுமா? அவர் Justice ஆக இருந்தவர். சட்டப்படி என்ன உண்டோ அதைத்தான் அவர் செய்வார். இரண்டாவது, கவர்னர் உரையிலே ஒரு இடத்திலேகூட கலைஞர் கருணாநிதி என்று பெயர் சொன்னதாக எனக்கு நினைவில்லை. ஒருவேளை இருந்தால் (குறுக்கீடு) இரண்டு இடத்தில் சொல்லியிருக்கிறோம். ஆனால் 1996 ஆம் ஆண்டு — மூத்த அரசியல்வாதி, காங்கிரசிலே ஒரு பெரிய தலைவராக இருந்தவர், திரு. சென்னா ரெட்டி அவர்கள் தமிழ்நாட்டிலே ஆளுநராக இருந்தார்கள். அவரிடத்திலே கொடுக்கப்பட்ட உரையிலே, ஆளுநர் உரையை அவர் படித்தபோது 20 இடங்களிலே மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் என்று அவர்கள் படித்தார்கள். அந்த உரையை அவராலே படித்தே இருக்கமுடியாது. அரசாங்கச் செயல் பூராவும் கிராமத்திலே நடைபெறுகிற காரியம்கூட செல்வி ஜெயலலிதா அவர்களுடைய திட்டமிட்ட செயல் காரணமாக, அவர்களே முன்நின்று செய்ததன் காரணமாக, என்னவோ 60 இலட்சம் பேரோ, 30 இலட்சம் பேரோ அவர்களுக்கெல்லாம் ஜெயலலிதா நேரடியாக உதவி செய்தார் என்று 20 இடத்தில் செல்வி ஜெயலலிதா, ஜெயலலிதா, ஜெயலலிதா என்று சென்னா ரெட்டி கூறினார். அப்போதெல்லாம் எங்களிடமும் பழகிக்கொண்டிருந்தார். மூப்பனார் அவர்களிடமும் பழகிக்கொண்டிருந்தார். அர்ச்சனை பண்ணுவது மாதிரி இருந்தது. அப்படிப் பயன்படுத்திக் கொண்டவர்கள்தான் இன்றைக்கு கலைஞருடைய ஆட்சியிலே இந்த ஆளுநர் உரையைக் குறை சொல்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன். ஏனென்றால் உங்களை நடுநிலையாளர்களாக நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடுநிலையாளர்கள் என்றால் நீதிபதிகள் என்று

அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எந்தப் பக்கம் போவது என்பதற்காக நான் நடுநிலை என்று சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நீதிபதிகளாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

நாம் எல்லோருமே அரசியலில் எந்த மாறுபாடு இருந்தாலும் நாம் மதிக்கிற, ஒரு கண்ணியத்திற்குரிய ஒரு தலைவராக விளங்கி அண்மையிலே மறைந்தவர் முன்னாள் ஆளுநர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள். தமிழ்நாட்டிலே அவர் அமைச்சராக இருந்தபோது நான் எதிர்க்கட்சியிலே இருந்தேன். நான் சூடாகக்கூடப் பேசி இருக்கிறேன். அதையெல்லாம் பற்றி அவர் கவலைப்படுகிறவர் அல்ல. கொள்கை, கட்சி அந்த அடிப்படையிலே அவர்கள் காங்கிரசிலே இருந்து அங்கு பெரிய செல்வாக்குப் பெற்றவர்கள். அவர்கள், கலைஞருடைய, 75 ஆவது ஆண்டு அல்லது 76 ஆவது பிறந்தநாள் விழாவிலே வாழ்த்துரை வழங்கினார்கள். நான் ஏன் சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதை இங்கே சொல்கிறேன் என்றால், மற்றவர்கள் சொன்னதைச் சொல்வது என்ற பழக்கம்கூட எனக்கு இல்லை. ஏன் சொல்கிறேன் என்றால், இந்த அவையிலே எல்லோரும் மதிக்கக்கூடிய ஒரு தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்கள். பதவிக்காக அரசியல் நடத்தியவர் அல்ல. பதவியிலே இருந்தார், அது வேறு. ஆனால் பதவியிலே இருப்பவர்கள் பல பேர் பதவிக்காகவேதான் இருப்பார்கள். அப்படி நான் சில பேரைப் பார்த்திருக்கிறேன். அவர், பதவிகளைக் கடந்து, இருந்தால் பதவி இல்லையென்றால் சி. சுப்பிரமணியம் என்ற அந்தத் துணிச்சலோடு இருந்த ஒரு அறிஞர் அவர். அவரோடு கலைஞரும், நானும் 40 வருடங்களுக்கு மேலாக நட்புடன் கூடி, வாழ்ந்து வந்திருக்கிறோம். ஆகவே, நாணயத்திற்கு இது அடையாளம். கலைஞர் எதிர்க்கட்சியிலே இருந்தார். கண்டித்துப் பேசினார், நாங்களும் கூட்டங்களிலே கண்டித்தும் பேசுவோம். சுப்பிரமணியமும் சட்டமன்றத்திலே எங்களைக் கண்டித்துப் பேசுவார். ஆனால், நட்பு என்பது அரசியல் கொள்கைக்கு அப்பாற்பட்டு இருப்பது என்பதை அவர் சொல்லிவிட்டு, அரசியலில் மட்டுமல்ல, கலைத் துறையில் மட்டுமல்ல, நிர்வாகத் துறையிலேயும் கலைஞர் சிறந்து விளங்குபவர்—He is a great administrator. (மேசையைத் தட்டும் ஒலி) என்று அவர் சொன்னதுடன், இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு எடுத்துக்காட்டான தலைவராகத் திகழ்கிறார் என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) சி. சுப்பிரமணியம் வாயாலே வருவது ஒன்றும் சாதாரணமல்ல. அவர், நினைத்தவர்களையெல்லாம் பாராட்டக்கூடியவர் அல்ல. நான் அவரை எதிர்த்துப் பேசியிருக்கிறேன்; அவரோடு



உடன்பட்டும் பேசியிருக்கிறேன். அது வேறு. ஆனால், அவர் இந்தியாவிலே ஒரு சிறந்த நிர்வாகி என்றார். அப்புறம் சொல்கிறார். அந்தச் சொற்பொழிவை வேண்டுமானால் நீங்களே படித்துக்கொள்ளலாம். இன்று இரண்டு தீய சக்திகள் இருக்கின்றன. ஒன்று மதவாதம்; மற்றொன்று இலஞ்ச இலாவண்யம்; இந்த இரண்டு சக்திகளையும் ஒடுக்க வேண்டும். அவை ஒடுக்கப்பட வேண்டும். மதவாதம் ஒடுக்கப்பட வேண்டும். இலஞ்ச இலாவண்யம் ஒடுக்கப்பட வேண்டும். இவற்றை ஒடுக்க வேண்டிய பொறுப்பு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு இருக்கிறது. இந்தக் கூட்டணிப் பற்றிப் பலர் விமர்சித்து, பாரதிய ஜனதா கட்சியோடு சேர்ந்து தேசிய ஜனநாயகக் கூட்டணி பற்றிப் பல பேர் விமர்சித்திருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில், கலைஞர் கருணாநிதி இருக்கிற கூட்டணியில் மதவாதம் இருக்காது என்கிறார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அன்பழகன் சொன்னால் அதற்கு வேறு அர்த்தம். சி. சுப்பிரமணியம் என்ன காரணம் சொல்கிறார்? மதவாதத்தை நேரடியாக எதிர்த்தும் தவிர்க்கலாம். அதனுடன் கூடியும் அதை எதிர்க்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) சேர்ந்திருப்பதன் மூலமாக அவர்களுடைய மதவாத வேகத்தைக் கட்டுப்படுத்துகிற ஒரு ஆற்றல் உள்ள ஒரு இடத்தில் கலைஞர் இருக்கிறார். நாட்டையும் சமுதாயத்தையும் சீரழிக்கக்கூடிய மிகப் பெரிய தீய சக்தி, ஊழல். பல கோடிகளுக்குத் திட்டம் போட்டாலும், அங்கே கொள்ளையடித்துக்கொண்டு போகிறவர்கள் இருக்கிறார்கள். எனவே, ஊழல் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று சி.எஸ். சொல்லிவிட்டார். அப்புறம், உங்கள் முடிவு என்று கூறி. இந்த ஆளுநர் உரையில் நான் இன்னும் வேறு பல விளக்கங்களை எல்லாம் சொல்லலாம், என்றாலும், உங்களுடைய காலத்தை எடுத்துக்கொள்வது சரியல்ல. நானும் 4-00 மணிக்கு ஆற்காட்டிலே இருக்க வேண்டியவன். ஆகவே, இந்த உரையை ஏற்று நன்றி கூறும் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் மூடிய ஆலைகளைத் திறப்பது சம்பந்தமாகவோ, தொழிலாளிகளுக்கு ஏற்பட்டிருக்கிற வேலையின்மையைப் பற்றியோ எந்தவிதமான விஷயமும் சொல்லவில்லை. அதைத் திறப்பதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறேன் என்று சொன்னால் போதும், நான் அதை வாக்கெடுப்பிற்கு விடுவேன். இதற்கு மேலே உங்களை நான் பேச அனுமதிக்க மாட்டேன். திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

"2001 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன் அவர்களால் 22-1-2001 அன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (29-1-2001) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

20. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

21. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

22. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

15. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

16. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
18481
நூலகம்

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.